www.tamilarangam.net

# எனது யாழ்ப்பாணமே

**க.சச்சிதானந்தன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*With Compliments*

THE CENTRAL BRITISH FUND
FOR
TAMIL REFUGEES REHABILITATION

87 GOWER STREET
LONDON WC1E 6AA

TELEPHONE: ...0654

107

# எனது யாழ்ப்பாணமே

க. சச்சிதானந்தன்

27, ORPHEUS TOWER
6, DESMOND STREET
LONDON SE 14 6 HY

## காந்தளகம்

72, அய்யாவு நாயுடு வீதி, சென்னை-600030
213, காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு: மார்கழி 1980
உரிமை ஆசிரியர்க்கு

இந்நூலில் கூறப்பட்டவை நூலாசிரியரின் தனிப்பட்ட கருத்துகள். நூலாசிரியர் சார்ந்துள்ள அனைத்துலகத் தமிழராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் எண்ணங்களையோ, வேறெந்த நிறுவனத்தின் எண்ணங்களையோ இந்நூல் பிரதிபலிக்கவில்லை.

விலை ரூ. 10

அச்சிட்டோர்: ஜீவன் பிரஸ், சென்னை 60 0005

எனது அருமைத்
தாயாருக்குக்
காணிக்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிமுகம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு உலகெங்கும் வாழ்கின்ற தமிழரின் உள்ளத்திலும், தமிழ் அறிஞர்கள் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்றது. ஈழத்தமிழரின் அடங்காத தமிழார்வம், ஈழத் தமிழர்கள் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றும் பணி, ஈழத்தமிழரின் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள உட்பூசல்கள் என்பன இம்மாநாட்டு நிகழ்வால் உலகுக்குத் தெரிய வந்தன. உள்ளேயுள்ள பக்கங்களைப் புரட்டுங்கள், படியுங்கள். குறைகள் இருந்தால் என்னை நினையுங்கள். நிறைகள் இருப்பின் யாழ்ப்பாணத்தை வாழ்த்துங்கள்.

தை, 1978 — க. சச்சிதானந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. பைந்தமிழரா? பறைத் தமிழரா?

துப்பாக்கி வெடித்தது. சன்னங்கள் சிதறிப் பாய்ந்தன. தெருவோரத்தில் மின்சாரக் கம்பங்கள். கம்பங்களை இணைக்கும் மின்கம்பிகளில் குண்டுகள் பட்டன. கம்பிகள் அறுந்தன. கீழே விழுந்து தொங்கின.

கீழே குழாய்க் கம்பி வேலி. குழாய்க் கம்பிகளோ இரும்புக் கம்பிகள். அவற்றின் மீது அறுந்த மின் கம்பிகள் விழுந்தன. வேலியைத் தொட்டுக் கொண்டு மக்கள் கூட்டமாக இருந்தனர். அவர்களைத் திடீரென்று மின்சாரம் தாக்கியது. உடனே விறுவிறுப்பு; பதை பதைப்பு; ஓராயிம் வேல்கள் ஒரே நேரத்தில் உடலெங்கும் பாய்வது போன்ற உணர்வு. திடீரென மின்சாரம் பாய்ந்ததால் பலர் தூக்கியெறியப்பட்டனர். எதிர்பாராத தாக்குதலால் அதிர்ந்து போயினர்.

'முருகா!' என்ற ஓலக்குரல். 'சிவனே! என் சீவனைக் காப்பாயோ?' என்ற அலறல். 'பெருமாளே!' என்ற பெருங் கூவல். 'அல்லாவே!' என அரற்றினர் சிலர். 'மேரித்தாயே! ஏசுவே!' என இறைஞ்சினர் சிலர் நினைவிழந்து செயலிழந்து சாயுமுன் இறைவனை அழைத்தனர்; இன்னருள் வேண்டினர்.

48 வயதுடைய பத்திநாதர் அரச மருத்துவ மனையில் எழுதுவினைஞர். குழாய்க்கம்பி வேலிக்கருகில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டத்தோடு இருந்தவர். "மின்கம்பிகளை நோக்கி ஒருவர் சுட்டார். ஐந்து அல்லது ஆறு முறை சுட்டார். சுட்ட உடனேயே எரிசுருள் கம்பி ஒன்று என்மீது விழுந்தது. மின்சாரம் தாக்கியதை உணர்ந்தேன், அதிர்ச்சியுற்றுத் துடிதுடித்து ஏசுவையும் மேரியையும் இறைஞ்சினேன். ஏனைய பலர் மீது மின்கம்பிச் சுருள்கள் விழக் கண்டேன். தூக்கியெறியப் பட்டது போல உணர்ந்தேன். சில மாதிரி (மீட்டர்) தொலைவில் விழுந்து நினைவிழந்து கொண்டிருந்தேன். காவல்துறை வீரர் ஒருவர் தன் சப்பாத்துக் காலினால் என்னை உதைத்தமை தெரிந்தது. தொடர்ந்து நான் முழுமையாக நினைவிழந்தேன்." பத்திநாதர் இவ்வாறு பின்னர் கூறினார்.

வேலுப்பிள்ளை கேசவராசா துடிதுடித்து இறந்தார். வைத்தியநாதன் யோகநாதன் பதைபதைத்து உயிர் நீத்தார். சின்னத்தம்பி நந்தகுமார் அதிர்ச்சியால் துவண்டு மாண்டார். சிதம்பர ஆறுமுகம் வதங்கி மடிந்தார். இராசதுரை சிவானந்தன் அலமந்து ஆவி நீத்தார். பரஞ்சோதி சரவணபவன் உடல் சோர்ந்து இறந்தார். ஏழு தமிழர்கள் உயிர் துறந்தனர்.

இந்த எழுவரும் இறந்து கொண்டிருக்கையில், பத்திநாதரைப் போல் பலர் மயங்கிக் கொண்டிருக்கையில், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் காவல் துறையினரால் தமிழர் கூட்டத்தை நோக்கிச்சுடப்பட்டன.

ஐம்பதினாயிரம் தமிழர் அங்கே கூடியிருந்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், முதியவர், இளையவர் அனைவரும் தமிழர்கள். ஒலிபெருக்கி வழியே அமிழ்தமாகத் தமிழ் மழை பொழியக் கேட்டுக் கொண்டிருந்தனர். தமிழ்ச் சொற்களைத் தெரிந்தெடுத்துச் சுவையூட்டும் தொடர்களாக்கி, இனிமையான நடை



யில், எடுப்பான குரலில், அமுதமாகப் பொழிந்து கொண்டிருந்தார் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர். செவி வழிக் கேட்டு மாந்திக் கொண்டிருந்தனர் கூட்டத்தினர். அங்கே தெய்வத் தமிழ் பூசனைக்கு உரியதாயிற்று. பூசை வேளையில் கரடி புகுந்தது போல் காவல் துறையினர் புகுந்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளைச் சிதறினர். மின்கம்பிகளின் மீது சுட்டனர். குண்டாந்தடிகளால் தாக்கினர். கேவலம், சப்பாத்துக் கால்களால் தமிழர்களை உதைத்தனர்; பந்தாடினர்.

கூட்டத்தில் அமளி; அல்லோலகல்லோலம். கண்ணீர்ப்புகை கண்களை எரித்தது; மூக்கினை அடைத்தது. கண்ணீர் விட்டனர். தண்ணீர் தேடினர். மூக்கில் நீர் சிந்தினர். நாக்கு வறண்டு அழுதனர். முகத்தைத் துணியால் மூடினர். தடுக்கி விழுந்தனர். உடைமைகளைப் பறிகொடுத்தனர், சிதறி ஓடினர்.

மிதிவண்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஓடிய வேகத்தில் 56 வயதுடைய முருகேசு சின்னையா மிதிவண்டிகளின் மேல் குப்புற விழுந்தார். எழப் பார்த்தார்; முடியவில்லை. தலையை நிமிர்த்து முன்பு அவர்மேல் பலர் ஏறி ஓடினர். மிதிவண்டிகளுக்கிடையில் சின்னையா நசிந்தார். ஏறியவர், நசித்தவர், ஓடியவர் அனைவரும் மறையும்பொழுது சின்னையா நினைவிழக்கும் நிலையை எய்தினார். 'இறந்து விடுவோமோ?' என அஞ்சினார். 56 வயதல்லவா!

சின்னையா எழுந்தார். கால்களிரண்டும் வலித்தன. நொண்டி நொண்டி ஓடினார். கண்ணீர்ப்புகை இல்லாத வெளி வந்ததும் நின்றார். குனிந்து பார்த்தார். இரத்தம் பெருகி வேட்டி நனைந்திருந்தது. காலில் வெட்டுக் காயம். காகிதம் ஒன்றை எடுத்து வழிந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரத்தத்தைத் துடைத்தார். நிமிர்ந்து பார்த்தார். ஆடை எதுவுமின்றி அம்மணமாக ஒருவர் ஓடி வந்து கொண்டிருந்ததைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து, தனது சட்டையைக் கழற்றி அவருக்குக் கொடுத்தார்.

மகேசுவரி இலட்சுமணன் தாலிக் கொடியை இழந்தார். கணவர் இலட்சுமணன் கைக்கடிகாரத்தைப் பறிகொடுத்தார். பெருமாள் விசயராசு பாதுகாப்புக்காகத் தன் சட்டைப் பைக்குள் கைக்கடிகாரத்தை வைத்திருந்தார். அவரைக் குண்டாந்தடியால் அடித்த காவல்துறை வீரர் சட்டைப்பைக்குள் கையை விட்டுக் கைக்கடிகாரத்தையும் காசையும் களவாடினார். முப்பது வயதான விசயராசை ஓட ஓட விரட்டினார்.

காவல்துறை வீரர்கள் பெண்களின் ஆடைகளை உரித்தனர். ஆண்களின் வேட்டிகளை அவிழ்த்தனர். உடைமைகளைக் களவாடினர், பெண்கள் உள்ளாடைகளுடன் தலைவிரிகோலமாக ஓடினர். நாலாப்பக்கமும், சிறுவர் சிறுமியரை விட்டு, விட்டு சிதறி ஓடினர். காவல்துறை வீரர்கள் தமிழர்களைச் சப்பாத்துக் காலால் உதைத்துப் 'பறைத்தமிழா!' என இழித்துரைத்தனர்.

செந்தமிழர், தீந்தமிழர், பைந்தமிழர் என்றெல்லாம் பேராசிரியர் தமிழரின் பெருமை பேசினார். மதுவுண்ட வண்டு போல், மகுடி கேட்ட நாகம் போல், மயங்கிய பைந்தமிழர் காவல்துறை வீரர்களால் பறைத்தமிழர் எனப் பழிக்கப்பட்டு இழிக்கப் பட்டனர். உதைக்கப் பட்டனர், ஆடைகள் அவிழ்க்கப் பட்டனர், உடைமைகள் பறிக்கப்பட்டனர், உயிர்களும் பறிக்கப் பட்டனர். ஊழியே வந்ததோ என அலமந்தனர்.

யாழ்ப்பாணம் காணாத கூட்டம்! யாழ்ப்பாணம் காணாத ஓட்டம்! 50,000க்கு மேற்பட்ட தமிழர்



கூடினர்; முப்பது காவல்துறை வீரர்களின் தாக்குதலால் சிதறி ஓடினர். இவ்வளவு பெரிய கூட்டமோ, கூட்டம் சிதறின ஓட்டமோ, யாழ்ப்பாணத்தில் இதற்கு முன்பு நடைபெறவில்லை என்று முதியவர்களும் வரலாறு படித்தவர்களும் கூறினார்கள். வரலாறு படைத்த நிகழ்ச்சி அன்று —1974 தை பத்தாம் நாள்— யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

354 ஆண்டுகட்கு முன்னர், 1619 ஆனியில் யாழ்ப்பாணத்தில் தமிழர் கூடினர், போரிட்டனர், சிதறி ஓடினர். 150 போர்த்துகேய வீரர்களுக்கும் 2000 சிங்களக் கூலிப்படை வீரர்களுக்கும் பிலிப்பு டி ஒலிவரா என்ற போர்த்துகேயத் தளபதி ஓரணியில். சில ஆயிரம் யாழ்ப்பாணத் தமிழ் வீரர்களும் தஞ்சை நாயக்க அரசின் 5000 படை வீரர்களும் தமிழ் மன்னன் சங்கிலியன் தலைமையில் எதிரணியில். வண்ணார் பண்ணையில் பெரும்போர் நிகழ்ந்தது. போர்த்துகேயத் தளபதி தலைமையில் வந்த படைகள் பின்வாங்கின. தமிழ்ப் படைகள் முன்னேறி, வெற்றி வாகை சூடும் நேரத்தில்—

காக்கை வன்னியன் என்ற தமிழன் சூழ்ச்சி செய்தான். நண்பனைப் போல் சங்கிலியனிடம் வந்தான். சங்கிலியனைச் சிறை பிடித்துப் போர்த்துகேயரிடம் ஒப்படைத்தான். தலைமை இழந்த தமிழர் படை நிலை குலைந்தது; வெற்றியை முழுமையாக்க முடியாது சிதறி ஓடியது.

1619 ஆனியில், வண்ணார்பண்ணையில், சிதறி ஓடிய தமிழர்கள் போர்வீரர்கள், போரிட வந்தவர்கள். 1974 தையில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் சிதறியோடிய தமிழர்கள் போரிட வரவில்லை. சிறுவர் சிறுமியர், இளையவர், முதியவர், பெண்டிர் என ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரண்ட, ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்கள்; தமிழ் மொழியைச் சீராட்ட வந்தவர்கள். தமிழறிஞர்களைப் பாராட்ட வந்தவர்கள். சிங்களத் தளபதி ஒருவரின் ஆணையின் கீழ் வந்த காவல்துறை வீரர்களின் காடைத்தனம் ஒன்றுமறியாத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளின் இறுதியில் இந்த அட்டூழியம் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படுவதை இலங்கை அரசு விரும்பவில்லை தெரிந்தெடுக்கப்பெற்ற தமிழ்ப் பிரதிநிதிகள் ஆட்சி அமைக்கவில்லை. சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்றமே ஆட்சி செய்தது. சிங்களவர் ஒருவர் காவல்துறைத் தலைவராக யாழ்ப்பாணத்தில் பதவியில் இருந்தார். அமைதியாக நடைபெற்ற கூட்டம், தமிழர் கூட்டம் என்ற ஓரே காரணத்தால் காவல்துறையால் கலைக்கப்பட்டது. தமிழ் மண்ணும் யாழ்ப்பாணத்தில் பைந்தமிழர் பறைத்தமிழரெனப் பழிக்கப்பட்டனர்.

# 2. தவத்திரு தனிநாயக அடிகள்

தவத்திரு தனிநாயக அடிகளார் யாழ்ப்பாணத்தவர். கரம்பனில் பிறந்தவர். கத்தோலிக்க மதகுருவானவர். தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றவர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரியுங்கால் கலாநிதிப் பட்டம் பெறப் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றிற்குச் சென்றவர்.

இலங்கைப் பல்கலைக்கழகப் பணியை முடித்துக் கொண்டு மலேசியப் பல்கலைக்கழகம் சென்றார். கோலாலம்பூரில் நீண்ட காலம் தமிழ்ப்பணி புரிந்தார். "தமிழ்ப் பண்பாடு" என்ற தலைப்பில் தமிழ் ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வந்தார்.

தமிழர் வாழ்கின்ற நாடுகட்கெல்லாம் தவத்திரு தனிநாயக அடிகளார் சென்றார். தமிழ்மொழி கற்பிக்கப்படுகின்ற, தமிழ் ஆராயப்படுகின்ற பல்கலைக் கழகங்கட்குச் சென்றார். தமிழரல்லாத தமிழ் ஆராய்ச்சியாளர்களுடன் நெருங்கிப் பழகினார். கீழைத்தேயப் பண்பாட்டு ஆராய்ச்சி மாநாடுகளில் கலந்துகொண்டார்.

உலகத்தில் உள்ள பல்வேறு தமிழ் ஆராய்ச்சியாளர்கள், தமிழை வளர்ப்பவர்கள், ஒன்றாகக் கூட வேண்டும். அடிக்கடி கூட வேண்டும். தமது ஆராய்ச்சியின் பெறுபேறுகளைத் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவாதிக்க வேண்டும்; கருத்து பரிமாற வேண்டும். இதற்குக் களம் அமைக்க வேண்டும். எனவே தமிழ் ஆராய்ச்சிக்கழகம் அமைக்க வேண்டும் என்று தவத்திரு தனிநாயகம் அடிகளார் எண்ணினர்.

1964 தைத்திங்களில் தில்லியில் நடைபெற்ற கீழைத் தேயப் பண்பாட்டு ஆராய்ச்சியாளர் மாநாட்டுக்கு வந்திருந்த உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர்களை ஒன்று கூட்டினார். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தைத் தொடக்கி வைத்தார். தில்லியில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தவர்களான தவத்திரு தனிநாயக அடிகளார், பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை, பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழகத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். தமிழரல்லாத தமிழ் ஆராய்ச்சியாளர்களும் மகிழ்வொடு பங்கு கொண்டனர்.

இங்ஙனம், உலகத் தமிழ் ஆராய்ச்சி என்னும் ஒளியை ஏற்றியவர், அந்தத் தீபத்துடன் கோலாலம்பூர் சென்றார். மலேசியாவில் உள்ள தமிழர்கள் தவத்திரு தனிநாயக அடிகளாருக்குப் பக்கபலமாக உதவினர். மலேசிய அரசு அடிகளாருக்கு மதிப்புத் தந்தது. ஏற்ற சூழ்நிலை அமைந்ததால் உலகத் தமிழ் ஆராய்ச்சியாளரைக் கோலாலம்பூருக்கு வருமாறு அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்றம அழைத்தது. மலேசியப் பல்கலைக் கழகமும் மலேசிய அரசும் அழைப்புக்குத் துணை நின்றன.

1966ஆம் ஆண்டில் முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கும் கோலாலம்பூரில் கோலாகலமாக நடைபெற்றன. மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் மாநாட்டைத் தொடக்கி வைத்தார். உலகெங்கணும் இருந்து வந்த தமிழாராய்ச்சியாளர் கோலாலம்பூரில் கூடினர்.



இலங்கையிலிருந்து தமிழ் அறிஞர்கள் பலர் சென்றனர். தமிழ்ப் பண்பாட்டிலும் வாழ்வு முறையிலும் அக்கறையுடன் ஆராய்ச்சி செய்பவர்களும் சென்றனர். முதியவர்களும் இளைய தலைமுறையினருமாகப்பலர் சென்றனர். இலங்கை அரசு மாநாடு பற்றி அக்கறை காட்டவில்லை. போவோரைத் தடை செய்யவும் இல்லை.

தமிழக முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலம் தலைமையில் தமிழ்நாட்டு அறிஞர்கள் கோலாலம்பூர் சென்றனர். பேராசிரியர் மு. வரதராசனர் அப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் தமிழக அரசின் தமிழ் வெளியீட்டுக் கழகஇயக்குநராக இருந்தார். இவர்களும் கோலாலம்பூர் சென்றனர்.

படிக்கட்டும் பைந்தமிழ் பாடும் பச்சையப்பன் கல்லூரியில் அறிவியல் முதுவல் மாணவனாக அப்பொழுது நான் இருந்தேன். பேராசிரியர் மு. வரதராசனர், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசியராகப் பணிபுரியும் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம் போன்றவர்களிடம் தமிழைப் பாடமாகப் படித்தேன். பச்சையப்பன் கல்லூரியில் பயின்ற ஆறு ஆண்டுக் காலமும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் பாதுகாப்பில் சென்னையில் வளர்ந்தேன்.

கோலாலம்பூர் மாநாட்டிலிருந்து மீண்டதும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் என்னிடம் கூறியது இன்றும் நினைவில் உள்ளது. "உன் ஊர்க்காரங்க தான்'டா. நல்லாப் பண்ணிருங்கடா" என்றார். நான் மகிழ்ந்தேன் 'எனது யாழ்ப்பாணமே!' எனப் பெருமைப் பட்டேன். கம்பன் கழகத் தலைவர், காரைக்குடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சா. கணேசன் அவர்களும் மாநாட்டு நிகழ்ச்சிகளை எனக்கு விவரித்தார்கள்.

மலேசியத் தமிழர்கள் உறுதுணையோடும் மலேசிய அரசு, பல்கலைக் கழகம் ஆகியவற்றின் உதவியோடும் தமிழாராய்ச்சிக்குத் தனிநாயக அடிகள் விழா எடுத்தார்.

மேனாட்டுப் பாணியில் மாநாடும் கருத்தரங்கும் நடைபெற்றது. மாநாட்டு நிகழ்ச்சி நிரல், மேனாட்டவர் மாநாடு கூட்டும் முறைமைகளைப் பின்பற்றி அமைந்தது. கட்டுரைகள் அரங்கேற்றப்பட்டமை, அரங்குகள் வகுக்கப்பட்டமை, கருத்துகள் விவாதிக்கப்பட்டமை, கூறப்பட்ட ஒவ்வொரு சொல்லும் குறிப்பெடுக்கப் பட்டமை, கூட்டக் குறிப்புகள் மறுநாள் காலையே அறிஞர்கட்குக் கிடைத்தமை, ஆராய்ச்சியாளர் தங்கி உணவுகொள்ள வசதிகள் அமைந்தமை, மாலையில் கலை நிகழ்ச்சிகள்—விருந்துகள் நடைபெற்றமை, நிகழ்ச்சிகளில் புலமக்களே பங்கு பற்றினமை யாவும், தமிழர்களால் தமிழ் மொழிக்காக நடாத்தப்பெற்ற மாநாடுகளில் அன்றுவரை காணப்பெறாத புதுமைகள்.

கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கு, பொதுக் கூட்டம், எனத் தமிழ்மொழி தொடர்பாகத் தமிழர்கள் நடாத்தும் நிகழ்ச்சிகள் மாறுபட்டவை. நீண்டகாலம் அந்நிய ஆட்சிக்குட்பட்டு வாழ்ந்தமையால் தமிழ் மொழியும் தமிழ் ஆராய்ச்சியும் அரசு ஆதரவைப் பெறவில்லை. தமிழ்க் கல்வியே வேண்டத் தகாததாக ஒதுக்கப்பட்டது. தமிழர்களிடையே தமிழைப் பற்றிப் பெருமை பேசுவதும், அடையாள உணர்வை ஏற்படுத்துவதும் தமிழ் அறிஞர்களின் தலையாய கடனாயிற்று. இதனால்தான் பொதுமக்கள் பங்கு பற்றும் நிகழ்ச்சிகளில் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் விரவிப் பங்கு பற்றினர்.



ஆராய்ச்சிக்காக மட்டும் அறிஞர்கள் கூடுவதோ விவாதிப்பதோ கருத்துப் பரிமாறுவதோ வழக்கொழிந்திருந்தது. ஆராய்ச்சியாளர்கள் கூடும் கூட்டங்களுக்கான வரன்முறை ஒழுங்குகள், விதிகள், குறிப்பேடுகள், நிகழ்ச்சிப் பதிவுகள், இவை பற்றிய வழமைகள் அற்றுப் போயிருந்தன. உயர் மட்டத்தில் உள்ள அறிஞர்கள் மேனாட்டவர் கூட்டும் மாநாடுகட்குச் சென்று வந்து கொண்டிருந்தனர்.

சிந்திக்கின்றவர்கள், அவதானிக்கக் கூடியவர்கள், குறிப்பு எழுதக் கூடியவர்கள், பகுத்தாயக் கூடியவர்கள், சுவை காணக் கூடியவர்கள், துருவித் துருவி ஆராயக் கூடியவர்கள், ஏன், எதற்காக, எப்படி என்றெல்லாம் வினா எழுப்பி விடை காண முயல்பவர்கள், தனிமையில் கூடவோ, தம்மிடையே கருத்துப் பரிமாறவோ, அறிவை வளர்க்கவோ புதுமையைப் படைக்கவோ களம் அமைத்துக் கொடுக்கும் வழமை, வாய்ப்பு, வசதி தமிழர்களிடையே அற்றுப் போயிருந்த காலகட்டத்தில், புதிய வழமை, புதிய வாய்ப்பு, புதிய வசதி அரும்புவிட்டு மலரக் கோலாலம்பூர்த் தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கும் வழிசமைத்தன.

அடிமைத்தளைகள் அறுக்கப்பட்டபின், தமமை அடையாளம் காண விழைந்து, தாகத்துடன் தவித்த தமிழர்கட்கு, அடையாளத்தின் அடிச்சுவடுக் குறிப்புகளை அள்ளி அள்ளி வழங்கிய பல்கலைக்கழகத் தமிழ் அறிஞர்கள், தமது ஆராய்ச்சித் தாகத்தைத் தணிக்க, தம்மையொத்தவர்களை அடையாளம் கண்டு பழகும்படி கோலாலம்பூர் மாநாட்டில் புதிய அநுபவம் பெற்றனர்.

ஆராய்ச்சி மாநாட்டின் தூய்மை, சலசலப்பின்மை, பெறுமதி மிக்கமை, வரன் முறை நிகழ்ச்சி ஒழுங்கமைந்தமை, ஆராய்ச்சியின் பெறுபேறுகளில் வேறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட கருத்தைக் கொண்டவர்கள்கூட ஒருவரை ஒருவர் மதித்த சான்றாண்மை, காலத்தை மதித்தமை, உரிய காலத்தில் உரியதைச் செய்தமை, இப்படியான பல புதிய அனுபவங்கள், மாநாட்டில் பங்கு பற்றியவர்கட்கு ஏற்பட்டது.

பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சி வலுவடைய வேண்டும். மாநாட்டுக்கு ஆதரவு வழங்கிய மலேசிய பல்கலைக்கழகம் எடுத்துக் காட்டாக அமைந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள் எடுத்துக்காட்டாக நடந்தனர். மேனாட்டு மாநாட்டு நடைமுறைகளில் உள்ள சிறப்பியல்புகள் தமிழ் அறிஞர்க்குப் பயன்படவேண்டும். ஆராய்ச்சியாளர்க்கு அரசினர் இடையறாத ஆதரவை அளவற்று நடுநிலைமைக் கண்ணோக்கத்துடன் வழங்க வேண்டும். மலேசிய அரசு வழங்கிய ஆதரவு எடுத்துக்காட்டாக அமைந்தது. தமிழ்மைக்குரிய வழமைகளாக இவை மாற்றியமைக்கப் பெறவேண்டும்.

தவத்திரு தனிநாயக அடிகளார் தமிழ்மை பேணினர்கள். மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக அரசின் அந்நாள் முதல்வர் திரு பத்தவத்சலனார் பூரிப்படைந்தார். தமிழகச் சட்டப் பேரவை அந்நாள் எதிர்கட்சி முதல்வர் திரு. நெடுஞ்செழியனார் தமிழ் நாட்டில் இவ்வழமை பெருகாதோ எனப் பெருமூச்சு விட்டார்.

புதுமையான முயற்சி; பாராட்டப்படவேண்டிய முயற்சி; தொடர்ந்தும் பரிசோதிக்கப் படவேண்டிய முயற்சி; தமிழ்மைக் குரியதாக வேண்டிய முயற்சி; தமிழ் நாட்டிலும் தொடர வேண்டிய முயற்சி; தமிழக அரசின் இடையறாத ஆதரவுடன் நடைபெற வேண்டிய முயற்சி; இவ்வாறு தமிழக அரசின் முதல்வர் கருதினார் போலும்.



'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் அடுத்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைச் சென்னையில் நடாத்துங்கள்; ஆதரவு தருகின்றோம், எனத் தமிழக அரசின் சார்பில் தமிழக முதல்வர் அழைப்பு விடுத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3. சென்னையில் செழிப்புற்ற செந்தமிழே !

விலங்கியல் நூல் ஒன்றை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்துத் தருமாறு இலங்கை அரசின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் என்னைக் கேட்டனர். அதற்கு இணங்கிய நான் அந்நூலை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தேன். இலங்கை அரசு வெளியிட்ட விலங்கியல் கலைச்சொற் றொகுதியைப் பயன்படுத்தி மொழி பெயர்த்தேன்.

பேராசிரியர் அ ச. ஞானசம்பந்தன் இயக்குநராகப் பணிபுரிந்த தமிழக அரசின் தமிழ் வெளியீட்டுக்கழகம், விலங்கியல் துறையில் பல நூல்களைத் தமிழில் வெளியிட்டு வந்தது. ஒரே ஆங்கிலச் சொல்; தமிழிலோ வேறுபாடுகள். தமிழகத்தில் ஒரு தமிழ்ச் சொல்; இலங்கையில் பிறிதொரு தமிழ்ச் சொல். இப்படி அமைந்திருந்த நிலையைக் கண்டேன். வருந்தினேன்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் அறிவியல் ஏடான கலைக்கதிரில் நான் கட்டுரைகள் எழுதிவந்தேன். மலேசியாவிலிருந்து வெளிவரும் 'தமிழ் நேசன்' நாளிதழிலும் என் அறிவியற் கட்டுரைகள் வெளிவருவதுண்டு.



தமிழ் மொழியில் ஒரே பொருளைக் குறிப்பிட இலங்கையில் ஒரு சொல்; மலேசியாவில் ஒரு சொல்; தமிழகத்தில் ஒரு சொல். இந்தச் சொல்லாக்கம் அந்தந்த நாட்டு அரசுகளின் ஆதரவைப் பெற்றிருந்தன. அறிவியல் துறையில் உள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழில் மொழி பெயாப்பதில்தான், கலைச் சொல் லாக்கத்தில்தான் இந்த வேறுபாடு.

பதினைந்து நூற்றுண்டுகளுக்கு முன், வடமொழித் தாக்கம் காரணமாகத் தமிழிலிருந்து எழுந்த கிளை மொழிகளான, கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும், தமிழர் பல மொழியாளர்களாக மாற வழி சமைத்தது. ஆங்கில ஆட்சியின் அந்திநேரச் செம்மை அடிவானத்தில் மறையுமுன்பே, ஆங்கில மொழியின் தாக்கம் காரணமாகவும், தமிழர் களைத் தனிமைப்படுத்தி ஆட்சி செய்யும் அரசுகட் கிடையே உள்ள அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வர்த்தகத், தொடர்புத் தடைகள், கட்டுப்பாடுகள் காரணமாகவும புவியியல் தடைகள் காரணமாகவும் இந்த நூற்றுண்டிலும் தமிழர் கிளை மொழி யாளர்களாகப் பிரிந்து போகக் கூடிய வாய்ப்புகள் உண்டென்பதை எண்ணினேன்.

கலைச் சொல்லாக்கத்தில் உள்ள வேறுபாடுகள்' வேறுபாடுகளுக்கான அடிப்படைகள், வேறுபாடுகளின் விளைவுகள், வேறுபாடற்ற ஒருங்கிணைந்த கலைச் சொல்லாக்கத்தின் நன்மைகள், ஆகிய இவை பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருந்த காலத்தில், 1967ன் தொடக்கத்தில், ஈழத்தமிழ் நாளிதழ்கள் பலவற்றில் வெளிவந்த விளம்பரம் ஒன்று எனக்கு உற்சாகத்தைத் தந்தது.

1968 தைத் திங்களில் சென்னையில் இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடைபெறும் எனவும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்தளிக்க விழைவோரும், பங்குபற்ற விரும்புவோரும் தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் விளம்பரம் செய்தனர். கலைச்சொல்லாக்க முயற்சியில் உள்ள தொடர்பற்ற நிலையின் உடனடி விளைவுகளை, அக்கருத்தை விளங்கிக் கொள்ளக் கூடிய அறிஞர் முன் ஆராய்ச்சி அடிப்படையில் எடுத்துக் கூற எண்ணினேன், எழுதினேன்.

'விலங்கியல் தமிழாக்கத்தில் வேறுபாடுகள்' என்ற தலைப்பில் நான் அனுப்பிவைத்த கட்டுரையை, மாநாட்டில் படிக்க ஏற்றதென எனக்கு அறிவித்தனர், அழைப்பு விடுத்தனர். கோலாலம்பூரில் நடைபெற்ற மாநாட்டுப் பின்னணியில் சென்னை மாநாடு அறிஞர்களின் ஆராய்ச்சி முயற்சிகட்குக் களம் அமைத்துக் கொடுக்கும் என எண்ணினேன்.

தமிழகத்தில் 1967இல் நடைபெற்ற தேர்தலில் பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. காங்கிரசு கட்சியைச்சார்ந்த திரு. பக்தவத்சலம் அவர்களிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று அண்ணா முதலமைச்சரானார். தமிழறிந்த, தமிழாய்ந்த தமிழ் மகன் தமிழ் நாட்டின் முதலமைச்சராக வேண்டும் என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கனவு நனவாயிற்று. இந்த நூற்றாண்டில் தான்பெற்ற தலைமகனைத் தமிழ் நாட்டின் முதலமைச்சனுக்கித் தமிழ்த்தாய் மகிழ்ந்தாள்.

'கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கல்லெடுத்த பொழுது, விழாவிலே கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் கலந்து கொண்டு சிறப்பித்தான். தமிழுக்கு விழா எடுக்கப்படுகின்ற இந்த நேரத்தில் இலங்கை அமைச்சர், மாண்புமிகு திருச்செல்வம் இங்குள்



ளார்கள்." மெரினாக் கடற்கரையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடக்கவிழாவில் பேரறிஞர் அண்ணா இவ்வாறு கூறி இலங்கை அமைச்சரை அறிமுகம் செய்தார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் கலாநிதி சாகீர்உசேன் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்கள். மலேசிய அரசின் சார்பில் மாண்புமிகு ஆதிநாகப்பன்வந்துவாழ்த்துக் கூறினார்கள். தமிழ் கூறும் நல்லுலகம் மாநாட்டை வாழ்த்தி நின்றது. 1968 தைத் திங்கள் 2ஆம் நாள் தொடங்கிய இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு—கருத்தரங்கில் கலந்துகொள்ள உலக அறிஞர்கள் வந்திருந்தனர். ஆசிய, ஆப்பிரிக்க, ஆத்திரேலிய, அமெரிக்க, ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தமிழாயும் ஆராய்ச்சியாளர்கள்—தமிழரல்லாதவர்கள்— வந்திருந்தனர். தமிழகம், இந்தியாவின் ஏனைய மாநிலங்கள், ஈழம், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஃபிசி, மொறிசியசு, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன் போன்ற பல நாடுகளைத் தாயகமாகக் கொண்ட தமிழறிஞர்கள், தமிழர்கள் வந்திருந்தனர்.

கோலாலம்பூரில் ஆராய்ச்சியாளர்கட்கு ஏற்படுத்தப்பெற்ற தனிமையான சூழலைச் சென்னையிலும் ஏற்படுத்த முயன்றிருந்தனர். உலகத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியைத் தமிழ் எழுச்சி விழாவாக மாற்ற அறிஞர் அண்ணாவும் அவரின் அருமைத் தம்பிகளும் அரச கட்டிலில் அமர்ந்து திட்டமிட்டிருந்தனர். எனவே சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஆராய்ச்சியாளர்கள் கூடியிருக்க ஒழுங்கு செய்யப்பெற்றது. தீவுத் திடலில் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றன. பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் கண் காட்சி ஒழுங்கு செய்யப்பெற்றது.

தமிழக அரசின் முழுமையான ஆதரவும் இருந்தது. அரசின் ஆளுமைத் துறை எல்லா வழிகளிலும் உதவி யது. தமிழ்நாட்டின் செல்வந்தர்கள் பணத்தை வாரி வழங்கினர். பொது மக்களிடமிருந்து ஊர் ஊராகப் பணம் சேர்ந்தது. தமிழ் நாட்டின் திறமைசாலிகள் பெரும்பாலோர் மாநாட்டு வெற்றிக்காக உழைத்தனர்.

தமிழ்ப் பொதுமக்களின் உணர்வுகளைத் தட்டி யெழுப்பித் தமிழரின் அடையாளம் காணும் விழை வுக்கு உற்சாகம் தந்து, 'தமிழா, உன்னைத்தான்!' என விளித்து, தமிழரைத் தலை நிமிர வைத்து, தமி ழரின் தனித்தன்மையை உலகறியச் செய்து, உள்ளம் பூரித்து உவகையும் தன்னம்பிக்கையும் தமிழர் கொள் ளும்படியாகத் தீவுத் திடல் விழா நிகழ்ச்சிகள், அலங்கார ஊர்தி ஊர்வலம், கலை நிகழ்ச்சிகள், சிலைகள் திறக்கும் விழா, அஞ்சல் தலை வெளியீட்டு விழா, கண் காட்சி, உலக அறிஞர்கள் சுற்றுலா, தமிழகத்தின் மாவட்டத் தலைநகர்ப் பொதுக் கூட்டங்கள், தொடர் பான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அது நாள்வரை சிறிய அளவில் நடைபெற்ற தமிழ் விழாக்கள் பேருருக் கொண்டு பொங்கி எழுந்ததுபோல் நிகழ்ச்சிகள் அமைந்தன.

உயர்வில், சிறப்பில், நிறைவில், பெருமையில், கோலாகலத்தில், திறமையில், உணர்வூட்டுதலில், அந் நாட்களில் அந்நேரங்களில் நடைபெற்றவைதாம் தமிழ் எழுச்சிக்குத் தமிழகத் தமிழரால் ஆற்றக் கூடிய உச்சமான விழா நிகழ்ச்சி ஒழுங்குகளாக அமைந்தன. ஈழத்தின் பழுத்த பத்திரிகையாளர்களுள் ஒருவரான திரு. எசு. டி. சிவநாயகம் அவர்கள், மாநாடு பற்றிக் குறிப்பிட்டுப் பயன்படுத்திய "பூரித்த தமிழகத்தில்



பொலிவுற்ற செந்தமிழ்" என்ற தலைப்பு, அந்நேரத் தமிழகத்தின் உளப்பாங்கையும் செயல் வேகத்தையும் திறமையையும் அப்படியே கூறுவதாக அமைந்தது.

பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஆராய்ச்சி அறிஞர்கள் மட்டும் கூடினார்கள். சலசலப் புக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கும் நடுவே அமைதி யாகவும் ஆறுதலாகவும் அடக்கமாகவும் கூடுவதென் பது எளிதான செயலன்று. தமிழகத்தின் பட்டிதொட்டி களில் இருந்தெல்லாம் தமிழர்கள் சென்னையில் கூடி யிருந்தனர். தீவுத் திடலில் இருந்தவர்கள் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளைக் காணக் 'கதவு டைத்துப் புக' முயன்ற போதெல்லாம் ஆராய்ச்சி அரங்கு ஒழுங்குக் குழுவினர் அல்லல்பட்டனர். ஆராய்ச்சி அரங்கில் இறுதி நாளன்று அறிஞர் அண்ணா பேசவிருந்ததைக் கூடத் தடைசெய்யுமளவு கட்டுப்பாடு பேண விரும்பினர். 'கதவுடைத்துப்புக' விரும்பியவர்களின் மனநிலையை, அறிஞர் அண்ணாவின் ஆராய்ச்சி அரங்கு இறுதிநாள் பேச்சின் தொடக்கம் எதிரொலிக்கக் கூடியதாக இருந்தது.

ஆராய்ச்சி மாநாட்டில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர்; கருத்தும் பரிமாறினர். கலைச் சொல்லாக்கம், மொழி பெயர்ப்பு என்பன தொடர்பாகப் பொது அரங்கு ஒன்றும், குழுநிலை அரங்குகள் சிலவும் ஒழுங்கு செய்யப்பெற்றிருந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து தீவுத் திடல் கவி யரங்கில் பரிசு பெற்ற கவிஞர் இ. அம்பிகைபாகனும் நானும் கலைச் சொல்லாக்க வேறுபாடுகளால் தமிழர்க்கு ஏற்படும் தீமைகள் பற்றி ஆராய்ச்சி அடிப்படையில் விளக்கினோம். பொது அரங்கில் அமைச்சர் மாண்புமிகு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருச்செல்வம் அவர்கள், இலங்கை அரசினால் வெளியிடப்பெற்ற கலைச் சொற்றொகுதிகள் அனைத்தையும் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் கையளித்தார்கள். மாநாட்டுத் தொடக்க விழாக் கூட்டத்திலும், 'கலைச்சொல்லாக்க முயற்சிகளில் அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும்' என்ற கருத்தை அமைச்சர் திருச்செல்வம் முன்வைத்தார்கள்.

தவத்திரு தனிநாயக அடிகளார் கோலாலம்பூரில் மாநாட்டுக்கு ஆணி வேராக அமைந்தனர். சென்னை மாநாட்டில் திரு. சுப்பையா அவர்கள் அந்தப் பணியை ஏற்றுக் கொண்டனர். உலக நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக்கான நிறுவனமான யுனெசுகோவின் இயக்குநர் நாயகம் கலாநிதி மால்கம் ஆதிசேசையா மாநாட்டில் கலந்து கொண்டு யுனெசுகோவின் ஆதரவை வழங்கினார்கள்.

'மூன்றாவது தமிழாராய்ச்சி மாநாட்டைப் பாரிசில் நடத்தலாம்; மேனாட்டுத் தலைநகரில் நடத்தலாம்; 1970-ல் நடத்தலாம்' என்ற கருத்து மேலோங்கச் சென்னை மாநாடு நிறைவுற்றது.



தத்தில் கையெழுத்திட்டிருந்தார். 'நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு—கருத்தரங்கை இலங்கையில் நடத்த வருக; எல்லாவிதமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருகிறோம்' என்ற கருத்துப்பட அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

உலகின் மிகப் பெரிய தலைநகர்களுள் பாரிசு மாநகரும் ஒன்று. இங்கேதான் பேராசிரியர் சீன் பிலியோசா தலைமையில் உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர் பலர் கூடினர். மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடாத்தினர். கோலாலம்பூரில் சலசலப்பின்றி நடந்த நிகழ்ச்சி, சென்னையில் தமிழ் உணர்ச்சிக் கொந்தளிப்பின் நடுவே நடைபெற்றது. பாரிசிலோ, பத்தோடு பதினொன்றாக, பல்வேறு நிகழ்ச்சிகளுள் ஒன்றாக நடைபெற்றது. பிரிட்டனில் வாழும் தமிழர்கள் பலர் மாநாட்டுக்கெனப் பாரிசு மாநகரம் வந்திருந்தனர்.

இலங்கையில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த வேண்டும் என்ற தீர்மானம், பாரிசு மாநகரில், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தால் மேற்கொள்ளப்பெற்றது. யாழ்ப்பாணத்தில் 1974 தைத்திங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகட்குப் பாரிசு மாநகரில்தான் வித்திடப்பெற்றது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பெறுவதில் பெரும் பங்கு வகித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5. குதூகலமான கூட்டம்

தமிழர் தலைகுனிய வேண்டும். சிங்களவர் தலைநிமிர வேண்டும். தமிழர் சிங்கள மொழியைக் கட்டாயம் பயில வேண்டும். தமிழர் சைவ சமயத்தை விட்டுப் பௌத்தராக வேண்டும். தமிழர் தம் தாயக நிலங்களைச் சிங்களவர்க்குத் தாரைவார்க்க வேண்டும்.

தமிழர் வாக்குரிமையைப் பறிப்போம்; நாடு கடத்துவோம். தமிழர் கல்வி பெறும் வாய்ப்புகளைத் தடை செய்வோம். திறமை வேண்டாம்; சிங்களவராயிருந்தால் போதும்; பல்கலைக் கழகத்தினுள் நுழையலாம்.

தொழில் வாய்ப்போ அரிது. உள்ளதெல்லாம் சிங்களவர்க்கு மட்டும். தமிழர்க்குத் தொழில் வாய்ப்பும் இல்லை. வாய்ப்புகளை ஏற்படுத்தும் ஆட்சியுரிமையும் இல்லை.

தமிழர் இரண்டாந்தரக் குடிமக்கள். சிங்களவர் முதல் நிலைக் குடிமக்கள். இலங்கைத்தீவின் உரிமை சிங்களவர்க்கே. இலங்கை எனக் கூற வேண்டாம். 'சிலோன்' என அழைக்க வேண்டாம். சிங்களப் பெயரால் 'ஸ்ரீலங்கா' என அழைப்போம். சிங்களவர் நாடு எனக் கூறுவோம்.

கடலைக் கடந்தால் தமிழகம்; தமிழர் நிலம். தமிழகத் தமிழருடன் ஈழத் தமிழருக்கு எவ்விதத்தொடர்



பும் வேண்டாம். தமிழகத்தில் வெளியிடப்படும் தமிழ் நூல்கள் இலங்கைக்குள் நுழைவதற்குக் கட்டுப்பாடு; தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள் நுழைவதற்குத் தடை.

வயிற்றை வளர்க்க வேண்டி, அடிமை வாழ்வு வாழவேண்டிய நிலை தமிழர்க்கு இலங்கையில் ஏற்பட்டது. ஆங்கிலேயரின் கீழ் அடிமை வாழ்வு வாழ்ந்த தமிழர்கள் சிங்களவர்களின் கீழ் அடிமை வாழ்வைத் தொடர வேண்டி இருந்தது.

1970ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த சமவுடைமை (சோசலிசக்) கூட்டணி அரசு, திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையில் எழுந்த அரசு, தமிழர்களை அடிமையாக்குவதில் தீவிரம் காட்டியது. அரசின் அமைச்சர்களுள் ஒருவராகத் திரு. செல்லையா குமார சூரியர் பணி புரிந்தார்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறாமல், பங்களிப்பில்லாமல் 1972இல் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பெற்றது. தமிழர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். 1972 வைகாசித் திங்களில் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

தமிழர்கள் 1972இன் அரசியலமைப்பை ஏற்கவில்லை. அடிமை வாழ்வை விடுத்து விடுதலையையே தமிழர்கள் விழைகின்றார்கள். இடைத் தேர்தலை நடாத்துங்கள். தமிழரின் கருத்தை அறியலாம். இதற்கமைவாகப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கிறேன்— என்ற கருத்துப் படக் கூறிய தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சா. சே. வே. செல்வநாயகம், 1972 அக்டோபரில் தமது பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறந்தார். தமிழர்களின் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்தன. தமிழர் கூட்டணி அமைந்தது.

www.tamilarangam.net



1973 தை 3 தொடக்கம் 7 வரை, யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு— கந்தரங்கு நடத்தப்பெறத் திட்டமிடப்பெற்றது. அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை இம் மாநாட்டை நடாத்த முன் வந்தது. இந்த மாநாட்டு வெற்றியில் அக்கறை உள்ளவர்கள் 1972 சூலை 30ஆம் நாள், கொழும்பில், பம்பலப் பிட்டி, மிலாகிரியா அவனியு, 19ஆம் எண்ணில் உள்ள 'சாந்தம்' விருந்தினர் விடுதியில், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைத் தலைவர் திரு. எச். டபிள்யூ. தம்பையா அவர்கள் தலைமையில் கூடினார்கள்.

'நீங்களும் வாருங்கள். மாநாட்டு வெற்றிக்காக உழையுங்கள்' என அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை இணைச் செயலாளர்களுள் ஒருவரான திரு. சேம்சு இரத்தினம் எனக்கு அழைப்பு அனுப்பினார். தொலை பேசியிலும் அழைத்துக் கூறினார். நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

கடற்றொழில் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு அலுவலராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். கொழும்பில் வசித்து வந்தேன். மூன்றாவது மகப் பேற்றை எதிர்பார்த்து மனைவி இருந்தார். இலங்கை இந்து இளைஞர் பேரவையில் தலைமைச் செயலாளராகப் பணி புரிந்தேன். உலக உணவு வேளாண்மை நிறுவனத்தின் அழைப்புக்கமைய ஆய்வுக் கட்டுரை எழுதிக் கொண் டிருந்தேன். இவ்வளவு பொறுப்புகளின் நடுவே தமிழாராய்ச்சி மாநாட்டுப் பணிகளில் ஈடுபட முடியுமா என என் மனைவி என்னைக் கேட்டார்

இலங்கை இந்து இளைஞர் பேரவை, தமிழாராய்ச்சி மாநாட்டு வெற்றிக்காக உழைக்க வேண்டும் எனக் கருதினேன். தலைவர் திரு தா. சண்முகநாதன் அவர்களை இந்து இளைஞர் சார்பில் கூட்டத்தில் கலந்து



கொள்ளுமாறு வேண்டினேன். நான் போகவில்லை. திரு சண்முகநாதன் கூட்டத்துக்குப் போனார். சில நாட்களின் பின் என்னைச் சந்தித்தார். ஆலோசனைக் கூட்டமாக இருந்தமை, உழைக்கக் கூடியவர்கள் இல்லாமை, வாய் வீரர்களே உள்ளமை, 'கறுவாக் காட்டு'த் தமிழர் மிகுந்திருந்தமை என்பன பற்றிக் கூறினார் திரு. சண்முகநாதன் உற்சாகமில்லாமல் கூறியவை எனக்கு வேதனையைத் தந்தன.

திரு. செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறந்த காலப் பகுதியில், தமிழரின் அரசியல் சூழலில் பதட்ட நிலையிருந்த காலத்தில், 1972 அக்டோபர் திங்கள் 29ஆம் நாள் மீண்டும் ஒரு கூட்டம் நடைபெறும் என எனக்கு அழைப்பு வந்தது. மனைவி ஆண் மகவைப் பெற்றெடுத்திருந்தார். ஆய்வுக் கட்டுரை எழுதி முடித்திருந்தேன். பொறுப்புகள் ஓரளவு குறைந்திருந்தன. கூட்டத்துக்கு நான் போனேன். என்னைப் போகுமாறு திரு. சண்முகநாதன் பணித்திருந்தார்கள்.

நடுநாயகமாகத் தவத்திரு தனிநாயக அடிகள் அமர்ந்திருந்தார். கூட்டத் தலைவராகத் திரு. எச். டபிள்யு. தம்பையா கடமையாற்றினார். திரு. கே. சி. தங்கராசா, திரு. சேம்சு இரத்தினம், திருமதி பு. திருச்செல்வம், திரு. ச. அம்பிகைபாகன், பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி க. கைலாசபதி இப்படிப் பலர் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மலைநாடு, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து அறிஞர் களும் ஆதரவாளர்களும் வந்திருந்தனர். கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழக வளாகங்களில் இருந்து பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆராய்ச்

2381—3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சியாளர்கள் வந்திருந்தனர். மாநாட்டு வெற்றியில் அக்கறை கொண்ட குழுக்களைப் பிரதிநிதித்துப்படுத்து வோர் பலர் வந்திருந்தனர்.

அந்தக் காலை வேளை மகிழ்ச்சியான வேளை. வந்திருந்த ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மாபெரும் பணி ஒன்றை நிறைவேற்றும் உறுதி அவர்களிடம் தொனித்தது. 'தோளோடு தோள் நிற்போம். துவண்டு விட மாட்டோம். யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடாத்துவோம். பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடுவோம். வேற்றுமைகளை மறப்போம். தனி நலன்களைத் தள்ளுவோம். தமிழர் நலனைக் கொள்ளுவோம்' எனப் பலர் உறுதியுடன் கூறினர்.

நாட்டில் தமிழர்கள் படும் துன்பங்களின் நடுவே துயரத்தின் பின்னணியில், 'தமிழர் கூடினோம். உறுதியுடன் செயற்படுவோம். ஒற்றுமையுடன்செயற்படுவோம். உலக அறிஞர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைப்போம்' என்ற குரல் நிதானமாக ஒலித்தது.

யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. ஏன் யாழ்ப்பாணம்? மட்டக் களப்பில் நடத்தினால் என்ன? வவனியா ஏற்றதில்லையா? திருகோணமலை தானே தமிழ்த் தலைநகராகப் போகின்றது, அங்கு நடத்தக் கூடாதா? யாழ்ப்பாணத்துக்கு ஏன் போகின்றீர்கள்? கொழும்பில் ஏராளமான வசதிகள் உண்டே? இப்படியான ஒரு வினாகூட எழவில்லை. இத்தகைய கருத்துகள் விவாதிக்கப்படக் கூட இல்லை.

இலங்கையில் மாநாடு நடத்துவதெனில் யாழ்ப்பாணத்தில் தானே நடாத்த வேண்டும். வேறெங்கு நடாத்துவது? இந்த உளப்பாங்கு எல்லாரிடமும் மேலோங்கி நின்றது.



'1973 தைத் திங்களில்' மாநாடு நடாத்தக் காலம் போதாது. சூழ்நிலை சரியில்லை. 1974 தைத்திங்களுக்குத் தள்ளி வைப்போம். இப்பொழுதிருந்தே செயற்படுவோம். எல்லாவிதமான ஆயத்தங்களையும் செய்வோம்' எனத் திரு. ச. அம்பிகைபாகன், திரு. சேம்சு இரத்தினம், தவத்திரு தனிநாயக அடிகள், திரு. எச். டபிள்யு தம்பையா, இப்படிப் பலர் கருத்துக் கூறினர். அனுபவம், ஆற்றல், செயல்திறன், செல்வாக்கு உள்ளவர்கள் கூறும்பொழுது மாற்றுக் கருத்துச் சொல்ல யாரும் இருக்கவில்லை.

1974 தைத்திங்களில் யாழ்ப்பாணத்தில் நான்காவது அணைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும் எனக் கூட்டத்தினர் ஒருமித்துத் தீர்மானித்தனர். தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட பொழுது நானும் இருந்தேன். கருத்தை ஏற்றுக் கொண்டேன்.

மருத்துவர் எசு. ஆனந்தராசன் எழுந்தார். 'மாநாட்டு வெற்றிக்காக உழைப்பேன்' என உறுதி கூறினார். ஓராயிரம் உருபா நிதி வழங்கப் போவதாக அறிவித்தார். அவரின் அறிவித்தல் வழிகாட்டியாக அமைந்தது. மேலும் பலர்தாமும் ஓராயிரம் உருபா நிதி வழங்கப் போவதாக அறிவித்தனர். ஒவ்வோர் அறிவிப்பும் உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

அமைப்பு விதிகளில் சில மாற்றங்களைக் கூட்ட உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். புதிய அலுவலாளர்களையும் ஆட்சிக் குழு உறுப்பினர்களையும் தெரிவு செய்யுமாறு தலைவர் கேட்டுக் கொண்டார். எந்த ஒரு பதவிக்கும் போட்டி இருக்கவில்லை. முன்னேற்பாடுகளும் இருக்கவில்லை. மகிழ்ச்சியும் குதூகலமும் எல்லாரின் உள்ளத்திலும் நிறைந்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்கள் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருக்கவேண்டும் என நான் முன்மொழிந்தேன். வழிமொழியப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பெற்றது. ஆட்சிக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக என்னைப் பணிபுரியும்படி முன்மொழிந்தார்கள். எனது இயலாமையைக் கூறிப் பின்வாங்கிக் கொண்டேன். பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

**தலைவர்:** திரு. எச். டபிள்யு. தம்பையா; **துணைத் தலைவர்கள்:** திரு. கே. சி. தங்கராசா, திரு. சி. அம்பிகைபாகன், திரு. எசு. பசுதியாம்பிள்ளை, திருமதி பு. திருச்செல்வம், திருமதி ம. பாலக்கிருட்ணன்; **இணைச்செயலாளர்கள்:** தவத்திரு தனிநாயக அடிகள், திரு. சேமசுரி. இரத்தினம், பேராசிரியர் சு. வித்தியானந்தன்; **இணைப்பொருளாளர்கள்:** திரு. [illegible] செல்வநாதன், திரு. இ. நமசிவாயம், திரு. சி. அம்ப[illegible]ர்; ஆ[illegible]சிக்குழு உறுப்பினர்கள்: சனுப் எம். எம். [illegible]வைசு, திரு [illegible]சு. சரவணமுத்து, கலாநிதி கே. பூ[illegible]சிங்க[illegible], கலாநிதி எசு. பத்மநாதன், மருத்துவர் எசு. [illegible]னந்தராசன், திரு. மா. க. கனகேந்திரன், திரு. [illegible]குமாரபாரதி, திரு. மு. சிவசிதம்பரம், திரு. வீ. சு. துரைராசா, திருமதி ம. மகாதேவா, கலாநிதி கா. இந்திரபாலா, திரு. து. இராசேந்திரா, திரு. த. சபாரத்தினம், திரு. கே. பூர்ணனந்தா.

'நல்லதொரு கூட்டு அமைத்தோம்; மாநாட்டு வெற்றிக்கு அடித்தளம் அமைத்தோம்' என எண்ணிக் கொண்டே கூட்டத்தினர் கலைந்தனர்.

# 6. தி. மு. க. வுக்கு அஞ்சவேண்டியதில்லை

'1974 தைத்திங்களில் யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தலாம்; நடத்துவோம்' என்ற தீர்மானத்தில் அரசியல் பின்னணி இருக்கவில்லை. எங்கள் வீட்டுத் திருமணத்தை எங்கள் வீட்[illegible]லயே நடத்துவோம் என்பதற்கு அரசிய[illegible] பின்ன[illegible] இருக்கமுடியாது. எங்கள் வீட்டுக்கு வரும் வெளி[illegible]டு விருந்தினர்களை எங்கள் வீட்டிலேயே வரவேற்[illegible]போம், வசதி செய்வோம் என்பதில் அரசி[illegible] பின்னணி இருக்கமுடியாது.

அரசின் அனுமதியின்றித் தமிழ் மக்கள் தமது நிலத்தில் விழாக்களை நடாத்தவோ வெளிநாட்டவர்களை வரவேற்கவோ முடியாத நிலை படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வந்தது. அநாகரிகமான அந்த நிலைக்கு மத்தியிலும், 1972இல் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னணியிலும் அன்று, கொழும்பு, பம்பலப்பிட்டி, சாந்தம் விடுதியில் கூடிய தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாநாட்டை யாழ்ப்பாணத்தில் 1974 தைத்திங்களில் நடாத்தவே தீர்மானித்தார்கள்.

தீர்மானத்தோடு நிற்கவில்லை. தவத்திரு தனிநாயக அடிகளாரும் பிற மூத்த உறுப்பினர்களும் யாழ்ப்பாணம் சென்றூர்கள். பலரைச் சந்தித்தார்கள். ஆதரவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேட்டார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வந்தர்கள் மாநாட்டு வெற்றிக்கு உழைக்க உறுதி பூண்டனர். நிதி திரட்டத் தமக்குள்ளே ஒரு குழுவை அமைத்தனர்.

கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர்கள் கூடினார்கள். யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் மாநாட்டுக்கு நிதி திரட்டத் தம்முள்ளே ஒரு குழுவை அமைத்தார்கள். தவத்திரு தனிநாயக அடிகளார் இக் கூட்டத்தில் உரையாற்றி உற்சாக மூட்டினார்.

1972 அக்டோபரில் தீர்மானிக்கப்பெற்றது; 1972 மார்கழிக்குள் பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன. மாநாட்டு அமைப்புக்குழு உருவாக்கப்பட்டது. மாநாட்டு அமைப்புக்குழுத் தலைவராகத் தவத்திரு தனிநாயகம் அடிகள் பொறுப்பேற்றார். மருத்துவர் எசு. ஆனந்தராசன், திரு வி. எசு. துரைராசா, திரு எசு. இராசலிங்கம் ஆகியோர் அமைப்புக்குழுவின் இணைச் செயலாளர்களாயினர். திரு. கே. செல்வநாதன் அமைப்புக்குழுப் பொருளாளரானார். யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்தவும், அதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்யவும் இக்குழுவுக்குப் பொறுப்பு வழங்கப்பெற்றது.

ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பெறுவது, மதிப்பிடுவது, வகுப்பது, ஆராய்ச்சி அரங்குகளை ஒழுங்கு செய்வது போன்ற பணிகள் ஆராய்ச்சி அறிஞர்கள் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. உலகில் உள்ள பல ஆராய்ச்சி அறிஞர்கட்கு மாநாட்டைப் பற்றிய அறிவித்தல்கள் அனுப்பப் பட்டன.

யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த வசதியான இடம் வேண்டுமே! இதுவரை யாழ்ப்பாணத்தில் அனைத்துலக மாநாடுகள் நடைபெற்றதில்லையே!



ஆராய்ச்சி அரங்குகள் எங்கே? பொது அரங்கு எங்கே? விடுதி வசதிகள், உணவு வசதிகள் எவ்விடத்திலே? இத்தகைய வினாக்களுக்கு விடையாகத் திரு வி. எசு. துரைராசா ஒரு திட்டத்தை வெளியிட்டிருந்தார்.

திரு. வி. எசு. துரைராசா சிறந்த கட்டிடக் கலைஞர். உழைப்பால் உயர்ந்தவர். செல்வச் செழிப்புடையவர். நிர்வாக ஆற்றல் உடையவர். பொது மக்களுடன் தொடர்புகொள்வதில் உள்ள நுணுக்கங்களை அறிந்தவர். மக்களை உற்சாகப்படுத்தவும், நிதி வழங்குவோர் உள்ளத்தில் உந்துணர்வை ஏற்படுத்தவும், எதிர்காலப் பயன்பாட்டிற்கும் என அவரின் திட்டம் அமைந்தது.

வீரகேசரி, தினகரன், ஈழநாடு ஆகிய நாளிதழ்களில் அவரது கருத்து வெளியிடப்பெற்றது. கட்டிடக் கலைஞரல்லாதார் கருத்துக்கு வலுவூட்ட விளக்கப் படத்தையும் வெளியிட்டிருந்தார். ஒலிம்பிக் விளையாட்டு நடைபெறும் நாட்களில், விளையாட்டு நடைபெறும் இடம் புதிதாக அமைக்கப்படுவதும், நகரமே உருவாக்கப்பெறுவதும் அவரது திட்டத்தின் கருவாக இருந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டி, மண்டபம், அரங்கு, விடுதிகள், அலுவலகங்கள் நிறைந்த நகரம் ஒன்றை உருவாக்கத் திரு. துரைராசா விரும்பினார்.

மாவட்டங்கள்தோறும் குழுக்களை அமைக்க வேண்டும். பள்ளி மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும். பரந்த அளவில் நிதிசேர்க்க வேண்டும். இப்படியாக மருத்துவர் திரு. ஆனந்தராசனின் முயற்சிகள் அமைந்தமை பற்றி நாளிதழ்கள் செய்தி வெளியிட்டன. திரு. இராசலிங்கம், திரு. செல்வநாதன் இருவரது அமைதியான முயற்சிகள் பற்றி நாளிதழ்களில் செய்தி எதுவும் வரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது சம்பந்தமாக அஞ்சல் துறை அமைச்சர் திரு. செ. குமாரசூரியனின் ஆலோசனையையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற உலகத் தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் கிளையினர் முயற்சி செய்து வருகின்றனர்' என்ற முன்னோட்ட வரிகளுடன் கூடிய செய்தி 20-12-1972-ல் வெளிவந்த 'தினபதி' நாளிதழில் காணப்பட்டது.

அதே செய்தியில் வேறொரு பத்தியில் "நிறைந்த தமிழ் உணர்ச்சியும் தமிழ் அபிமானமுமுள்ள அமைச்சர் குமாரசூரியரைக் கடந்த 1970 ஆம் ஆண்டு பாரிசில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அழைக்காமல் விட்டு விட்டோமே என்று இலங்கைக் கிளையினர் புலர் இப்போது வருந்துகின்றனர் என்றும் தெரிய வருகிறது" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழர்களிடம் போனோம். இப்பொழுது தமிழர் பங்கு பற்றாத, தமிழரை அடிமை கொள்ள விழைகின்ற அரசிடம் போகின்றோம். இரு சாராரின் ஒத்துழைப்பு இல்லாமலும் மாநாட்டை நடத்த முடியாது.20-12-72-ல் 'வீரகேசரி' நாளிதழில் வெளிவந்த மற்றுமொரு செய்தி இந்தக் கருத்தை வலியுறுத்தியது.

"1974ஆம் ஆண்டு சனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுத் தர சகல நடவடிக்கைகளும் தன்னால் மேற்கொள்ளப் பெறும் என்று கலாசார அமைச்சர் திரு. எசு. எசு. குலதிலகா உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைக்கு உறுதியளித்தார்.

இது செய்தியாகத் தான் உடன் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யவிருப்பதாயும் அவர் மன்றத்தினருக்குத் தெரிவித்தார்.



"கடந்த சனிக்கிழமை உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையைச் சேர்ந்த டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, திரு. கே. சி. தங்கராசா, திரு. சேம்ஸ் ரி. இரத்தினம், டாக்டர் ஆனந்தராசன், திரு. ஆர். நமசிவாயம் ஆகியோர் திரு. குலதிலகாவை சந்தித்துப் பேசிய போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

"...திரு. குலதிலகா நான்காவது மாநாட்டைப் பேராதனை பல்கலைக் கழகத்தில் நடத்தினால் என்ன" என்று ஒரு யோசனையைத் தெரிவித்தார்.

"இதற்கு மாநாட்டுக் குழுவினர் பதிலளிக்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் தொன்மைமிக்க வரலாற்றைக் கொண்ட யாழ் நகரில் நடத்துவதே சிறப்பு" என எடுத்துக் கூறினர்.

'யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டாம்; பேராதனையில் நடத்துங்கள்' என அமைச்சர் கூறியதில் இரு நோக்கங்களை நான் காணுகிறேன். ஆராய்ச்சி மாநாடு தானே; பல்கலைக்கழகம் தானே ஆராய்ச்சியின் தாயகம்; பேராதனையின் அமைதியான இயற்கைச் சூழலில் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளரிடையே ஆராய்ச்சி மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பது ஒரு நோக்கமாக, நல்ல நோக்கமாக இருந்திருக்கலாம்.

சென்னையில் நடந்தது; தமிழர்கள் எழுச்சி பெற்றனர். யாழ்ப்பாணத்தில் நடந்தால் தமிழ் எழுச்சி பொங்கும், பெருகி ஓடும், தமிழர் தன்னம்பிக்கை பெறுவர். உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர் பலரும் தமிழருக்கு அரசு இழைக்கும் அநீதிகளைக் கண்கூடாகக் காணவும் நேரடியாகக் கேட்கவும் வாய்ப்பு உண்டாக்கும். இதுவே யாழ்ப்பாணத்தில் நடத்தாது பேராதனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் நடத்துங்கள் என அமைச்சர் கூறியதன் மற்றொரு நோக்கமாக, அல்லது ஒரே நோக்கமாக இருந்திருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த வேண்டாம் என்ற கருத்து அரசு தரப்பில்தான் முதன் முதலாகக் கூறப்பட்டது. அதுவும் அரசின் கலாச்சார அமைச்சர் ஒருவரால் கூறப்பட்டது. நேரே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினரிடம் கூறப் பட்டது.

"There is no need to be frightened of the Federal Party or the Dravida Munnetra Kazhagam...International Tamil conference is not something that was started by the Federal Party or the DMK"

தமிழரசுக் கட்சியைக் கண்டோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டோ அஞ்ச வேண்டிய தில்லை......அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தமிழரசுக் கட்சியோ திராவிட முன்னேற்றக் கழகமோ தொடக்கி வைக்கவில்லை. இவ்வாறு கலாச்சார அமைச்சின் செயலாளர் திரு. க. நிசங்கா விசயரத்தின செய்தியாளர் மாநாட்டில் கூறியதாக 5—1—1973-ல் வெளிவந்த 'சிலோன் ஒப்சேவர்' நாளிதழில் செய்தி யிருந்தது.

அதே செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட கலாச்சார அமைச்சர் திரு. எசு. எசு. குலதிலகா கூறிய வற்றை 6—1—1973 'வீரகேசரி' நாளிதழ் வெளியிட் டிருந்தது:

"தமிழாராய்ச்சி மாநாடு அரசியலுக்கு அப்பாற் பட்ட விஷயம். சமஷ்டிக் கட்சிக்கோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கோ தமிழாராய்ச்சி மாநாடு கட்டுப்பட்டு இயங்கவில்லை...



"...சர்வதேசத் தமிழாராய்ச்சி இயக்கம் தமிழரசு, தி. மு. க. போன்ற அரசியல் கட்சிகளினது கருவியாகப் பயன்படுகின்றது என மாநாட்டின்போது எழுப்பப் பட்ட அபிப்பிராயத்தையும் அமைச்சர் நிராகரித்தார்...

"...இந்த மாநாட்டை இலங்கையில் நடத்த அனுமதி வழங்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது...அரசாங்கம் அனுமதி வழங்கினால் கலாச்சார அமைச்சு மாநாட்டுக்குத் தனது முழு ஆதரவையும் வழங்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 7. அகம்பாவப் பேச்சுக்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து வேதாரணியக் கரைக்கு ஒருவர் நீந்தியே சென்றார். தலைமன்னாரிலிருந்து தனுக் கோடிக்கு வேறொருவர் நீந்திச் சென்றார். பாக்குத் தொடு வாயின் இருமருங்கிலும் தமிழ் நிலங்கள். தமிழரின் ஆள்புலங்கள். நீந்திச் சென்றவர் இருவரும் தமிழர்களே.

வேலைவாய்ப்பு தேடித் தமிழகத்திலிருந்து தமிழர்கள் தோணிகளில் பாக்குத் தொடுவாயைக் கடந்து ஈழம் வருவார்கள். சில மணி நேரப் பயணம் தான்.

வேங்கட மலைக்கு வடக்கே தமிழர்கள் தெலுங்கர் களாகவும், குடகுமலைக்கு மேற்கே தமிழர்கள் மலையாளி களாகவும் பல நூற்றாண்டுகட்கு முன்பு பரிணும மாற்றம் அடைந்தனரே! கடலைக் கடந்து வாழும் ஈழத் தமிழர்கள் மட்டும் நூற்றாண்டுகட்கு ஊடாகத் தமிழ ராகவே தொடர்ந்தும் வாழ்கின்றனரே! ஈழத் தமிழகத் துக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையேயுள்ள இறுக்கமான இணைப்பும் பிணைப்பும் தாமே காரணம்.

தமிழ் நாட்டுத் தமிழர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ இலங்கைக்குள் வந்து விடலாம். ஈழத் தமிழர் எண்ணிக்கை பெருகி விடலாம். சிங்கள மொழி, பௌத்த மதம் சீரழிக்கப்படலாம். எனவே ஈழத்



தமிழர்க்கும் தமிழகத் தமிழர்க்கும் இடையே உள்ள தொடர்புகள் குறைக்கப்பட வேண்டும். ஈழத் தமிழர்கள் தனித்து ஒதுக்கப் படவேண்டும். சிங்கள மயமாக்கம் பரவலாக வேண்டும். சிங்களத் தீவிர வாதிகள் எண் ணுவது, எழுதுவது, பேசுவது இவைதாம்.

நான்காவது அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற அரசுஅனுமதி வழங் கினால் கலாச்சார அமைச்சு ஒத்துழைக்கும் எனவும், தமி ழாராய்ச்சி மாநாட்டில் அரசியலுக்கு இடமில்லைஎனவும் அரசும், மன்றமும் முறையே அறிவித்தமை பற்றி 'வீரகேசரி' 21. 12. 1972ஆம் நாளிதழில் வெளிவந்த தலையங்க வரிகள் முக்கியமான கருத்தை வெளி யிட்டன:

"இலங்கையில் நடைபெற விருக்கும் மாநாடு அரசி யலுக்கு அப்பாற்பட்டதென்றும், முழுக்க முழுக்கத் தமிழ்த் துறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தும் வகையிலேயே அம்மாநாடு நடைபெறவிருக்கின்ற தென்றும் தூது சென்ற குழுவினர் வெகு அழுத்தமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

"தமிழர்கள் எதைச் செய்ய முயன்றாலும் அதனை அரசியலுடன் தொடர்பு படுத்தும் துரதிட்டவசமான நிலை பல காலமாக நிலவி வந்திருக்கின்றது. கலை இலக் கிய விடயங்களைக் கூட இவ்விருள் கவ்வாமலில்லை. ஏதோ அரசியல் காரணத்துக்காகத் தான் விழாக்கள் எடுக்கப் படுகின்றனவென்றும், தமிழகத்தின் மறைமுக ஊடுருவலுக்கு இவை வழி சமைத்துக் கொடுக்கின்றன வென்றும் பரவலான கருத்தொன்று பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் நிலவி வருவது துர்லபமாகும். கலை இலக்கிய நடவடிக்கைகளைக் களங்கப் படுத்தும் இச் சாபக் கேடான நிலை இன ஒற்றுமைக்கும் கூட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்ச்சிக்கும் பெரிய தொரு முட்டுக் கட்டையாகவே இருந்து வந்துள்ளது.''

நடு நிலே நாளிதழான 'வீரகேசரி' மேற்கூறிய கருத்தை வெளியிட்டது. தமிழ் நாட்டின் மறைமுக மான ஊடுருவல்கள் மாநாட்டில் நடைபெறலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ் நாட்டில் ஆட்சி நடத்துகின்றது. முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி மாநாட்டுக்கு வருவார். தமிழர்களின் இதயங் களைக் கவர்ந்த திரு. எம். சி. இராமச் சந்திரன் மாநாட்டுக்கு வருவார். தமிழர்கள் எழுச்சி அடைவார் கள். அரசுக்கு இது இடையூறை ஏற்படுத்தலாம். அமைச்சர்குல திலகா தமிழ் ஆராய்ச்சி மன்றக் குழுவினரிடம் இந்தக் கருத்தை இரண்டு மணி நேரப் பேச்சுவார்த்தையின் போது குறிப்பிட்டிருக்கலாம். அல்லது அரசின் கையாட்கள் மூலம் மன்றத்தினர்க்குச் செய்தி அனுப்பியிருக்கலாம். இலங்கைப் பிரதமர், அமைச்சர்களை அழைப்பீர்களா எனக் கேட்டிருக்கலாம்.

1973 தைப் பொங்கல் நாளில் வெளிவந்த தமிழ் நாளிதழ்களின் தலைப்புச் செய்திகள் தமிழர்க்கு உவப் பளிப்பதாக அமையவில்லை. 1974 தைத் திங்களில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநாட்டைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவும், குடியரசுத் தலைவர் திரு. வில்லியம் கோபல்லவாவும் தொடங்கி வைக்க அழைக் கப்பெறுவார்கள்.

மருத்துவர் திரு. எசு. ஆனந்தராசன் பின்வருமாறு கூறியிருந்ததாகத் 'தினகரன்' நாளிதழ் 14. 1. 1973 ல் செய்தி வெளியிட்டது. "தமிழக முதல்வர் மு. கருணாநிதியாக இருந்தாலென்ன? எம். சி. இராமச்சந்திரனாக இருந்தாலென்ன? அவர்கள் மாநாட் டுக்கு ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து அது குழுவால் ஏற்கப்பட்டால் மட்டுமே கலந்து கொள்ள அழைக்கப்படுவார்கள் என்றும், அவ்வாறு அழைக்கப் படும் போதும் இங்கு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள மாட்டோம் என்றும் வேறு எந்த நிகழ்ச்சி யிலும் தாங்கள் பங்குபற்றப் போவதில்லை என்றும் அவர்கள் உறுதியளிக்க வேண்டும் என்றும் இணைச் செயலாளர் டாக்டர் எசு. ஆனந்தராசன் தெரி வித்தார்.''



40 நாடுகளில் இருந்து 300 அறிஞர்களும் ஆராய்ச்சி யாளர்களும் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் எனவும் செய்திகள் கூறின. செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய மாநாட்டு அமைப்புச் செயலாளர்கள் திரு. வி. எசு. துரைராசா, மருத்துவர் திரு எசு. ஆனந்தராசன், திரு ஆர். இராசலிங்கம் ஆகிய மூவரும் இந்த விவரங்களைக் கூறியிருந்தனர்.

அரசியல் பிரமுகர்களை அழைக்க மாட்டோம். தமிழ்த் தலைவர்களை அழைக்க மாட்டோம். இலங்கைப் பிரதமர் என்பதால் மட்டுமே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அழைக்கின்றோம். அரசியலைப் புகுத்த முனையும் மன்ற உறுப்பினர்களைக் கூட மன்றத்தில் இருந்து வெளியேற்றுவோம் எனவும் இவர்கள் கூறியிருந்தனராம்.

15. 1. 1973 தினபதி நாளிதழில் பின்வரும் செய்தி வெளி வந்தது. "டாக்டர் ஆனந்தராசனின் கொழும்பு வாசத்தலத்தில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டிலேயே இத் தகவல் வெளியிடப்பட்டது. தமிழாராய்ச்சி மாநாட்டில் அரசியலுக்கு இடமிருக்காது என அமைப்புக் குழுச் செயலாளர்கள் கூறியதும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"**தினபதி நிருபர்:**—மாநாட்டில் அரசியலுக்கு இடமில்லை எனக் கூறுகின்றீர்களே, ஆனால் உலக தமிழாராய்ச்சி மாநாட்டு இலங்கைக் கிளையில் தமிழர் கூட்டணியின் உயர் மட்ட உறுப்பினரான திரு எம். சிவசிதம்பரத்துக்கு முக்கிய இடம் அளித்திருப்பதன் காரணம் என்ன?

'**டாக்டர் ஆனந்தராசன்:**—அவர் எப்படியோ எங்களுக்குத் தெரியாமல் நுழைந்து விட்டார். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. கழக அங்கத்தவர் எவராவது மாநாட்டில் அரசியலைப் புகுத்த முனைந்தால் அவர் யாரென்று கூடப் பார்க்காமல் வெளியேற்றுவோம். அரசியலுக்கு அப்பாற்பட்டுத் தொண்டு செய்ய வரும் எவருக்கும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்."

தமிழர் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவரான, இணைச் செயலாளர்கள் இருவருள் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம், தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்த திரு எம். சி. இராமச்சந்திரன் மூவரையும் பெயர் குறிப்பிட்டுத் துச்சமான கருத்துக்கூறி, நாளிதழ்களில் மருத்துவர் திரு. எசு. ஆனந்தராசன் பெயரில் வெளிவந்த செய்திகளில் உண்மையில்லை எனத் திரு. ஆனந்தராசன் மறுப்பு அறிக்கை விடவில்லை. எனவே அக் கூற்றுக்கள் பொய்யானவை அல்ல என்றே கொள்ள வேண்டும்.

அரசியலைக் கலக்க வேண்டாம். அரசியலுக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் தொடர்பில்லை. இப்படிக் கூறிய மருத்துவர் திரு. எசு. ஆனந்தராசன் மாநாட்டு அமைப்புக்குழு இணைச் செயலாளர்களுள் ஒருவராக இருந்தார். அவரே அரசியலைச் சந்திக்கு இழுத்தார்.



அரசியல்வாதிகளைப் பெயர் குறிப்பிட்டுச் சாடினார். திரு. மு. சிவசிதம்பரம் எப்படியோ தமிழாராய்ச்சி மாநாட்டு ஆட்சிக்குழு உறுப்பினராகப் புகுந்து விட்டதாகக் கூறினார். மருத்துவர் திரு. எசு. ஆனந்தராசன் எப்படிப் புகுந்தாரோ அப்படித்தான் அன்றைய கூட்டத்தில் ஆட்சிக் குழுவிற்குத் தெரிவானவர் ஒவ்வொருவரும் புகுந்தார்கள்.

திரு. கா. பொ. இரத்தினம் அரசியல்வாதி; பாராளுமன்ற உறுப்பினர்; தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவர்; தமிழ் மக்களிடையே தனி மனிதராக நின்று திருக்குறளின் கருப்பொருளைப் பரப்பி வருபவர்; அறவாழி; ஆராய்ச்சியாளர்; அறிஞர்; தமிழ்ப் பண்டிதர்; அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் தொடங்க உறுதுணையாக இருந்தவர்.

திரு. மு. சிவசிதம்பரம் சிறந்த சைவசமயத்தவர்; தமிழ் கற்றவர்; தலைசிறந்த வழக்குரைஞர்; ஆராய்ச்சித் திறன் உடையவர்; அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையுடன் நீண்ட காலத் தொடர்புடையவர்.

சேர். பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை விடுதலை அமைப்பைத் தோற்றுவித்த அரசியல்வாதி. தமிழிலும் சைவ சமயத்திலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டவர். சேர். பொன்னம்பலம் இராமநாதன் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதி; கல்விமான்; ஆராய்ச்சியாளர். இப்படியாக ஈழத்தில் அரசியல்வாதிகள் ஆராய்ச்சியாளர்களாக, அறிஞர்களாக இருந்துவரும் மரபு உண்டு.

திரு. சிவசிதம்பரம் இந்த மரபுவழி நின்று பணி புரிபவர். தமிழாராய்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு வந்தால் அரசியல் பேசமாட்டார். ஆனாலும் தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்மை பேணத் தவற மாட்டார். எப்படியோ மன்றத்தினுள் புகவேண்டும் என்ற நிலை அவருக்கு இருக்கவில்லை. தமிழாராய்ச்சி மன்ற ஆட்சிக் குழுவில் பணி புரிய அவர் ஒப்புக் கொண்ட பெருந்தன்மையைத் தமிழ் அறிஞர் உலகம் பாராட்ட வேண்டும்.

கேலியும் கிண்டலும் நிறைந்த தொனியில் திரு. எசு. ஆனந்தராசன் கூறியதாக வெளி வந்த செய்திகள் அவரது முதிர்வின்மையையும் ஆற்றல் குறைவையும் தெளிவு படுத்தின. மாநாட்டை வெற்றிகரமாக நடத்த விரும்புவார் எவரும் கூறக் கூடாததைத் திரு. ஆனந்தராசன் கூறியிருந்தார்.

திரு. மு. சிவசிதம்பரம், திரு. மு. கருணாநிதி, திரு. எம். சி. இராமச்சந்திரன் மூவரையும் பற்றிக் கூறிய கருத்துகளுக்கு இம்மூவரும் பதிலளிக்கவில்லை. ஆனாலும் "யார் இந்த ஆனந்தராசன்?" எனக் கேட்டு, யாழ்ப்பாணம், தாவடியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் 28. 1. 1973-இல் வெளிவந்த 'சுதந்திரன்' வார இதழில் பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்தார்.

"சிவசிதம்பரம் எப்படி உள்ளே வந்தாரோ தெரியவில்லை. அரசியல் கலந்தால் அவர் வெளியேற்றப்படுவார் என்கிறார் ஆனந்தராசன். எல்லாம் சரி, இந்த ஆனந்தராசன் என்பவர் யார்? தமிழ் மக்கள் முன்பின் அறியாத இந்த மனிதரைக் கழக இணைச் செயலாளராக்கியது யார்? சுதந்திரக் கட்சியின் பந்தமா? இவர் பேசுவது போன்ற அகம்பாவப் பேச்சுகள் இறுதியில் இவரை வருந்த வைக்கும்." இவ்வாறு அந்த அன்பர் கூறியிருந்தார்.

# 8 கறுப்புக் கொடி காட்டல்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே 400 அயிரமாத்திரி (கிலோமீட்டர்) தூரம். புகைவண்டியில் ஓர் இரவுப் பயணம். கொழும்பிலிருந்து புறப்பட்டு ஓர் இரவுப் பயணத்தை முடித்தால் மட்டக்களப்பிலோ, திருகோண மலையிலோ, மன்னாரிலோ, முல்லைத்தீவிலோ இறங்கலாம். விமானப் பயணமும், கடுகதிப் புகை வண்டிப் பயணமும் ஓரளவு கால இடைவெளியைக் குறைக்க முயல்கின்றன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அம்பாறை என்பன தமிழ் மாவட்டங்களின் தலைநகரங்கள். தமிழரின் நகரங்கள். இலங்கைத் தீவின் ஆட்சித் தலைநகர் கொழும்பு. கொழும்புக்குச் சிறிது வடக்கே, வாய்க்கால் ஆறுவரை தமிழர் நிலப்பகுதி பரந்திருந்தாலும், கொழும்பு அண்மைக் காலத் தலைநகரம்தான்.

மேனாட்டார் ஆட்சிக் காலங்களில் கல்வியறிவுள்ள தமிழர், வேலை வாய்ப்புக்காக, வர்த்தகத்துக்காக, வெளிநாட்டுப் பயணத்துக்காக, அரசு அலுவல்களுக்காகக் கொழும்பு செல்லத் தொடங்கினார்கள். சிலர் அங்கேயே தங்கிவிட்டார்கள். நகரங்களை நாடுதல், நல்வாழ்வு வாழ விழைதல் மேனாட்டார் வருகைக்குப்பின் மிகுந்தன.

www.tamilarangam.net



கொழும்பில், சிங்களவர், முசுலிம்கள், பறங்கியர், எனப் பல சமூகத்தவர்கள் வாழ்ந்தனர். இவர்களோடு தமிழரும் சேர்ந்து கொண்டார்கள். தனியாகத் தமது நிலப்பகுதியில் தமது பண்பாட்டு வாழ்வு முறைகட்கு நடுவில் வாழ்ந்த தமிழருட் சிலர், கொழும்பில் பல்வேறு சமூகத்தவர்கள் நடுவே வாழத் தொடங்கினுர்கள்.

மற்றைய சமூகத்தவர்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும்; அவர்களோடு இணங்கி வாழ வேண்டும்; அந்நியரின் மேலாட்சியை ஏற்கவேண்டும்; அந்நிய ஆட்சியின் தயவில் வாழவேண்டும். இத்தகைய எண்ணப் போர்வையில் தமிழர் தமது அடையாள உணர்வை இழக்கவும் இழிக்கவும் பழகினர். அடிமைத் தனத்தையும், சந்தர்ப்பவாதத்தையும், வளர்க்கவும் வாழ்வாகக் கொள்ளவும் பழகினர்.

தமிழ் நிலப்பகுதிகளில் வாழ்கின்ற தமிழரின் உளப்பாங்கு வேறுபட்டது. தமது பாரம்பரிய நிலம், மொழி, வாழ்வுமுறை, பண்பாடு, சமயம் என்பன தகுந்த பாதுகாப்பு உணர்வைத் தரத் தனித்துவமான வாழ்வு வாழ்ந்தனர். அவற்றைப் பேணவும், பாதுகாக்கவும், வளர்க்கவும், வாழ்விக்கவும் விழைந்தனர்.

'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என உரத்துப் பேசும் தமிழர், தமிழ் நிலத்தை விட்டுக் கொழும்பு சென்ற பின்பு, கொழும்பில் சில காலம் வாழ்ந்த பின்பு, வசதிகளை அனுபவித்த பின்பு, தலையைக் குனிந்து இணக்கம் கொண்டு, அடிமைத் தனத்தை ஏற்று வாழ முற்பட்டனர்.

அமைச்சர் குலதிலகாவுடன் பேச்சு வார்த்தை நடத்தியவர்கள் கொழும்புத் தமிழர்கள். குடியரசுத் தலைவரையும் பிரதமரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைக்க வேண்டும். மாநாட்டு நிகழ்ச்சிகட்கு அரசின் ஆதரவைப் பெறுவதுடன், அரசுக்கு ஆலவட்டம் பிடிக்க வேண்டும்—இவ்வாருன கருத்துகளைக் கொண்டு அவர்கள் செய்தி அறிக்கை வெளியிட்டார்கள்.



தமிழ் நிலத்துத் தமிழர்கள் அவ்வாறு நினைக்கவில்லை. காதோடு காதாக அவர்கட்குக் கொழும்புத் தமிழர்களின் இணக்க நினைப்புகள், குடியரசுத் தலைவரையும் பிரதமரையும் அழைக்கும் நினைப்புகள் எட்டின. தமிழ்நிலத் தமிழர்களின் பேராளர்கள் யாழ்ப்பாணத்தில் கூடினுர்கள். திரு. எசு. சே. வி. செல்வநாயகம் தலைமையில் 13—1—1973-இல் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு யாழ்ப்பாணத்தில் கூடியது; தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பாகப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

"நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறுவதைத் தமிழர் கூட்டணி மனப்பூர்வமாக வரவேற்று அம்மாநாட்டின் வெற்றிக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில் இந்நாட்டில் தமிழுக்கு உரிமை மறுத்துத் தமிழை 'வளர்த்து' வரும் அரசாங்கத்தின் அமைச்சர்களை அம் மாநாட்டுக்கு அழைத்து அரசியல் பிரச்சினைகளில் மாநாட்டைச் சிக்க வைக்கவேண்டாம் என்று மாநாட்டு நிர்வாகிகளைத் தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு கேட்டுக் கொள்கின்றது."

தமிழ் நிலப்பகுதிகட்கு வரும் அரசின் அமைச்சர்களின் வருகையை புறக்கணிப்பது, கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பது, இவ்வாருன தீர்மானத்தையும் அன்று தமிழர் கூட்டணியினர் மேற்கொண்டனர்.

www.tamilarangam.net



குடியரசுத் தலைவரையும் பிரதமரையும் அழைப்பதாகச் செய்தி வெளிவந்த அதே நாளில், தமிழர் கூட்டணித் தீர்மானமும் வெளிவந்தது. தைப் பொங்கல் நாளில் வந்த இந்த இரு செய்திகளும் தமிழர்க்கு வேதனையைத் தந்தன; மகிழ்வையும் தந்தன.

தமிழரின் விடுதலைக் குரலான 'சுதந்திரன்' வார இதழில் 21—1—1973 தலையங்கத்தில் கூறப்பட்டவை தமிழர் கூட்டணியின் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தன. "அரசியல் தலைவர்களை—அதுவும் தமிழ்த் தலைவர்களை மாநாட்டுக்கு அழைப்பதில்லை என்று கூறுபவர்கள் பிரதமரை மாநாட்டைத் திறந்து வைப்பதற்கு அழைப்பதன் மருமம் என்ன? இந்நாட்டில் தமிழ் மொழியின் உரிமைகளைப் பறித்துத் தமிழினத்தின் குரல்வளையை நெரித்து வரும் சிங்கள ஆட்சியின் முதல்வரை அழைத்துத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் திறக்கச் செய்வதைவிட மாநாட்டை இலங்கையில் நடத்தாமல் விடுவதே மேலானதாகும்.

"மாநாட்டுக்குப் பிரதமரை அழைத்து, அவர் அங்கு வந்து, தமது அரசாங்கம் தமிழுக்கு எல்லா உரிமைகளையும் அளித்திருக்கிறது என்று வாய்ச் சவடால் அடித்தால் அது அரசியலாகாதா? அப்படிப் பிரதமர் கூறினால் அதைத் தடுத்து நிறுத்தும் திராணி மாநாட்டு அமைப்பாளர்க்கு உண்டா?

"தமிழாராய்ச்சி மாநாட்டை அரசாங்கக் கட்சி ஆதரவு மாநாடாக நடத்திட மாநாட்டு அமைப்பாளர்கள் திட்டமிடுவார்களேயானால் அதைத் தமிழ் மக்கள் நிச்சயம் முறியடிப்பார்கள் என்பதை மட்டும் அழுத்தம் திருத்தமாக இங்குக் கூறி வைக்க விரும்புகிறோம்....

"—கலைஞர் கருணாநிதி நாலரைக் கோடித் தமிழ் மக்களின் தலைவர். தமிழ் நாட்டின் பொறுப்புள்ள முதலமைச்சர். அவரை அழைப்பதற்குக்கூட இவ்விதம் நிபந்தனைகள் இடுவது கடைந்தெடுத்த சின்னத்தனம். கலைஞரை மாநாட்டுக்கு அழைக்காமல் விடுவதற்குச் செய்யப்படும் ஒரு சூழ்ச்சி இது என்றே நாம் கருதுகின்றோம்."



தலையங்கத்தை எழுதித் தம் கருத்தை வெளியிட்ட ஆசிரியர் திரு. கோவை மகேசன், 'சுதந்திரன்' 28. 1. 1973 இதழில் இணுவிலைச் சேர்ந்த வாசகர் திரு. வி. ஆர். லிங்கம் அவர்களின் கருத்தை வெளியிட்டார். "எங்கள் தங்கத் தமிழுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிய இடத்தைப்—பாதுகாப்பைக்—கொடுக்காமல் இருக்கும் இந்த ஆசைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இவ்விருவரையும் (குடியரசுத் தலைவரையும், பிரதமரையும்) தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வைக்கக் கேட்கும் விழாக் குழுவினருக்கு என்ன துணிவு வேண்டும்? இவர்களுக்குக் கொஞ்சமேனும் மானம், ரோசம், வெட்கம் இல்லையா? இவர்கள் தமிழர்களா? அல்லது டமிலர்களா? தாய் பிச்சை எடுக்க மகன் காசியில் தானம் வழங்கின கதையாகத்தான் இருக்கிறது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு விழாக் குழுவினரின் செயல்."

தாய் தனது ஊரில் பிச்சை எடுக்கிறாள். காசிக்குப் போன அவளின் மகனோ ஆயிரம் பேரை அழைத்து அன்னதானம் செய்கிறான். தமிழ் நிலத்தில் தமிழர் அரசால் அல்லல்படுகின்றனர். கொழும்பில் வாழ்கின்ற தமிழர்களோ அரசுக்கு ஆலவட்டம் பிடிக்க முனைகின்றனர். தமிழ் நிலத் தமிழருக்கும் கொழும்புத் தமிழருக்கும் உள்ள சிந்தனை, உளப்பாங்கு, செயற்பாடு இவற்றில் உள்ள வேறுபாடுகள் எதிரும் புதிருமானவை.

குடியரசுத் தலைவர் அரசியல் வேறுபாடுகட்கு அப்பாற்பட்டவர். ஆனால் பிரதமரோ, அமைச்சர்களோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல்வாதிகள். எனவே அமைச்சர்கள் வந்தால் கறுப்புக் கொடி காட்டுவோம், புறக்கணிப்போம் என்ற தமிழர் கூட்டணியினர், குடியரசுத் தலைவர் வருகை பற்றிக் கருத்து தெரிவிக்கவில்லை.

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில், 'கறுப்புக் கொடி காட்ட வேண்டும், புறக்கணிக்க வேண்டும். அமைச்சர்களை அழைக்க வேண்டாம்' என்ற கருத்துகள் அடங்கிய தீர்மானத்தை முன் மொழிந்தவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களே! அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்றத் தொடக்கத்துக்கு உடந்தையாக இருந்தவர், மன்ற வளர்ச்சியில் அக்கறை உடையவர், தமிழ் வளர்ச்சியை மூச்சாகக் கொண்டவர், அவர்தாம் தீர்மானத்தை முன் மொழிந்தார். தமிழர்க்கும் தமிழுக்கும் தீங்கு ஏற்படும் என்றால் அதைத் தடுப்பதில் முன் நிற்பேன் என அவர் கருதியதில் வியப்பில்லை.

1972இன் அரசியலமைப்பு; 1972இல் தமிழர் கூட்டணி அமைப்பு; திரு. எசு. சே. வி. செல்வநாயகம் பதவி துறப்பு; கல்வித் துறையில் தமிழ் மாணவர் பாதிப்பு; வேலைவாய்ப்பின்மையால் தமிழ் இளைஞர் கொதிப்பு. இந்தச் சூழலில் 1972-இல் யாழ்ப்பாணத்துக்குப் பிரதமரையும் அமைச்சர்களையும் அழைக்கும் முயற்சியில் ஈடுபட்ட மாநாட்டு அமைப்பாளர்கள் மாநாட்டு வெற்றியைக் கருத்தில் கொள்ளவில்லை.

புயல் காற்றின் வேகமான வீச்சு; ஆழமற்ற பாறைகள் நிறைந்த கடல்; பெரிய கப்பல்; அக்கப்பல் தலைவனும் மாலுமிகளும் கண்ணுக்குள் எண்ணெய் விட்ட வண்ணம் விழிப்புடன் இருந்து கப்பலைச் செலுத்தினால் தானே தரை தட்டாமலும் புயலில் சிக்காமலும் கப்பல் காப்பாற்றப்படலாம்? அனுபவம்



இன்மை; ஆற்றல் இன்மை, முதிர்ச்சி இன்மை போன்ற குறைபாடுகள் கப்பல் தலைவனிடமோ மாலுமிகளிடமோ இருப்பின் கப்பலைக் காக்க முடியுமா?

கண்ணை மூடிக் கொண்டு கப்பலைப் புயலுக்குள் செலுத்தியது போல் மாநாட்டு அமைப்புச் செயலாளர்களின் அறிவிப்பு அமைந்தது.. அதுவும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போல் தமிழ்த் தலைவர்களையும் தமிழக முதல்வரையும் மருத்துவர் எசு. ஆனந்தராசன் சந்திக்கு இழுத்தமை அமைந்திருந்தது.

இந்தத் தீர்மானங்கள் எப்பொழுது, யார், யார் கூடித் தீர்மானித்தார்கள் என்ற விவரங்கள் வெளிவரவில்லை. தவத்திரு தனிநாயக அடிகள், திரு. கே. சி. தங்கராசா, திருமதி பு. திருச்செல்வம், இவர்களின் பெயர்கள் இச்செய்திகளுடன் தொடர்பு படுத்தப் பெறவில்லை.

தமிழர் கூட்டணியின் தீர்மானத்தைக் கடித மூலம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழாராய்ச்சி மன்றத்தினருக்கு எழுதினார். யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள புத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அவர் பின்வருமாறு கூறியதை 19—1—1973 'வீரகேசரி' நாளிதழ் செய்தியாக வெளியிட்டது.

"மேயர் துரையப்பா தமிழாராய்ச்சி மாநாட்டின் பெயரால் ஏதோ எல்லாம் பேசுகிறார். இது தமிழுக்காகத் தமிழரால் நடத்தப்படும் மாநாடாகஇருக்கட்டும். எத்தர் கூட்டத்தை அழைத்து நடத்தினால் அதற்கு இடம் கிடைக்காது. அமைச்சர்கள் இந்த மாநாட்டுக்கு வந்தால்,மிகப் பிரமாண்டமான அளவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவோம். இதனை மாநாட்டு நிர்வாகிகட்கு முன் கூட்டியே தெரிவிப்போம். எங்கள் எதிர்ப்பு அகிம்சை முறையில் இருக்கும். உலகத்துக்கு எம் எதிர்ப்பை எடுத்துக் காட்டுவோம். வாய்ப் பேச்சில் இருந்து விடக்கூடாது.''

# 9. கலைஞர் கருணாநிதியின் கையாளா ?

கைதடி ஒரு சிற்றூர். அங்குள்ள இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு. ஆ. கந்தையா அரசிடம் 5 ஏக்கர் காணி பெற்றிருந்தார். அந்தக் காணியில் புகலிடமற்ற அனாதைக் குழந்தைகட்கும், சிறுவர்கட்கும் இல்லம் ஒன்று அமைக்க முயன்றார். இந்து இளைஞர் மன்றங்கள் அனைத்தையும் இணைத்த பேரவையின் தலைமைச் செயலாளராகப் பணி புரிந்த என்னை அணுகினார். அனாதை இல்லம் அமைக்க வரைபடம் ஒன்றைக் கட்டிடக் கலைஞர் மூலம் வரைந்து தர முடியுமா என என்னிடம் கேட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலைப் புகை வண்டியில் கொழும்புக்குச் சென்று கொண்டிருந்தேன். புகை வண்டியின் குளிரூட்டப்பட்ட பயணிகள் பெட்டிக்குள் என்னுடன் கட்டிடக் கலைஞர் திரு. வி. எசு. துரைராசா பயணம் செய்து கொண்டிருந்தார். திரு. துரைராசா முன்பு எனக்கு அறிமுகமில்லாதவர். நானே அறிமுகம் செய்து கொண்டேன். கைதடி அனாதை இல்ல வரைபடம் தொடர்பாகக் கதைத்தேன்.

படம் வரைந்துதர ஒப்புக் கொண்டார்; உற்சாக மூட்டினார். இந்து இளைஞர்கள் வேகமாகச் செயற்பட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும் என்றார். கொழும்பில் தனது அலுவலகத்தில் காணித்துண்டின் வரைபடத்துடனும், செலவு மதிப்புக் குரிய தொகை எல்லையுடனும் வந்து சந்திக்குமாறு கூறினார். மகிழ்ச்சியான பயனுள்ள சந்திப்பு.

தமிழாராய்ச்சி மாநாட்டுச் செய்திகள் பற்றிக் கதைக்க வாயெடுத்தேன். கொந்தளிப்பு ஏற்படுத்தும் செய்திகள் உண்மையா எனக் கேட்க எண்ணினேன். வேறு யாரோ வந்தார்கள். அவருடன் பேசத் தொடங்கினார்கள்.

கொழும்பு சென்ற பின்பு கைதடிக்கு எழுதிக் காணியின் வரைபடமும் செலவு மதிப்பும் தருவித்தேன். திரு. துரைராசாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்திப்புக்குரிய நாளும் நேரமும் குறிப்பிட்டோம். அவரின் அலுவலகம் சென்றேன். அவருடைய செயலாளர் என்னை அழைத்துச் சென்றார். திரு. துரைராசாவின் அறைக்குள் மருத்துவர் எசு. ஆனந்தராசன் இருந்தார். இருவரும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

மருத்துவர் எசு. ஆனந்தராசன் என் நண்பர். 1969ஆம் ஆண்டில் முதன் முதலில் அவரை அப்போது உள்ளூராட்சி அமைச்சராகப் பணிபுரிந்த திரு. மு. திருச்செல்வம் வீட்டில் சந்தித்தேன். திரு. திருச்செல்வம் அவர்களின் அந்தரங்கச் செயலாளராக மிகக் குறுகிய காலம் பணியாற்றிய பின் அவருக்கு அவ்வப்போது உதவியாக இருந்து வந்தேன். திரு. ஆனந்தராசன் அமைச்சராக இருந்த திரு. திருச்செல்வம் வீட்டுக்கு அடிக்கடி வருவார். திரு. திருச்செல்வம் அமைச்சர் பதவியைத் துறந்தபின் திரு. ஆனந்தராசன் அங்கு வருவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டார்.

நீண்ட நாட்களுக்குப் பின் நானும் திரு. ஆனந்தராசனும் சந்தித்துக் கொண்டோம். வாஞ்சையுடன்



நலம் விசாரித்தார். "என்ன சச்சி, இங்கென்ன வேலை? வீடு கட்டிற யோசனையோ ?" எனக் கேட்டார்.

"இல்லை—" என நான் கூறி முடிக்கும் முன்பு திரு. துரைராசா, "அவர் வேறு வேலையாக வந்திருக்கிறார்" எனக் கூறினார்.

திரு. துரைராசாவும் திரு. ஆனந்தராசனும் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்பு இணைச் செயலாளர்கள். அன்று கேட்க முயன்று இடை விட்டதை இன்று கேட்கலாம் என எண்ணினேன். கைதடி வரைபடம் பற்றிப் பேசுவதைத் திரு. துரைராசாவும் தொடங்கவில்லை. நான் மாநாட்டைப் பற்றிக் கேட்டேன்.

"தினபதி, தினகரன், வீரகேசரி மூண்டிலும் வந்த செய்திகளைப் படிச்சனான். தமிழாராய்ச்சி மாநாட்டைப் பற்றி நீங்கள் குடுத்த செய்தி எண்டு எழுதியிருக்கு—என்னாலை நம்பமுடியல்லை" என்றேன்.

"நாங்கள் சொன்னதைப் போட்டிருக்கினம். அதிலை என்ன ?"—திரு. ஆனந்தராசன் என்னிடம் கேட்டார்.

"அப்ப பேப்பர்காரர் பிழை விடேல்லை. உங்களுக்கு மாநாட்டை நடத்த விருப்பமில்லை. அதுதான் அப்படிச் சொன்னியளோ ?"என்றேன்.

"என்ன சச்சி, நாங்கள் என்ன பிழையாகச் சொல்லிப் போட்டம். மாநாட்டை நடத்திக் காட்டிறம். நீர் பார்க்கத்தானே போறிர்."—திரு. ஆனந்தராசன் கூறினார். திரு. துரைராசா எதுவும் பேசவில்லை. நாங்கள் கதைத்ததைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஆராய்ச்சிக் கட்டுரை படித்தால்தான் கலைஞர் கருணாநிதியையும் எம். சி. இராமச்சந்திரனையும் மாநாட்டுக்குள் விடலாம் எண்டு போட்டிருக்கு. மக்களுக்குள்ளை குழப்பமான கருத்தைச் சொல்லலாமே ? மக்கள் இரண்டு கட்சியாய்ப் பிரிவினம். ஒருத்தரும் மாநாட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடத்தவிட மாட்டினம். ஆரிட்டைக் காசு கேட்கப் போறியள்? ஆரிட்டை ஆதரவு கேட்கப் போறியள்?

"மாநாட்டை நடத்த விருப்பமெண்டால் பிரச்சனைக்கு உரியதைப் பேசாமல் இருக்க வேணும். எல்லாரையும் அனுசரித்து நடக்க வேணும் மாநாட்டை நடத்திற போக்காக் காணேல்லை.

"கலைஞர் கருணாநிதி தமிழ் நாட்டு முதலமைச்சரல்லவா ? அவரை மாநாட்டுக்குக் கூப்பிட்டால் என்ன ?" நான் இப்படிக் கேட்டுக்கொண்டே போகத் திரு. துரைராசா ஆறுதலாக இருந்தார். திரு. ஆனந்தராசன் உணர்ச்சி வசப்பட்டார். பதட்டமாகப் பதில் கூறினார்.

"ஓ—இப்பானே எனக்கு விளங்குது. பச்சையப்பாவிலை படித்தனீரல்லே, நீர் கருணாநிதியின்ரை கையாள். கருணாநிதியின்ரை கையாள் கவர்ணமேண்ட் சேவிசிலை இருக்கேலாது. நான் இப்ப பீலிக்சிட்டைச் சொல்லுறன். உம்மை நிப்பாட்டிருங்களோ இல்லையோ பாரும்." பேசி முடித்த திரு ஆனந்தராசன் இருக்கையை விட்டு எழுந்தார்; வேகமாகக் கதவைத் திறந்தார். சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறினார்.

திரு. துரைராசாவைப் பார்த்தேன்; சிரித்தார். "அதைப் பற்றிக் கவலைப் படாதேயுங்கள்" என்றார். "அவரோடை நல்ல பழக்கமோ?" எனக் கேட்டார். எனது சில ஆண்டுகாலத் தொடர்பைக் கூறினேன். அவரோடு பழகினவர்கள், என்னைப் போன்றவர்கள் அவருக்கு ஆலோசனை கூற வேண்டும் என்றார். 'பெரிய சிக்கலாக இருக்கிறதே' என வருந்தினார்.

கைதடி அனாதை இல்ல வரைபடம் பற்றிப் பேசினோம். தமிழாராய்ச்சி மாநாட்டைப் பற்றி எதுவும் பேசவில்லை. திரு. ஆனந்தராசனின் கருத்தும் செயலும் அவர் மீது அனுதாபம் கொள்ளச் செய்தன. நல்லவர், நண்பர், நடைமுறை தெரியாமலும் மாநாட்டை நடத்துவதற்கு நல்ல வழி தெரியாமலும் துன்பப்படப் போகிறார் எனக்கருதினேன்.



திரு. பீலிக்சு டயசு பண்டாரநாயக்கா அப்பொழுது அமைச்சராக இருந்தவர். அரசின் முக்கிய ஆலோசகராகவும் இருந்தவர். திரு. ஆனந்தராசன் அவருடன் நெருங்கிய நட்பு கொண்டிருப்பதைப் போல் என்னிடம் கூறினார். நான் அப்பொழுது அரச ஊழியனாகக் கொழும்பில் பணி புரிந்து கொண்டிருந்தேன்.

சென்னையில் ஆறு ஆண்டுகளைக் கழித்தேன். பச்சையப்பன் கல்லூரியில் படித்தேன் ஒரு முறை கூடக் கலைஞர் கருணாநிதியைச் சந்திக்கவில்லை. பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, திரு. எம். சி. இராமச்சந்திரன் போன்ற பல தி. மு. க. தலைவர்கள் பச்சையப்பன் கல்லூரிக்கு ஆண்டுதோறும் வருவார்கள்; மாணவர்களிடையே உரையாற்றுவார்கள்; நான் காதாரக் கேட்பேன்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க வழக்குரைஞராகத் திரு.மு.திருச்செல்வம், 1963இல் சென்னை வந்தபொழுது அவர் தி. மு. க. தலைவர்களைச் சந்திக்க ஒழுங்குகளைச் செய்தேன். 1968இல் தான் முதல்முதல் பேரறிஞர் அண்ணாவைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். உளமார இவர்கள் பணியைப் போற்றிய நான் இவர்களோடு நேரடித் தொடர்பு வைத்திருக்கவில்லை. ஆனாலும் திரு. ஆனந்தராசன் அவ்வாறு கருதினார். என்னே ! என்னே !

சில நாட்கள் கழித்துச் 'சிந்தாமணி' வார இதழில் வெளிவந்த செய்தியும் 'தினகரன்' நாளிதளில் வெளிவந்த செய்தியும் தமிழ் மக்களுக்கு ஆறுதலை அளித்திருக்க வேண்டும். பொறுப்புணர்ச்சியுடனும், மாநாட்டை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்துடனும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிக்கல்களைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் தவத்திரு தனிநாயக அடிகளாரின் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

4. 2. 1973 நாளிட்ட 'சிந்தாமணி' வார இதழில் தவத்திரு. தனிநாயக அடிகளாரின் பேட்டி வெளியாகி இருந்தது. "இலங்கையில் நடைபெறவிருக்கும் மாநாட்டை ஆரம்பித்து வைக்க எவரை அழைப்பது பற்றி இன்னும் நாங்கள் யோசிக்கவில்லை. பிரதமரையோ ஜனாதிபதியையோ அழைப்பது பற்றி நாங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை.---கருணாநிதியையோ எம். சி. ஆரையோ அனுப்புவதெனத் தமிழ் நாட்டு அரசாங்கம் முடிவு செய்தால் அதை அரசியல் பிரச்சனையாகக் கருதக் கூடாது."

ஆட்சிக்குழுவின் கூட்ட முடிவுகளையே • தவத்திரு தனிநாயக அடிகளார் கூறினார். ஆட்சிக்குழுக் கூட்டம் காரசாரமாக இருந்ததையும் செய்தியாக வெளியிட்டார்கள். "ஒரு கட்டத்தில் அமைப்புக்குழுவின் செயலாளர்களில் ஒருவரான டாக்டர் ஆனந்தராசன் தடாலென்று கதவைத் திறந்து கொண்டு கோபாவேசத்தோடு வெளியில் வந்தார்."

கூட்டத்தில் திருமதி பு. திருச்செல்வம் கேட்ட கேள்விகள்தான், பொறுப்புணர்ச்சியுடனும், நல்ல நோக்குடனும் முதிர்ச்சியுடனும் மாநாட்டை நடாத்தக் கூடிய தீர்மானம் மேற்கொள்ள வழிவகுத்தது. சிந்தாமணியில் வெளிவந்த செய்தியைக் கீழே தருகிறேன்.

"திருமதி புனிதம் திருச்செல்வம் பல கேள்விகளைக் கேட்டு அமைப்புக் குழுவைத் திக்கு முக்காடச் செய்தார் என்று அறிய வருகிறது.

"திருமதி புனிதம் திருச்செல்வம் உலகத் தமிழாராய்ச்சிக் கிளையின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவர்.



இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அறிஞர் அண்ணாவின் கண்காணிப்பில் சென்னையில் நடந்தபோது அதில் முக்கிய பங்கு கொண்ட இலங்கைப் பிரமுகர்களுள் திருமதி புனிதம் திருச்செல்வம் குறிப்பிடத்தக்கவர்.

"அவர் உரிமையோடும் அதிகாரத்தோடும் கேட்டார். அமைப்புக்குழு எங்கே, எப்போது எவரால் தோற்றுவிக்கப் பட்டது? அமைப்புக்குழுவை அமைக்க அதிகாரம் அளித்தவர் யார்? பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுப்பதற்கு அமைப்புக்குழு என்ற பெயரில் இயங்குபவர்கட்கு எவரிடமிருந்து அதிகாரம் கிடைத்தது.

"கண்டவர்கள் எல்லாம் இப்படி எதையாவது பத்திரிகைகளுக்கு உளறிக்கொட்டி விடயத்தைக் கெடுக்கும் போது அதைச் சும்மா விட்டுவிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதா ? கேள்விகளுக்குப் பதில் வேண்டும். இப்படியாகத் திருமதி புனிதம் திருச்செல்வம் கேள்விக் கணைகளைத் தொடுத்ததும அமைப்புக் குழு நிர்வாகிகள் என்று இருந்தவர்களில் எவராலும் சரியான பதில் சொல்ல முடியாமல் போய் விட்டது. ஒருவரை ஒருவர் பார்த்து முழித்தார்கள்—"

திருமதி பு. திருச்செல்வம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் துணைத் தலைவர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப் பெற வேண்டும் எனக் கூட்டத்தில் நான் முன் மொழிந்தமையை நினைவு கூர்ந்தேன்.

அரசியல்வாதியாக, அமைச்சராக, தலைசிறந்த வழக்கறிஞராகப் புகழ் பெற்றவர் திரு. மு. திருச்செல்வம். திருமதி திருச்செல்வம் அரசியல் பக்கம் தலை காட்டுவதில்லை. நடு நிலையான கண்ணோட்டத்துடன், தமிழர் நலம் பேணுவதில் கணவர்க்கு அருந துணையாக இருந்தவர்.

2381—5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10. குழப்பம், தெளிவின்மை, முரண்பாடு

திரு. கார்ல் கெல்லர், சுவிட்சர்லாந்து: **தமிழ் பக்திப்பாடல்களின் தனித்தன்மை.** கலாநிதி எச். சிப்மன், வாஷிங்டன்: **பேச்சுத்தமிழும் எழுத்துத் தமிழும்.** கலாநிதி சாலை இளந்திரையன், தில்லி: **இக்காலத் தமிழ்ச் செய்யுள்.** கலாநிதி ஆர். சண்முகம், சென்னை: **குறுந்தொகையில் ஒலியியல்.** கலாநிதி ஆர். இராதாக்கிருட்டினன், கனடா: **சங்க காலத்தமிழ்.** கலாநிதி எம். எசு. அன்டனேவ், உருசியா: **தமிழ்நாட்டின் தமிழ்.** பேராசிரியர் எல். சன்ரமாரியா, இத்தாலி: **மலாய் மொழியில் தமிழ்ச் சொற்கள்.** கலாநிதி மார்கோ, அமெரிக்கா: **திராவிட மொழிகளும் உறவிமொழிகளும்.** திரு. ஏ. பி. செட்டியார், மொரிசியசு: **மொரிசியசு தீவில் தமிழ்ச்சொற்கள்.** திரு. ரொபின் செயின், இசுரேல்: **ஈபுறுமொழியில் தமிழ்ச் சொற்கள்.** திரு. எல். தேபான். ருமேனியா: **தமிழின் ஒப்பியல் இலக்கணம்.** கலாநிதி பெச்சட், மேற்குச் சொமனி: **தென்னிந்தியாவில் பௌத்தமும் அதன் வெளிநாட்டுத் தொடர்புகளும்,** திரு. நொபேரு சப்பான்: **சோழர் காலத்துச் சிற்றூர்கள்.** கலாநிதி பேர்காட், அமெரிக்கா: **தாய்வாரி பங்காளி.** கலாநிதி டபிள்யு. டெ செயின்ற், அயர்லாந்து: **தாய்லாந்தில் தமிழர்.** கலாநிதி குவாங், தைப்பே: **இலங்கை-சீனத் தொடர்புகள்.** திரு. கொங்டெஸ் புறப்பத்தேனு, தாய்லாந்து: **தாய்லாந்தில் திருமால் சிலை,** திரு வை. ட்ரைகோல்ம், சுவீடன்: **சுவீடன் மொழியில் திருக்குறள்.** பேராசிரியர் லோ, ஹாங்காங்: **சீனமும் தமிழும்.** பேராசிரியர் பக், அமெரிக்கா: **பாம்பாட்டிச் சித்தர்.** திரு. மாயோர் இசுத்வான், அங்கேரி: **குறிஞ்சிப் பாட்டு.** கலாநிதி அயோன் டுமுற்றின், ருமேனியா: **ருமேனியாவில் திருக்குறள்.**



'யாழ்ப்பாணத்துக்கு வருகிறோம். ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்கிறோம். இவைதாம் தலைப்புகள்; கட்டுரையின் சுருக்கங்களையும் அனுப்பியுள்ளோம்' இவ்வாறு உலகின் மூலை முடுக்கெல்லாம் உள்ள தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் கடிதம் எழுதினர். கட்டுரைச் சுருக்கம் அனுப்பினர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனைத் தலைவராகக் கொண்ட ஆராய்ச்சிக் குழுவில், திரு. பசுதியாம்பிள்ளை, கலாநிதி பத்மநாதன், கலாநிதி இந்திரபாலா, கலாநிதி பூலோக சிங்கம் முதலியோர் உறுப்பினராக இருந்தனர். உலகில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் அனுப்பிய கட்டுரைகளைப் படித்துத் தரம் அறிந்து, வகைப்படுத்தி ஏற்றுக்கொள்ளும் கடமை இக்குழுவினர்க்கு உண்டு.

உலகில் உள்ள தமிழ் ஆராய்ச்சியாளர்கள் யாழ்ப்பாண மாநாட்டுக்கு வரவேண்டும் என்பதில் இக்குழுவினர் அக்கறை காட்டினர். தவத்திரு தனிநாயக அடிகளார் இதையொட்டி மலேசியா, சிங்கப்பூர் பயணமானார். 3-2-1973இல் கொழும்பை விட்டுப் புறப்படுமுன் அவர் செய்தியாளரிடம் கூறிய கருத்துகள், தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற எலலாரும் இணைந்து உழைக்கவேண்டும் என்பதை விளக்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநாட்டு அமைப்புக் குழுச் செயலாளர்கள் ஒருபுறமும், மன்றஆட்சிக்குழு மறுபுறமுமாகக் கட்சி பிரிந்தது. மாநாட்டு அமைப்புச் செயலாளர்கள் மூவரிடையேயும் கூடக்கருத்து வேற்றுமைகள் நிறைந்திருந்தன. எனினும் அமைப்புச் செயலாளர்கள் தம் பணியைத் தொடர்ந்தனர். யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உள்ள பாடசாலைகள், கொழும்பில் வாழ்கின்ற செல்வந்தர்கள், இவர்களிடையே நிலைமையை விளக்கினர்; நிதி சேர்த்தனர். ஆட்சிக் குழு உறுப்பினர்களின் கருத்தைப் புறக்கணித்து, ஆட்சிக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் தாமே தமது தீர்மானங்களை மேற்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் முயன்றனர். இக்காலங்களில் ஏற்பட்ட கருத்துப் பரிமாறல்கள், மோதல்கள் திரு. கே. சி. தங்கராசாவுக்கு உளவேதனையை அளித்தது எனவும் அதனால் அவர் நோய்வாய்ப்பட்டார் எனவும் செய்திகள் வெளிவந்தன. 1973 மார் நடுப்பகுதியில் அவர் தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். தவத்திரு தனிநாயக அடிகள் வெளிநாட்டிலும், திரு. கே. சி. தங்கராசா மருத்துவமனையிலும் இருந்ததால் மன்ற இலங்கைக் கிளைத் தலைவராக இருந்த திரு. எச். டபிள்யு. தம்பையா அவர்களின் பொறுப்புக்கள் அதிகரித்தன. இதுவரை தம் பொறுப்புக்களை எல்லாருடனும் பகிர்ந்து கொண்டவர் மேற்பார்வை செய்தவர், நேரடியாக மாநாட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதில் ஈடுபட்டார்.

தமிழர் கூட்டணியின் 'அமைச்சர்—வருகை எதிர்ப்புக் கோலம்' ஒரு புறம்; தமிழாராய்ச்சி மாநாட்டைத் துவங்க அமைச்சர்களை அழைக்க வேண்டிய 'நிர்ப்பந்தம்' மறுபுறம். ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மாநாட்டு அமைப்புச் செயலாளர்கள், மன்ற இலங்கைக் கிளைத் தலைவர் யாவருக்கும் 1973 மாசியும், பங்குனியும் பதட்டம் நிறைந்த காலப் பகுதியாக, தீர்மானம் எதையும் மேற்கொள்ள முடியாத களைப்பு நிறைந்த காலப்பகுதியாக அமைந்தது.



— மாநாட்டை ஒத்தி வைக்கலாம்.

— மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தாமல் கொழும்பில் நடத்தலாம்.

— ஆராய்ச்சி மாநாட்டைக் கொழும்பில் நடாத்தலாம்.

— ஆராய்ச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்தலாம்;

— தமிழ் விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தலாம்.

— அமைச்சர்களை அழைக்கவும் வேண்டும்; தமிழர் கூட்டணியைத் தாக்குப் பிடிக்கவும் வேண்டும்.

பல்வேறு கருத்துகளின் இடையில் செய்தியாளர்களும் தம் கருத்துகளைத் தெரிவித்தனர் போலும். "உலகத் தமிழாராய்ச்சி மாநாடு காலவரையின்றி ஒத்திவைப்பு" என்ற தலைப்புடன் 1-4-1973 இல் வெளிவந்த 'தினகரன்' செய்தி திகைக்க வைத்தது. "அனைத்துலகத்தமிழாராய்ச்சிக் கழகத்தின் நான்காவதுமாநாடு முன்னர் அறிவிக்கப்பட்டது போல எதிர்வரும் சனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது என்பது இப்போது உறுதிப்பட்டுவிட்டது. தமிழாராய்ச்சிக் குழு இலங்கைக் கிளைப் பிரமுகர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவும், குழுமனப்பான்மையும், மற்றும் இன்னோரன்ன சில காரணங்களும் இந்நிலையை உருவாக்கியிருக்கின்றன வென்று தமிழாராய்ச்சிக் கழக உயர்பீடப் பிரமுகர்கள் சிலர் தெரிவித்தனர்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்த நாளே மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டது. 2-4-1973-இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'ஈழநாடு' நாளிதழின் தலைப்புச் செய்தியாக, "தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்டபடி நடப்பது உறுதி" என்ற மாநாட்டு அமைப்புக்குழுவின் விளக்கம் வெளி வந்தது. "அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு முன்னர் அறிவிக்கப்பட்டது போல் எதிர்வரும் சனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாதென்று நேற்று ஒரு வாரப்பத்திரிகையில் வெளிவந்த செய்தி வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட குறும்புத்தனமான ஒரு செய்தியென்று அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர்...

"...விழாவைச் சிறப்பான முறையில் நடாத்துவது சம்பந்தமாகத் தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் கிளையினரிடையே மாறுபட்ட யோசனைகள் இருப்பதுதான் உண்மையே தவிர அவர்களுக்கிடையில் பிளவோ, குழுமனப்பான்மையோ கிடையாதென்றும் அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர்."

முரண்பட்ட கருத்துகள், குழப்பமான செய்திகள், தெளிவற்ற கூட்டுச் சிந்தனையின் வெளிப்பாடுகளாயின. ஆட்சிக் குழுவில் வேற்றுமை; அதனால் அவர்கள் இரு கட்சியினராக வேறுபட்டு நின்றனர். இருமுனைகளை நோக்கி இறுக்கமாக இழுபட்டனர். 'அரசின் ஆதரவே முக்கியம்; அரச எந்திரங்களின் துணையின்றி எதையும் முடிக்க முடியாது; அரச ஆதரவைப் பெற வேண்டும் எனில் அரசின் அமைச்சர்கட்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிரதமர் மாநாட்டைத் தொடக்கி வைக்க வேண்டும். தமிழ் நாட்டின் தி. மு. க. அரசுடன் தொடர்புகள் கூடாது. உள்ளூர்த் தமிழ்த் தலைவர்களின் பங்கேற்பு கூடாது'



இப்படியான கருத்துள்ளவர்கள் ஒரு கட்சி. இவர்களுட் சிலர், மாநாட்டினை அரசின் விருப்பப்படி நடத்தினால் அதன் மூலம் தனிப்பட்ட உயர்ச்சிகளை, அரச பதவிகளைப் பெறலாம்; அமைச்சராகவோ, அரச நிறுவனங்களில் இயக்குநராகவோ, அரசவைகளில் முன்னிலை பெற்றோ, வெளிநாட்டில் அரசின் தூதராகக் கடமை புரியும் பதவி பெறவோ வாய்ப்பு உண்டு எனக் கருதினர்.

'தமிழர் நலம் பேணவேண்டும்; தமிழ் உரிமை பேண வேண்டும்; தமிழர் நசுக்கப்படுவது தொடரக் கூடாது; தமிழ்த் தலைவர்களையோ, தி. மு. க. அரசையோ புறக்கணிக்கக் கூடாது; தமிழர்களை அடிமைப் படுத்தும் அரசுக்கு ஆலவட்டம் பிடிக்கக் கூடாது; அமைச்சர்களை மாநாட்டுக்கு அழைக்கக் கூடாது; யாழ்ப்பாணத்தில் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த வேண்டும்'-இவர்கள் மற்றைய கட்சி.

முன்பு நான் கூறிய முற்போக்கு—நற்போக்கு வேறுபாடுகள் இங்கும் தலையெடுத்தன. முற்போக்காளர்கள் ஏற்கனவே அரசின் நடைமுறை ஆதரவாளர்களாக இருந்தார்கள். முற்போக்காளர் முகாமுக்குள் கலாநிதி க. கைலாசபதி, கலாநிதி கா. இந்திரபாலா, 'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக் சீவா, பிரேம்சி போன்ற பலர் அரசின் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அரசு ஆதரவைப் பெறாமல் மாநாட்டை நடத்த முடியாது என்பது இவர்களின் வாதமாக இருந்தது. அரசின் ஆதரவே முக்கியம் என்ற கருத்துடையோர் கட்சியுடன் முற்போக்காளர் இணைந்தனர்.

தமிழர் கூட்டணியுடன், தி. மு. க. தலைவர்களைப் புறக்கணிக்காமல், அரசுக்கு ஆலவட்டம் பிடிக்காமல் மாநாட்டை நடாத்த வேண்டும் என்ற கட்சியுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முற்போக்காளர் அணிசேர்ந்தனர். பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி சி. பத்மநாதன் போன்றவர்கள் இந்த அணியுடன் தம்மை அடையாளம் கண்டனர்.

மாநாட்டைத் தள்ளிப்போடலாம் என்ற கருத்துக்கு இடமில்லை என்பது தெளிவாகியது. மாநாட்டைத் தள்ளிப் போடுவது மாநாட்டு அமைப்புக் குழுவின் செயல் திறனுக்கும், ஆற்றலுக்கும் இழுக்கு என்ற கருத்தும் எழுந்தது

மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்தினால் தானே இந்த அக்கப்போர். மாநாட்டைக் கொழும்பில் நடத்தினால் வேறுபாடுகட்கு இடமில்லை. தமிழ்த் தீவிரவாதிகட்கு இடமில்லை. அமைச்சர்கட்குக் கறுப்புக் கொடி காட்டும் எதிர்ப்புக்கு இடமில்லை. அரச ஆதரவுக்குக் குறைவில்லை. மண்டப, விடுதி, போக்குவரத்து, வசதிகட்குக் குறைவில்லை. எனவே கொழும்பில் நடத்தினால் என்ன? "உரிய காலத்தில் மாநாட்டை நடத்துவோம். கொழும்பில்நடத்துவோம்." சிறிது சிறிதாகஇக்கருத்து, மாநாட்டு அமைப்புக் குழுவிலும், ஆட்சிக் குழு உறுப்பினரிடையேயும் வலுப்பெற்று வந்தது. மன்ற இலங்கைக் கிளைத் தலைவர் திரு. எச். டபிள்யு. தம்பையா கொழும்பில் நடாத்துவதால் நன்மைகள் உண்டென்று கருதினார். ஆட்சிக்குழு உறுப்பினர்களிடையே இதுபற்றிக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நடத்துவதில் உள்ள வில்லங்கங்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. மாநாட்டைக் கொழும்பில் நடத்த வேண்டும் என்ற கருத்துக்கு முற்போக்கு அணியின் ஆதரவும் பெறப்பட்டது.



மாநாட்டு அமைப்புச் செயலாளர்களுள் ஒருவரான திரு. வி. எசு. துரைராசா இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. 'யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் நிலப்பகுதி. யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவோம். கொழும்பில் நடத்த வேண்டாம்.' இவ்வாறு கருத்துக் கூறினார். மாநாட்டு அமைப்புக் குழு மட்டத்திலும், ஆட்சிக் குழு மட்டத்திலும் குரல் எழுப்பினார். யாழ்ப்பாணமா? கொழும்பா? என விவாதிக்கப்பட்ட சிறு கூட்டம் ஒன்றில் இவர் மட்டும் தனியொருவராக யாழ்ப்பாணத்தில் தான் மாநாடு நடத்தப்பட வேண்டும் என வாதிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 11. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு

சிங்கப்பூரில் இரண்டு பல்கலைக்கழகங்கள்; சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகம் ஒன்று; நன்யாங்கு பல்கலைக் கழகம் மற்றொன்று. கடலில் வாழ்கின்ற நுண்ணுயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியாளர்களை, தென் கிழக்கு ஆசியாவில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்களை அழைத்து யுனெசுகோ நிறுவனம், மீன்பயிற்சி முகாம் ஒன்றை நன்யாங்கு பல்கலைக்கழகத்தில் ஒரு மாத காலத்துக்கு நடத்தியது. 1973 வைகாசி மாதத்தில் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில் முப்பது ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ரால்பு லூவின் பயிற்சியை நெறிப்படுத்தினார்.

இலங்கையில் கடல் நுண்ணுயிரியலில் ஈடுபட்டுப் பணிபுரிம் ஒரே ஆராய்ச்சியாளனாக அக்காலத்தில் நான் இருந்தேன். சிங்கப்பூர் நன்யாங்கு பல்கலைக் கழகம் சென்றேன். நன்யாங்கு பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்த ஒரு மாத காலமும் இலங்கைச் செய்திகளை அறிவது அபூர்வமே. தமிழாராய்ச்சி மாநாட்டுச் செய்திகளைத் தெரிந்து கொள்ளக் கூடவில்லை.

கொழும்பு திரும்பியதும் எனக்காகக் காத்திருந்த பல கடிதங்களுள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற



இலங்கைக் கிளையின் கடிதமும் இருந்தது. 1974 தைத் திங்களில் யாழ்ப்பாணத்தில் நடாத்தத் திட்டமிட்ட நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை அதே காலத்தில் கொழும்பு நகரில் நடத்தத் தீர்மானிக்கலாமா என நோக்க, 8-7-1973ல் பம்பலப்பிட்டி, சரசுவதி மண்டபத்தில், மன்றத்தின் சிறப்புப் பொது அவைக் கூட்டம் நடைபெறும் எனத் திரு. சேம்சு இரத்தினம் எழுதியிருந்தார். ஆட்சிக்குழுவால் அது வரை காலமும் மேற்கொள்ளப் பெற்ற நடவடிக்கைகள் பற்றியும், திரு. எச். டபிள்யு தம்பையா மன்ற உறுப்பினர்கட்கு விளக்கம் தருவார் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

'1974 தைத் திங்களில் நடாத்துவது, யாழ்ப்பாணத்தில் நடாத்துவது' என்ற தீர்மானங்கள், 1972 அக்டோபர் 29ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கூடி மேற்கொள்ளப்பட்டன. இத் தீர்மானங்களை மாற்றும் முடிவு உறுப்பினர்கள் அனைவரும் கூடிச் செய்ய வேண்டிய ஒன்றாகும்.

நாளிதழ்களில் வெளிவந்த செய்திகள் உறுப்பினர் கட்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையில் உறுப்புரிமை பெற்றிருந்த பலர் கல்விமான்களாகவோ, ஆராய்ச்சியாளர்களாகவோ, பொறுப்பான பதவி வகிப்பவர்களாகவோ செல்வச் செழிப்புற்றவர்களாகவோ இருந்தனர். இவர்கள் தம் காலத்தைப் பெருமதிப்பாகக் கருதுபவர்கள். தாம் பெற்ற பேறுகளை மேன்மேலும் வளர்க்க விரும்புவார்கள். குழப்பங்கட்குள்ளும், சிக்கல் கட்குள்ளும் வலிந்து தலையிட்டுக் கொள்ள விரும்பாதவர்கள். நல்ல செயற்பாடு, நாமும் துணை நிற்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என மாநாட்டுத் தீர்மானத்துக்கு உறுதுணையாக இருந்தவர்கள், குழப்பம் வந்ததோ, சிக்கல் எழுந்ததோ, இருமுனை இழப்பு ஏற்பட்டதோ, அரசியல் கலக்கப்பட்டதோ, இவர்களும் தம் ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டார்கள்.

1973 சூலை 8ஆம் நாள் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில்நடைபெற்ற கூட்டத்திற்குப் போதுமான அளவு உறுப்பினர்கள் வரவில்லை. கூட்ட நிறைவெண் இருக்கவில்லை.

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தில் செயலாளராகக் கடமை புரிந்த திரு. இ. பேரின்பநாயகம் என்ற இளைஞர் செயல்திறன் நிறைந்தவராக இருந்தார். தமிழ்—சைவம் இவற்றில் பற்றும் இவற்றை வளர்க்கும் உணர்வும் உடையவராக இருந்தார். 1973 சூலை 8ஆம் நாள் மாலை அவரைத் தற்செயலாகச் சந்தித்தேன். மன்றச் சிறப்புப் பொதுக்கூட்டம் நடைபெறவிருப்பதையும், நான் கூட்டத்திற்குப் போக இருப்பதையும் கூறினேன்.

தமிழாராய்ச்சி மன்ற உறுப்பினராக வேண்டும். ஆராய்ச்சியாளர்களைச் சந்திக்க வேண்டும். தமிழாராய்ச்சி மாநாடு நன்ருக நடைபெற வேண்டும். இவ்வாருன கருத்துக்களை என்னிடம் கூறினுர். "வாருங்கள், திரு. சேம்சு இரத்தினம் அவர்களிடம் அறிமுகம் செய்கிறேன்" என அழைத்தேன்.

திரு. பேரின்பநாயகமும் நானும் சரசுவதி மண்டபத்திற்குப் போனேம். வாயிலுக்கருகில் வட்டமாக நாற்காலிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மிகக் குறைவான உறுப்பினர்களே வந்திருந்தனர். மாநாட்டு அமைப்புச் செயலாளர்களுள் ஒருவரான திரு. துரைராசா மட்டும் அங்குக் காணப்பட்டதாக நினைக்கிறேன்.



திரு. எச். டபிள்யு. தம்பையா அங்கு நடுநாயகமாக இருந்தார். பலர் அவரைச் சூழ்ந்து கதைத்துக் கொண்டிருந்தனர். 'உறுப்பினர்கள் வரவில்லையே, கூட்ட நிறைவெண் இன்றிக் கூட்டத்தை எப்படி நடாத்துவது?' எனத் திரு. சேம்சு இரத்தினம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

திரு. பேரின்பநாயகத்தை அறிமுகம் செய்தேன். உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று நிரப்பி உடன் பணமும் கொடுத்தாரோ, பின்னர் அனுப்பினுரோ தெரியவில்லை. திரு. பேரின்பநாயகம் உறுப்பினராகலாம் எனத் திரு. சேம்சு இரத்தினம் எம் இருவரிடமும் தெரிவித்தார்

கூட்ட நிறைவெண் இல்லாமையால் சிறப்புப் பொதுக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டதாக அறிவித்த தலைவர் திரு. எச். டபுள்யு தம்பையா வந்திருந்த உறுப்பினர்கள் நன்மைக்காக விவரங்களைத் தெரிவிப்பதாகக் கூறி உரைநிகழ்த்தினுர்.

'மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கூடாது; கொழும்பில்தான் நடத்தவேண்டும்.' என்ற கருத்துக்கு ஆதாரமாக வாதிட்டார். வரன்முறையாக, ஒழுங்கு சிதருமல், ஒவ்வொரு காரணமாக எடுத்து முன் வைத்தார் வழக்குரைஞரின் வாதத்திறன் அவரின் உரையில் தொனித்தது. வயது முதிர்ச்சியால் ஆறுதலாகவே பேசினுர்

அவர் கூறியதையடுத்துப் பல உறுப்பினர் சார்பாகவும் மாருகவும் கருத்துகள் கூறினர். திரு. மா. க. கனகேந்திரன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினுர். யாழ்ப்பாணத்தில்தான் மாநாடு நடத்தப்பட வேண்டும் எனக் கூறினுர் அரசுக்கு ஆலவட்டம் வேண்டாம் அரசைப் பகைக்கவும் வேண்டாம் எனக் கூறினுர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு. தம்பையா அவர்களிடம் சில விளக்கங்களை நான் வினவினேன் ஒவ்வொன்ருக ஆறுதலாகப் பதிலளித்து வந்த அவர், வினுக்களின் விவரமான தன்மையினுல் போலும், "மாநாட்டு அமைப்புக் குழு விடம் கேளுங்கள்; மருத்துவர் ஆனந்தராசனிடம் கேளுங்கள்; எனக்கு நடந்தது தெரியாது; நான் என்ன செய்ய முடியும்?" இப்படியாக விடைகளைத் தந்தார்.

நான் அவரிடம் கூறியது இதுதான்: "நீங்கள் தலைவராக உள்ளீர்கள். வழிநடத்தும் பொறுப்பும் கடமையும் உங்களுடையது. உங்களுக்குத் தெரியாமல், உங்களுக்கு விளங்காமல் உறுப்பினர்கள் மன்ற, மாநாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மன்றத்துக்கு அவப் பெயர் தேட அனுமதிக்கலாமா?"

மீண்டும் திரு தம்பையா, "நான் என்ன செய்ய லாம்?" எனக் கூறினுர்.

"உங்கள் வழி நடத்தலுக்கு அமையாத, உங்கள் தலைமையை ஏற்றுக் கொள்ளாத, உங்கள் கருத் துக்குப் புறம்பான நடவடிக்கைகளில் சில உறுப் பினர்கள் ஈடுபடுவதால் உங்களின் ஆற்ருமையை இன்று கூறினீர்கள். ஒன்று, மன்றத்தின் நற்பெயரைக் காப்பாற்றுங்கள். குழப்பத்தையும் தெளிவின்மை யையும் போக்குங்கள். அல்லது, அவற்றை உறுதி யுடனும் துணிவுடனும் செய்யக்கூடிய ஒருவரிடம் தலைமைப் பதவியைக் கையளியுங்கள்" என நான் கூறினேன்.

குழப்பத்தையும் தெளிவின்மையையும் முரண் பாட்டையும் போக்க மாநாட்டு அமைப்புக் குழு பரவ லாக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, திரு எசு. சரவணமுத்து, திரு ஐ. தி. சம்பந்தன், திரு. இ. பேரின்ப



நாயகம், ஆகியோருடன் எனது பெயரையும் முன் மொழிந்த உறுப்பினர்கள், மாநாட்டு அமைப்புக் குழு வில் இப் பெயர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என ஆலோசனை கூறினுர்கள்.

திரு. சேம்சு இரத்தினம் நன்றி கூறக் கூட்டம் நிறைவெய்தியது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஈடு பட்டுப் பணிபுரியும் திரு. சரவணமுத்து, அமைதி யானவர், ஆறுதலான தொண்டுள்ளம் கொண்டவர்; கூட்டத்தில் முன் மொழியப்பட்ட உறுப்பினர்களை அழைத்தார். மாநாட்டு வெற்றிக்காக உழைப்போம் என்ருர்.

கூட்ட நிறைவெண் இல்லாததால் பின்போடப் பட்ட கூட்டம் மீண்டும் 1973 சூலை 15ஆம் நாள் நடை பெறும். எனத் திரு. சேம்சு இரத்தினம் அறிவித்தார். அந்தக் கூட்டத்திற்கும் போதுமான எண்ணிக்கை யில் உறுப்பினர்கள் வரவில்லை. நான் போயிருந்தேன். திரு. தம்பையா வந்திருந்தார். கொழும்பா, யாழ்ப் பாணமா என்பதுதான் தலையாய சிக்கலாக அவருக்குத் தெரிந்தது.

யாழ்ப்பாணத்தில் கக்கல் கழிச்சல் (காலரா) நோய் பரவியிருந்தது. பலர் அதனுல் மடிந்திருந்தனர். நோய், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த நோயைக் காரணம் காட்டி யாழ்ப்பாணம் போக வேண்டாம், கொழும்பிலேயே நடாத்துவோம் என்ருர் திரு. தம்பையா.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசு சார்புத் தமிழர்கள் மீது சில இளைஞர்கள் கோபங்கொண்டிருந்தனர். யாழ்ப் பாண மாநகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா, நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினா திரு. சி. அருளம்பலம், வட்டுக் கோட்டைத் தொகுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைத் தலைவர்கள் பலர், தமிழ் இளைஞர்களின் கோபத்துக்கு உள்ளாயினர் இக்கோப உணர்வு வன்முறையில் ஈடுபட இளைஞர்களைத் தூண்டியது.

அரசின் காவல்துறையினர் கட்டுப்பாடு இன்றி இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர். இளைஞர்களைத் துன்புறுத்தினர். காவல்துறையின் நடவடிக்கைகளை நாளிதழ்கள் வெளியிட்டிருந்தன. அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்த திரு. இ. நமசிவாயம் யாழ்ப்பாணத்தில் பதட்டநிலை உருவாகி வருவதைக் கூறினார். யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்தினால் காவல் துறையினரின் கெடு பிடிகளைத் தாக்குப் பிடிக்க முடியாது. உயிர்ச்சேதம் ஏற்படலாம். மாநாட்டு அமைப்பாளர்கள் சிறைகளுள் தள்ளப்படலாம். எனவே யாழ்ப்பாணத்தில் வேண்டாம் கொழும்பிலேயே மாட்டை நடாத்துவோம், என வாதிட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைமண்டபங்கள், வீரசிங்கம் மண்டபம் போன்ற மாநாட்டு மண்டபங்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள. விடுதி வசதிகள் நன்றாக இல்லை. வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் 5 நட்சத்திர விடுதிகளையே எதிர்பார்த்து வருவார்கள். யாழ்ப்பாணத்தில் விடுதிகள் ஏது? மண்டபங்கள் ஏது? கொழும்பில் ஏராளமான விடுதிகள் உண்டு. மாநாடு நடத்தப் பண்டாரநாயக்க நினைவு அனைத்துலக மாநாட்டு மண்டபம் உண்டு. எனவே கொழும்பில் நடாத்துவோம் என வேறொரு உறுப்பினர் கூறினார்.

அரசின் விருப்பத்தை மதிக்காமல் யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்தினால் வருகின்ற வெளிநாட்டு



அறிஞர்கட்கு உட்புகல் அனுமதி வழங்க அரசு மறுக்கலாம். மாநாட்டைத் தடை செய்யலாம். எனவே கொழும்பில் நடாத்துவோம் என்றார்கள்.

நிதி தருவதாக வாக்களித்த செல்வந்தர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதெனில் ஒத்துழைக்க மாட்டார்கள் எனக் கூறினார். திரு. தம்பையா அரசின் நிதி உதவியும் கிடைக்காது என்றார்.

இப்படிப் பல காரணங்கள் கூறப்பட்டன. ஒவ்வொரு காரணம் கூறப்பட்டபோதும் நானும் விளக்கம் கூறினேன். பல ஆண்டுகளாகச் சென்னை போன்ற பல இந்திய நகரங்களில் 'காலரா' தொடர்வது உண்டு. ஆனாலும் அதற்காக மாநாடுகளை அங்கு நடத்தாமல் விடுவதில்லை. பதட்டநிலை இருந்தாலும் யாழ்ப்பாணத்தில் வழமைபோல் அலுவல்கள் நடைபெறுகின்றன. 5 நட்சத்திர விடுதி வசதியைவிட, தமிழ்ச் சூழலில் வசிப்பதையே வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் விரும்புவார்கள். தனியாரிடம் பல நல்ல மண்டபங்கள் உள. தமிழ் மக்கள் நிதி வழங்கத் தயங்கமாட்டார்கள். மாநாட்டுக்குத் தடை விதித்தோ, உட்புகல் அனுமதி வழங்க மறுத்தோ, உலகோர் கண்களில் அரசு நற்பெயரிழக்க விரும்பாது. எனவே மாநாட்டை யாழ்ப்பாணத்தில்தான் நடத்த வேண்டும் என வாதிட்டேன்.

தீர்மானம் எதுவும் இன்றிக் கூட்டம் கலைந்தது. மாநாட்டு அமைப்புக் குழுவின் உறுப்பினர்களோ இணைச் செயலாளர்களோ கூட்டத்துக்கு வரவில்லை. தலைவர் திரு. தம்பையா, அவர்கள் சார்பில் கருத்து கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1974 தையில் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவது எனத் தீர்மானித்தவர்கள், அரசின் நிர்ப் பந்தத்தின் தாக்கத்தைச் சமாளிக்க முடியாமல் கொழும் புக்கு இடமாற்றம் செய்ய விரும்பினுர்கள். பெரும் பாலான உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக் கவே அலமந்து போனுர்கள். செய்வதறியாது திகைத் தார்கள்; செயலற்று நின்றுர்கள்.

ஆறுமாத கால இடைவெளி இருந்தது. ஆராய்ச்சி யாளர்கட்கு அறிவிப்பு அனுப்பப்பட்டமை; நாளிதழ் களில் அறிக்கைவிட்டுக் குழப்பியமை; அரசுக்கு ஆலவட்டம் பிடிக்க முயன்றமை; ஐந்து, ஆறு இலக்க உருபாய்கள் தேவை என அறிவித்து விட்டு ஐந்து, ஆறு ஆயிரம் உருபாய்கள் மட்டும் சேகரித்தமை; தமிழரிடையே மாநாட்டு அமைப்பாளர் சிலர் மதிப்பிழந்தமை; இவைதாம் அன்றுவரை நடை பெற்றிருந்தன. உருப்படியாக எதுவும் செய்யப்பட வில்லை.

மாநாடு நடக்குமா? நடக்காதா ?

# 12. மீண்டும் யாழ்ப்பாணமே!

பழைய கதவு; உடைந்தமையால் மாற்ற எண்ணு கிருேம். புதிய கதவைப் பெரிதாகவும், பழைய இடத்தை விட்டுச் சிறிதே நகர்த்தியும் அமைக்க வேண்டும். நகராட்சியாளரிடம் அனுமதி பெற வேண்டும்.

கடையில் பொருள் வாங்கினுல் விற்பனை வரி; வெளியூருக்குப் போக வேண்டும் எனில் அரசின் புகை வண்டி அல்லது பேருந்து; இப்படி வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அரசின் ஆட்சிக்கரம் நுழைந்து விடு கின்றது.

அரசின் பல்வேறு திணைக்களங்கள், அலுவல கங்கள், அதிகாரிகள் ஆட்சித் தலையீடுகள் இவற்றின் தொடர்பின்றி வாழ்வது எளிதன்று. சிறிய கூட்டம் நடத்துவதெனில், இடம், ஒலிபெருக்கி, மின்சாரம் இன்னேரன்ன பல வசதிகட்கும் அரசின் தயவு வேண்டி அனுமதிக்காகத் தவமிருக்க வேண்டிய நிலை, இன்றைய அரசுகளின் ஆட்சி முறையில், அதுவும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நடைபெறும் ஆட்சி முறைகளில் உண்டு.

இலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமையில் நடைபெற்ற நிகரமை (சோச லிச)க் கூட்டணி அரசு, தன் ஆட்சிக்கரங்களைக் குடிமக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் உள் வீடுகள் வரை நீட்டியது. பொது உடைமை, அரசு உடைமை, நிகரமை (சோசலிசம்) என்ற உயர்ந்த கொள்கைகள் அரசின் கெடுபிடிகளை அதிகரிக்கப் போர்வைகளாயின.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள இலங்கையில், சிங்களரல்லாதவர்கள் துன்பப்பட்டனர். சிங்கள விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவோம் என்ற குரலொலி, ஏனைய இனங்களைப் புறக்கணிப்போம் என்ற பொருளையும் கொண்டிருந்தது. தமிழர் புறக்கணிக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் தமிழர்கள் எது செய்தாலும் சந்தேகிக்கப்பட்டனர். அரசின் ஆட்சிக் கரங்களின் துணை இன்றியோ, அரசின் கழுகுப் பார்வையின் அல்லல்களின்றியோ தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த முடியாது என நாம் எண்ணினோம். அரசின் துணை பெறவும் அல்லல் போக்கவும் அரசுக்கு ஆலவட்டம் பிடிக்க வேண்டியதில்லை எனக் கருதினோம்.

கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, திரு. க. நவசோதி, திரு. எசு. சரவணமுத்து, திரு. ஐ. தி. சம்பந்தன். திரு. இ. பேரின்பநாயகம், திரு. மா. க. கனகேந்திரன் ஆகியோருடன் நான் கலந்தாலோசித்தேன். நாங்கள் அடிக்கடி கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவின் இல்லத்தில் கூடினோம்.

உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவது; மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவது; 1974 தையில் நடாத்துவது; அரசுக்கு ஆலவட்டம் பிடிப்பதில்லை; தமிழர் கூட்டணி, தி. மு. க., தொடர்பாக அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிட்டு, எம்பாட்டில் மாநாட்டை நடத்துவது; ஆராய்ச்சிக்கும், அறிஞர்கட்கும் தவிர வேறு யாருக்கும் யாதுக்கும் சிறப்பிடம்



இல்லை. இவை எம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றன.

உறுப்பினர்களைக் கூட்ட வேண்டும், திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த வேண்டும் என்பதில் திரு. வி. எசு. துரைராசா மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். மருத்துவர் எசு. ஆனந்தராசன், திரு. ஆர். இராசலிங்கம் ஆகிய இரு இணைச் செயலாளர்கள் திரு. துரைராசாவுடன் மாநாட்டு அமைப்பு முறைபற்றிக் கருத்து வேறுபாடு கொண்டனர்.

மாநாடு நடக்குமா, நடக்காதா என்ற மயக்க நிலையைப் போக்க வேண்டும் என்பதில் திரு. துரைராசா தனிமனிதராகவே உழைத்தார். உறுப்பினர் பலருடன் தொடர்பு கொண்டார். என்னையும் சந்தித்தார். கலந்தாலோசித்தோம்.

பம்பலப்பிட்டி, மிலாகிரியா அவனியு, ‘சாந்தம்’ விடுதியில் அமைந்திருந்த மன்ற இலங்கைக் கிளை அலுவலகம் கொள்ளுப்பிட்டி, அல்பிரட் பிளேசில், திரு. அம்பலவாணர் அவர்களின் இல்லத்துக்கு இடம் மாறியது. திரு. கே. சி. தங்கராசா உடல் நலமற்றிருந்தபின், மன்ற அலுவலகம் செயலற்றுப் போயிருந்தது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் சிறப்புப் பொதுக் கூட்டத்தைக் கூட்டும் ஆற்றலும் உரிமையும் உறுப்பினர்கட்கு உண்டு. மன்றத்தின் அமைப்பு விதி 10 (ஆ) க்கு அமைய 25 உறுப்பினர்கள் சேர்ந்து கையெழுத்திட்டோம். திரு. வி. எசு. துரைராசா இந்த முயற்சியில் ஈடுபட்டார்.

மன்ற இலங்கைக் கிளைக்கு மூன்று இணைச் செயலாளர்கள். தவத்திரு தனிநாயக அடிகள் வெளிநாட்டிலிருந்தார். திரு. சேம்சு இரத்தினமும் வெளிநாடு சென்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருந்தார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் மட்டும் பேராதனையில் இருந்தார். 25 உறுப்பினர்களின் கையெழுத்து அடங்கிய கடிதத்தைப் பேராதனைக்குப் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு அனுப்பும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது.

கண்டிக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். கட்டுப்பெத்தைப் பொறியியல் கல்லூரி மாணவர் திரு. சி. மு. ஞானானந்தன் என்னிடம் வந்திருந்தார். தானே போய் வருவதாகக் கூறினார். மாலை கண்டிக்குப் போனவர், அன்றிரவே திரும்பி வந்தார். வரும்பொழுது கூட்ட அறிவித்தலையும் கொண்டு வந்தார். 14-8-1973இல் கொழும்பு, பம்பலப்பிட்டி, இந்துக் கனிட்ட பாடசாலை மண்டபத்தில் மாலை 5 மணிக்குச் சிறப்புப் பொதுக் கூட்டம் நடைபெறும் எனப் பேராசிரியர் வித்தியானந்தன் அறிவித்தார்.

மாநாட்டு அமைப்புக் குழுவில் மாற்றங்களைச் செய்தல்; நிவாரணப் பணிகளைச் செய்தல்; யாழ்ப்பாணத்தில் 1974 தையில் மாநாட்டை நடாத்தப் பொதுச் சபை மேற்கொண்ட முடிபை நடைமுறைப் படுத்த ஏற்றதைச் செய்தல்; இவைதாம் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் எடுத்து நோக்கப்பட வேண்டியவை.

பம்பலப்பிட்டி இந்துக் கனிட்ட பாடசாலையை ஒழுங்கு செய்தல், உறுப்பினர்களுக்கு அறிவித்தலை அனுப்புதல் போன்றவற்றைத் திரு. சி. மு. ஞானானந்தனே திரு. துரைராசாவின் ஒப்புதலுடன் மேற்கொண்டார்.

பம்பலப்பிட்டியில் நடைபெற்ற அந்தக் கூட்டம் ஒரு திருப்புமுனையாகவே அமைந்தது. திரு. எச். டபிள்யு. தம்பையா தலைமைப் பதவியிலிருந்து விலகுவார் எனப் பலர் எதிர்பார்த்தனர். விலகுவதாகக் கூறி



ஒருமுறை அவர் அறிவித்த போது, திரு. ச. அம்பிகைபாகன் அவரைச் சமாதானம் செய்தார்.

மருத்துவர் எசு. ஆனந்தராசனும் திரு. வி. எசு. துரைராசாவும் தமக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தினர். திரு. ஆனந்தராசன் உணர்ச்சி வசப்பட்டிருந்தார். செய்தி அறிக்கைகட்கும், குழப்பத்துக்கும் திரு. வி. எசு. துரைராசா காரணமாக இருக்கவில்லை என்பதை விவாதம் வெளிப்படுத்தியது.

மாநாட்டைக் கொழும்பில் நடாத்த வேண்டும்; அரசுக்கு ஆலவட்டம் பிடிக்க வேண்டும் என்ற ஆலோசனைகள் முன்னுரிமை பெறத் திரு. எச். டபிள்யு. தம்பையா, மருத்துவர் எசு. ஆனந்தராசன் ஆகிய இருவரும் காரணமாக இருந்தார்கள் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய ஆலோசனைகள் மன்றத்தின் நற்பெயரைக் கெடுத்துள்ளன; அரசு சார்பானதாக உள்ளன, அரசியல் சார்பானதாக உள்ளன; மாநாட்டு வெற்றிக்குத் தடையாக உள்ளன; தமிழ்மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளன. எனவே திரு. எச். டபிள்யு. தம்பையா, மருத்துவர் எசு. ஆனந்தராசன் இருவரும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தினர்.

மாநாட்டு அமைப்புக்குழுவில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். எனது பெயரையும், திரு. இ. பேரின்பநாயகம், திரு. ந. சத்தியேந்திரா, கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா ஆகியோரையும் முன்மொழிந்து ஏற்றுக்கொண்டனர்.

புதிய உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர். முகாமைக் குழு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. கூட்டம் நிறைவுற்ற பொழுது, 1974 தையில் யாழ்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாணத்தில் மாநாடு நடைபெறும் என்பது உறுதி செய்யப்பட்டது.

ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் மாநாட்டை நடத்தும் பொறுப்பைக் கையேற்கவேண்டும்; மாநாட்டு அமைப்புக் குழுவில் நானும் சேர்ந்து பணி புரிய வேண்டும் எனக் கலாநிதி சி. பத்மநாதன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். எட்டு மாதங்களாக ஒன்றுமே நடைபெறவில்லை; நான்கு மாதங்களில் மாநாட்டை ஒழுங்கு செய்து நடத்த முடியுமா என வினவியிருந்தார்.

'பாரிசு நகரிலிருந்து பேராசிரியர் சீன் பிலியோசா வந்திருக்கிறார்; அவரின் கருத்துகளைக் கேளுங்கள்; 21-8-1973இல் கொள்ளுப்பிட்டி அல்பிரட் பிளேசு வீட்டில் கூட்டம் நடைபெறும்; வாருங்கள்' எனத் திரு. எச். டபிள்யு. தம்பையா அழைத்திருந்தார். கூட்டத்திற்குச் சென்றேன்.

கீழைத்தேய ஆராய்ச்சியாளர்களின் அனைத்துலக மாநாடு, சூலை 16-22இல் பாரிசில் நடைபெற்றதைப் பேராசிரியர் பிலியோசா கூறினார். "1975 ஆகஸ்ட 26-30இல் இந்தோனேசியாவின் நகரான ஜொக்ஜகர்த்தாவில், ஆசிய வரலாறு பற்றிய அனைத்துலக மாநாடு நடைபெறும். ஐரோப்பாவில் இருந்தோ, அமெரிக்காவில் இருந்தோ, புலவோர்கள், ஆசிய நாடுகட்கு ஆண்டுக்கு இருமுறை வருவது இயலாது. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் இலங்கையில் நடாத்தவுள்ள தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கும், 1974 ஆவணித் திங்களில், ஜாவாவில் நடைபெறும் மாநாட்டுக்குச் சிறிது முன்னதாக நடைபெறுமாயின், இந்த இரண்டு மாநாடுகட்கும் உரிய ஆராய்ச்சியாளர்கள் வரக் கூடியதாக இருக்கும்...

"—எனவே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் அடுத்த மாநாடு—கருத்தரங்கை 1974 தைத்



திங்களில் நடத்துவதற்குப் பதிலாக, 1974 ஆவணித் திங்களில் நடத்துவது பொருத்தமானதாக இருக்கும்."

பேராசிரியர் பிலியோசா கூறிய கருத்துகள் பயனுள்ளவையாக இருந்தன. பாரிசில் நடைபெற்ற மாநாட்டைப் பற்றியும், யாழ்ப்பாணத்தில் மாநாட்டு நிகழ்ச்சி நிரல் எவ்வாறு ஒழுங்கு செய்யப் பெற வேண்டும் என்றும், மாநாட்டுக் காலத்தைப் பின்போட வேண்டும் எனவும் கூறினார்.

கூட்டத்திற்கு ஏராளமான உறுப்பினர்கள் வந்திருந்தனர். வேறுபாடுகளை மறந்து அன்னியோன்னியமாக ஒருவரோடு ஒருவர் கதைத்தனர். பேராசிரியர் பிலியோசாவின் ஆலோசனைகள் வேறொரு கூட்டத்தில் எடுத்து நோக்கப்படும் எனத் தலைவர் அறிவிக்கக் கூட்டம் நிறைவெய்தியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13 உழைக்கும் தலைமை

ஏறச் சொன்னால் கழுதைக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்; பயணம் தொடர வேண்டும். கழுதையோ முடவனோ கோபப்படாமல் இருக்கவேண்டும்.

தமிழர்கள் தங்களை முடமாக்கப்பட்டவர்களாகக் கருதினர். சிங்கள ஆட்சியில் சீரழிக்கப்படுவதாகக் கருதினார்கள். முடமாக்கப்பட்ட தமிழர்களின் நலம் பேண வேண்டும். அரசினர் கோபத்துக்கும் ஆளாகக் கூடாது.

நடுநிலைமை வகிப்பது எளிதான ஒன்று. நடுநிலைமையாளர்கள் செயல்வீரர்களாக இருப்பது எளிதானதன்று. "சாத்தியமானது; நடைமுறைப்படுத்துவோம். 1974 தையில் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடாத்துவோம். நானும் எனது கொழும்புச் செயலகமும், யாழ்ப்பாணக் கிளை அலுவலகமும் முழுநேரமாக மாநாட்டுக்காக உழைக்க ஆயத்தமாக உள்ளன. நிதியைப் பற்றிக் கவலை வேண்டாம். உண்மையான உழைப்பாளிகளே தேவை". இவ்வாறு திரு. வி. எசு. துரைராசா எம்மிடம் கூறினார்.

ஊக்கமாக, உண்மையான உழைப்பை நல்கி மாநாட்டைத் திட்டமிட்டபடி நடாத்தப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. வி. எசு. துரைராசா, திரு.



எசு. சரவணமுத்து, திரு. க. நவசோதி, திரு. ஐ. தி. சம்பந்தன், கலாநிதி கோ. மகாதேவா, கலாநிதி சி. பத்மநாதன் ஆகியோரும் நானும் சேர்ந்து உழைக்கத் திடசங்கற்பம் பூண்டோம்.

திரு. வி. எசு. துரைராசா எம் அனைவரையும் இணைத்து வைத்தார். நடுநிலையாகச் செயலாற்றினார். அரசியல்வாதிகளைப் பற்றிப் பேசுவதே இல்லை. பிரச்சினைக்குரியதும் மாநாட்டுத் தோல்விக்கு வழிவகுப்பதுமான பேச்சுக்கு அவர் இடம் தருவதில்லை. சுடுசொல் கூறமாட்டார். அன்புடனும் பண்புடனும் மதிப்புடனும் பேசி எம் அனைவரையும் கவர்ந்தார். பார்வைக்கு எளியவராகத் தோன்றவில்லை. எனினும் பழகுவதற்கு எளியவரானவர்.

பேராசிரியர் பிலியோசாவின் மாநாடு ஒத்திவைப்பு யோசனை எமக்கு ஏற்புடைத்தாக இல்லை. நாம் அனைவரும் திட்டமிட்டபடி மாநாட்டை நடாத்துவதில் குறியாக இருந்தோம். பேராசிரியர் பிலியோசாவின் ஆலோசனை அவரின் தனிப்பட்ட கருத்தாக இருந்தது. அதுவும் இலங்கை வந்தபின், திரு. தம்பையா, திரு. ஆனந்தராசன், திரு. தங்கராசா ஆகியோரிடம் பேசியதன் பெறுபேறாகவும் இருக்கலாம் எனச் சிலர் கருதினர்.

1974 தைத்திங்களில் மாநாட்டை நடத்த வேண்டும் என்ற கருத்து, உலக அறிஞர்கள், ஆராய்ச்சியாளாகள் அடங்கிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற கருத்தாக அமைந்தது. இதற்கான அறிவித்தல்கள் அனுப்பப்பட்டு, ஆராய்ச்சியாளர்கள் பதிலும், கட்டுரைகளும் அனுப்பியிருந்தனர்.

பேராசிரியர் பிலியோசாவின் கருத்தை உறுப்பினர் முன்வைத்து 1-9-73 இல் நடைபெற்ற சிறப்புப் பொதுக் கூட்டம், கொழும்பு, கொள்ளுப்பிட்டி, அல்பிரட் பிளேசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு. அம்பலவாணர் இல்லத்தில் நடைபெற்றது. திட்டமிட்டபடி, 1974 தையில் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த வேண்டும் எனப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வாக்களித்துத் தீர்மானித்தனர்.

திரு. எச். டபிள்யு. தம்பையா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். மாநாடு பின்போடப்பட வேண்டும் என வாதிட்டார். உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இடை நடுவிலேயே கூட்டத்தை விட்டு வெளியேறினார். 3-9-1973 'வீரகேசரி' நாளிதழில் கூட்ட நடவடிக்கைகள் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளிவந்தன. "இக்கருத்து பற்றிப் பொதுச் சபை ஆராய்ந்த பின்னர், ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது போல், அடுத்த சனவரி மாதமே மாநாட்டை நடத்துவதெனப் பெரும்பான்மை உறுப்பினர்கள் முடிவெடுத்தனர். மாநாட்டின் வெற்றிக்குச் சகலவிதத்திலும் உதவி புரிவதாக அனைவரும் ஒப்புக் கொண்டனர்" எனச் செய்தி வெளிவந்திருந்தது.

மாநாட்டு அமைப்புக் குழுக் கூட்டம் அடிக்கடி நடைபெற்றது. 28-8-73 இல் நடைபெற்ற கூட்டத்தில் திரு. கே. சி. தங்கராசா, திரு. செல்வநாதன், கலாநிதி கோ. மகாதேவா, திரு. ந. சத்தியேந்திரா, திரு. வி. எசு. துரைராசா ஆகியோர் கலந்துகொண்டனர். மாநாட்டை நடாத்தும் பொறுப்புகள்—நிதிநிலை—குழுக்கள்—என்பன பற்றித் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு என்னையும் கலாநிதி கோ. மகாதேவாவையும் அமைப்புக்குழு பணித்தது.

7-9-1973 இல் நடைபெற்ற கூட்டத்தில் விரிவான அறிக்கை ஒன்றைக் கையளித்தோம். நிதிக்கால எல்லை, பங்குபெறுவோர் எண்ணிக்கை, பதிவுக் கட்டணம், மாநாட்டுச் செயலகம், மாநாட்டு அரங்கு, உணவும்



இருப்பிடமும், போக்குவரத்து ஒழுங்குகள், கலை நிகழ்ச்சிகள், மாநாட்டு மலர், வரவேற்பு-தகவல், பாதுகாப்பு போன்ற ஒவ்வொரு தலைப்பிலும் மிக விவரமாகக் கவனம் செலுத்தினோம். ஐந்து இலக்கம் உருபாவுக்கான வரவு செலவுத் திட்டமும் தயாரித்தோம். கலாநிதி மகாதேவாவின் கூர்மையான அறிவுத்திறனை அந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது அறிந்து கொண்டேன்.

எமது அறிக்கையை அமைப்புக் குழு ஏற்றுக் கொண்டது. இந்த அறிக்கையின் அடிப்படையில் தான் மாநாட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்றன. 7-9-1973 இல் நடைபெற்ற அமைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப் பெற்ற வேறொரு தகவல் எமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தன.

தலைவர் திரு. எச். டபிள்யு. தம்பையா, மாநாட்டு அமைப்புக் குழு இணைச் செயலாளர் திரு. எசு. ஆனந்தராசன், திரு ஆர். இராசலிங்கம் மூவரும் தத்தம் பதவிகளில் இருந்து விலகியுள்ளதுடன், திரு. தம்பையா, திரு. ஆனந்தராசன் இருவரும் மாநாட்டுக்கென மன்றத்திற்கு வழங்கிய தலா 2000/- உருபாவையும் மீளத் தருமாறும் கேட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதில் திரு. வி. எசு. துரைராசா அக்கறை காட்டினார். நிதியாக ஒரு சதமும் சேர்க்கப்படவில்லை; நிதி தருவதாக வாக்குறுதி தந்தவர்கள் கூட நிதியைத் தரவில்லை; திரு. தம்பையாவும் திரு. ஆனந்தராசனும் தமது அன்பளிப்பை மீளப் பெறுவதன் மூலம், ஏனையவர்கட்கு அறிவித்தல் கொடுத்தார்கள். வாக்குறுதி அளித்தபடி நிதியைக் கொடுக்கத் தேவை

www.tamilarangam.net



இல்லை எனக் கூறாமல் கூறினார்கள். நிதியை முடக்கினால் மாநாடு நடக்க முடியுமா?

யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். மீண்டும் மகப் பேற்றை எதிர்நோக்கி என் மனைவியார் யாழ்ப் பாணத்தில் இருந்தார்கள். கலாநிதி சி. பத்மநாதனும் யாழ்ப்பாணம் வந்திருந்தார். நானும் அவரும் வளாலாய்க்குப் போனோம். வளலாயில் உள்ள ஆசிரமத்தில் தவத்திரு தனிநாயக அடிகள் இருந்தார். நாம் ஆசிரமத்தை அடைந்த போது இருட்டியிருந்தது. அடிகளைச் சந்தித்தோம்.

"திரு. தம்பையா பதவியில் இருந்து விலகி உள்ளதால் அடிகளாரே தலைமைப் பதவியை ஏற்க வேண்டும், மாநாடு வெற்றிகரமாக நடக்க உதவ வேண்டும்', எனக் கோரினோம். "பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைவராக வேண்டும். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், ஆராய்ச்சியாளர், உலக அறிஞர்கட்கு அறிமுகமானவர், அவரே தலைமை தாங்குதல் பொருந்தும். மாநாட்டைத் திட்டமிட்டபடி **1974** தையில் நடாத்துவோம் யாழ்ப்பாணத்தில் நடாத்துவோம். நிதி நிலை எப்படி உள்ளது?" இவ்வாறு தவத்திரு தனிநாயக அடிகள் எங்கள் இருவரிடமும் கேட்டார்.

"கையில் ஒரு சதமும் இல்லாமல் எம்மிடம் பொறுப்பைத் தந்துள்ளனர். நாமும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளோம். பொதுமக்களிடம் நிதி திரட்டலாம் என்ற நம்பிக்கை உண்டு. திரு. வி. எசு. துரைராசா எல்லா வசதிகளையும் செய்து தருகின்றார். போதுமான நிதியைப் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு. உங்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை" எனக் கூறினோம்.



மாநாட்டு முயற்சி வெற்றி பெற வாழ்த்தும் ஆசியும் கூறினார். தமது வயதுமுதிர்ச்சியால் ஓடி ஆடித் திரிய முடியாத நிலை பற்றிக் கூறினார். நானும் கலாநிதி பத்மநாதனும் மகிழ்ச்சியுடன் திரும்பினோம்.

**20-9-1973**இல் உறுப்பினர்களின் சிறப்புப் பொதுக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. நான் யாழ்ப் பாணத்தில் இருந்தேன். கூட்ட நிகழ்ச்சிகள் பற்றிப் பின்வருமாறு திரு. இ. பேரின்பநாயகம் எனக்கு எழுதியிருந்தார். "நேற்றைய தமிழாராய்ச்சி மன்றக் கூட்டத்தில் திரு. தம்பையா, திரு. ஆனந்தராசன் ஆகியோரின் விலகுதல் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன. தவத்திரு தனிநாயக அடிகள் தலைவராகவும் திரு. ந. சத்தியேந்திரா செயலராகவும் தெரிவு செய்யப் பட்டனர்...

"... சிறப்புப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து முகாமைக் குழு கூடிற்று. அதில் பின்வரும் துணைக் குழுக்களுக்கான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

நிதிக்குழு : திரு. சத்தியேந்திரா

கலைக்குழு : திரு. வி. எசு. துரைராசா

விருந்தோம்பல் குழு : திரு. க. சச்சிதானந்தன்

தகவல் குழு : கலாநிதி கோ. மகாதேவா

பயணம், சுற்றுலாக் குழு :

திரு. இ.பேரின்ப நாயகம்"

திரு. ந. சத்தியேந்திரா சிறிது காலம் செய லாளராகச் செயற்பட்டார். பின்னர் பதவி விலகி விட்டார். தவத்திரு தனிநாயக அடிகள் கொழும்பு வந்த பொழுது திரு. சத்தியேந்திராவையும் சந்தித் திருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் எமது இரண்டாவது ஆண் குழந்தையை என் மனைவி பெற்றெடுத்தபின், சில நாட்களுள் கொழும்பு திரும்பினேன்.

கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா என்னை எனது அலுவலகத்தில் ஒரு நாள் மாலை சந்தித்தார். தாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருப்பதையும், அதனுல் மாநாட்டு வெற்றி தடைப் படலாம் எனவும் கூறினுர். அப்பொழுது ஆளும் கட்சிகளுள் ஒன்ருகச் சிறீலங்கா சுதந்திரக் கட்சி விளங்கியது. தமிழர்க்கு எதிரான கட்சியாகக் கருதப்பட்டது. மாநாட்டு அமைப்புக் குழுவில் சேர்ந்த பின் கட்சியை விட்டு விலகுதல் கூடாது என நான் அவரிடம் கூறினேன். கொண்ட கொள்கை சரியென ஏற்றுக் கட்சியில் சேர்ந்து உறுதியாக நிற்பவர்களைத்தாம் மக்கள் மதிப்பார்கள் எனக் கூறினேன். அடிக்கடி கட்சி மாறுபவர்களால் யாருக்கும் பயனில்லை என்றேன்; ஏற்றுக் கொண்டார்.

தவத்திரு தனிநாயக அடிகள் தலைமைப் பதவியை ஏற்கவில்லை. பேராசிரியர் வித்தியானந்தன் தலைவரா வதை அவர் விரும்பினுர். நானும் திரு. பத்மநாதனும் இந்தக் கருத்தைப் பேராசிரியர் வித்தியானந்தனிடம் வலியுறுத்தினேம். 5-10-73இல் நடைபெற்ற ஆட்சிக் குழுக் கூட்டம் ஒன்றில் பேராசிரியர் சு. வித்தியா னந்தன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதே கூட்டத்தில் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா இணைச் செயலாளர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப் பட்டார். உழைக்கும் தலைமை உருவானதால் மகிழ்ச்சியடைந்தோம்.

# 14. குடியரசுத் தலைவருக்கு அழைப்பு

பேராசிரியர் வித்தியானந்தன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவருக்கு ஒரு நீண்ட கடிதத்தைத் திரு. கே. சி. தங்கராசா எழுதினுர். அக்கடிதத்தின் படிகளை உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பினுர். ஆங்கிலத்தில் எழுதிய அக்கடிதத் துக்குத் தமிழ் மொழிபெயர்ப்பையும் அனுப்பினுர்.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தொடக்ககால நிகழ்வுகள்; மலேசியா, சென்னை, பாரிசு மாநாடுகளும் இலங்கைக் கிளையும்; இலங்கை ஆராய்ச்சியாளர்களை ஒருங்கிணைத்தமை; கிளைக்கும் தாய் மன்றத்துக்கும் உரிய நெருக்கமான பிணைப்பு; மாநாடு நடைபெருக் காலங்களில் மன்றத்தின் பணியும் செயலகமும்; புதிய உறுப்பினர்களின் அத்து மீறிய உட்புகல்; பேராசிரியர் பிலியோசாவின் ஆலோசனை; பேராசிரியர் வித்தியானந்தன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை; இப்படிப் பல செய்திகளை அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

மாநாட்டை ஆவணிக்குப் பின்போடாவிடில் தான் விலக வேண்டி வரும் என அச்சுறுத்தியும் இருந்தார். அவருடைய கடிதமோ, அச்சுறுத்தலோ, பழைய பாசறையைச் சேர்ந்தவன் என்ற குரலொலியோ உறுப்பினர் எவரின் கவனத்தையும் ஈர்க்கவில்லை.

*2381—7*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பழைய பாசறையில் உள்ள சிலர், புதிதாகச் சேர்ந்த மருத்துவர் எசு. ஆனந்தராசன், திரு. ஆர். இராசலிங்கம் போன்றவர்களின் நீண்ட முயற்சிகளின் கடைசிக் கல்லாகத் திரு. தங்கராசா அவர்களின் கடிதம் அமைந்தது.

பேராசிரியர் வித்தியானந்தன், கலாநிதி மகாதேவா, திரு. துரைராசா, நான், திரு. பேரின்பநாயகம், திருமதி திருச்செல்வம் ஆகியோர் விரைந்து செயற்பட்டோம். நான்கே மாதங்கள் இருந்தன. கட்டுப் பெத்தைப் பொறியியல் கல்லூரி வளாக மாணவர்கள் பலர், மாணவர் திரு. சி. மு. ஞானனந்தன் தலைமையில் ஒவ்வொரு நாள் மாலையிலும் வந்து உதவத் தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் மாநாட்டுச் செயலகம் அமைக்கப்பட்டது. திரு. வி. எசு. துரைராசா அவர்களின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் மாநாட்டுச் செயலகமாக மாற்றப்பட்டது. மாநாட்டு மலர் வெளியிடும் பொறுப்பு கொழும்புப் பல்கலைக்கழக வளாகத்தைச் சேர்ந்த கலாநிதி பூலோகசிங்கம் அவர்களிடம் கையளிக்கப் பட்டது. திருமதி மகேசுவரி பாலக்கிருட்டினன் உதவியாக இருந்தார்.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் ஆதரவு திரட்ட நான் சென்றேன். மட்டக்களப்புக்குப் பேராசிரியர் வித்தியானந்தன் நேரில் சென்றார்கள். திருகோணமலைக்குத் திரு. இ. பேரின்பநாயகம் அனுப்பப்பட்டார்.

நிதிக்குழு, கலைக்குழு இரண்டின் தலைவராய்த் திரு. வி. எசு. துரைராசா பணிபுரிந்தார். மாநாட்டு அமைப்புச் செயலாளராக அவர் ஒருவரே பணி புரிந்தார். இணைச் செயலாளராக நான் பணிபுரியுமாறு கேட்கப் பெற்றேன். ஒருவரே போதும் என்ற என்



கருத்தைப் பேராசிரியர் வித்தியானந்தன் ஏற்றுக் கொண்டார்.

குழுத்தலைவர்களின் விதப்புரைகளை ஏற்றுக் கொண்ட அமைப்புக்குழு, குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தது. பணிகள், பொறுப்புகள் பரவலாக்கப் பட்டன. யாழ்ப்பாணச் செயலகத்தில் முழுநேர ஊழியர் ஒருவர் பணிபுரியத் தொடங்கினார்.

"மாநாட்டைப் பின்போடுவது விரும்பத் தக்கதன்று. இலங்கைக் கிளையினர் மாநாட்டைப் பின்போட்ட பின்னரும் நடத்தி முடிப்பார்களாயினும், உலக அறிஞர்களின் ஆதரவை இழக்க நேரிடும். கழிச்சல் நோய் (காலரா) இருக்குமெனில் பல அறிஞர்கள் வரமாட்டார்கள் என்பது உண்மையாக இருப்பினும், உடல்நலம்பேண் அதிகாரிகள், யாழ்ப் பாணத்தில் கழிச்சல் நோய் இல்லை என அதிகார பூர்வமாக அறிவித்துவிட்டதால், பல அறிஞர்கள் யாழ்ப்பாணத்திற்குத் தைத்திங்களில் வரவே விரும்பு வார்கள்" எனக் கலாநிதி ஆர். இ. ஆசர், இசுகாட் லாந்தில் இருந்து எழுதியிருந்தார்கள். 9-11-1973 நாளிட்ட அக்கடிதத்தின் படிகள் உறுப்பினர்கட்கு அனுப்பப்பட்டன.

"மாநாட்டைப் பின்போட வேண்டாம் என மீண்டும் வலியுறுத்த விழைகின்றேன். பின்போட்டால் இலங்கை அரசு மாநாட்டு அமைப்பாளர்கள்மீது நம்பிக்கை இழந்துவிடும். மாநாடு இலங்கையில் நடக்குமா என்ற சந்தேகம் எழவும் இடமுண்டு. தொடர்ந்து ஏனைய பல மாநாடுகள் நடைபெறுவதிலும் இடர்ப்பாடு உண்டு.

"கடந்த கோடையில், தெற்கு இத்தாலியில், யாழ்ப்பாணத்தில் பரவிய கழிச்சல் நோயை விட மோசமான கழிச்சல் நோய் பரவியது. கழிச்சல்நோய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(கலாரா)த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டு பலர் அங்கு போய் வருகின்றுர்கள். பயணிகள் கழிச்சல் நோய்த் தடுப்பூசி போட்ட பின்பே கிழக்கு நாடுகட்குப்போய் வரலாம் எனப் பல அரசுகள் கட்டாயப்படுத்துவதால், கழிச்சல் நோயைக் காரணம் காட்டி மாநாட்டை நிறுத்த வேண்டாம். பலர் யாழ்ப்பாணம் வர ஒழுங்கு செய்து பயணப் படிகளும் பெற்றுள்ளனர்......

"எப்படியிருப்பினும் நான் வருவேன். கட்டுரை படிப்பேன்...''

இவ்வாறு பேராசிரியர் சோன் மார், இலண்டன் பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர் வித்தியானந் தனுக்குக் கடிதம் எழுதினுர்கள்.

இந்தக் கடிதங்கள் அமைப்புக்குழுவிலிருந்த எமக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்தன. 1974 தை 3 தொடக்கம் 9 வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என உறுதிப்படுத்தி மீண்டும் உலக அறிஞர்கட்கு அறிவித்தல்கள் அனுப்பினுேம்.

குடியரசுத் தலைவர் மாநாட்டைத் தொடக்கி வைப்பதைத் தமிழர் கூட்டணியினர் எதிர்க்காமல் விட்டனர் என்பதை அவர்களின் அறிக்கைகள் கூறின. பிரதமர், அமைச்சர்கள் ஆகிய அரசியல்வாதிகள் யாழ்ப்பாணம் வருவதையோ, மாநாட்டைத் திறந்து வைப்பதையோ வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையோ விரும்பவில்லை; ஆனுல் குடியரசுத் தலைவர் யாழ்ப்பாணம் வருவதையோ, மாநாட்டைத் தொடக்கி வைப்பதையோ தமிழர் கூட்டணி எதிர்க்கவில்லை.

மாநாட்டைத் தொடக்கி வைக்கக் குடியரசுத் தலைவரை அழைப்போம்; கட்சிவேறுபாடின்றிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தொடக்க விழாவுக்த அழைப்போம்; தமிழ் ஆராய்ச்சியில் ஆர்வமுள்ளவர்களை அழைப்போம்; உலக நாடுகளில் தமிழர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாகப் பணி புரிந்தால் அவர்களை அழைப்போம்; யாழ்ப்பாண மாநகர முதல்வருடன் தொடர்பு கொண்டு அவரின் ஆதரவைப் பெறுவோம்; உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை அழைப்போம்; எவரையும் புறக்கணிக்க மாட்டோம்; எல்லாரும் மாநாட்டுக்கு ஆதரவு தரவேண்டும்; ஆதரவைப் பெற வேண்டும்; இதுவே பேராசிரியர் வித்தியானந்தன், திரு. வி. எசு. துரைராசா, நான், திருமதி திருச்செல்வம் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களுடன் ஏற்றுக் கொண்ட கொள்கையாக அமைந்தது.



"அடுத்த ஆண்டு சனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் குடியரசுத் தலைவர் வில்லியம் கோபல்லவா தொடக்கி வைப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது. மாநாடு சனவரி 9ஆம் திகதி வரை நடைபெறும். மாநாட்டைத் திறந்து வைக்குமாறு குடியரசுத் தலைவர் அழைக்கப்பட்டுள்ளார்'' என்ற செய்தி 19-11-1973 ஈழநாடு இதழில் வெளிவந்தது. தலைப்புச் செய்தியாக வெளிவந்த அந்த முக்கியச் செய்திக்கு எல்லாரிடமிருந்தும் வரவேற்பு கிடைத்தது. ஆனுலும் அதே நாளில் 'தினபதி' நாளிதழில் வெளிவந்த செய்தி குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வெளியிடப் பட்டதுபோல் தோன்றிற்று.

"உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடக்குமா? நடக்காதா?'' என்ற தலைப்பில் செய்தியும் கருத்துமாகத் 'தினபதி'யில் எழுதப்பட்டவை சுவையாக இருந்தன. "உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகக் கொழும்புக் கிளையினுல் திட்டமிடப்படும் மாநாடு நடக்குமா நடக்காதா என்ற கேள்விகளுக்கு இன்னும் முடிவான விடை கிடைப்பதாக இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மாநாடு நடப்பதானால் எங்கு நடக்கும்? யாழ்ப்பாணத்திலா, கொழும்பிலா? வெளிநாட்டறிஞர்கள் வந்து கலந்து கொள்வார்களா? இந்த மாநாடு பற்றி அரசாங்கத்தின் நிலை என்ன? இப்படியான கேள்விகளும் பல்வேறு வட்டாரங்களில் கிளப்பப்படுகின்றன.

"தமிழ் ஆராய்ச்சிக் கழகம் கொழும்புக்கிளை இன்று பிளவுண்ட நிலையில் குற்றுயிராகக் கிடக்கின்றது. கிளையை ஆதிகாலந்தொட்டு உருவாக்கியவர்களான வண. தனிநாயக அடிகள், திரு. கே. சி. தங்கராசா, டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, திரு. கே. செல்வநாதன், திரு. வி. கணபதிப்பிள்ளை போன்றவர்கள் ஒதுக்கப்பட்டுவிட்டார்கள்.

"புதிய உத்வேகத்தோடு கூடிய சிலர் கிளையின் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து கொண்டு எப்படியாவது திட்டமிட்டபடி மாநாட்டை நடத்தி முடித்துவிடுவது என்று செயல்பட்டு வருகின்றார்கள். இவர்களில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, ஈழவேந்தன், திருமதி புனிதம் திருச்செல்வம், திரு. வி. எசு. துரைராசா போன்றவர்களின் பெயர்கள் அடிபடுகின்றன...

"...மாநாடு திட்டமிட்டபடி 1974 சனவரி 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறும் என்றவாறாக ஒரு விளம்பரத்தைக் கூட வெளியிட்டிருக்கிறார் திரு. வி. எசு. துரைராசா...

"...இதற்கிடையில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதற்கு ஆதரவு தரும்படியும் வெளிநாட்டார் வருகை தருவதற்கான விசா முதலியவற்றை வழங்கும்படியும் அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது....

"...இதற்கிடையில் இன்னொரு பிரச்சினை தலை தூக்கியுள்ளது. தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து



கொள்ளும் வண்ணம் யார் யாருக்கு அழைப்பு அனுப்புவது என்பதாகும். குடியரசுத் தலைவர் வில்லியம் கோபல்லவாவை மட்டுமே அழைப்பதென்றும் எந்த ஒரு அமைச்சரையும் அழைப்பதில்லையென்றும் புதிய குழுவினர் அந்தரங்கமாக முடிவு செய்துள்ளனராம். இந்த முடிவு ஒரு தமிழ் அரசியல் கட்சியின் ஆலோசனைப்படி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

"பிரதமருக்கும் அழைப்பில்லை. ஒரு தமிழ் அமைச்சர் இருக்கிறார். ஒரு தமிழ் பேசும் முசுலிம் அமைச்சர் இருக்கிறார். கலாச்சார அமைச்சர் இருக்கிறார். இவர்கள் யாருக்குமே அழைப்பில்லையென்றால் அரசாங்கம் இந்த மாநாட்டில் ஏன் அக்கறை கொள்ள வேண்டும் என்று ஒரு சாரார் கேட்கின்றனர்.

"இந்த மாநாட்டில் அரசியல்வாதிகட்கு இடமில்லை யென்றால் முதலாவது மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றபோது அதைத் திறந்து வைக்கப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அழைக்கப்பட்டதேன்? அந்த மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் கலந்து கொண்டதேன்?

"இரண்டாவது மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அதில் முழுமூச்சுடன் முதலமைச்சர் அறிஞர் அண்ணாதுரை, அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகியோர் எப்படிப் பங்கு பற்றினர்கள்?

"அங்கெல்லாம் ஒரு நீதி. இங்கு ஒரு புதிய குழுவினர் ஒரு தமிழ் அரசியல் கட்சியின் கையாட்கள் என்பதனால் இங்கு ஒரு புதிய கொள்கையா என்றும் கேட்கப்படுகிறது."

மேற்கண்டவாறு 'தினபதி'ச் செய்தி கூறியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 15. 'அப்பி பலமு'

யாழப்பாணம் என்ற பெயர் மாவட்டப் பகுதிக்கும் பயன்படும்,மாவட்டத்தின் தலைநகரான யாழ் நகருக்கும் பயன்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏறத்தாழப் பத்து இலக்கம் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களுள் ஓர் இலக்கம் பேர், யாழ்ப்பாண நகரத்துள் வாழ்கின்றார்கள்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், திரு. எசு. சே. வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் உள்ள தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களாகவும், திரு. சி. சி. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் உள்ள தமிழ்க் காங்கிரசு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர். சிங்களப் பகுதிகளில் வெற்றி பெற்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாசக் கட்சி, பொதுவுடைமைக் கட்சி என்பன, யாழ்ப்பாண மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தன. தமிழ் வாக்காளர்கள் சிங்களக் கட்சிகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

1972இல் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. தமிழர்கட்கிடையே உள்ள அரசியல் வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றபலருள், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த திரு.



ஞானமூர்த்தி முக்கியமானவர். தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசுக் கட்சியும் இணைந்தன. தமிழர் கூட்டணி எழுந்தது. தமிழ்க் காங்கிரசு கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுள், இருவர், தமிழர் கூட்டணியில் சேர மறுத்தனர். அரசோடு ஒத்துழைத்தனர்.

யாழ்ப்பாணம் முழுவதும் தமிழர் கூட்டணி அலை வீசினாலும், ஆட்சியில் இருந்த சிங்களக் கட்சிகளின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டனர். இவர்களுள் அமைச்சராக இருந்த திரு. செல்லையா குமாரசூரியர் முன்னோடியாக இருந்தார். நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கி. அருளம்பலம், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா, யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோர் திரு. குமாரசூரியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றினர்.

இவர்கள் நால்வருள் திரு. அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண நகரத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தார். மக்களால் தெரிவு செய்யப்பெற்ற மாநகர முதல்வராகக் கடமை புரிந்தார்.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற விருந்ததால் மாநகர முதல்வரின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியது அமைப்புக் குழுவின் கடமையாயிற்று.

1973 மார்கழி முதல் வாரத்தில் ஒரு சனிக்கிழமையன்று காலை யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியில் உள்ள திரு. வி. எசு. துரைராசாவின் இல்லத்தில் பேராசிரியர் வித்தியானந்தன், திரு. வி.எசு. துரைராசா, கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா ஆகியோருடன் நானும் கூடிப் பேசினேன். யாழ்ப்பாண ஒழுங்குகள் பற்றி ஆலோசனை நடத்தினோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநாட்டு அரங்கு, விடுதி, கலைநிகழ்ச்சி, அலங்கார ஊர்வலம் என்பன பற்றி ஒவ்வொன்ருக எடுத்து நோக்கிஞேம். கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா மட்டும் அக்கறை இன்றிக் காணப்பட்டார்.

"யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்துவதில் கடினங்கள் இருக்குது. யாழ்ப்பாணத்தை விட்டு விட்டுக் கொழும்பில் நடாத்துவோம்." இவ்வாறு கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா கூறிஞர்.

"அப்ப நீங்கள் மாநாட்டை நடத்துங்கோ," எனக் கூறினேன். "உது சரி வராது" எனப் பேராசிரியர் வித்தியானந்தன் கூறிஞர், எழுந்தார். கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா அவர்களின் போக்கு, திடீர் மாற்றம் எமக்கு வியப்பைத் தந்தன.

ஒரு மாதம் கூட இல்லை. மார்கழி முதல் வாரத்தில் இருந்தோம். தை முதல் வாரத்தில் மாநாடு. யாழ்ப்பாணத்தில் தான் மாநாடு எனத் தீர்க்கமாகத் திடசங்கற்பம் செய்து கொண்டவர்களிடையே கருத்து வேறுபாடா?

திரு. வி. எசு. துரைராசா மீண்டும் உதவிக்கு வந்தார். எங்களைச் சமாதானப்படுத்திஞர். கலாநிதி மகாதேவாவிடம் அறிவுரை கூறிஞர். அவர்கள் இருவரும் விவாதித்தனர். "சச்சி, மன்னியுங்கோ; பேராசிரியர் அவர்களே, மன்னியுங்கோ; அது ஒரு இடைக் கருத்து. யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவோம். உங்களோடு நான் சேர்ந்து கொள்கிறேன்" என ஆங்கிலத்தில் கலாநிதி மகாதேவா கூறிஞர்.

"இனிப் பிரச்சினைகளுக்கு இடமில்லை. வாருங்கோ, திரு. அல்பிரட் துரையப்பாவைப் பார்ப்போம்" எனப் பேராசிரியர் கூறிஞர். நானும் ஏற்றுக் கொண்டேன்.

யாழ்ப்பாண மாநகர முதல்வருடன் நான் தொலைபேசியில் கதைத்தேன். நாம் சந்திக்க விரும்புவதைக் கூறினேன். விவரத்தையும் கூறினேன். மாநகர சபை அலுவலகத்தில் இருப்பதாகவும் உடன் வர முடியுமா எனவும் கேட்டார்.



நாம் நால்வரும் சென்ரேம். என்னைத் தவிர ஏனைய மூவர்க்கும் திரு. அல்பிரட் துரையப்பா ஏற்கனவே அறிமுகமானவராக இருந்தார். விவரங்கள் யாவையும் பேராசிரியர் வித்தியானந்தன் எடுத்துக் கூறிஞர். தாம் தனித்து எந்த முடிவும் எடுக்க முடியாமல் இருப்பதாகவும், கொழும்பில் அரசின் அமைச்சர்களைக் கலந்த பின்பே முடிவு கூற முடியும் எனவும் திரு. துரையப்பா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் முதல் குடிமகன் என்ற முறையில் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதைத் தாம் வரவேற்பதாகவும் கூறிஞர். பின் திரு. வி. எசு. துரைராசாவைப் பார்த்து, "துரை, நான் அடுத்த கிழமை கொழும்பில் நிற்பேன். கிறின்லண்ட்சில் தங்குவேன். என்னைச் சந்தியுங்கோ. முடிவு சொல்கிறேன்." என்ருர். நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

மருத்துவர் எசு. சபாரத்தினம் அவர்கள் வேம்படி வீதியில் சிறிய மருத்துவமனை வைத்திருந்தார். அவர் எங்களுக்கு உதவியாக இருப்பார் எனத் திருமதி. திருச்செல்வம் எம்மிடம் கூறியிருந்தார். அவரைச் சென்று சந்தித்தோம். அவரின் ஆதரவைக் கேட்டோம். முழு மனதுடன் ஒத்துழைப்பதாக உறுதி அளித்தார். திரு. திருச்செல்வம் தம்பதிகளின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாது என்ருர்.

யாழ்ப்பாணத்தை விட்டுப் பேராசிரியர் கண்டிக்குப் போஞர். நானும் அவருடன் கொழும்புக்குப் போவதற்காகப் புகைவண்டியில் இடம் ஒதுக்கீடு பெற்றிருந்தேன். உடல் நலக்குறை காரணமாகப் போகவில்லை. உடல் சிறிதளவு தேறியபின் கொழும்பு சென்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேராசிரியர் வித்தியானந்தனைக் கொழும்பில் ஒரு நாள் சந்தித்த பொழுது பின்வரும் விவரத்தைக் கூறினர். பாதுகாப்புப் பிரதி அமைச்சர் திரு. லச்சுமன சயக்கொடியின் அழைப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சுக்குப் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் அமைப்புக் குழு உறுப்பினர்கள் சிலர் சென்றனர். பாதுகாப்புப் பிரதி அமைச்சர் திரு. லச்சுமன சயக்கொடியைச் சந்தித்தனர். திரு. சயக் கொடிக்கு உதவியாகச் சில அதிகாரிகள் இருந்தார்கள்.

வெளிநாட்டிலிருந்து வரும் அறிஞர்கட்கு உட்புகல் அனுமதி வழங்குவது தொடர்பாகத் திரு. சயக்கொடி பேராசிரியர் வித்தியானந்தனுடன் பேசினர். தமிழாராய்ச்சி மாநாட்டைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார். மாநாட்டில் கலந்து கொள்ளவிருக் கின்ற அறிஞர்களின் பட்டியலைக் கேட்டார்.

தமிழ்நாட்டிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள், பேச்சாளர்கள் வரலாம்; தமிழர் கூட்டணியின் அரசியல் மேடைகளில் பேசலாம்; தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகின்ற போர்வையில் அரசியல் பேசலாம்; ஈழத் தமிழர்களைத் தூண்டி விடலாம்; இத்தகைய அச்சம் திரு. சயக்கொடியின் வினக்களில் இழையோடியது. பேராசிரியர் வித்தியா னந்தனின் விடைகளில் மாநாட்டில் அரசியலைக் கலக்கமாட்டோம் என்ற உறுதித்தொனி இழை யோடியது.

'யாழ்ப்பாணத்தில் கழிச்சல் (காலரா) நோய்த் தாக்கம் உண்டே! விடுதி வசதிகள் இல்லையே! மண்டப வசதிகள் இல்லையே! எப்படி மாநாட்டை நடத்தப் போகின்றீர்கள்? ஏன் கொழும்பில் நடத்தக் கூடாதா? பண்டாரநாயக்கா நினைவு அனைத்துலக மாநாட்டு மண்டபம் உண்டே! மாபெரும் விடுதி



வசதிகள் உண்டே! பேராசிரியர் அவர்களே, எங்கள் கொழும்புக்கு வாருங்கள். மாநாட்டை நடத்துங்கள்." இவ்வாறு பிரதி அமைச்சரின் கருத்துகள் அமைந்தன. தோழமை நிறைந்த அழைப்பைப் பேராசிரியர் வித்தியானந்தனிடம் நாடக பாணியில் பிரதி அமைச்சர் விடுத்தார்.

"மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவேண்டும் என்பது பொதுச்சபை உறுப்பினர்களின் முடிவு. இதை மாற்ற முடியாமலிருக்கின்றதே. யாழ்ப் பாணத்தில் தான் மாநாடு நடைபெறும்". பேராசிரியர் வித்தியானந்தன் சுருக்கமாக உறுதியுடன் கூறினர்.

தூண்டிலில் இரை போடுவது போல், பிரதி அமைச்சர் பேசினர்: "மாநாட்டுச் செலவுகளை அரசு பொறுப்பேற்கலாம். மாநாட்டு மண்டபத்தைக் கட்டண மின்றித் தரலாம். விடுதிகட்கான செலவுகளை ஏற்றுக் கொள்ளலாம். அரசின் இயங்கிகள் (கார்கள்)உள்ளன. போக்குவரத்து வசதிகள் உள்ளன. கொழும்பில் மாநாட்டை நடத்தினுல் இந்த வசதிகளை அரசே ஏற்றுக் கொள்ளலாம்.மாநாட்டு அமைப்புக்கென உள்ள குழுவில் எங்கள் 'பாலா' வையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அரசின் பிரதிநிதியாக இருந்து அவர் எல்லாம் செய்து தருவார்." 'பாலா' எனப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டது, வெளிவிவகார அமைச்சில் அதிகாரியாகப் பணி புரிந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களையாகும். திரு. சயக் கொடி தேனெழுகப் பேசினர்.

"யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துகிறேம். அறிஞர்கட்கு 'விசா' வழங்கி உதவுங்கள்." மீண்டும் மிகச் சுருக்கமாகப் பேராசிரியர் வித்தியானந்தன் பதில் கூறினர்.

'யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டாம். அரசியல் சூழ்நிலை சரியில்லை. வெளி நாட்டு அறிஞர்களை யாழ்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாணத்தில் காணும் தமிழர் கூட்டணியினர் அரசியல் பிரச்சாரம் செய்யலாம். பேராசிரியர் அவர்களே, யாழ்ப் பாணத்தில் மாநாட்டை நடத்த வேண்டாம். கொழும்பில் நடாத்துங்கள்.' இவ்வாறு கூறிய பிரதி அமைச்சரின் கூற்றில் மிரட்டலும் இழையோடியது.

அச்சம் தெரிவித்தவர், அன்பு காட்ட முனைந்தார்; தோழமை உணர்வுடன் பேசினார்; பின்னர் மிரட்டினார். பேராசிரியர் வித்தியானந்தன் மிகஆறுதலாக, அமைதி யாக, "நாங்கள் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்து கிறோம். ஆவன உதவிகளைச் செய்யுங்கள்" என்றார்.

'அதுதான் உங்கள் முடிவா? மாற்றமில்லையா' என்ற கருத்துப்படப் பிரதியமைச்சர் கேட்டார்.

"யாழ்ப்பாணத்தில் தான் மாநாட்டை நடாத்த உள்ளோம்" என மீண்டும்பேராசிரியர் வித்தியானந்தன் கூறினார்.

பிரதி அமைச்சர் தமது அதிகாரிகளைப் பார்த்தார். மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்களைப் பார்த்தார். "அப்பி பலமு" எனக் கூறினார். கூட்டம் முடிவ டைந்தது. 'அப்பி பலமு' என்ற சிங்களச் சொற்றொ டரின் பொருள் "நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்பதாகும்.

# 16. அரசியல்வாதிகளின் கருத்துரைகள்

'யாழ்ப்பாணம் வருக, மாநாட்டைத் தொடக்கி வைக்க!' எனக் குடியரசுத் தலைவர் திரு. வில்லியம் கோபல்லவா அவர்கட்கு எழுதினோம். மாநாட்டுத் தொடக்கவிழாவில் கலந்து கொள்ளக் குடியரசுத் தலைவருக்கு வசதியில்லை என அவரின் செயலாளர் பதில் எழுதினார்.

குடியரசுத் தலைவர் மட்டுமல்ல. இலங்கை அரசின் அமைச்சர்கள் சிலரும் பதில் எழுதியிருந்தார்கள். 13-12-1973 நாளிட்ட செய்தி அறிக்கையில் இந்த விவரங்களைக் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா கூறியிருந்தார். சில அமைச்சர்கள் வர முடியவில்லை எனவும், சில அமைச்சர்கள் வரக்கூடும் எனவும் குறிப் பிட்டிருந்தார்.

14-12-73 இல் வெளிவந்த 'தினபதி', 'வீரகேசரி' நாளிதழ்களில், திரு. லக்சுமன் சயக்கொடியின் பேட்டி வெளிவந்தது. "தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசாங்க ஆதரவு அறவே கிடையாது" என முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளிவந்த செய்தியில், "உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையின் தலைநகரான கொழும்பில் சர்வேதச மாநாடாக நடத்த வேண்டும் என்று நான் ஆரம்பக் காலத்திலிருந்தே இந்த மாநாட்டை ஒழுங்கு செய்பவர்களுக்கு ஆலோசனை கூறி இருக்கிறேன். நான்கு ஐந்து நாட்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னரும் என்னைச் சந்தித்த மாநாட்டு அமைப்புக் குழுப் பிரமுகர்களிடம் இதை வற்புறுத்தினேன்...

"யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள மாநாட்டுக்குத் தென்னிந்தியாவிலிருந்து அரசியல் வாதிகள் பலர் கல்விமான்கள் என்ற போர்வையில் அழைக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது தெரிய வந்துள்ளது...

"தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைச் சர்வதேச மாநாடாகப் பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்திலோ, அன்றிக் கொழும்பு இராமக்கிருட்டிண மண்டபத்திலோ சிறப்பாக நடத்தலாம். இவ்வாறு நடத்தப்படும் பட்சத்தில் நானும் எனது அரசாங்கமும் முழுமுச்சான ஆதரவை அளிப்போம். அதை விடுத்து யாழ்ப்பாணத்தில் அரசியல் மாநாடாக நடத்தப்பட்டால் அதற்கு ஆதரவு அளிப்பது எப்படி?" இவ்வாறு திரு. லக்சுமன் சயக்கொடி கேட்டதாகத் 'தினபதி'ச் செய்தி கூறியது.

'வீரகேசரி' நாளிதழும் முன்பக்கத் தலைப்புச் செய்தியாகத் திரு. லக்சுமன் சயக்கொடியின் பேட்டியை வெளியிட்டது. "மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து இரண்டு மூன்று முதலமைச்சர்களையும் அழைக்க இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது......தென் இந்தியாவில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை தி. மு. க. அரசு தனது பிரசாரத்துக்குப் பயன்படுத்தியதால், இந்திய மத்திய அரசுக்குப் பெரும் தலையிடி ஏற்பட்டதை நாம் அறிவோம். அதுபோல இலங்கையில் நடைபெறும் நான்காவது மாநாடும் அரசியல் கட்சிப்பிரச்சாரமாகி விடக்கூடாதுஎன்பதில்அரசாங்கம் கண்டிப்பாக இருக்கின்றது" எனத் திரு. லக்சுமண் சயக்கொடி கூறியிருந்தார்.



"மாநாட்டு அமைப்பாளர்கள் என்னதான் மறுத்தாலும் இந்த மாநாடு அரசியலுக்குப் பயன்படுத்தப்படும்" எனத் திரு. லட்சுமன் சயக்கொடி கூறியதாக 'ஈழநாடு' நாளிதழில் 15-12-1973 இல் வெளிவந்திருந்தது. ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும், அரசின் பாதுகாப்புப் பிரதி அமைச்சருமான திரு. லக்சுமன் சயக்கொடி மாநாட்டில் அரசியல் கலக்கப்படும் என அச்சம் தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினரும், மன்ற இலங்கைக்கிளை இணைச் செயலாளர்களுள் ஒருவருமான கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, 'ஈழநாடு' 15-12-73 இல் வெளியிட்ட அறிக்கையில் "அரசியல் சார்பற்றது, ஆதாயத்தை நோக்கமாகக் கொள்ளாதது, எந்த அரசியல் கட்சியோடும் தொடர்பு கொள்ளாதது" என்று குறிப்பிட்டுள்ளதுடன் "கழகத்தின் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் யாவும் அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையிலேயே செய்யப் பெறுகின்றன. அதன் நடவடிக்கைகள் யாவும் சனநாயக முறையிலேயே மேற்கொள்ளப் பெறுகின்றன" என்றும் தெரிவித்திருந்தார்.

ஆளும் கட்சியுடன் சேர்ந்து பணிபுரிந்த வட்டுக் கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா, நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் ஆகியோர் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் தமிழர் கூட்டணிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகக் குற்றம் சாட்டினர்.

யாழ்ப்பாண மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டு அறிஞர்கட்கு உட்புகல் அனுமதி வழங்க வேண்டாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ற வேண்டுகோளை முதன்முதல் வெளியிட்ட பெருமை ஒரு தமிழ்மகனையே சாரும்! நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் செய்தியாளருக்கு வெளியிட்ட அறிக்கை **16-12-1973** 'தினகரன்' நாளிதழில் வெளிவந்தது. "தமிழர் கூட்டணியும் தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழுவும் முற்று முழுதாக இரண்டறக் கலந்தவை என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் அரசாங்கத்தை ஏமாற்றி இவர்கள் இந்த அரசியல் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதை அனுமதிக்கக் கூடாது.

"தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் கிளையின் தாபகர்களும் முக்கியத்தர்களுமான பலர் இன்று மாநாட்டுக்குழுவில் இருந்து இராசினாமாச் செய்துள்ளனர். பலர் வெளியேறிவிட்டனர். இலங்கைக் கிளையின் தலைவரான டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, வண. பிதா தனிநாயகம்அடிகள், டாக்டர் எசு. ஆனந்தராசன், திரு. கே. சி. தங்கராசா ஆகியோர் இதில் குறிப்பிடத் தக்கவர்கள். அரசியல் பின்னணியே இவர்கள் வெளியேற்றத்துக்குக் காரணம் என்பது அனைவரும் அறிந்த விடயம்...

"...இம்மாநாட்டைப் பகிஷ்கரிப்பதென்று காங்கிரசு (முற்போக்குக்) கட்சியின் சகல கிளைகளும் வாலிப முன்னணிகளும் தீர்மானித்துள்ளன. இந்த முடிவையே முற்போக்குக் காங்கிரசு தலைமைப்பீடமும் எடுத்துள்ளது. எனவே மாநாட்டைச் சாட்டி வரமுயலும் எவருக்கும் விசா கொடுக்கவேண்டாம் என்றும், அவசியமேற்படுமானால் மாநாட்டைத் தடை செய்யுமாறும் எமது கட்சி கேட்டுக்கொள்ளுகின்றது" எனத் திரு. சி. அருளம்பலம் கேட்டிருந்தார். தமிழ்க் காங்கிரசு (முற்போக்குக்) கட்சியின் தனிப்பெரும்



தலைவராகவும், தலைமைப்பீடமாகவும், கிளைகளாகவும், வாலிபமுன்னணிகளாகவும், அவரும் திரு. ஆ. தியாகராசாவும் மட்டுமே விளங்கினர் என என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

திரு. எசு. சே. வி. செல்வநாயகம், திரு. எம். எசு. செல்லச்சாமி, திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் தமது கருத்துகளை நாளிதழ்களில் வெளியிட்டிருந்தனர். திரு. செல்வநாயகம் தமிழர்களின் மதிப்புக்குரிய தலைவராகப் பரிணாம வளர்ச்சி பெற்றிருந்தார். அவரது தலைமையை எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றிருந்தன. "தமிழர் செய்ய நினைக்கும் ஒவ்வொரு காரியத்துக்கும் அரசியல் சாயம் பூசிக் குழப்பியடிக்கப் பார்க்கிறது அரசாங்கம்," எனக் கூறிய திரு. செல்வநாயகம், **15-12-1973** 'வீரகேசரி' நாளிதழில், "மாநாட்டுக் குழுவினர் அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் இம் மாநாட்டை நடுநிலையாக நடத்துவதற்கு அரும்பாடு பட்டு வருகின்றார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு மலைநாட்டுத் தமிழர்களுக்குரிய பெரிய நிறுவனம். இதன் பொதுச் செயலாளர் திரு. எம். எசு. செல்லச்சாமி, 'வீரகேசரி' **15-12-1973** இல் அறிக்கை வெளியிட்டார் தமிழாராய்ச்சி மாநாட்டை ஒரு தமிழ்ப் பிரதேசத்தில் நடத்த வேண்டும் என்பதற்காகவே புதுதில்லியில் நடத்தப் பெறுவதற்குப் பதில் இரண்டாவது மகாநாடு சென்னையில் நடத்தப் பெற்றதென்றும், ஆகவே இலங்கையில் மட்டும் கொழும்புக்குப் பதில் ஏன் யாழ்ப்பாணத்தில் நடத்தக் கூடாது என்றும் திரு. செல்லச்சாமி கேட்டிருந்தார். அரசின் இன்றைய நிலை தமிழர் ஒவ்வொருவர்க்கும் எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையாகும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று இ. தொ. கா. செயலாளர் திரு. எம். எசு. செல்லச்சாமி தெரிவித்தார்.

தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகமான திரு. அ. அமிர்தலிங்கம் 15-12-1973 'ஈழநாடு' நாளிதழில் தன் கருத்தைக் கூறியிருந்தார். "அரசியல் வண்ணம் பூசி எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கியதுபோலத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் குட்டிச்சுவராக்கித் தமிழாராய்வதற்காக இங்கு வருகை தர இருக்கின்ற கற்றுத் துறைபோகிய கல்விமான்களின் புனிதப் பணிக்கு இடையூறாக இருக்க வேண்டாமெனத் திரு. தியாகராசா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத் தொடக்கக் கால உறுப்பினர்கள் பலர் விலகிவிட்டார்கள்; தவத்திரு தனிநாயக அடிகளின் ஆதரவு மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்கட்கு இல்லை' என்ற கருத்துக்களுக்குப் பதில் கூறிய பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய கட்டுரை 16-12-1973 ஈழநாடு நாளிதழில் வெளிவந்தது.

தவத்திரு தனிநாயக அடிகளாரின் விருப்பத்துக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் மாநாடு நடைபெறுகின்றது. அவரின் விருப்பத்துக்கமையப் பேராசிரியர் வித்தியானந்தன் தலைவரானார். அவரே யாழ்ப்பாணத்தில் நின்று ஒவ்வொரு அமைப்புக்குழுக்கூட்டத்திற்கும் வருகை தந்து உற்சாகமூட்டினார்; கருத்துக் கூறினார்; சேர்ந்து உழைத்தார்.

பேராசிரியர் வித்தியானந்தன் விளக்கமாகவே எழுதியிருந்தார். "ஈழத்தில் மாநாட்டைச் சீரிய முறையில் நடத்துவதற்கு யாப்பு விதிகள் அமைக்கப்பட்டு அவ்விதிகளுக்கு ஏற்ப உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுத் தலைவர், துணைத்தலைவர்கள், இணைச் செயலாளர், பொருளாளர்கள் போன்ற பதவிகளுக்கும் முகாமைக் குழுவுக்கும் தெரிவுகள் நடைபெற்றன. இவ்வாறு



தெரிவு செய்யப்பட்டவர்களுள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கலாநிதி எச். டபிள்யு. தம்பையா அவர்கள் மட்டும் இடைக் காலத்தில் தம் பதவியைத் துறந்தார். வேறெவரும் பதவிகளிலிருந்து நீங்கவில்லை. தொடர்ந்து அப்பதவிகளில் கடமையாற்றி வருகின்றார்கள். கலாநிதி தம்பையா அவர்களும் உறுப்பினராக இருந்து வருகின்றார்கள். இலங்கைக் கிளையின் பழைய உறுப்பினர்களாகிய திரு. கே. சி. தங்கராசா, திருமதி புனிதம் திருச்செல்வம், திருமதி மகேசுவரி பாலக்கிருட்டினன், திரு. பி. ஈ. வசுதியாம்பிள்ளை, திரு. எசு. அம்பிகை பாகன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், வண. தனிநாயக அடிகள், திரு. சேம்சு இரத்தினம் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், திருவாளர்கள் கே. செல்வநாதன், சி. அம்பலவாணர், இ. நமசிவாயம் ஆகியோர் பொருளாளராகவும் பதவி வகித்துப் பணி புரிகின்றனர்.

"...மாநாடுகள் பல மாநாட்டில் ஆராயப்படும் பொருளுக்கேற்பப் பிரதேசங்களிலேயே நடைபெறுகின்றன. தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழ்மக்கள் பெரும்பாலும் வாழுகின்ற வடமாகாணத்தில் அல்லது கீழ் மாகாணத்தில் அல்லது மலைநாட்டில நடைபெறுவதே பொருத்தமானது. தமிழ்ச் சூழலிலே, தமிழ்மக்களின் ஆதரவிலே, தமிழ்மக்களின் உபசாரத்துடன் நடக்கக் கூடாது என விரும்புவது முறையன்று.

"...மேலும் மாநாடு அரசியல் கலப்பில்லாது நடைபெறும். அரசியல் மேடையாக மாநாடு அமையாது. கட்டுரைகள் படிப்பதற்கும் கட்டுரைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் மட்டுமே மேடை அளிக்கப்படும்." இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன் தமது கட்டுரையில் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 17. இறப்பில் செருகிய தமிழ் உணர்வு

இலங்கை அரசின் ஊழியர்கள் அரசியல் உரிமை தொடர்பாக இருவகைப்படுத்தப்பட்டனர். அரசியல் உரிமை உடைய, நடுத்தர, கீழ் மட்ட ஊழியர்கள்; அரசியல் உரிமை இல்லாத அதிகாரிகள், மேல்மட்ட ஊழியர்கள். கடற்றொழில் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்வு அலுவலராகப் பணி புரிந்த நான் அரசியல் உரிமை இல்லாத அரச ஊழியன்.

மாநாட்டு அமைப்புக் குழுவில் நான் உறுப்பினனாக இருந்தேன். அரசியல் மாநாடு எனப் பாதுகாப்புப் பிரதி அமைச்சரால் அறிவிக்கப்பட்ட பின்னர் மாநாட்டு அமைப்புக் குழுவில், அரசியல் உரிமை அற்ற அரச ஊழியனாகிய நான் பணி புரியலாமா?

மாநாட்டில் அரசியலைக் கலப்பதில்லை என மாநாட்டு அமைப்புக் குழுவினர் திட சங்கற்பம் கொண்டுள்ளனர். ஆராய்ச்சி மாநாட்டை நடாத்தும் அமைப்புக் குழுவில் உறுப்புரிமை வகிப்பதில் என்ன தவறு? பாதுகாப்புப் பிரதி அமைச்சர் என்ன...பிரதமரே இது அரசியல் மாநாடு என அறிவித்தாலும் கூட, உண்மையுடனும் உள்ளத் தூய்மையுடனும், அரசியலை மாநாட்டில் கலக்க விரும்பாத அமைப்புக்குழுவில் நான் பணிபுரியப் பின் வாங்கவில்லை. மாநாடு முடிவடையும் வரை பணி



புரிவதென்றும், பேறுபேறுகளை ஏற்றுக்கொள்வது என்றும் எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். மருத்துவர் ஆனந்தராசன் முன்பு என்னை மிரட்டியிருந்தார். கலைஞர் கருணாநிதியின் கையாள் எனப் பொய்யுரை கூறிய அவர், அமைச்சர் பிலிக்சு டயசு பண்டாரநாயக்காவிடம் சொல்லி என்னைப் பதவியில் இருந்து விலக்கப் போவதாக மிரட்டி இருந்தார்.

புகழ் பெற்ற தொழிற்சங்கவாதியான திரு. கே. சி. நித்தியானந்தா கொழும்பில் இருந்து எனக்குச் செய்தி அனுப்பியிருந்தார். அமைச்சர்கள் சிலர் என்மீது கோபம் கொண்டிருப்பதாகவும், என்மீது நடவடிக்கை எடுக்க எண்ணியிருப்பதாகவும் சொல்லி அனுப்பிய அவர், தொழிற்சங்க நடைமுறைகளைச் சுட்டிக் காட்டினார்; அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது எனவும், தொடர்ந்து மாநாட்டு வெற்றிக்கு உழைக்கும் படியும் கூறினார்.

மாநாட்டைத் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் 1974 தையில் நடத்த வேண்டும்; ஆராய்ச்சி மாநாடாக நடத்த வேண்டும் என்பதில் தீவிரமான உறுதி கொண்டிருந்தேன். உள்ளத் தூய்மையுடன் அமைப்புக் குழுவுக்கு நம்பிக்கையாக நடந்து கொண்டேன். பேராசிரியர் வித்தியானந்தனுக்கு உறுதுணையாக இருந்தேன். அரசின் அறிவித்தலோ, அமைச்சர்களின் மிரட்டலோ, திரு. ஆனந்தராசனின் வெற்று வேட்டான மிரட்டலோ எனது கவனத்தை ஈர்க்கவில்லை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என் உடன் மாணவரான திரு. யோகநாதன், யாழ் நகரப் பிரிவின் உதவி அரசாங்க அதிபராக இருந்தார். அப்பொழுது நாடெங்கும் உணவுப் பற்றாக்குறை இருந்ததால், உதவி அரசாங்க அதிபர்கள் கட்டுப்பாட்டு அனுமதி மூலம் உணவுப்பொருட்களை வழங்கிக் கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பருப்பு, சீனி, கொத்தமல்லி, அரிசி போன்ற அடிப்படை உணவுப் பொருட்கள் பொதுச்சந்தையில் கிடைப்ப தில்லை. கள்ளச் சந்தையில் பதுக்கல்காரர் கொள்ளை லாபம் பெற்றனர். மாநாட்டு உணவுக்குழுத் தலைவன் என்ற முறையில் திரு. யோகநாதனைச் சந்தித்தேன். உணவுப்பொருட்கள் பெற அனுமதி கேட்டேன். "சச்சி, உங்களுக்கு வேணுமானால் தருகிறேன். மாநாட் டுக்குத்தர முடியாத நிலையில் உள்ளேன். அரசாங்கம் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விரும்பவில்லை. எனவே உணவுப்பொருளுக்கு எப்படி அனுமதி தருவது?"

செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. முருகேசம் பிள்ளையும் கையை விரித்தார். திரு. விமல் அமரசேகரா என்ற சிங்களவர் யாழ்-மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தார். அவரும் கையை விரித்தார்.

மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்களுள் நான் மட்டும் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் தங்கி யிருந்தேன். ஏனையவர்கள் வந்து போய்க் கொண்டிருந் தனர். எனவே அரசு அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வது என் பணியாயிற்று. வீரசிங்கம் மண்டபம், பாடசாலை மண்டபங்கள், மாநகரசபை அலுவலகம், காவல்துறை அலுவலகம், மாவட்டச் செயலகம், கல்வித் திணைக்களம் போன்ற பல அலுவலகங்கட்கு நான் சென்றேன். பல்வேறு அனுமதிகள் தொடர்பாகக் கதைத்தேன்; விண்ணப்பித்தேன். எங்கும் கைவிரிப்புத் தான்; வாய்ப் பிதுக்கல்தான்; பொச்சரிப்புத்தான். யாரும் உதவத் தயாராக இல்லை.

யாவட்டச் செயலகத்திலும் பல்வேறு அலுவலகங் களிலும் எனக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள். ஒரு சிலரைத் தவிரப் பெரும்பாலோர் என்னைக் கண்டால் ஒதுங்கினார்கள். தெருவில் கண்டால் கூட முகத்தை மறுபக்கம் திருப்பினார்கள். ஒரு சிலர் மட்டும், அலுவலக நடை முறைகளைக் கூறினர்; மிகச் சிலர் உதவினர்.



யாழ்ப்பாணத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலை யத்தினர் மட்டும் மேலதிகமாக உதவினார்கள். கொழும் புக்குத் தொலைபேசி அழைப்புப் பெறுவது குதிரைக் கொம்பான நிலை. அதிகாலையில், அரசு அலுவலகங் களின் அழைப்புகட்கு முன்னுரிமை கொடுத்துவிடு வார்கள். கொழும்புக்கோ கண்டிக்கோ அழைப்புக் கேட்டால் எட்டு மணி நேரம் பிந்தியே தருவது வழமை. ஆனால் நாங்கள் யாழ்ப்பாண மாநாட்டுச் செயலகத்தில் இருந்து பேசுகிறோம் என்று சொல்லு முன்பே, எந்த இடம், எது எண் எனக் கேட்டுக் கண் இமை மூடித் திறக்கும் நேரத்தில் தொடர்பைத் தருவார்கள் என் நண்பர்கள் மட்டும் அல்லர்; அங்குள்ள எல்லாருமே உதவினார்கள்.

வெளிப்படையாக அரசின் போக்கை ஏற்றவர்கள், மறைமுகமாக உதவ விரும்பினார்கள். தாம் யாரென்று அடையாளம் காணவும் காட்டவும் முடியாத இடங்களில் தமிழ் அரச ஊழியர்கள் உதவினார்கள். உள்ளத்தின் ஆழத்தில் அரும்பு விட்ட தமிழ் உணர்வு, தமிழன் என்ற உணர்வு, வெளிப்பட முடியாமல், வெளிப்படுத்த முடியாமல், நீறுபூத்த நெருப்பாக இருக்கும் நிலையில் என் நண்பர்களை அரச அலுவலகங்களில கண்டேன்.

போர்த்துகேயர் ஆட்சிக்காலம், கிறித்தவ சமயம் வலிந்து திணிக்கப்பட்ட காலம்; யாழ்ப்பாணத்தில் சைவர்கள் அரச ஊழியர்களாக இருந்தனர். தம் சமயம் இழித்துரைக்கப்பட்டதை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டனர். ஆனாலும் உள்ளார்ந்த சமயப்பற்று கொண்டிருந்தனர். ஆடிக்காருவா (அமாவாசை) வரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னோர் வழிபாட்டு விரதம் கொள்ள வேண்டும். விரதம் பிடிப்பார்கள். அன்று வாழை இலையில்தான் சாப்பிடுவார்கள். சாப்பிட்டபின் வாழை இலையை வெளியே வீசமாட்டார்கள். வீசினால், பக்கத்து வீட்டுக்காரர் பார்த்தால், அரச அதிகாரிகட்கு அறிவித்தால், விரதம் கைக்கொண்டதை அரச அதிகாரிகள் தெரிந்துகொண்டால், பழிப்பு, இழிப்பு, வேலை நீக்கம் என்பன தொடரும். எனவே வாழை இலையைச் சுருட்டித் தென்னோலைக் கிடுகுக் கூரை மட்டைகளிடைச் செருகி விடுவார்கள்.

நான் யாழ்ப்பாணத்தில் கண்ட அரச ஊழியர்கள் தம் தமிழ் உணர்வை 'இறப்பில்' செருகி வைத்திருந்தனர். அரசின் கெடுபிடிகளைத் தாங்க முடியாமல் உணர்வைக் குடத்துள் விளக்காகப் பேணினர். எங்களுக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும்; வாழ்வு வந்தால் தமிழ் உணர்வை வெளிப்படுத்துவதில் எமக்கு ஈடாக இணையாக யார் இருப்பார் எனத் தொலைபேசித்துறை ஊழியர்கள் கூறாமல் கூறினர்.

தமிழ் ஆராய்ச்சிக்காகத் தொண்டு செய்யும் என் உள்ளார்ந்த உணர்வை, தூய்மையான என் உணர்வுத் தேவையைக் கேவலமான அரசியல் நடைமுறைகளுக்காக அஞ்சி மூடி வைக்கவோ, மறைக்கவோ விரும்பவில்லை. விளைவுகளை ஏற்கத் தயாரான உள்ளத்துடன் விரைந்து தொண்டாற்றினேன்.

பேராசிரியர் வித்தியானந்தன் அரசியலில் ஈடுபாடற்றவர். திரு. வி. எசு. துரைராசா நடுநிலைமை தவறாத கட்டிடக் கலைஞர். கணவர் அரசியலில் ஈடுபட்டாலும் தமது நடுநிலை கருத்துகளைக் கைவிடாதவர் திருமதி திருச்செல்வம். திரு. பேரின்பநாயகம் இளைஞர்; தமிழர் கூட்டணி உறுப்பினராக இருந்தார். கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா சிறீலங்கா சுதந்திரக்



கட்சி உறுப்பினராக இருந்தார். கலாநிதி பூலோகசிங்கம் அரசியல்வாதிகளைக் கண்டாலே அப்பால் போய்விடுபவர். நானோ அரசியல் உரிமை இல்லாத அரச ஊழியன். மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்களில் அரசியல் தொடர்புடைய இருவரும் இரு வெவ்வேறு கட்சிகளில் இருந்தனர். அவர்கள் இருவரும் நான் அறிந்தவரை அரசியல் கருத்துகளையோ, சார்பான வாதங்களையோ அமைப்புக்குழுக் கூட்டங்களில் கொண்டு வந்ததில்லை.

திரு. லக்சுமன் சயக்கொடியும், திரு. அருளம்பலமும், திரு. தியாகராசாவும், திரு. குமாரசூரியரும் 'தினபதி', 'தினகரன்' நாளிதழ்களும் கூறிய அரசியல் பின்னணி எங்கே? அரும்புவிட்டுத், துளிர்த்து, இலைவிட்டு வளர்ந்து வரும் தமிழ் உணர்வின் அரசியல் பிரதிபலிப்பாகத் தமிழ் ஈழத்தில் தமிழர் கூட்டணியும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும் அமைந்தன. எல்லாள மன்னன் காலத்தில் இருந்தது—இராசஇராச சோழன் காலத்தில் தொடர்ந்தது—யாழ்ப்பாண அரசின் காலத்தில் மிகுந்தது—தமிழர் வாழ்வும் வளமும் சிங்களவரை ஒழித்துவிடும் என்ற அச்சம் தலைமுறை தலைமுறையாகச் சிங்களவர்க்கு உண்டு. திரு. லக்சுமன் சயக்கொடி, சிங்களப் பெரும்பான்மை ஆட்சியில் பாதுகாப்புப் பிரதி அமைச்சரல்லவா? அச்சம் கொள்வது எதிர்பார்க்கப்பட்டதே! தமிழ் உணர்வுக்குத் துரோகம் இழைத்து மாற்றானுடன் இணைந்து வயிறுவளர்த்துத் தமிழரைக் காட்டிக் கொடுக்கும் இயல்பின் எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் எட்டப்பன், யாழ்ப்பாணத்தில் காக்கை வன்னியன் இருக்கவில்லையா? திரு. குமாரசூரியரும் மற்றவரும் மாநாடு தொடர்பாகத் தெரிவித்த கருத்துகள் நெல்வயலில் வளரும் புல்லினங்களை நினைவுககுக் கொணர்ந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



23. 12. 1973 'சுதந்திரன்' வார இதழில் பின்வரும் கருத்து வெளிவந்தது. "தமிழாராய்ச்சி மாநாட்டைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு சிங்களவன் கூற வில்லை. அப்படிக் கூறியிருந்தாலும்கூடப் பரவா யில்லை. ஒரு தமிழன், அதுவும் ஒரு தமிழ்த் தொகுதியின் பிரதிநிதி இப்படிக் கூறியிருக்கிறார் என்றால், உலகத் தமிழர் அரங்கில் ஈழத் தமிழனுக்கு ஏற்பட்டுள்ள இந்த வடு அழியாத கறையாக, நீங்காத வடுவாக என் றென்றும் இருந்து கொண்டிருக்கப் போகின்றது.

"அரசியல் இலாபம் பெறுவதற்காக யாழ்ப் பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுகிற தென்றால் அதற்கு வருவோருக்கு எப்படி அரசு விசா வழங்க முடியும் என்று கேட்டிருக்கிறார் திரு. லக்சுமன் சயக்கொடி!

"அரசியல் இலாபம் என்று பார்த்தால் வெளிநாட்டு அறிஞர்கள் இங்கு வருவதற்கு அனுமதிப்பதைவிட, அனுமதி வழங்க மறுப்பதுதான் தமிழர் கூட்டணிக்கு அதிக அளவு அரசியல் இலாபத்தையும், ஈழத் தமிழர் நிலையை வெளிநாட்டார் உணருகின்ற சூழ்நிலையையும் தோற்றுவிக்கும் என்பதைப் பாதுகாப்புத் துணை அமைச்சர் உணர வேண்டும்."

# 18. சோதனை மேல் சோதனை

'கல்கி' கிருட்டினமூர்த்தி முதலிய பலர் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்தனர். தமிழ்விழா ஒன்றை நடத்தினர். 'நாற்பது'களில் நடந்த அந்தத் தமிழ் விழாவின் வெற்றிக்கு உழைத்த பலருள் திரு. ச. அம்பிகைபாகன் சிறப்பிடம் பெற்றவர். தமிழ் நாட்டில் தனது பட்டப் படிப்பை முடித்த திரு. அம்பிகைபாகன் யாழ்ப்பாணம் வைத்தீசுவரக் கல்லூரி அதிபராக நீண்ட காலம் கடமை புரிந்தவர். சுன்னாகம் 'ஈழகேசரி' வார இதழை நடுவணாகக் கொண்டு வளர்ந்த தமிழ் அறிஞர் களுள் இவரும் ஒருவர்.

1972 அக்டோபரில் 'சாந்தம்' மனையகத்தில் நடை பெற்ற சிறப்புப் பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்தார். மீண்டும் 1973 ஆவணியில் பம்பலப்பிட்டி இந்துக் கனிட்ட பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத் திற்கும் வந்திருந்தார். திரு. எச். டபிள்யு. தம்பையா பதவி விலகுவதாகப் பயமுறுத்திக் கூட்டத்தைக் குழப்புவதற்கு முயன்றபோது, முன் வரிசையில் இருந்த திரு. அம்பிகைபாகன் அவர்களிடம் நான் வேண்டிக் கொள்ள, அவர் திரு. தம்பையாவைச் சமாதானம் செய்தார்.

நாங்கள் யாழ்ப்பாணம் செல்லும்பொழுதெல்லாம் திரு. அம்பிகைபாகன் எம்மைச் சந்திப்பார். யாழ்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாணச் செயலகம் தொடங்கியபின் அடிக்கடி மாநாட்டுச் செயலகம் வருவார்; ஆலோசனைகள் வழங்குவார்.

"என்ன கட்டம் வந்தாலும் தமிழாராய்ச்சிமாநாட்டை யாழ்ப்பாணத்தில் சனவரி 3ஆம் திகதி நடத்தி யாக வேண்டும் என்றும், இது நடக்காத பட்சத்தில் தமிழருக்கு மாருத வடு ஏற்பட்டுவிடும், என்றும், அரசை எதிர் பார்க்காமல் மக்களே இந்த முயற்சியை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்றும்' திரு. ச. அம்பிகை பாகன் கூறியதாகச் 'சுதந்திரன்' 16-12-1973 வார இதழில் வெளி வந்தது. திரு. அம்பிகைபாகன் போன்ற வர்கள் அரசியல் துறையைச் சிறிதும் எட்டிப்பார்க்காத யாழ்ப்பாண மண்ணின் நன்மக்களுள் சிலராக இருந்தனர்.

அதே செய்தியில் தவத்திரு தனிநாயக அடிகள் கூறிய கருத்துகளும் வெளி வந்திருந்தன. "சனவரியில் நடக்கப் போகும் மாநாட்டை வெளிநாட்டு மக்கள் ஆவலோடு வரவேற்கின்ருர்கள். இது சிறப்பாக அமையத் தமிழ் மக்கள் உதவுவார்கள், போதிய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று நம்புகிறேன்" எனத் தவத்திரு தனிநாயக அடிகள் கூறியிருந்தார.

கட்டிடக் கலைஞர் திரு. வி. எசு. துரைராசா, தமிழ் மக்கள் அளித்துள்ள பேராதரவு பெரும் உற்சாகத்தை அளித்திருக்கிறதென்றும் மாநாட்டைச் சிறப்பாக நடத்தும் அதே நேரத்தில் பல இன்னல்கள் ஏற்பட்டா லும் மாநாடு வெற்றியுடன் நடைபெறும் எனவும் கூறி யிருந்தார்.

திருமதி திருச்செல்வம் ஒருமுறை யாழ்ப்பாணம் வந்தார். நாங்கள் எல்லோரும் அவருடன் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்குச் சென்றேம். அதிபர் திருமதி. செல்லையாவைச் சந்தித்தோம். சுண்டிக்குளி மகளிர்



கல்லூரி தனியார் நிறுவனமாகச் செயற்பட்டது. மாநாட்டுக் கண்காட்சி நிகழ்ச்சிகளைச் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடத்தலாமா எனக் கேட்கவே சென்றிருந்தோம். திருமதி. திருச்செல்வம் கேட்டபின்பு மறுப்பதற்கு இடமில்லை எனத் திருமதி செல்லையா கூறினர். கண்காட்சிக்கு உரிய இடத்தைப் பெற்றதில் பெருமகிழ்ச்சி அடைந்தவர் கலாநிதி சி. பத்மநாதன் ஆவர். கண்காட்சிக் குழுத் தலைவராக அவர் கடமை புரிந்தார்.

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் வரலாறு, மொழி, இலக்கியம், கலைகள், கைத்தொழில்கள் போன்றவற்றைப் பொது மக்களுக்கும் மாணவருக்கும் பிறநாட்டவர்க்கும் அறிமுகப்படுத்தும் வண்ணமாக மேற்படி மாநாட்டின் அங்கமான பொருட்காட்சி அமையும். பொருட்காட்சியில் கீழ்க்காணும் பிரதானப் பிரிவுகள் இடம் பெறும்.

1. நூல்கள், சஞ்சிகைகள், ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள்.

2. பனம்பொருட்கள், நெசவுப்பொருட்கள், உலோகப் பொருட்கள் முதலியன.

3. மரவேலைப்பாடுகள், சித்திரங்கள், ஓவியங்கள்.

4. வெண்கலப் படிமங்கள், சிற்பங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள்.

"பொருட் காட்சியிலே பொருட்களைக்காட்சிக்கு வைக்க விரும்புவோர் கலாநிதி சி. பத்மநாதன், பொருட் காட்சி அலுவலகம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப் பெறுகின்றனர்." இவ்வாறு கலாநிதி பத்மநாதன் வெளியிட்ட அறிக்கை நாளிதழ்களில் வெளி வந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநாட்டை நடத்துவதற்கு வீரசிங்கம் மண்டபத்தை ஒழுங்கு செய்திருந்தோம். மாநாட்டுச் செயலக முழு நேர ஊழியரான திரு. பேரம்பலம், மாநாடு நடைபெறும் நாட்களுக்கு வீரசிங்கம் மண்டபம் தேவை எனக் கேட்டிருந்தார். பொறுப்பாக இருந்தவர்கள் ஒத்துக் கொண்டனா. வாடகை முன்பணம், சேதப் பாதுகாப்பு முன் பணம் என்பன கொடுக்கப்பட்டன.

யாழ்-மாநகரச் சபையின் திறந்த வெளி அரங்கு, கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதற்காகக் கேட்கப் பெற்றது. மாநாடு நடைபெறும் நாட்களில் வேறு எவருக்கும் வழங்கவில்லை. ஆனால் மாநாட்டு அமைப்புக் குழுவுக்கு வழங்குவது பற்றி இன்னமும் முடிபு செய்யவில்லை என மாநகரசபை அதிகாரிகள் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார்பாடசாலை மண்டபங்களையும் கேட்டிருந்தோம். அரசு நடாத்தும் பாடசாலை மண்டபங்களையும் தருமாறு கேட்டிருந்தோம். சிறப்பாக யாழ் மத்தியக் கல்லூரி மண்டபத்தைக் கேட்டிருந்தோம்.

மார்கழி நடுப்பகுதியில் எமக்கு வந்த செய்தி அதிர்ச்சியைத் தந்தது. "தமிழாராய்ச்சி மாநாட்டினர்க்குச் சோதனைக்கு மேல் சோதனை" என்ற 'வீரகேசரி' நாளிதழ் 18. 12. 1973 செய்தித் தலைப்பு எமது நிலையைத் தெளிவாக்கியது. யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டை நடத்த மண்டபத்துக்குப் பொறுப்பானவர்கள் மறுத்தனர். பணத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஒப்புதல் தந்து ஒப்பந்தம் செய்தவர்கள் வாக்கு மீறினர்கள்.

பாடசாலை மண்டபங்களையும் மாநாட்டு அமைப்பாளர்களுக்கு வழங்கவேண்டாம் எனக் கல்வி அமைச்சர் திரு. பதியுதீன் முகமது நேரடியாக



உத்தரவை அனுப்பியிருந்தார். அரசின் பாடசாலை மண்டபங்களை வழங்க வேண்டாம் என அவர் உத்தரவிட உரிமை பெற்றிருந்தார். தனியார் பாடசாலை மண்டபங்களைப் பற்றி உத்தரவிட அவருக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனினும், "அரசாங்கப் பாடசாலைகட்கு விதிக்கப்படும் உத்தரவுகளைத் தனியார் பாடசாலைகளும் அனுசரிக்க வேண்டியது நியதி" எனத் திரு. பதியுதீன் முகமது கூறியதாக 18. 12. 1973இல் 'தினகரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டது. "அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமல் ஓர் அரசியல் கட்சிக்கு இலாபம் தேடும் நோக்குடன் இம்மாநாடு நடைபெறுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதே இந்நடவடிக்கையின் காரணம் என்று கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்" எனத் 'தினகரன்' செய்தி கூறியது.

அரங்குகளையும், விடுதிகளையும் கொழும்பில் இருந்து கொண்டே 'ஆட்டிப் படைக்கும்' அதிகாரத்தை அரசு பெற்றிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள பலருக்கு அரசின் இந்த நடவடிக்கைகள் வெறுப்பைத் தந்தன. சிறப்பாக இந்த மண்டபங்கள், அரங்குகள், விடுதிகள் கட்டியெழுப்பக் காரணமாக இருந்தவர்கள், அரசின் மீது ஆத்திரம் கொண்டார்கள். யாழ்ப்பாண மக்களின் பணத்தைக் கொண்டல்லவா கட்டினேம், எழுப்பினேம், அரசுக்கு ஏன் இந்த அநியாய வேலை?

அரசின் இந்த நடவடிக்கை மாநாட்டு அமைப்
குழுச் செயற்பாட்டிற்கு ஆதரவாக அமை
ஏராளமான மக்கள் மாநாட்டுச் செயலகத்து
தொடங்கினர்கள். நிதி குவியத் தொடங்கி
உதவி வேண்டும்?' இதுதான் மக்களின்
இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரியாலைப் பகுதியில் திறந்த வெளி உண்டு. தென்னங்கிடுகுகள், பந்தல் தடிகள் இவற்றிற்கு யாழ்ப் பாணத்தில் குறைவே இல்லை. கோவில்களில் எல்லாம் பந்தல் தடிகள் உண்டு. வீடுகளில் எல்லாம் கிடுகுகள் உண்டு. மாபெரும் பந்தல் போடுவோம். மின்சார எந்திரங்களைக் கொண்டு வருவோம். அலங்கார வளைவு களையும் சிகரங்களையும் கொண்டு வருவோம்.

'கட்டுவோம் பந்தலை; வெட்டுவோம் தடைகளை; கொட்டுவோம் மேளத்தை; கூட்டுவோம் மாநாட்டை; காட்டுவோம் யாழ்ப்பாணத்தார் செயல்திறனை; ஓட்டு வோம் எமக்கு வரவுள்ள இழுக்கை; நாட்டுவோம் நமது மதிப்பை' என்ற குரலொலிகள் கேட்கத் தொடங்கின. எந்த மக்களை நம்பினோமோ அந்த மக்கள் கை கொடுக்க முன் வந்தனர். என்ன உறுதிப்பாடு எங்களுக்குத் துணை யானதோ அந்த உறுதிப்பாடு மக்களுக்கு உற்சாகத் தையும் ஊக்கத்தையும் கொடுத்தது.

—உணவுப் பொருட்கள் இல்லை
—மண்டப வசதி இல்லை
—பாடசாலை மண்டபங்கட்கு மறுப்பு
—வெளி நாட்டவர் வருகைத் தடை வேண்டுகோள்
—மாநாட்டுத் தடை வேண்டுகோள்
—அரச அலுவலகங்களில் புறக்கணிப்பு
—மாநகரசபை அலுவலகத்தின் புறக்கணிப்பு
—தனியார் பாடசாலைகட்கு மிரட்டல்
—குடியரசுத் தலைவர் அழைப்பை ஏற்கவில்லை.
—பிரதி அமைச்சரின் 'அப்பி பலமு' மிரட்டல்
—நிதிப்பற்றுக்குறை
—அரசியல் சாயப்பூச்சு
—பதினைந்து நாட்கள் தாம் எஞ்சியிருந்தன.

இவ்வளவு சிக்கல்கள் நிறைந்த சூழலிலும் மாநாட்டு அமைப்புக் குழு உறுதியைக் கைவிடவில்லை. உணர்ச்சி



வசப்படவில்லை. யாரையும் திட்டவில்லை. எவர் மீதும் கோபப்படவில்லை, வசை பாடவில்லை. ஆறுதலாக, அமைதியாக, அடக்கமாக, உறுதியாக எடுத்த கரு மத்தை நிறைவேற்றுவதில் கண்ணாக இருந்தோம். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்" என்ற திருவள்ளுவரின் குறள்வாக்கு எமக்குத் துணையாக இருந்தது. **23-12-1973** இல் விடுத்த செய்தியறிக்கையில், பேராசிரியர் வித்தியானந்தன், "இதுவரை ஈழம் காணாத முறையில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமையும்" எனக் கூறியிருந்தார். என்ன உறுதி அவர் உள்ளத்தில் இருந்ததோ!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 19. இலண்டனில் எழுந்த குரலோசை

"அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று கொண்டு வந்த பிரேரணையை யாழ்ப்பாணம் மாநகரசபை நிராகரித்துள்ளது. மாநாட்டுக்கு உரு. 10,000 நன்கொடையாகக் கொடுக்க வேண்டும் என்றும் மற்றும் சில வசதிகளை அளிக்கவேண்டும் என்றும் இரு பிரேரணைகள் கொண்டு வரப்பெற்றன. ஆனால் சபையின் அனுமதியின்றி இவற்றைப் பரிசீலனை செய்ய முடியாது என்று சபை நிராகரித்தது." என யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்; "ஆராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளையினர் யாழ்நகர சபையைப் புறக்கணித்து அவமதித்து விட்டார்கள். புதிய குழு சபையினரைச் சந்திக்கக்கூட முயலவில்லை. இந்நிலையில் உதவி செய்ய வேண்டிய அவசியமேயில்லை" என்று மாநகர சபை அங்கத்தவர் திரு. ஏ. விசுவநாதன் தெரிவித்தார்.—இவ்வாறு 26-12-1973 'தினகரன்' நாளிதழில் செய்தி வெளி வந்திருந்தது.

திரு. அல்பிரட் துரையப்பா சிறீலங்கா கட்சி உறுப்பினர்; திரு. ஏ. விசுவநாதன் சமசமாசக் கட்சி உறுப்பினர்; இருகட்சிகளும் கூட்டாகக் கொழும்பில் ஆட்சிக் கட்டிலில் இருந்தன. இருவரும் தம் எசமானர்



களின் ஓசையை ஒலிக்கும் பொழுது பொய்மையையும் அவிழ்த்து விட்டிருந்தனர். நாம் திரு. அல்பிரட் துரையப்பாவைச் சந்தித்து ஆதரவு கேட்டதை மறந்தனர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. பிரேம்சி, மாநாட்டு அமைப்பாளர்களைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு இருந்தார். மலையக இளைஞர் முன்னணிச் செயலாளர் திரு. இரா. சிவலிங்கமும் அவ்வாறே கண்டித்திருந்தார். இவர்கள் அரசின் ஆதரவாளர்கள்.

அரசின் ஆதரவாளர்கள் அவசரப்பட்டு அறிக்கை வெளியிடும்பொழுது, அமைச்சர் மட்டும் பார்த்துக் கொண்டிருக்கலாமா? "தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு தமிழரான தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அறிவித்துள்ளார்" என்ற 25-12-1973 நாளிட்ட அவரது அறிக்கை, 'தினபதி' நாளிதழில் வெளிவந்திருந்தது. மாநாட்டு அமைப்பாளர்களின் அழைப்பை ஏற்க முடியாமைக்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கைப் பொதுவுடமைக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. எசு. ஏ. விக்கிரமசிங்கா விடுத்த அறிக்கை நடுநிலையுடையதாக இருந்தது: "அரசியல் சக்திகளால் தூண்டப்பட்ட மாநாட்டு அமைப்பாளர்களும் அரசாங்கமும் தம் பிரச்சினைகட்குத் தீர்வு காண்பது பற்றிச் சிரத்தை எடுக்காமல் தத்தம் கொள்கையையே இறுகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன...கடைசி நிமிடத்திலாவது இலங்கையில் இம் மாநாட்டை வெற்றிகரமாக முடிக்கச் சம்பந்தப்பட்டவர்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்குமாறு பொதுவுடைமைக்கட்சி வேண்டிக்கொண்டிருக்கிறது."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'தினகரன்', 'தினபதி' ஆகிய நாளிதழ்கள் மாநாட்டுக்கு அரசியல் சாயம் பூசவும், மாநாடு நடைபெறுமல் குழப்பவும் முயற்சி செய்துகொண்டிருந்தன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அரசின் குரலோசை அல்லவா? மாநாட்டைப் பற்றி எவ்விதச் செய்தியும் வெளியிடவில்லை. அரசின் குரலோசை ஆற்ற முடியாத பணியை, நாளிதழ்களின் செய்தி ஓசை செய்ய முடியாததை, இலண்டனில் இருந்து தமிழோசை பரப்பும் 'பி. பி. சி.' நிறுவனம் செய்து உதவியது.

இலண்டனில் உள்ள 'பிக்பென்' மணிக்கூண்டின் மணியோசை கேட்டது. 'இது இலண்டன்' என்ற குரல் கேட்டது. பி. பி. சி யின் உலகச்சேவையின் ஆங்கிலச் செய்தியும், செய்திச் சுருளும் தொடர்ந்தன. யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி இலங்கை சென்ற அறிஞர் விமானநிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார் என்ற செய்தியை, பி. பி. சி. வானொலி உலகம் முழுவதும் அறிவித்தது. இலங்கை அரசு மாநாட்டுக்கு வரும் அறிஞர்களை உட்புக விட மாட்டாது எனவும் அறிவித்தது. அது மட்டுமா? எந்த விமானத்தில் கொழும்பு வந்தாரோ அதே விமானத்தில் இலண்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அந்த அறிஞரின் பேட்டி செய்திச் சுருளில் இடம் பெற்றது. தமிழர்கட்கு எதிரான அரசு இலங்கையில் ஆட்சி புரிகின்றது என்ற கருத்தை இலண்டனிலிருந்து வெளிவந்த செய்தியும், அறிஞரின் பேட்டியும் உலகுக்கு அறிவித்தன.

இலண்டனுக்கு ஒருவர் திரும்பினர். வேறோர் அறிஞர் கொழும்பு வந்தார்; உட்புகல் அனுமதி இல்லை எனவே அடுத்த விமானத்தில் சென்னை சென்றார்.



மாநாட்டுக்கு வந்த அறிஞர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். "தி. மு. க. அரசியல் தலைவர்களின் பெயர்கள் உங்கள் பட்டியலில் உண்டா ? மாநாட்டுக்கு வரவுள்ள அறிஞர்களின் பட்டியலைத் தாருங்கள். படித்துப் பார்ப்போம்" என அரசு கேட்டிருந்தது. நாமும் அனுப்பியிருந்தோம். அந்தப்பட்டியலின் படி ஒன்று கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கு அனுப்பப் பெற்றது. குடிவரவு அதிகாரிகள் அந்தப் பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டு வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளை மோப்பம் பிடித்தார்கள். திறமையுள்ள அதிகாரிகள் அவர்கள். இரண்டு அறிஞர்கள் பயணிகளுள் இருப்பதைக் கண்டு பிடித்தார்கள்; அரசின் கட்டளையை நிறைவேற்றினர்கள். அறிஞர்கட்கு உட்புகல் அனுமதியை மறுத்தார்கள்.

28-12-1973 காலைதான் அரசின் உட்புகல் தடை முடிபு மாநாட்டு அமைப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்பார்க்கப் பெற்ற இந்த முடிபை அமைதியுடன் மாநாட்டு அமைப்புக்குழு ஏற்றுக்கொண்டது. 'டெய்லி நியூசு' ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, "மாநாட்டை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மாற்றுவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. இவ்வளவு அமைப்பு நடவடிக்கைகளும் முடிவடைந்த நிலையில் நாங்கள் பின்வாங்க மாட்டோம். மாநாட்டை நடத்தி முடிப்போம். எனினும், இந்தச் சூழ்நிலையில் அரசுக்கும் பிரதம மந்திரிக்கும் விண்ணப்பிக்க உள்ளோம். உட்புகல் தடையை நீக்குமாறும் வெளிநாட்டு அறிஞர்களை உள்புகவிடுமாறும் விண்ணப்பிப்போம். மாநாட்டுக்கு வெளிநாட்டு அறிஞர்கள் சமூகம் கொடுக்க முடியவில்லையெனில் அவர்களது ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாநாட்டில் வாசிக்கப்படும்" எனக் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"தமிழருக்கெதிரான படுமோசமான நடவடிக்கை—இந்நாட்டுச் சிங்களவர்களுடையதும் தமிழர்களுடையதுமான ஆதிபத்திய உரிமையையே இலங்கை அரசாங்கம் பிரயோகிக்கின்றது என்பதைப் பாதுகாப்பு வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் திரு. இலக்சுமன் சயக்கொடி மறந்துவிடக்கூடாது. அரசாங்கம் எவ்வளவு தடைகள் போட்டாலும் மாநாடு வெற்றிகரமாக நடக்கும் என்பது திண்ணம். எனினும் இலங்கையில் தமிழர்கள் எவ்வளவு தூரம் நசுக்கப்படுகின்றார்கள் என்பதை இச்செயல்கள் மூலம் உலக நாடுகளுக்கு உணர்த்தியமைக்காக நாம் அரசாங்கத்துக்கு ஒரு முறையில் நன்றி கூடச் செலுத்த வேண்டியிருக்கிறது" என்று தமிழர் கூட்டணிப் பிரமுகரும் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சருமான திரு. மு. திருச்செல்வம் கூறிய கருத்துகள் 30-12-1973 'வீரகேசரி' நாளிதழில் வெளிவந்தன.

நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, திரு. வி. எசு. துரைராசா ஆகியோர் கொழும்பில் இருந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா பிரதமரைச் சந்தித்தார் எனவும், மாநாட்டில் அரசியல் கலக்கமாட்டாது என்ற உறுதிமொழியை அளித்தார் எனவும் பின்னர் என்னிடம் கூறப்பட்டது. அவருடன் அமைச்சரான திரு. இலங்கரத்தினவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப் பெற்றது.

'மாநாட்டுக்கு அறிஞர்கள் வெளிநாட்டிலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையம் வரை வந்தார்கள். அரசு அவர்களைத் திருப்பி அனுப்பியது. மேலும் வரவுள்ள அறிஞர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள்!'



என்ற செய்தி இலண்டனிலிருந்து வந்தது. ஆனால் கொழும்பிலோ, யாழ்ப்பாணத்திலோ இருந்து வெளிவரும் நாளிதழ்களில் வெளி வரவில்லை. திரு. இலக்சுமன் சயக்கொடியின் அறிக்கை மட்டும் நாளிதழ்கள் அனைத்திலும் வெளிவந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்தச்செய்தி வெறுப்புணர்வை வளர்த்தது. மண்டபங்கட்குத் தடை; பாடசாலைகட்குத் தடை; 'எங்களிடம் வந்தவர்களை, யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்களை, வழியில் வைத்துத் திருப்பி அனுப்பி விட்டனரே! வர விடவில்லையே' என யாழ்ப்பாண இளைஞர்கள் வெதும்பினார்கள்; வேக்காடு கொண்டார்கள்; மாநாட்டுச் செயலகத்தில் வந்து குழுமினார்கள். 'மாநாட்டை நடாத்துங்கள். என்ன உதவி வேண்டுமோ கேளுங்கள்' என்ற குரலொலிகள் யாழ்ப்பாணம் முழுவதும் கேட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 20. தொண்டர்களில் நம்பிக்கை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்; மாாகழி மாதம் மூன்ருவது மாதத்தில் ஒருநாள் காலை 9 மணி; இளைஞர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பெண்களும் ஆண்களுமாக ஓராயிரம் இளைஞர்கள் அச்சிறிய மண்டபத்தினுள் கூடியிருந்தனர். உள்ளத்தால் இளைஞரும் உருவத்தால் முதியவருமான ஒருவரும் அங்கிருந்தார். அவர் திரு. இ. பி. இராசையா; 'சென் சான்சு' முதலுதவிப் படைத் தலைவர்.

'தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தொண்டர்கள் தேவை; இளைஞர்களாகவும், ஏதாவது ஒரு துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாகவும் உள்ளவர்கள் தொண்டர்களாகப் பணிபுரியலாம்; ஊதியம் எதுவும் இல்லை; முழுநேர வேலை; விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பியுங்கள்' என 'ஈழநாடு', 'வீரகேசரி', நாளிதழ்களில் விளம்பரப் படுத்தியிருந்தேன்.

சில ஆயிரம் விண்ணப்பங்களே என்னிடம் வந்து சேர்ந்தன. ஒவ்வொரு விண்ணப்பமாகப் படித்தேன். பலவற்றின் தகைமைகள் ஏற்புடையனவாக இல்லை. சிலவற்றைத் தெரிவு செய்தேன். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்துக்கு நேர்முகத் தேர்வுக்கு வருமாறு கடிதம் எழுதினேன்.

'சோ...!சோ...!' என்ற இரைச்சலுடன் இருந்த இளைஞர்கள், நான் மேடையில் ஏறியதும் அமைதி



யானுர்கள். மாநாட்டு நோக்கங்கள், வெளிநாட்டார் வருகை, அரசின் போக்கு, தமிழ் அரசியல்வாதிகளின் போக்கு யாவற்றையும் விளக்கினேன். இந்தச் சூழ்நிலையில் எம்முடன் பணிபுரிவதில் உள்ள சிக்கல், துன்பம், யாவற்றையும் கூறினேன். கட்டுப்பாட்டுடன் தொண்டு புரிய வேண்டிய அவசியத்தையும், கட்டுப் பாட்டை மீறினுல் மாநாட்டை நடத்துவதில் உள்ள துன்பத்தையும் கூறினேன்.

காங்கேயன்துறையைச் சேர்ந்தவரும், தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகப் பணிபுரிந்தவரு மான திரு. புட்பராசா என்ற இளைஞர் கூட்டத்தில் இருப்பதாகக் கூறினுர்கள். பெயர் குறித்து அழைத்தேன்; வந்தார். அரசியல் கலப்பற்ற மாநாட்டில் அரசியல் இயக்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் ஒருவர் தொண்டராகக் கடமை புரிவதில் உள்ள சிக்கலைக் கூறினேன். புன்னகையுடனும் பெருந்தன்மையுடனும் கூட்டத்தை விட்டு வெளி யேறினுர். ஏனையவர்களுள் வயதில் முதியவரான திரு. இ. பி. இராசையா அவர்கட்குச் சிறப்புப் பணி உண்டெனக் கூறினேன். ஏனைய பெண்களையும் ஆண்களையும் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தினேன். ஏறத்தாழ 500 தொண்டர்களைத் தெரிவு செய்தேன். 1973 டிசம்பர் 28-ஆம் நாள் மாநாட்டுச் செயலகத்துக்கு வருமாறு தெரிவு செய்யப் பெற்ற தொண்டர்கட்கு அறிவித்தேன்.

உணவு வழங்கல், விருந்தோம்பல், உறைவிட வசதி செய்தல், வரவேற்பில் பங்கு கொள்ளல், கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளல், அலங்கார ஊர்தி ஊர்வலத்தில் பங்கு கொள்ளல், கண்காட்சியில் பங்கு கொள்ளல், வாகன வசதி செய்தல் என்பன தொடர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாக அடுக்கடுக்காக விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிட்டோம். பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரினோம்.

தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் என்பதைச் சுவரொட்டிகள் மூலம் யாழ்ப்பாணம் முழுவதும் ஒட்ட ஒழுங்குகள் செய்தேன். வீதிக்குக் குறுக்கே விளம்பரச் சீலைகளை எழுதிக் கட்டினோம்.

"கலைநிகழ்ச்சிகள் தினமும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. ஒரே தினத்தில் வெவ்வேறு இடங்களில் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். அலங்கார ஊர்திகள் பவனி செல்ல வேண்டிய பாதை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. தங்கள் வீதியிலும பவனி செல்ல ஒழுங்கு செய்யும்படி பலர் கடிதம் எழுதியுள்ளார்கள். தங்கள் வீதிகளைச் சோடனை செய்து அலங்கரிக்கவும் பலர் முன் வந்துள்ளனர். வெளிநாட்டுப் பிரதிநிதிகட்கு உணவு உறைவிடமளிக்கவும் பலர் முன் வந்துள்ளனர். தங்கள் வாகனங்களைத் தந்துதவவும் பலர் முன்வந்துள்ளனர். அலங்கார ஊர்திகள் பவனியில் கலந்து கொள்ள விரும்புவதாக வர்த்தகத்தாபனங்களிடம் இருந்து கடிதங்கள் வந்துள்ளன. மட்டக்களப்பு, திருமலை, மன்னார், மலைநாடு, வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் பல பகுதிகளில் இருந்தும் மாநாட்டிற்கு ஆதரவு தெரிவித்துக் கடிதங்கள் வந்துள்ளன." இவ்வாறு திரு. ச. அம்பிகைபாகன், 'ஈழநாடு' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்,

பேராசிரியர் வித்தியானந்தன் ஒருநாள் யாழ்ப் பாணத்தில், மறுநாள் கொழும்பில், மறுநாள் கண்டியில் என ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இடத்தில் நின்றார். இரவெல்லாம் புகைவண்டிப் பயணம் அல்லது பேருந்துப் பயணம். பகலெல்லாம் பணி. அதிகாலையில்



கண்டியிலிருந்து புறப்படுவார்; கொழும்புக்கு வருவார்; பகல் முழுவதும் பணிபுரிவார்; மாலை அஞ்சல் புகை வண்டியில் யாழ்ப்பாணம் ஏறுவார். மறுநாள் அதிகாலை யாழ்ப்பாணத்தில் நிற்பார். அன்று மாலை மீண்டும் புகைவண்டியில் புறப்பாடு; அடுத்த நாள் கொழும்பில் பணி. இரவு பத்து மணிக்குக் காலி வீதியில் பேருந்து நிலையத்தில் அவரைக் காணலாம். கண்டிக்குப் போகும் பேருந்துக்காகப் புறக் கோட்டைப் பேருந்து நிலையம் செல்வார். கண்டிக்குப் போய்ச் சேரும் பொழுது நள்ளிரவைத் தாண்டி ஒரு மணியோ, இரண்டு மணியோ?

அவருடைய வயதில், அவருடைய உடல்நிலைக்கு, பம்பரமாகச் சுழன்று பணிபுரியும் ஆற்றல் ஆச்சரியப் படக்கூடிய ஒன்று. மிகத் தெளிவான உள்ளம்; அலசி ஆராயும் சிந்தனை; முன்னோக்கும் பார்வை; ஊழியே வரினும் அசையாத உறுதி; எண்ணித் துணிதல்; துணிந்தபின் எண்ணாமை; தாழாத முயற்சி; திண்ணிய நெஞ்சம்; இவைதாம் அந்நாட்களில் பேராசிரியர் வித்தியானந்தனிடம் நான் கண்டவை.

'வெளிநாட்டு அறிஞர்கள் வராவிட்டால் மாநாடு பிசுபிசுத்து விடும்; நடைபெறாது' என்றெல்லாம் மாற்றார் கருதினர். மண் வாரி வீசினர். பேராசிரியர் வித்தியானந்தனிடம் கைப்பிடி இருந்தது. அனைத்துலக ஆராய்ச்சி மாநாட்டில், பன்னாட்டு அறிஞர்களின் கருத்துகள் வழங்கப் பெற வேண்டும், ஆராயப் பெற வேண்டும். அப்படியில்லையெனில் அஃது ஓர் உள்ளூர் மாநாடாக, வெறும் தமிழ்விழாவாகவே அமைந்து விடும். அபபடிச் செய்து விடலாம் எனக் கனவு கண்டவர்களின் கனவுகளைக் கனவாக்கியேவிடும் கைப்பிடி பேராசிரியரிடம் இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தம்மிடமே வைத்திருந்தார். பிற நாட்டு அறிஞர்கள் அனுப்பிய கருத்துரைகளை வைத்திருந்தார். "பிறநாட்டு அறிஞர்கள் நாட்டுக்குள் உட்புக அரசு தடை விதித்தால், பரவாயில்லை. அஞ்சேல்" எனப் பேராசிரியர் கூறினார். பிறநாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த துறைகளைக் கற்றுத் துறைபோகியவர்கள் நம்மிடையே உள்ளார்கள். பிறநாட்டு அறிஞர்களின் கட்டுரைகளை நம்மவர்கள் படிப்பார்கள். ஏனைய நம்மவர்கள் அதனை ஆராய்வார்கள். கருத்தரங்குகள் பல நடைபெறும்.

அரியாலையில் பந்தல் போடுவோம். உள்ளூர் அறிஞர்கள் வெளிநாட்டிலிருந்து வந்த ஆய்வுக் கட்டுரைகளைப் படிப்பார்கள். தவத்திரு தனிநாயக அடிகள் மாநாட்டைத் தொடக்கி வைப்பார்கள். திட்டமிட்டபடி மாநாட்டைத் தை 3 முதல் 9 வரை நடத்த வேண்டும். அடாது தடை வந்தாலும் விடாது மாநாட்டை நடத்துவோம். அரசையும் அரசியல்வாதிகளையும் நம்ப மாட்டோம். துணைக்கு வந்தால் ஏற்போம். தடைக்கு வந்தால் தவிர்ப்போம். இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன் கருதினார்.

முந்தைய மூன்று மாநாடுகளில் கலந்து கொண்ட ஈழத் தமிழ்க் கலாநிதிகளுள் சிலர் மாநாட்டை புறக்கணித்தார்கள். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கண்டியிலும் இருந்த அவர்கள் மாநாட்டுக்கு வர முயலவில்லை; முன்னோடியாக ஆராய்ச்சிக் கட்டுரைகளை அனுப்பவில்லை. பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்குச் செய்தி கூறி அனுப்பியிருந்தார். சிலர் அவரின் மாணவர் கூட! 'மாநாட்டில் கலந்து கொண்டால் அரசின் கோபத்துக்கு உள்ளாக நேரிடும்;



அரசு வழங்கவுள்ள பதவிகள் கைகூடாமல் போய் விடும்' என்ற அச்சம் மேலிடத் தன்னலம் குறுக்கிடத் தமிழர் நலம் மறந்தார்கள்.

எல்லாருக்கும் மாநாட்டில் இடங் கொடுக்கப் பெற வேண்டும் என்ற பெருந்தன்மை பேராசிரியர் வித்தியானந்தனிடம் இருந்தது. "இலங்கை அறிஞர்களிடம் இருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம்மாதம் 25-ஆம் திகதி வரை (25-12-1973) ஏற்கப் பெறும். ஆனால் அவை ஏற்கெனவே குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கிணங்க அனுப்பப்பெறல் வேண்டும். பார்வையாளராகப் பதிவு செய்ய விரும்புவோர் இலங்கைக் கிளையின் செயலகத்தில் கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தில் நிரப்பிக் கொடுக்கலாம்" என்ற செய்தியறிக்கையைக் கலாநிதி கோபால பிள்ளை மகாதேவா 'தினகரன்' நாளிதழில் வெளியிட்டிருந்தார்.

கலாநிதி க. கைலாசபதி தலைசிறந்த தமிழாராய்ச்சியாளர்களுள் ஒருவர். அனைத்துலகத் தமிழாராய்ச்சி அரங்கில் தனியிடம் பெற்றவர். மாநாட்டில் கலந்து கொள்வார் என நான் எதிர்பார்த்தேன்; ஏமாந்தேன். கலாநிதி கா. இந்திரபாலா வரலாற்றுத்துறையில் தலைசிறந்த அறிஞர். தமிழாராய்ச்சி மாநாட்டுக் கல்விக்குழுவில் உறுப்பினராக இருந்த அவர் மாநாட்டில் கலந்து கொள்வார் என எதிர்பார்த்தேன். அவரும் யாழ்ப்பாண மாநாட்டைப் புறக்கணித்தார்.

பேராசிரியர் வித்தியானந்தன் சளைக்கவில்லை; களைக்கவில்லை; உழைக்க மறக்கவில்லை; உறுதி குலையவில்லை. எங்கள் அனைவருக்கும் உற்சாகம் தந்தார். எங்களிடம் நம்பிக்கை வைத்தார். எங்கள் தீர்மானங்களில் தலையிட மறுத்தார். ஈழம் இதுவரை காணாத மாநாடாக நடைபெறும் என நம்பினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21. மருத்துவர் சபாரத்தினம்

நோயாளிகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். நீண்ட வரிசை. ஒவ்வொருவராக வந்தனர். மருத்துவர் அவர்களைப் பார்த்தார். விசாரித்து மருந்து எழுதிக் கொடுத்தார். ஓய்வு ஒழிச்சலற்ற வேலை. நான் எதிரில் அமர்ந்திருந்தேன். "சச்சி, இதோ வந்திட்டேன்" என என்னிடம் கூறினர். இரவு எட்டு மணி. அப்பொழுது அங்குப் பல் மருத்துவர் சோமசுந்தர பாரதியும் வந்து சேர்ந்தார். நோயாளிகளை அனுப்பிவிட்டு மருத்துவர் சபாரத்தினம் எழுந்தார்.

மூவருமாகப் புறப்பட்டோம். தனியார் மருத்துவ மனை வைத்திருக்கும் மருத்துவர்கள் வீடுகட்குச் சென்ருேம். நிதி கேட்டோம். பல் மருத்துவர் சோம சுந்தர பாரதி புகழ் பெற்ற தமிழ் அறிஞர் சோம சுந்தரப் புலவரின் பேரனுர்; பண்டிதர் இளமுருகனரின் மகனுர். ஒவ்வொரு மருத்துவரிடமும் ஆயிரம் உருபாவுக்குக் குறையாமல் நிதி பெற முனைந்தோம். பருத்தித்துறை, சாவகச்சேரி, அச்சுவேலி, கயங்கேயன் துறை, மானிப்பாய், யாழ்நகர் இப்படி ஒவ்வோர் இடமாகச் சென்ருேம். மருத்துவர் சபாரத்தினம் அவர்களைக் கண்டதும் கேட்ட நிதியைத் தந்தனர் மருத்துவர்கள்.

இப்படித்தான் மருத்துவர் சபாரத்தினம் மாநாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். காலையும்



மாலையும் மாநாட்டுச் செயலகம் வருவார். உணவுப் பொருட்கள் பெறுவதில் தொல்லை இருந்தது; அரிசித் தட்டுப்பாடு இருந்தது. அரச அலுவலகங்கள் உதவ மறுத்தன; அஞ்சேல் என அபய கரம் காட்டினர். அவரும் அவரது நண்பர் திரு. தெய்வேந்திரா துரை சாமியும் கிளிநொச்சிக்குச் சென்ருர்கள். அரிசியை மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்தார்கள். பருப்பும் மல்லியும் பிற சரக்குகளும் கொண்டு வந்தார்கள். 'பாம் கோட்' விடுதிக்குச் சென்ருேம். உணவு வசதி கட்கு ஒழுங்கு செய்தோம். மாநாடு நடைபெறும் பத்து நாட்களுக்கும் மூன்று வேளை சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்தோம். சைவச் சாப்பாடு சமைக்கக் கொழும் பிலிருந்து திருநெல்வேலிப் பிள்ளைமாரைச் சமையல் பணிக்கு அழைத்தோம்.

மருத்துவர் பாரதியும் திரு. துரைசாமியும் மருத்துவர் சபாரத்தினத்துக்கு உதவியாக இருந்தனர். மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வருமுன்பு, எனக்கு உறுதுணையாக இருந்து யாழ்ப் பாணத்தாரின் நெளிவு சுளிவுகளைக் காட்டித் தந்தவர் மருத்துவர் சபாரத்தினம். யார் உதவுவார்கள்; யார் உதவமாட்டார்கள்; யாரிடம் என்ன உதவியைக் கேட்கலாம்; எங்கிருந்து என்ன பொருளைப் பெறலாம்; இவற்றையெல்லாம் கூறி வழிகாட்டினர். பல பணி களைச் செய்து தந்தார்.

யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த வேண்டும் என்ற விடாப்பிடித் தீர்மானத்தின் உறுதி எங்களுட் பலரை உந்தியது. மருத்துவர் சபாரத்தினம் தீர்மானத் தில் பங்கு கொள்ளவில்லை. ஆனலும் எங்களை உற்சாகப் படுத்தும் அளவு ஊக்கம், உறுதி, நம்பிக்கை அவரிடம் இருந்தன. தளராது சலியாது உழைத்தார்.

2381—10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணவு உறைவிடம் தொடர்பாகப் பலர் உதவினார்கள். குழுவில் உறுப்புரிமை வகித்த பலருள், திருமதி மனோன்மணி அருணாசலம் உறைவிடம் தொடர்பான பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் அவருடைய மகன், செல்வன் இந்து அருணாசலமும் மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டு அறிஞர்கட்கு உறைவிட வசதிகளை ஒழுங்கு செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த விடுதிகளுள் ஒன்றான 'சுபாசு' விடுதியினர் அரசின் கைகாட்டலின் பின்னர்தான் ஒத்துழைக்க முன் வந்தனர். 'பாம் கோட்' விடுதி உரிமையாளர் தங்கு :தடையற்ற ஆதரவைத் தந்தார். அறைகளைத் தந்தார். உணவு விருந்துகட்கு ஒழுங்கு செய்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வந்தர்கள் பலர் தமது இல்லங்களில் அறிஞர்கள் தங்க வசதி செய்தனர். இவற்றையெல்லாம் இணைத்துச் செயலாற்றும் பொறுப்பு திருமதி அருணாசலம் அவர்களுடையதாயிற்று. கலாநிதி உலூதர் செயசிங்கம் அவர்களும் அவ்வப்போது ஆலோசனை கூறி உதவினார்கள். உணவு தயாரிக்கும் பொறுப்பைப் 'பாம் கோட்' விடுதியினர் மேற்கொண்டனர். எனினும் யாழ்ப்பாண விருந்தோம்பல் பண்பை உலகுக்குக் காட்டும் பெரும் வாய்ப்பில் ஈடுபட யாழ்ப்பாண இல்லத்தரசிகள் குழு பணிபுரிந்தது. இப் பெண்கள் நாள் தோறும் 'பாம் கோட்' விடுதிக்கு வந்து, மதிய உணவும் மாலைத் தேனீரும், இரவு உணவும் யாழ்ப்பாணப் பண்பாட்டுக்கமையப் பரிமாறப் பெறவும். யாழ்ப்பாண மண்ணுக்குரிய உணவு வகைகள் தயாரிக்கப் பெறவும் திட்டம் போட்டனர். பத்து நாட்களுக்குரிய முன்னோடித் திட்டம் அமைத்துச் செயற்பட்டனர்.



மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டவர்கள் விமான நிலையத்தில் வந்தபின் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்ற செய்தி இப்பெண்கள் குழுவைச் திசை திருப்பவில்லை. வெளிநாட்டவர்கள் வராவிட்டாலும், வெளியூர்களிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அறிஞர்கட்கு விருந்தோம்ப விழைந்தனர்.

28-12-1973 ஆம் நாள் காலை தொண்டர்கள் வந்து மாநாட்டுச் செயலகத்தில் குவிந்திருந்தனர். ஒவ்வொருவராக அழைத்துப் பதிவு செய்து, பத்துப் பத்துப் பேர் கொண்ட குழுக்களாக ஐம்பது குழுக்களைத் தெரிவு செய்தேன். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவரைத் தெரிவு செய்தேன்.

வலது கையில் உள்ள இரண்டு விரல்களிலும் கட்டுப் போட்டுக் கொண்டு ஓர் இளைஞர் வந்தார். தட்டெழுத்துப் பயிற்சி உடையவர் எனக் கூறியதால் அவரைத் தெரிவு செய்தோம். "அண்ணை, எனக்குக் கையிலைக் காயம். தட்டெழுத்துச் செய்யேலாது" என்றார். "பெரிய காயமோ?" எனக் கேட்டேன்; சிரித்தார். "உண்மையில காயம் இல்லை; அண்டைக்குத் தட்டெழுத்துத் தெரியும் எண்பது பொய். நீங்கள் தொண்டராகச் சேர்க்காமல் விட்டாலும் எண்டுதான் சொன்னனான்" என்றார்.

வீரசிங்கம் மண்டபத்தில் பணியாற்றவுள்ள தொண்டர்குழுவுக்கு அவரைத் தலைவராக்கினேன். திரு. இந்திரலிங்கம் என்ற பெயருடைய அந்த இளைஞர் சிறந்த தொண்டர்களுள் ஒருவராக விளங்கினார்.

ஒவ்வொரு தொண்டருக்கும் தொண்டர்பட்டி கொடுத்தேன். வீரசிங்கம் மண்டபம், றிம்மர் மண்டபம் திறந்த வெளி அரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, மாநாட்டுச் செயலகம், போக்குவரத்து ஒழுங்குகள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரவேற்பு ஒழுங்குகள், இப்படியாகப் பணிகளைப் பிரித்துத் தொண்டர்களின் கடமைப் பட்டியல் தயாரித்தோம். இவ்வளவு திட்டங்களையும் ஒழுங்குகளையும் நாம் யாழ்ப்பாணத்தில் செய்து கொண்டிருந்தோம். மாநாட்டுக்கு வந்த அறிஞர்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தது அரசு. அரசின் போக்கு எம்மைத் திசை திருப்பவில்லை.

விதிக்குக் குறுக்காகக் கட்டும் விளம்பரச் சீலைகளையும் வரவேற்புக் கோலங்களையும் கட்டவேண்டுமே என நான் எண்ணிச் கொண்டிருக்கத் திரு. இந்திரலிங்கம் வந்தார். யாழ்ப்பாணம் புகைவண்டி நிலையம், பலாலி விமானநிலையம், அரியாலை முகப்பு, ஆனைப்பந்திச்சந்தி ஆகிய இடங்களில் கட்டவேண்டும் எனக் கூறினேன். "இவரிடம் கொடுங்கள்; கட்டிவிட்டு வருவார்" என மெல்லிய இளைஞர் ஒருவரைக் காட்டினார். "ஏணி வேண்டும், கயிறு வேண்டும், போகக் கார் வேண்டும்" என்றேன். "அதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். விளம்பரச்சீலைகளைத் தாருங்கள்" என்றார் அந்தத் தமபி; நான் கொடுத்தேன்.

திரு. இந்திரலிங்கமும் அந்தத் தொண்டரும் போன பின்பு வேறோர் இளைஞர் வந்தார். "உவரைத் தெரியுமோ?" என்றார். "தொண்டருள் ஒருவர்" என்றேன். "ஆரெண்டு தெரியுமோ?" எனக் கேட்டார். "பெயர் தெரியாது" என்றேன். "உவர் தான் சிவகுமாரன், உவருக்கெதிராய் வழக்கிருக்கு" என்றார். ஏதோ வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்டதால் வழக்கு வைக்கப் பட்டிருப்பதாகக் கூறினார். நான் அக்கறைப் படவில்லை. தெரிவு செய்யப் பெற்ற ஐநூற்றுக்கும் அதிகமான தொண்டர்களின் 'பூர்வாச்சிரம்' ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பவில்லை. தொண்டாற்ற வந்துள்ளார்கள்; கட்டுப்பாட்டை வலியுறுத்தி இருந்தேன்;



கண்காணிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. எனவே திரு. சிவகுமாரன் தொண்டர்களுள் ஒருவராக இருப்பதைத் தடுக்கவில்லை.

இரண்டு மணி நேரத்தின் பின் திரு. சிவகுமாரன் வந்தார். "எல்லாம் கட்டியாயிற்று" என்றார். "நல்ல முறையில் கட்டினீர்களா?" எனக் கேட்டேன். "அங்கடை மதிப்பு முக்கியம், வாறவை பார்த்தால் மதிக்கவேணும்; நல்ல வடிவாய்க் கட்டினனுங்கள்" என்றார். மிகக்குறுகிய நேரத்தில், ஆரவாரமின்றிப் பணிகளைச் செய்வதில் திரு. சிவகுமாரன் தொடர்ந்து உதவினார். அவரும் திரு. இந்திரலிங்கமும் நாள்தொறும் இரவு பத்துமணி வரை மாநாட்டுச் செயலகத்தில் நின்று பணிபுரியத் தொடங்கினர்.

மாநாட்டுச் செயலகத்தில் தமிழ்த் தட்டச்சுப் பொறி முன்னே நாள் முழுவதும் இருந்து பணிபுரிந்த தொண்டர்களுள் திரு. க. சீவகதாசு சிறப்பிடம் பெறுகின்றார். மாநாடு நடக்குமா நடக்காதா என நாளிதழ்கள் ஆருடம் கூறிக் கொண்டிருந்தன. அரசு தடைக்கு மேல் தடை விதித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போய்க்கொண்டிருந்த பேராசிரியர் வித்தியானந்தன் மாநாட்டில் படிக்கப் பெற விருந்த கட்டுரைகளைத் தட்டச்சில் படி எடுக்க விரும்பினார். திரு. க. சீவகதாசு கைகொடுத்தார். காலை ஏழு மணிக்கே வந்து விடுவார். தமிழ், ஆங்கிலத் தட்டெழுத்தில் வல்லவராக இருந்தார். உளமுவந்து பணிபுரிந்தார்; இரவு எட்டு மணி வரை இடையறுது பணிபுரிந்தார்.

"எங்கை உங்கடை கொப்பி?"—வெள்ளிக்கம்பிகள் போல் தலைமுடி கொண்ட உயர்ந்த முதியவர் என்னிடம் மாநாட்டுச் செயலகத்தில் கேட்டார். எனக்கு விளங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வில்லை. மாநாட்டுக்கு நிதி சேகரிக்கும் கணக்குப் புத்தகம் அல்லது படிவம் தருமாறு அவர் கேட்கிறூர் எனப் பக்கத்தில் அவருடன் வந்தவர் விளக்கினுர். "நிதி இருந்தால் மாநாட்டுச் செயலகத்தில் கொண்டு வந்து கொடுங்கள். படிவமோ, புத்தகமோ இல்லை" என்றேன் "அப்ப நீங்கள் காசு சேர்க்கமாட்டியள். கடைத் தெருவிலை உள்ளவைட்டைப் போய்த்தான் வாங்க வேணும்" என்ருர். "நீங்கள் யார் எனத் தெரியவில்லை" என்றேன்.

"இவர் சிங்கப்பூர்க் கம்பெனிச் சுப்பிரமணியம். நான் நடேசலிங்கம்" என முதியவருக்குப் பக்கத்தில் இருந்தவர் கூறினுர். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தகர்கள் இருவரும் என வேருெருவர் என்னிடம் தெரிவித்தார். அவர்களின் அடையாளங்களைத் தெரிந்து கொண்டபின் நிதி சேகரிக்க உதவியாகப் பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்றை அவரிடம் கொடுத்தேன். "சரி வாறம்" என்று சொல்லியபின் இருவரும் கிளம்பினுர்கள். ஒரு நாள் காலை பத்து மணியளவில் பற்றுச்சீட்டுப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு போனவர்கள் அன்றிரவு எட்டு மணியளவில் திரும்பி வந்தார்கள்.

"தம்பி இங்கை வாடா; இந்தக் காசை எண்ணு; கணக்கைப் பார்" என்ருர் முதியவர். பற்றுச்சீட்டுப் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டேன். காசை எண்ணிப் பார்த்தேன். ஐம்பதினுயிரம் உருபாவுக்கு மேல் இருந்தது. பற்றுச் சீட்டுப் புத்தகத்தை எடுத்துத் தொகைகளைக் கூட்டினேன். கணக்குச் சரியாக இருந்தது. எனது கண்கள் மகிழ்ச்சியால் கலங்கின. நாங்கள் கேட்கவில்லை. தாங்களாகவே வந்தார்கள்;



நிதி சேகரித்தார்கள். சில ஆயிரங்கள் கூடத் தட்டுப் படுகின்ற மாநாட்டு நிதிக்குப் பல ஆயிரங்களைத் தந்து சென்ருர்கள். "நாளைக்கும் வருவீர்களோ?" எனக் கேட்டேன். "காலமை வாறம்" எனக் கூறிப் போனுர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 22. மகாதேவாவின் வெற்றிப் புன்னகை

வழுக்கைத் தலை; வயதுமுதிர்ந்த தோற்றம்; நலுங்கிய உடை; துருவி ஆராயும் கண்கள்; கூர்மை யான காதுகள்; கிராமத்தானைப் போன்ற தோற்றம்; மாநாட்டுச் செயலகமுன் திண்ணைச் சுவரில் ஒவ்வொரு நாளும் வந்து அமர்ந்திருப்பார். காலை வருவார். இரவுதான் வீட்டுக்குப் போவார். "நெடுக இருக்கிறியள். நீங்கள் எவடம்? உள்ளே வாருங்கோ" என்றேன். "பரவாயில்லை. நான் புன்னுலைக்கட்டுவன். சும்மா வந்தனான்" என்றார். நான் விடவில்லை. விவரங்களை மேலும் கேட்டேன். அவர் ஏதோ மறைக்கிறார். மழுப்புகிறார் என்பது தெரிந்தது. "வேலை இல்லை என்றால் மாநாட்டுச் செயலகத்தில் இருக்க வேண்டாம்." என்றேன் சிரித்துவிட்டு இருந்தார்.

வழக்கறிஞர் ஒருவர் வந்தார். நான் அவரிடம் திண்ணையில் இருப்பவரைப் பற்றிக் கூறி "புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவராக இருப்பார் போல இருக்கிறது. சந்தேகமாக உள்ளது" என்றேன். வழக்கறிஞர் அவரிடம் போய் "ஏனப்பா இங்கையிருக்கிறாய். போ... போ...போய் அங்கையிருந்தே எழுது" என்று விரட்டினார். புன்னுலைக்கட்டுவனைச் சேர்ந்தவர் எழுந்து போனார். நான் சந்தேகப்பட்டது சரி என்றும்,



இளைப்பாறியவர் காவல்துறை வீரர்களுள் ஒருவர் என்றும், இப்படியான புலனாய்வு அவரின் வழமை என்றும் வழக்கறிஞர் என்னிடம் கூறினார்.

புலனாய்வுத் துறையினரின் கண்காணிப்பு எங்கள் மீது வலுவடைந்தது. மாநாட்டுக்கு வந்த அறிஞர்கள் திருப்பியனுப்பப்பட்ட காலங்களில் மிகையாகக் கண் காணிக்கப்பட்டோம்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்த கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா வெற்றிப் புன்னகையுடன் திரும்பினார். மாநாட்டில் அரசியல் கலக்கப்படமாட்டாது என்ற எமது நிலையை விளங்கப் படுத்திய அவர் வெளிநாட்டு அறிஞர்கள் வருவதற்கு உரிய தடை, வீரசிங்கம் மண்டபம், பாடசாலை மண்டபங்கள் இவற்றுக்கு உரிய தடை என்பன நீக்கப் பட்டு விட்டதாகக் கொழும்பிலிருந்து தொலைபேசியில் கூறினார். நானும் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் பணி புரிந்து கொண்டிருந்த மருத்துவர் சபாரத்தினம், தவத்திரு தனிநாயக அடிகள், திரு. அம்பிகைபாகன் ஆகியோரும் மகிழ்ந்தோம். அன்று இரவு தமது குடும்பத்துடன் திரு. வி. எசு. துரைராசா கொழும்பி லிருந்து இயங்கியில் (காரில்) வந்து சேர்ந்தார். பேராசிரியர் வித்தியானந்தன், திருமதி திருச்செல்வம் ஆகியோரும் அந்நாட்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருந்தனர்.

"...இம்மாநாட்டில் தமிழ் மொழி, கலை, கலாச்சாரம் ஆகிய விடயங்கள் மட்டுமே இடம் பெறும் எனவும் அரசியல் நோக்கங்களுக்கு எவ்வகையிலும் இம்மாநாட்டில் இடமளிக்கப்படாதென்றும் தாம் பிரதமருக்கு அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்தே பிரதமர் அரசாங்கத்தின் ஆதரவை நல்கினார் எனக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறினர். ..."தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடக்க விழா மற்றும் கொண்டாட்டங்களுக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தை உபயோகிக்க அனுமதிக்கப் பெற்றுள்ள தெனவும் தெரிவித்தார்." இந்தச் செய்தி, 'தினகரன்' 31-12-1973 நாளிதழில் வெளி வந்திருந்தது.

இலண்டன் வானொலி எழுப்பிய குரலோசையின் எதிரொலிகள் இலங்கை-இந்திய வானொலிகளில் கேட்டன. கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து பிரதமர் மாநாட்டுக்கு அனுமதி வழங்கியதாக இலங்கை இந்திய வானொலிகளிலும் செய்திகள் ஒலித்தன. இலண்டன் வானொலியிலும் இந்தச் செய்தி வெளி வந்தமை பற்றி நான் கேள்விப்படவில்லை.

"இலக்சுமன் சயக்கொடியைச் சந்தித்துப் பேசினர்—"என்ற தலைப்பில் 28-12-1973இல் வெளி வந்த 'தினகரன்' நாளிதழ்ச் செய்தியையும் இங்குத் தருவது பொருத்தமாகும். "பிரதிநிதிகளை அன்புடன் வரவேற்ற பிரதி அமைச்சர், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மாநாடு கொழும்பில் நடை பெற வேண்டும் என்று அரசாங்கம் ஆலோசனை கூறிற்று என்று வலியுறுத்தினர்...பிரிட்டனில் இருந்து சில நாட்களுக்கு முன்னர் இங்கு வந்த ஒரு பிரதிநிதி பரிசோதனை எல்லையைத் தாண்டி வர முடியாதபடியால் அவர் வந்த விமானத்திலேயே கட்டுநாயக்காவிலிருந்து திரும்பிச் செல்ல வேண்டியேற் பட்டது என்பதையும் பற்றி அவர் ஆச்சரியப்பட்டார். மாநாடு நடைபெறுவதற்கென வாடகைக்கு எடுக்கப் பெற்ற மண்டபம் ரத்துச் செய்யப்பட்டது என்பதையும் பற்றி அவர் ஆச்சரியப்பட்டார்... தூதுக்குழுவில் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா, திரு. வி. எசு. துரைராசா, திரு. ஆர்.



நமசிவாயம் ஆகியோர் அங்கம் வகித்தனர்." இவ்வாறு 'தினகரன்' நாளிதழ்ச் செய்தி கூறியது.

கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவுடன் உடன் பிறந்த ஒருவர் தமிழாராய்ச்சி மாநாட்டுக்காக இலண்டனிலிருந்து வந்தார். கட்டுநாயக்காவில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார். யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்; தமிழர்; தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்தார்; தமிழரின் 'ஆதிபத்திய உரிமையைப் பயன்படுத்தும் அரசின் கரங்கள் தமிழர் ஒருவரையே தடை செய்தன. தனது உடன் பிறப்பு திருப்பி அனுப்பப்பட்ட பின்னரும் மாநாட்டு வெற்றிக் காக கலாநிதி மகாதேவா சலியாது உழைத்து அரசிடம் அனுமதி பெற்றுர். வெற்றிப் புன்னகையுடன் வெளி வந்தார். "சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்து உறுப்பினராக இருங்கள். இந்த நேரத்தில் கட்சி மாருதீர்கள். அது மாநாட்டு வெற்றிக்கு உதவாது" என முன்பு கலாநிதி கோபால பிள்ளை மகாதேவாவுக்கு ஆலோசனை கூறியிருந்தேன். அவரும் அதை ஏற்றுக் கொண்டிருந்தார். மாநாடு யாழ்ப்பாணத்தில் திட்ட மிட்டபடி நடைபெற அவரின் கட்சி உறுப்புரிமை ஓரளவு உறுதுணையாக இருந்தது.

அனுமதி கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சிச் செய்தி நாளிதழ்களில் வெளிவந்த நாளன்றும் வழமை போல் காலை ஏழு மணிக்கே வீட்டை விட்டுப் புறப் பட்டேன். வழியில் எனது மைத்துனர் திரு. வி. சிவ சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்தேன். 'அரசின் முடிபு காலங்கடந்ததாயினும் வரவேற்கப்பட வேண் டியது. இந்தச் சூழலில் பிரதமரை அழைத்து மாநாட் டைத் தொடங்கி வைக்கக் கேட்பது நல்லதாயிருக்கும்' என்ருர். இன்ன செய்தார்க்கும் இனியவை செய்ய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும் என்ற நினைப்பு அவரைப் போன்ற பலரிடையே அன்றைய தினம் நான் காணக் கூடி இருந்தது. ஆனாலும் அது மாநாட்டு வெற்றிக்குப் பாதகமானது என்றும் அரசியல் நடுநிலைமைக்கு முரணானது எனவும் நான் கருதினேன். மாநாட்டு அமைப்புக் குழுவும் அவ்வாறே கருதியது.

மாநாட்டுச் செயலகத்தைப் பாவிகள் புகலிடம் எனக் கருதியோர்; 'இறப்பில்' தமிழ் உணர்வைச் செருகி வைத்தோர்; புறக்கணித்த புண்ணியவான்கள் யாவருக்கும் திடீரென எங்கள் மீது அன்பு ஏற்பட்டது. அரசின் கைகாட்டி இறங்கியதும் இத்தகையோரின் உள்ளப் புகைவண்டிகள் புறப்பட்டன. அரச அலுவலகங்களில் பணிபுரியும் நண்பர்கள் வழமைபோல் என்னிடம் கதைத்தனர். 'உணவுப் பொருட்களுக்கு அனுமதி வேண்டுமா?' எனக் கேட்டு எனது நண்பர் திரு. யோகநாதன் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் கேட்டார். மாநாட்டு அழைப்பிதழ் தனக்குக் கிடைக்கவில்லையே என்றார். 'கலைநிகழ்ச்சிகட்குச் சிறப்பு அனுமதிச் சீட்டு உண்டா?' எனக் கேட்டார்.

யாழ்ப்பாண மாநகராட்சியில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மாநகராட்சி ஆணையாளரே பேசினார். "என்ன உதவி வேண்டும்? திறந்தவெளி அரங்கைத் தருகின்றோம். யாழ்ப்பாணம் முழுவதும் சிறப்பு ஒளி அலங்காரம் செய்கிறோம். வீதிகளைச் சுத்தம் செய்கிறோம். யாழ் மாநகர முதல்வர் வெளிநாட்டவருக்கு வரவேற்பு வழங்க விரும்புகிறார். எந்த நாளில் எந்த நேரத்தில் வைத்துக் கொள்ளலாம்? எங்கள் அலுவலகத்தில் இருந்து ஒருவரை உங்களிடம் அனுப்புகிறோம்." இவ்வாறு அவர் கேட்டார்.



வீரசிங்கம் மண்டபத்தை பயன்படுத்துங்கள் எனக் கூட்டுறவுத் திணைக்களத்தினர் தொலைபேசியில் தெரிவித்தனர்.

புலனாய்வுத் துறையிலிருந்து ஒருவர் வந்தார். பேராசிரியர் வித்தியானந்தனுடன் கதைத்தார். பேராசிரியர் வித்தியானந்தன் ஓய்வொழிவின்றிப் பணி புரிந்து கொண்டிருந்தார். பேராசிரியர் என்னிடம் அவரை அனுப்பினார். மாநாட்டு ஒழுங்குகள் பற்றி எல்லா விவரங்களையும் தெரிவித்தேன். மாநாட்டுத் தொடக்கவிழா தொடக்கம், ஒவ்வொரு நிகழ்ச்சியாக நடைபெறப் போகும் விவரங்களைக் கூறினேன். மிக விவரமாகக் குறிப்பெடுத்துக் கொண்டார். காவல் துறையினரின் முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கும் என்றார். மாநாட்டுத் தொண்டர் பட்டிகளில் பத்துப் படிகளைக் கேட்டார். பேராசிரியரின் அனுமதி பெற்றுப் பட்டிகளைக் கொடுத்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 23. திருமதி திருச்செல்வம் வரவேற்ருர்

"மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த ஏழு தமிழ் அறிஞர்கள் யாழ் நகரை வந்தடைந்தபோது திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்களை வரவேற்ருர். ஏழு அறிஞர்களின் விவரம் பின்வருமாறு: கலாநிதி செல்வி பெக்(கனடா); பேராசிரியர் லெசுலிக் (மே. செர்மனி); பேராசிரியர் செனற் (மே. செர்மனி); பேராசிரியர் கெலர் (சுவிட்சர்லாந்து): கலாநிதி சோன் மார்க் (இங்கிலாந்து);பேராசிரியர்வண. பிதா பிக்கி (உரோமாபுரி); கலாநிதி கிசுருவன்ற் மேயர் (அங்கேரி).

"இது இவ்வாறிருக்க, நேற்றுக் காலையிலும் நண் பகலிலும் கொழும்பில் இருந்து வந்த புகைவண்டிகளில் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தென்னிலங்கை மக்கள் பெருந்தொகையாக வந்திறங்கினர்." இவ்வாறு 'வீரகேசரி' நாளிதழில் யாழ்ப்பாண நிருபர் திரு. செல்லத்துரை எழுதியிருந்தார்.

1972 அக்டோபரில் கொழும்பில் 'சாந்தம்' மனைய கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் துணைத் தலைவர் களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி திருச் செல்வம், சாவகச்சேரியில் பிறந்தவர். புகழ்பெற்ற தமிழறிஞர் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை மரபினர்.



மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து மருத்துவராகப் பட்டம் பெறப் பயின்றுகொண்டிருந்தவர். சட்டக் கல்லூரி விரிவுரையாளராக இருந்த திரு. மு. திருச் செல்வம் அவர்களைச் சந்தித்தபோது இருவரும் ஒருவர்க் கொருவர் உள்ளத்தைப் பறிகொடுக்க, மருத்துவக் கல்லூரிப் படிப்பை இடை நிறுத்தி மணவாழ்க்கையில் புகுந்தவர். இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களு மாக நான்கு நன்மக்களைப் பெற்றெடுத்தவர். கொழும் பில் உள்ள இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்துடன் இணைந்து பணிபுரிபவர். விழிப்புலன் இழந்தோர் நலனுக்காக இவர் ஆற்றும் பணிகள் உலகில் உள்ள பலரால் போற்றப்பட்டன. 1968 இல் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கைத் தமிழர் சார்பில் இவர் ஆற்றிய பணிகள் அனைவரின் பாராட்டுதலுக் குள்ளாயின.

யாழப்பாணத்தில் நடத்த வேண்டும் என்ற தீர்மானம் புறக்கணிக்கப்பட்டபோதும், மருத்துவர் ஆனந்தராசனின் செய்தி அறிக்கைகள் குழப்பத்தை ஏற்படுத்தியபோதும், திருமதி திருச்செல்வம் தலை யிட்டுக் குழப்பங்களையும் முரண்பாடுகளையும் போக் கினர். யாழ்ப்பாணத்தில் மாநாடு நடைபெறுவதற்கும், ஒழுங்குகள் சிறப்பாக அமைவதற்கும் திருமதி திருச் செல்வம் தலையிட்டுக் குழப்பங்களையும் முரண்பாடுகளை களையும் போக்கினர். யாழ்ப்பாணத்தில் மாநாடு நடை பெறுவதற்கும், ஒழுங்குகள் சிறப்பாக அமைவதற்கும் திருமதி திருச்செல்வம் தன் முழுக் கவனத்தையும் செல விட்டார்.

அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போனர். சுண்டிக் குளி மகளிர் கல்லூரி, றிம்மர் மண்டபம் என்பன அவரின் சொல்லைத் தட்ட முடியாத நண்பர்களால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநாட்டுக்குக்கெனத்தரப்பெற்றன. வீரசிங்கமண்டபம் கிடைக்காதென எமக்குத் தெரிந்ததும், அரியாலையில் பந்தல் போடுமுன்பு, தனியார் மண்டபங்களைத் தேடினேம். கிறித்தவர் விடையூழியத்தினரால் (மிசனரி மாரினுல்) கட்டப் பெற்ற றிம்மர் மண்டபம் இருப்பதைத் தெரிந்துகொண்டபின், திருமதி திருச்செல்வம், மருத்துவர் சபாரத்தினம் ஆகியோருடன் நான் அம் மண்டபப் பொறுப்பாளர்களிடம் சென்று மண்டபத்தை ஒழுங்கு செய்தோம். உரிய முன்பணத்தைக் கட்டினேம். வீரசிங்கம் மண்டபம் கிடைக்காததால் றிம்மர் மண்டபத்தில் மாநாடு நடைபெறும் என அறிவித்தோம்.

யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற வெளிநாட்டவர்களுள் பெரும்பான்மையினர் தமிழ்நாட்டவர்கள்தாம். மேனுட்டவர்கள், ஏனைய உலக மக்கள் யாழ்ப்பாணம் வருவது அரிது. இலங்கைத் தீவின் பல இடங்கள் சுற்றுலாத் துறையினரால் வெளிநாட்டில் இருந்து செல்வம் கொண்டு வரும் சுற்றுலாப் பயணிகட்காக வளர்க்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்பெறவில்லை. எனவே வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருவதும் இல்லை. மேனுட்டவர்கள் பயன்படுத்தும் கழிவுக்குழிகளில் நீர்த்தடை அமைப்பு இருக்கவேண்டும்; காகிதச் சுருள் இருக்கவேண்டும். நீர்த்தடைக் கழிவுக் குழிகள் பெரும்பாலான வீடுகளில் இருந்தன. ஆனல் யாழ்ப்பாண வீடுகளிலோ காகிதச் சுருள் இருக்கவில்லை. யாழ்ப்பாணக் கடைத் தெருவெங்கும் அலசினேம். ஒரு கடையில் கூடக் கிடைக்கவில்லை, கொழும்புக்குத் தொலைபேசியில் அழைத்து விவரம் கூறி இச்சுருள்களைத் தருவித்தோம். விருந்தோம்ப விழைந்த வீடுகட்கு வழங்கினேம்.



மாநாடு தொடங்க ஒரு வாரத்துக்கு முன்பே யாழ்ப்பாணம் எங்கும் மஞ்சள் கொடிகள் கட்டப் பெற்றன. மஞ்சள் துணியில் மாநாட்டுச் சின்னத்தை அச்சிட்டு விற்பனை செய்தோம். இயங்கிகள் (கார்கள்), மிதிவண்டிகள், அரசின் பேருந்துகள், சரக்குந்துகள், உழவுந்துகள் அனைத்திலும் கொடிகள் பறந்தன. மாநாட்டுக்குப் பெருமளவு நிதி சேர்ந்தது.

நிதி திரட்டுவதற்காகக் கொடிநாள் நடத்தினேம். ஏராளமான தொண்டர்கள் யாழ்நகரமெங்கும் கொடிகளை விற்றனர். உண்டியல் குலுக்கி நிதி சேர்த்தனர். முதற் கொடியைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தவத்திரு தனிநாயக அடிகட்கு அணிவித்தார். மாநாட்டுச் சின்னம் தாங்கிய இந்தக் கொடிகளைத் தமது உடைகளில் அணிந்து செல்வதில் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கு பற்றும் உணர்வைப் பெற்றனர்.

"தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டும். மற்றும் வசதிகளும் செய்து கொடுக்கப் பெற வேண்டும் என்று முன்னர் உறுப்பினர் ஒருவர் பிரேரணை கொண்டுவந்த போது, அந்தப் பிரேரணை முறைப்படி கொண்டுவரப்படவில்லை என்று கூறி அந்தச் சபை விவாதத்துக்கு எடுக்காமலே நிராகரித்தது தெரிந்ததே.

"இது தவிர யாழ் மேயரும் மற்றும் சில உறுப்பினர்களும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குத் தாம் ஆதரவு அளிக்கப் போவதுமில்லை. அதில் கலந்து கொள்ளப் போவதும் இல்லை என அறிவித்ததும் தெரிந்ததே.

"யாழ் மாநகர சபை இப்போது நகரைத் தீபாலங்காரம் செய்ய முன்வந்துள்ளது. மாநகர சபைக்குச்

2381—11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொந்தமான கட்டிடங்களில் குறிப்பாக மாநகர சபைக் கட்டிடம், நூல்நிலையம், திறந்தவெளி அரங்கு, துரையப்பா விளையாட்டு அரங்கு, நவீன (மார்க்கெட்) மணிக்கூண்டுக் கோபுரம் முதலானவற்றில் பத்தாயிரத் துக்கும் அதிகமான பல்புகளைப் பொருத்தி நகருக்கு அலங்காரமும் ஒளியும் ஊட்ட முனைந்துள்ளது.

"திறந்த வெளி அரங்கு, துரையப்பா விளையாட் டரங்கு ஆகியவற்றை மாநாட்டுத் தேவைகளுக்கு வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. நகரில் சுகாதார வசதியும் நீர்வசதியும் தாராளமாகச் செய்வதற்கு உறுதியளித்துள்ளது. மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டு அறிஞர்களை வரவேற்று உபசரிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

"மேற்படித் தகவல்களை வெளியிட்ட மாநாட்டு வட்டாரங்கள் மேயர் திரு. துரையப்பா மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கச் சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் கூறின. பொருட் காட்சியை அவரே திறந்து வைப்பார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன"—இவ்வாறு 'தினபதி' நாளிதழில் 3-1-1974இல் செய்தி வெளிவந் திருந்தது.

"யாழ்ப்பாண நகரத்தில் பிரதான பாதைகளைச் சீர் செய்வதிலும் குப்பைகூளங்களை அகற்றுவதிலும், யாழ் மாநகர சபை சுகாதாரப் பகுதியினரும் வேலைப் பகுதியினரும் ஈடுபட்டுள்ளனர்." என 'ஈழநாடு' 3-1-1974 நாளிதழில் செய்தி வெளி வந்தது.

இடக்குப் பண்ணுவது; இடம் கிடைக்காவிட்டால் போனால் அடங்கிப் போவது யாழ்ப்பாணத்தவர் ஒரு சிலரின் வழமை மாபெரும் மாநாட்டையொட்டி யாழ்ப்பாண மாநகராட்சி முதல்வர் திரு. அல்பிரட்



துரையப்பா தலைமையில் உறுப்பினர்கள் சிலர் இடக்குப் பண்ணினார்கள்; முடியவில்லை; பின் இடக் கையும் துடுக்கையும் அடக்கி வைத்து மாநாட்டுக்கு ஆதரவு வழங்க முன்வந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செய்திகளை அனுப்பிக் கொழும்பில் நாளிதழ்களை அச்சிட்ட பின், யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துச் செய்தி படிக்கும் வழமையில் மாற்றம் ஏற்படுத்த முயன்ற 'ஈழநாடு' நாளிதழின் விற்பனை மாநாட்டுக்காலங்களில் பெருகி யிருந்தது. மக்களின் தேவைகளை உணர்ந்து மாநாட்டுச் செய்திகளைச் சுடச் சுடத் தந்து 'ஈழநாடு' புதிய அத்தியாயத்தைத் திறக்க வழிகோலிய காலங் களில், அதன் இயக்குநர் தலைவர் திரு. கே. சி. தங்கராசா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தும் "வந்தான் வரத்தான்களின்" செய்கையை எண்ணி மனம் புழுங்கியபடி கொழும்பில் தவம் கிடந்தார்.

"இதற்கு முந்திய மூன்று மாநாடுகளுக்கும் பின் தங்காத வகையில் மாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடிப்பதில் அமைப்புக் குழு இரவு பகலாக விடா முயற்சியுடன் உழைத்துக் கொண்டிருக்கிறது. மாநாட்டு அலுவலகத்தில் காணப்படும் அசுரவேகமும் சுறுசுறுப்பும் மாநாட்டின் வெற்றியை உறுதிப் படுத்துபவையாக உள்ளன." என வீரகேசரி 2-1-1974 இதழில் அதன் யாழ்ப்பாண நிருபர் திரு. எசு. செல்லத் துரை எழுதியிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 24. முகிழ்க்கின்ற முயற்சிகள்

1974 தை 3ஆம் நாள் காலை 10 மணி; யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபவாயில்; பேராசிரியர் வித்தியானந்தன், மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்கள், தவத்திரு தனிநாயக அடிகள் யாவரும் காத்துக்கொண்டிருக்கின்றனர். மாநாட்டைத் தொடங்க வேண்டும். ஆனாலும் அவர்கள் நுழைவாயிலிலேயே நிற்கின்றார்கள். எல்லாருடைய முகத்திலும் ஓர் எதிர்பார்ப்பு உணர்வு தெரிகின்றது.

நான் அங்கு சென்றேன். "சச்சி, நாதசுரக் கலைஞர்கள் வரவில்லையே', எனத் தவத்திரு தனிநாயக அடிகள் என்னிடம் கூறினார். அரசாங்கத்தின் தடைகளைத் தாண்டினோம்; சின்னத்தனமாக நடந்தவர்களின் குழப்பங்களை நிமிர்த்தினோம். மாநாட்டுத் தொடக்க விழா நுழைவாயிலில் யாழ்ப்பாண வழமை தடைபோடுமோ என்றிருந்தது. "நாதசுர இசையுடன் தமிழாராய்ச்சி மாநாடு இன்று ஆரம்பம்" என 'வீரகேசரி' நாளிதழ், 3-1-1974ல் முன்பக்கத் தலைப்புச் செய்தி வெளியிட்டது. ஆனாலும் உரிய நேரத்துக்கு நாதசுரக் கலைஞர்கள் வரவில்லை.

திருமண விழாக்கள், கோவில் திருவிழாக்கள், வேறு விழா நிகழ்ச்சிகள் யாவற்றிலும் நாதசுர இசைதான் மங்கல இசை. எந்த விழாவும் அறிவித்த நேரத்



தில் தொடங்குவது வழமையன்று எமது யாழ்ப்பாணத்திலே! எனவே தான் நாதசுரக் கலைஞர்கள் உலகத் தமிழாராய்ச்சி அறிஞர்கள் குழுமிய அனைத்துலக மாநாட்டையும் உரிய நேரத்தில் தொடங்க அனுமதிக்கவில்லை. இத்தனைக்கும் சாவகச்சேரியில் இருந்த அக்கலைஞர் குழுவிடம் இருமுறை போய் வந்தேன். நேரத்தை மீண்டும் மீண்டும் நினைவூட்டியிருந்தேன். ஆனாலும் அவாகள் பிந்தியே வந்தார்கள்; அவசர அவசரமாக வாசித்து முடித்தார்கள்.

'மாநாட்டுக்குத் தடை விதித்ததை எதிர்த்தீர்களே? மாநாட்டுத் தொடக்கவிழா நிகழ்ச்சியைப் பார்க்க வராமல் எமக்குத் தடைவிதித்திருக்கிறீர்களே?' என வித்துவான் க. ந. வேலன் விரசிங்க மண்டபப்புற வாயிலில் வைத்து என்னிடம் கேட்டார். அவரும் அவரைப் போன்ற ஆயிரக்கணக்கான தமிழ் அன்பர்களும் அறிஞாகளும் அழைப்புப் பெறுமல் இருந்தனர். யாரையும் அழைக்கக் கூடாதென நாம் கருதவில்லை. பலருடன் கலந்தாலோசித்துப் பெயர்ப் பட்டியல் தயாரித்து அழைப்பிதழ் அனுப்பினோம். அவரைப் போன்ற பலரின் பெயர்கள் விடுபட்டுப் போயிருந்தன. அழைப்புப் பெருத பலர் பெருந்தன்மையுடன் வீட்டில் இருந்தவாறே மாநாட்டுத் தொடக்க விழாவை வாழ்த்தினர். தமிழார்வத்தால் உந்தப்பெற்று வித்துவான் வேலன் போன்ற பலர், 'அழைப்புக் கிடைக்காவிட்டாலென்ன, எங்கள் வீட்டு மாநாடுதானே' என வந்திருந்தனர். அவர்களை உள்ளே விடாமல் தடைசெய்யும் 'பாவத்தை, என் மனைவியும் என் தங்கையும் ஏற்றிருந்தனர். அன்புகலந்த புன்னகையுடன் வேண்டுதல் மூலம் நிலைமையைச் சமாளித்தனர். இரண்டு பெண்களின் வேண்டுதலை ஏற்ற ஆயிரக்கணக்கான தமிழ்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்பாளர், வெளியே வெயிலில் நின்று யாழ்ப்பாணத்தின் பெருமையை உயர்த்தினர்.

கலைஞர் கருணாநிதிக்கு அழைப்பு அனுப்புவதைப் பற்றிச் செய்தி வெளியிட்டுக் குழப்பம் ஏற்படுத்தப் பட்டிருந்தது. கலைஞர் கருணாநிதிக்கும், தமிழக அரசின் அமைச்சர்கட்கும், மத்தியஅரசின் தமிழ் அமைச்சர்கட்கும் அழைப்புகள் அனுப்பியிருந்தோம். "தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதிக்கும் ஏனைய அமைச்சர்கட்கும் ஏற்கெனவே அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா, பாண்டிச்சேரி அமைச்சர்கட்கும் அழைப்பு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது என 'வீரகேசரி' நாளிதழில் செய்தி வெளி வந்திருந்தது. ஆனால் 'தினபதி' நாளிதழில் வெளிவந்த, "கருணாநிதிக்கு விபரம் தெரியாது—இலங்கையில் நாலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுமா, எங்கு நடைபெறும் என்ற விவரங்கள் எதுவும் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு தெரியாதாம். பத்திரிகை நிருபர்களுக்கு நேற்று அவர் பேட்டியளித்த போதே தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய சரியான விபரம் எதுவும் அவருக்குத் தெரியாது என்ற விடயம் வெளிவந்தது" என்ற செய்தி குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் தமிழக அமைச்சர்கள் பலரின் வாழ்த்துச் செய்திகள் மாநாட்டுத் தொடக்க விழாவில் வாசிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைக்கப் பெறவில்லையே என்ற வருத்தம் கலைஞர் கருணாநிதிக்கு இருந்தமை பின்னர் எமக்குத் தெரிவிக்கப் பட்டது. நாம் அழைப்பு அனுப்பியது உண்மை. ஆனால் அந்தக் கடிதம் அவரைச் சென்றடையவில்லை



போலும். இலங்கை அஞ்சல் அலுவலகத்தில் அரசின் தடைக் கரங்கள் நுழைந்திருக்கலாமோ தெரியவில்லை.

நாதசுரக் கலைஞர்கள் வந்து சேர்ந்ததும், பேராசிரியர் வித்தியானந்தன், மாநாட்டைத் தொடக்கி வைக்க இருந்த தவத்திரு. தனிநாயக அடிகளை மரபு முறைப்படி அழைத்துச் சென்றார். நுழைவாயிலில் இருந்து மேடை வரை அவர்கள் நடந்து செலலும் வரை மண்டபம் நிரம்பியிருந்த மக்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்..." என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைத் திருமதி சரசுவதி பாக்கியராசா இசைத்தார். மண்டபத்துள் இருந்த அனைவரும் எழுந்து நின்று தமிழன்னைக்கு வணக்கம் செலுத்தினர்.

குத்துவிளக்கை ஏற்றித் தவத்திரு தனிநாயக அடிகள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையுரை நிகழ்த்தினார். முதலில் தமிழில் தனது தலைமைப் பேருரையை நிகழ்த்திய பேராசிரியர் வித்தியானந்தன், மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டு அறிஞர்களின் நன்மை கருதியும் தமிழல்லாதோருக்கு மதிப்புக் கொடுக்க விழைந்தும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தினார் பேராசிரியருடைய தலைமைப் பேருரையைத் தொடக்கநாளுக்கு முன்னிரவே படித்துப் பார்க்கும் வாய்ப்பைப் பேராசிரியர் எனக்குத் தந்தார் எனது கருத்துகள் சிலவற்றையும் ஏற்றுக்கொண்டார். (பொருள் பொதிந்ததும் யாழ்ப்பாணத்தார் பெருமையை நிலை நாட்டுவதுமான அந்த உரை முழுவதையும் அடுத்த அத்தியாயத்தில் தந்துள்ளேன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழத்துப் பூதந்தேவனர் தொடக்கம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வரை, ஈழத்தின் தமிழறிஞர்கள் தமிழ் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்காகவும் ஆற்றிய அரும்பணிகளைக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் தலைமையுரையைத் தொடர்ந்து தவத்திரு தனிநாயக அடிகள் தொடக்கவுரையை நிகழ்த்தினர்கள். மிக ஆறுதலாக அழுத்தம் திருத்தமாகப் பேசுவதில் தவத்திரு தனிநாயக அடிகள் வல்லவர். கேட்போர்க்கு இனிக்கும் தகையவாய் அமைந்த அவர் உரையில் தெளிவும் திறனும் ஒலித்தன. தமது நெடுநாளைய நண்பரான திரு. கே. சி. தங்கராசாவுக்கு நன்றி தெரிவிக்க மறக்கவில்லை. அத்துடன் பேராசிரியர் வித்தியானந்தனுக்கும் நன்றி கூறினர்.

"இந்தத் தமிழாராய்சசிக் கழகம் ஆரம்பமானதிலிருந்து, தமிழின் வளர்ச்சி அனைத்துலக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் கூறிய 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' எனும் கொள்கையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் கூறிய 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' எனும் கோட்பாட்டையும் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொண்டிருப்பது இந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகம். இஃது ஆற்றிவரும் தொண்டுகள் பல. அனைத்துலகத் தமிழறிஞர்கள் பலரை ஒன்று சேர்ப்பதும் அவர்களை அறிமுகப்படுத்துவதும் அவர்கள் ஆராய்ச்சியை வெளிப்படுத்துவதும் இந்தக் கழகத்தின் சிறப்புப் பணிகளும் நோக்கமுமாகும். இக்கழகத்திற்குப் பொருந்திய ஆராய்ச்சி, இலக்கணம், இலக்கியம் பற்றியது மட்டுமல்ல; தமிழ்த்துறைகளோடு தொடர்புள்ள



எல்லாத் துறைகளையும் ஆராய்ச்சிக்களமாகக் கொண்ட ஆராய்ச்சி இக்கழகத்திற்குரியது.

"தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடும் வெளிநாட்டு அறிஞர் சிலர் நன்கு தமிழைப் பேசவும் எழுதவும் அறிந்திலர் எனினும் வரலாற்று அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் ஒப்பியல் அடிப்படையிலும் ஆற்றும் தொண்டோ பெரிது இப்படி உலகம் அறிய வேண்டும் என்று ஆங்கிலத்தில் வெளியிடப்படும் ஆராய்ச்சி ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே வருகின்றது. ஆதலால் நம்மவரும் ஆராய்ச்சியை ஆங்கிலத்தில் வெளியிடுவதற்குக் காரணம் உலகம் அறிய வேண்டும் என்பதேயாகும். சென்ற மூன்று மாநாடுகளின் தொகை நூல்களைப் படித்துப் பார்க்க வேண்டும். அந்நூல்களைப் பார்த்தால் தமிழாராய்ச்சி எவ்வளவிற்கு முன்னேறி வருகிறதென்பதை உணரலாம்...

"வெறும் புகழுக்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற்காகவோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சியாளனின் நோக்கம் உண்மையைக் கண்டுபிடிப்பது; உண்மையைப் புலப்படுத்துவது; மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந்தெடுப்பது; மொழிகள் எத்துணையிருக்கத் தமிழுக்கு மட்டும் இம்மாநாடுகளை நடாத்தவும் உலகத்து அறிஞர் வரவும் காரணங்கள் இருக்க வேண்டும். இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு திராவிடப் பண்பாடே எனத் திரு. சுனில்குமார் சட்டர்சி கூறியுள்ளார்...

"இந்த உண்மையைத் தமிழ்த் துறைகளில் ஆராய்ச்சி நடத்துவோர் உணர்ந்து கொண்டே வருகின்றனர். சிந்து வெளி நாகரிகம், திராவிட நாகரிகமே என்று எண்ணுகிறவர்களுக்குத் தமிழ் மக்களின் தொன்மையும் தமிழ்க் கலைகளின் தொன்மையும் நன்கு புலனாகும். சிந்துவெளி நாகரிகத்தைச் சங்க காலத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அங்குள்ள தொடர்புகள் தெளிவாகின்றன. ஆதலால் இந்திய வரலாற்றைப் பயில்கின்றவர் அந்த வரலாற்றில் மாபெரும் பங்கு கொண்டவர்களைப் பற்றி அறிந்தே தீரவேண்டும்." இவ்வாறு உரையில் கூறிய தவத்திரு தனிநாயக அடிகள் யாழ்ப்பாணத்திலும், கிழக்கு இலங்கையிலும் தனித்தனிப் பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டும் என வலியுறுத்தினார்.

கலாநிதி பிரிண்டா பெக், தமிழில் தமது வாழ்த்துரையை வழங்கினார். பேராசிரியர் செனற், பேராசிரியர் பிக்சி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இவர்களைத் தொடர்ந்து மாநாட்டு அமைப்புச் செயலாளர் திரு. வி. எசு. துரைராசா, மாநாட்டுத் தொடக்க விழாவுக்கு வந்த வாழ்த்துரைகளைப் படித்தார்.

"தமிழ் அன்பு முளை கொண்டு வளரச் சங்கற்பம் செய்வோமாக—கற்பவை கற்க கற்றபின் அதற்குத் தக நிற்க என்கிறார் வள்ளுவதேவர். கற்ற உண்மையில் நிலைத்து நிற்கச் செய்யும் சாதகமே அன்புச் சாதகம். அன்புச் சாதகத்துக்கு மற்றொரு பெயர் தமிழ்ச்சாதகம். தமிழ் என்பதற்கு அன்பு என்பது பொருள்.

"அன்பை ஐந்திணை செய்து ஆராய்ந்தது இறையனார் களவியல்; 'அன்பிணைந்திணைக் களவியல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்கின்றது நக்கீரர் வழிவந்த களவியலுரை.

"அன்பை வெளிப்படுத்தும் அன்பு நடை சங்கத்தார் ஆராய்ந்த தமிழ் மொழியேயாம் என்பது ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

"காந்த சக்தியிலும் மேலான சக்தி அன்புக்கு உண்டு. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது சங்கத்தார் ஆராய்ந்த தமிழ். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கின்ற புறநானூற்றுச் செய்யுளில் வருகின்றது இந்த அருமருந்தன்ன தொடர்.



"அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி அனைத்துலகையும் அன்பு செய்து மக்கட் பிறப்பினர் யாவரையும் ஒருமை செய்வதோர் ஆராய்ச்சியாய் அமைவதாக." எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

திரு. சேம்சு. ரி. இரத்தினம் அவர்கள் தொடக்க நாள் விழாவுக்கு வந்தவர்களுள் முக்கியமானவர்கட்கு அழைப்பிதழ் வழங்கி மதிய உணவுக்கு அழைத்தார்கள் தொடக்கவிழா நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவெய்தின.

பல சிங்கள முசுலிம் அறிஞர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். தமிழர் கூட்டணி எம். பி. க்கள் பலரும் காணப்பட்டனர். கனடாவைச் சேர்ந்த பேராசிரியரான டாக்டர் திருமதி பிரிண்டா பெக் தமிழ் அணங்குபோலச் சிவப்புநிறக் காஞ்சிபுரப்பட்டுடுத்துத் தமது கணவருடன் அங்கு வந்திருந்தார். அவர் தூய தமிழில் உரை நிகழ்த்தினார்.

மாலை தொடக்கம் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் நடைபெறத் தொடங்கின. ஆராயச்சிக் கருத்தரங்குகள் பற்றியோ, உரைகள் பறறியோ, மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்களின் பட்டியலையோ இங்கு நான் தரவில்லை. மாநாட்டில் சமர்ப்பிக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு தனியாக வெளிவந்துள்ளது, அத்தொகுப்பில் இவ்விபரங்கள் வெளியிடப் பெற்றுள்ளன.

1972 அக்டோபர் தொடக்கம் 1974 தை 3 ஆம் நாள் வரையுள்ள நீண்ட காலப்பகுதிக்குள்ளாக மேற்கொண்ட முயற்சிகள் முகிழ்க்கின்ற தொடக்க நாள் சிறப்பாக அமைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 25. வீறுபடைத்த தமிழர் நிலம்

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தொடக்கவிழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொழுது பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆற்றிய தலைமைப் பேருரை பின்வருமாறு:

ஈழத்துத் தமிழ்பேசும் மக்கள் தமிழ்மொழிக் காற்றிய தொண்டு சாலப்பெரிது. தமிழ் மொழி வளர்ச்சியிற் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியார் வழிகாட்டி உதவியுள்ளனர். இறக்கும் நிலையிலிருந்து ஏட்டுச் சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழநாட்டவரே. தெளிவான நடையில் வசன நூல்கள் பல எழுதியும், பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும் வழி காட்டியவர் ஈழத்துத் தமிழ்ப் பெரியாரே.

தமிழ் மன்னர் சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த யாழ்ப்பாணத்திலே,ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் பண்டித மணி கணபதிப்பிள்ளைவரை தமிழ் வளர்த்த தமிழர் தலை நகரிலே தமிழ் ஆராய்ச்சி நடத்த வந்துள்ள பேரறிஞர்களையும், பொதுமக்களையும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் சார்பிலே வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்; பெருமை கொள்கின்றோம். உங்கள் யாவரினதும் வரவும் நல்வரவாகுக. மாநாடு முடிந்து நீங்கள் 'போய் வருகின்றோம்' என்று கூறும்போது கூட, நாம் 'போய்



வாருங்கள்'' என்று கூறாமல் 'வரப்போறியளா' என்று தான் கேட்போம்.

தமிழகத்திற்கு அடுத்தாற் போலத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதற்கேற்ற தகுதி, உரிமை யாழ்ப்பாணத்திற்கே உரியது. 'யாழ்ப்பாணம் வீறு படைத்த தமிழர் நிலம்; அதற்குச் சொற்றிறனும் உண்டு, விற்றிறனும் உண்டு. ஆதிமுதலே அது அன்னியர் அட்டூழியங்களை எதிர்த்து எதிர்த்து வந்திருக்கின்றது. யாழ்ப்பாணத் தமிழர் மற்றவருக்கும் சளைத்தவரல்லர்; எல்லாத் துறைகளிலும் அவர்கள் முந்தி நிற்கிறார்கள்'' என்று தமிழகத்து யோகி சுத்தானந்தர் அவர்களே கூறியிருக்கின்றார்கள். இம் மாநாடு தொடர்பாக முனைவர் சாலை இளந்திரையன் அவர்கள் எமக்கு எழுதிய மடலில் குறிப்பிடுகின்றார். "தமிழ் நலன், தமிழ் உணர்ச்சி என்பவற்றில் தாய்த் தமிழகத்தை விட ஈழத் தமிழகத்தவரே ஆர்வம் மிகுந்தவர்கள் என்பது என் கணிப்பு. அங்குள்ள அரசியல் மற்றும் சமுதாயச் சூழ்நிலைகளும் இதற்கு ஒரு காரணம் என்றாலும், ஈழத்தின் ஆர்வப்பெருக்கை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது". இவ்வாறு தமிகத்தாரே பெருமிதம் அடையும் வகையில் தமிழ் ஆர்வமும் தமிழ்ப்பற்றும் கொண்ட நாம், யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்துவது பொருத்தமானது, ஏற்றமானது, உரிமையானதும் கூட. உண்மைத் தமிழ் உணர்ச்சியுள்ள எவரும், ஈழத்தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தை, தமிழ்த் தொண்டை அறிந்த எவரும் இதனை வரவேற்பர்.

தமிழ் மக்களின் பண்பாட்டை, நாகரிகச் சிறப்பை முதன் முதல் புலப்படுத்தித் தமிழ் இலக்கியப் பெருமையைத் தெளிவாக உணர்த்தித் தமிழர் வரலாற்று

www.tamilarangam.net



ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ஈழநாட்டுப் பெருமகன் ஒருவரே. தமிழில் முதன் முதல் வெளியிடப் பெற்ற கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தவர் மேனாட்டு முறையில் முதன்முதல் தமிழ் அகராதி இயற்றிய தமிழர் ஈழநாட்டவர் ஒருவரே. இசைத் தமிழ் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர் ஈழத்து விபுலானந்த அடிகளே. அவரே தமிழகத்தில் பல்கலைக் கழக முதற்றமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கினார். விஞ்ஞான நூல்கள் பல எழுதியும் விஞ்ஞானக் கல்வியைத் தமிழிற் போதித்தும் வழிகாட்டிய பெருமை ஈழத்திற்குரியது. பேச்சு வழக்குத் தமிழை எழுத்திற் பொறித்து நாடகங்களை எழுதியவரும் ஈழநாட்டுப் பேராசிரியர் ஒருவரே. இது போன்ற பல துறைகளில் வழிகாட்டி, தமிழ் அன்னைக்குக் கைகொடுத்து, அவளைத் தாங்கி வந்திருக்கிறது ஈழநாடு.

சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டிலும். 20-ம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் தமிழ்த்தொண்டிலே முன்னணியில் நின்றவர்கள் ஈழத்தவர்களே. கடந்த 25 ஆண்டுக் காலத்திற்கூட, புதிய துறைகளாகிய சிறு கதை, நாவல் போன்றவற்றிலும், கவிதையிலும் ஈழத்தவர் பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளிலும், தமிழர் வரலாறு, தொல்பொருளியல், பொருளாதாரம், புவியியல் போன்ற துறைகளிலும் பல ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. இலங்கைப் பல்கலைக் கழகத்திலே பல பகுதிகளிலும் தமிழ் அறிஞர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் மிகவும் உயர்ந்த தரமானவை எனப் பிறநாட்டறிஞர்கள் பாராட்டிப் போற்றியிருக்கின்றனர்.



மேலும் தமிழகத்திற்கு அடுத்ததாக ஈழத்திலேயே தமிழ் மொழி உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றது. தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரேசியஸ், இந்தோனேஷியா, வியட்நாம், பிஜி, தென்னாபிரிக்கா, றொடிசியா, குடெலோட், மாற்றினித், றியூனியன், றினிடாட், போன்ற தேசங்களிலே தமிழர் வாழ்கின்றனர்; ஆனால் இத்தேசங்கள் பலவற்றில் அவர்கள் தமிழராக வாழவில்லை. தமிழிற் பிறர் பேசுவது விளங்கினாலும் தமிழிற்பேசமுடியாது தவிக்கின்றனர். சிலர் பெயரளவிலேயே—இங்குள்ள சிலர் போல—தமிழராக இருக்கின்றனர். இந் நிலையிலே தமிழகத்திலும், ஈழத்திலும் தமிழ் வாழுகின்றது; உயிர்த் துடிப்புடன் விளங்குகின்றது; ஈழத்திலே பல்கலைக் கழகத்திற் போதனாமொழியாகவும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய சூழலில் இங்குதமிழாராய்ச்சி மாநாடு கூடுவது பொருத்தமானதே.

இச்சந்தர்ப்பத்திலே அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தோற்றம் பற்றியும், வளர்ச்சி பற்றியும் சிந்தித்தல் அவசியமாகின்றது. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றத்திற்கு இன்னும் 4 நாட்களிற் பத்துவயது முடிகின்றது. 1964ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலகக் கீழைத்தேய அறிஞர் மாநாட்டின் போது, சனவரி 7ஆம் நாள் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவப் பட்டது.

இம்மன்றம் பத்தாம் ஆண்டு பிறந்ததின விழாவை அடுத்த திங்கட்கிழமை 7ஆம் தேதி நான்காம் மகாநாட்டின்போது யாழ்ப்பாணத்தில் கொண்டாட இருக்கின்றது.

பத்தாண்டுக் காலமாக இம் மன்றம் சாதித்தவை யாவும் சொல்லிலடங்கா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இம்மன்றம் நடத்திய ஆராய்ச்சி மாநாடுகளில் அறிஞர்களைக் கருத்து பரிமாறச் செய்ததோடு, பார்வையாளராகக் கலந்துகொண்ட பலர் தமிழாராய்ச்சியில் ஈடுபடவும் ஆராய்ச்சி மகாநாடுகள் காலாக இருந்தன. ஒவ்வொரு மகாநாட்டின் பின்பும் தமிழ் ஆராய்ச்சி செய்வோர் தொகை பெருகிக்கொண்டு வந்தது. கடந்த மூன்று மாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்தோர் பெயர்களையும், நான்காம் மாநாட்டிற் கலந்து கொள்வோர் பெயர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்வுண்மை புலப்படும். ஒவ்வொரு மகாநாட்டிலும் பழைய பிரதிநிதிகளுடன் பல புதிய அறிஞர்களும் கலந்துகொள்வதை அவதானிக்கலாம். எனவே இம் மாநாடுகள் தமிழ் ஆராய்ச்சியில் அறிஞரை ஈடுபடத் தூண்டியதோடு, ஆராய்ச்சியாளர் தொகையையும் விரியச் செய்திருக்கின்றது.

மேலும் இன்று பிறநாடுகள் பலவற்றில் உள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழை ஒரு பாடமாக அமைப்பதற்கும், தமிழாராய்ச்சியில் அப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை ஈடுபடச் செய்வதற்கும் இம் மன்றமே காலாக இருந்தது. ஒரு காலத்தில் மேனாட்டுப் பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருதம் பற்றியும், இந்தோ ஆரிய மொழிகள் பற்றியுமே ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலை மாறி, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு முதலியன பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை அப் பல்கலைக் கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது. முன்பு பிறநாட்டவர் சமயப் பிரசாரத்திற்கும், வணிகப் பெருக்கத்திற்கும், அரசியல் ஆதிக்கத்திற்குமே தமிழைப் பெரும்பாலும் கற்றனர். ஆனால் இன்று ஆராய்ச்சிக்காகவும், தமிழ் மொழியின்



சிறப்பியல்புகளுக்குமாகவே தமிழை அவர்கள் கற்கின்றனர். அவர்களின் தமிழ்ப்பற்றையும், அபிமானத்தையும், அவர்கள் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் தமிழ்ப் பெயர்கள் வைப்பதிலிருந்து மதிப்பிடலாம். ரஸ்யாவிலுள்ள அறிஞர்கள் செம்பியன் ஐங்குன்றன் என்று தமிழப் பெயரைத் தமக்குச் சூட்டிக் கொள்ளும் அளவிற்குத் தமிழபிமானம் கொண்டுள்ளனர். செக்கோசில்வாக்கியாவிலுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தம் மகளுக்குக் கண்ணம்மா என்று பெயரிட்டுள்ளார். இவர்கள் தாம் இறந்த பின்பு தமது கல்லறையில் 'தமிழ் மாணவர்' எனப் பொறிக்கவேண்டுமென விரும்புகின்றனா. தமிழபிமானம் கொண்ட இவர்களை, மறுபிறப்பெடுத்தால் தமிழராகப் பிறக்க விரும்புகின்ற இப் பிறநாட்டவரை, இம்மாநாட்டிற்கு வரவிட வேண்டாமென எம்மிடையே சிலர் வற்புறுத்தியதை நினைக்கும்போது தலை நிமிர்ந்து நிற்கமுடியாமலிருக்கின்றது.

இவ்வாறு பிறநாட்டவரிடையே தமிழார்வத்தையும், தமிழாராய்ச்சியையும் வளர்த்த மன்றத்தின் தொண்டினை மதிப்பிடும்போது, இம்மன்றத்தின் தாபகர் வண. தனிநாயக அடிகளை நாம் பாராட்ட வேண்டியவர்கள் ஆகின்றோம். தனிநாயக அடிகள் தமிழ்த்தூதர்; உலக ஆசைகளைத் துறந்திருப்பினும், தமிழ் ஆசையைத் துறவாதவர். தாம் செல்லும் நாடுகளில் தமிழ்த் தூதராய் விளங்கித் தமிழின் மேன்மையையும், தொன்மையையும் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டுரைகள் எழுதியும், வானொலியிற் பேசியும், அந்த அந்த நாட்டு மக்களுக்குத் தமிழ்மொழியிடத்து அன்பும் அக்கறையும் ஏற்படச் செய்தவர். உலகமெல்லாம் தமிழ் முழங்கத் தமிழ்ப் பண்பாடு (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றைத் தோற்றுவித்து, அதன் ஆசிரியராகவும் பணி செய்தவர். இத்தொண்டுகள் யாவற்றிலும் மேலாக, இதுவரை யாவரும் செய்திராத பெரிய அளவில், ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலுமுள்ள தமிழறிஞர்களை ஒன்று கூட்டி அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை நிறுவியவர்.

எனவே இம்மன்றம் அவரின் குழந்தையாகும். இக்குழந்தையைக் கடந்த பத்தாண்டாகச் சீராட்டித் தாலாட்டி வளர்த்து அதன் பத்தாண்டு நிறைவு விழாவினை, பிற நாட்டுப் பேரறிஞர்களும் கூடியுள்ள இவ்வரங்கிலே, உள்ளம் குளிரக் கண்டு மகிழ்கின்றார். குழந்தை வளர்ப்பு எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் குழந்தைக்குப் பத்தாவது ஆண்டிறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அப்போது குழந்தையைத் தவிக்க வைத்துவிட்டு ஓடிவிட்டார் என்று அடிகளார் மீது பலர் பழி சுமத்த முயன்றார்கள். குழந்தைத் துரோகம் அறியாத தமிழ்ப் பண்பாட்டின் காவலர் ஆவர். எனவேதான், தத்திலிருந்து குழந்தையைத் தப்ப வைக்க எம்மோடு சேர்ந்து உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மகாநாட்டைத் திறந்து வைக்க முன்வந்ததிலிருந்து உலகறியச் செய்திருக்கின்றார். அவருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இம்மகாநாடு, குறுகிய தமிழ் விழா அன்று; அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்பதை நிலை நாட்டுவதற்காக, ஏற்பட்ட இன்னல்களையும், தடைகளையும் பொருட்படுத்தாது இந்தியா, மலேசியா, இங்கிலாந்து, இத்தாலி, சுவீடன், சுவிட்சர்லண்ட், அமெரிக்கா, அங்கேரி, அவுத்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலிருந்து இங்கு வந்து சமூகமளித்துள்ள பிறநாட்டுப் பிரதிநிதிகளுக்குப் பெரிதும் நன்றியுடையோம்.



தமிழ் இனவாதத்தை வளர்ச்சிக்கும் மகாநாடன்று; தேசிய மகாநாடு ஆகும் இம்மகாநாடு என்பதை எடுத்துக்காட்டும் முகமாக இம்மகாநாட்டில் பிரதிநிதிகளாகவும், பார்வையாளராகவும் கலந்து கொள்ளும் சிங்கள முசுலீம் அறிஞர்களையும் நாம் பணிவுடன் வரவேற்கின்றோம். மட்டக் களப்பு, திருகோணமலை, மலைநாடு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களிலிருந்து இங்கு குழுமியுள்ள அன்பர்களுக்கும், எமக்கு உறுதுணையாக இருந்து இம்மகாநாடு திட்டமிட்டபடி நடப்பதற்குப் பலவகையிலும் உதவிய பொது மக்களுக்கும் நாம் தலைவணங்குகின்றோம். ஈழத்திலே இத்தகையதொரு மகாநாடு மொழிக்கென நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். மகாநாடு தொடங்குவதற்கு முன்பே, அது உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது. இம்மகாநாட்டின் வெற்றியை உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. அதற்கு உங்கள் யாவரினதும் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

இறைவன் எம்மை நன்றாகப் படைத்தான் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு.

www.tamilarangam.net

# 26. பத்மநாதனின் வரலாற்று வரிசை

வீரசிங்க மண்டபத்துக்கு எதிரில் உள்ள வீதி; மாநாடு தொடங்கிய மூன்றும் நாள்; இரவு எட்டு மணியிருக்கும்; மக்கள் வரிசை ஒன்று நின்றுகொண்டிருந்தது; வீரசிங்க மண்டபத்தில் இருந்து மாநகர சபையை நோக்கி வரிசை நகர்ந்தது. வரிசையின் நீளம் இரண்டு அயிரமாத்திரி (கிலோமீட்டர்). மாநாட்டு மண்டபத்தில் இருந்து சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு வரிசை நீண்டிருந்தது.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மாநாட்டையொட்டி நடாத்திய கண்காட்சியைக் காணத்தான் இந்த வரிசை. யாழ்ப்பாண வரலாறு காணாத இந்த நீண்ட வரிசையைப் பண்டைய யாழ்ப்பாண வரலாறு எழுதிய கலாநிதி பத்மநாதனே உருவாக்கியிருந்தார். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கண்காட்சி நடந்து கொண்டிருந்த அதே நேரம், கல்லூரி மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தவர்கள் வரிசையில் நின்று பழக்கப் பட்டவர்கள் அல்லர். வரிசையில் நிற்க அவர்களுக்குப் பஞ்சியாக இருக்கும். ஆனாலும் வரலாறு காணாத வரிசையை நீட்டி மாநாட்டை "இதுவரை ஈழம் காணாத" மாநாடாக மாற்றியிருந்தனர். நாமும் மக்கள்; நாம்



யாழ்ப்பாண மக்கள்; நாம் பண்பாடான மக்கள்; அமைதியும் ஒழுங்கும் அடக்கமும் எங்களோடு கூடப் பிறந்தவை என உலகுக்கு அறிவித்தார்கள்.

கலாநிதி சி. பத்மநாதன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார். 'மூன்று மாதங்கள் தாமிருக்கின்றன; மாநாட்டை எப்படி நடத்தலாம்?' என முன்னர் அஞ்சியவர்; நடத்த முடியுமா எனக் கேட்டு எனக்கு எழுதியவர்; அவரது தலைமையை ஏற்று அவரைச் சுற்றிப் பணிபுரிந்த யாழ்ப்பாணத்தவர்கூட்டம் அவரே திகைக்கும் அளவுக்கு மாநாட்டுக் கண்காட்சி சிறப்பாக நடந்திட உதவியது. திரு. அம்பிகைபாகன், யாழ் செயலகத்தில் விலைக்கட்டுப்பாட்டதிகாரியாகப் பணி புரிந்த அன்பர் ஒருவர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி செல்லையா, குரும்பசிட்டி இரா. கனக ரத்தினம், திரு. சிவசாமி, திருமதி திருச்செல்வம் போன்ற பலர் அவருடன் இணைந்து திட்டமிட்டுக் கண்காட்சியை வெற்றியளிக்கச் செய்தனர்.

பழம்பெரும் கல்லூரியான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவரான கலாநிதி பத்மநாதன் அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நவாலியில் திருமணம் புரிந்தவர். குடும்பத்துடன் பேராதனையில் வாழ்பவர். யாழ்ப்பாண அரசு பற்றிய ஆராய்ச்சிக்காக இங்கிலாந்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிய எம்முள் பலர் பெற்றிராத தகைமையையும் பெற்றிருந்தார். பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தனிப்பட்ட அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினராக முன்பு பேராசியர் வித்தியானந்தனை நான் 1968-இல் சென்னை மாநாட்டில் சந்தித்தேன். பின்னர் மாநாட்டு அமைப்புக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழுக் கூட்டங்களிலும் ஏனைய கூட்டங்களிலும் தான் சந்தித்துப் பழகினேன். நான் எந்தப் பாசறையையும் சேர்ந்தவனுமல்ல. ஆனால் கலாநிதி சி. பத்மநாதனே பேராசிரியர் வித்தியானந்தனின் பாசறையைச் சேர்ந் தவர்.

நெட்டையான அவர் மற்றவர்களின் வசதி நோக்கிக் குனிந்து பேசுவார். கையில் தோல் பையுடன்; களைப்புடன் நடக்கும் தோற்றத்துடன், தமிழரின் மாட்சியைக் கண்காட்சியில் காட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அளப்பரியது.

மாநாட்டுக்குத் தடைகள் போடுவதில் அரசு முன் னின்றது. அரசின் பல்வேறு துறைகளும் மாநாட்டுக்கு உதவ மறுத்தன. உணவுப் பொருட்கள் தேவை என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா விடம் நான் சென்றபொழுது அவர் கையை விரித்து விட்டார். ஆனாலும் நாங்கள் அரசின் மீது வெறுப்பு கொள்ளவில்லை.

மாநாட்டுக் கண்காட்சியைத் தொடக்கி வைக்க முதல் நாளன்று அரசாங்க அதிபர் திரு. விமல் அமர சேகராவை அழைக்க வேண்டும் எனத் திருமதி. திருச் செல்வம் முன்மொழிந்த போது யாரும் எதிர்ப்புத் தெரி விக்க வில்லை. திரு. அமரசேகராவும் எமது அழைப்பை ஏற்றார். 4-1-1974 மாலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி யில் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

"தமிழ்மொழியைப் பேசினாலும் சரி, சிங்கள மொழி யைப் பேசினாலும் சரி இலங்கையில் வசிக்கும் நாங்கள் எங்களுடைய பண்புமிக்க கலாச்சாரத்தை நினைத்துப் பெருமைப்படக் கூடியதாக இருக் கிறது. எங்கள் இரு கலாச்சாரங்களும் அக்கம்பக்க மாகச் சேர்ந்து வளர்ந்து ஒன்றையொன்று சிறப்பித்து



நம்மைப் பண்பாடு உள்ளவர்களாக வைத்துள்ளன. இந்தச் சந்தோசமான நிலை என்றும் நிலைக்கவேண்டும் என நான் விரும்புகிறேன். தமிழ் மொழி மிக விருத்தி யடைந்த மொழியென்பதை யாவரும் அறிவர். அந்த மொழியில் மிகப் பாரிய இலக்கியமுண்டு. இலக்கிய மானது மக்களின் கலை-கலாச்சார வளர்ச்சியை எடுத் துக்காட்டுவதாகும். ஒரு சமூகத்தின் இலக்கியத்தின் மூலம் அச்சமூகம் எவ்வளவு பண்பாடு உடையதாக இருக்கிறதென்பதை அறியலாம்" எனத் திரு. விமல் அமரசேகரா கண்காட்சியைத் திறந்து வைத்து உரை யாற்றுகையில் கூறினார். இரண்டாவது நாளன்று கண்காட்சியைக் கலாநிதி பிரிண்ட பெக் திறந்து வைத் தார். கனடாவைச் சேர்ந்த இப்பெண்மணி, தமிழர் உடை உடுத்தி, அழகுத் தமிழ் பேசி, அறிஞர்களையும் மக்களையும் கவர்ந்தார்.

அரசின் முன்னாள்செயலாளரான திரு. ம. சிறீ காந்தா கண்காட்சியைத் திறந்து வைத்த மற்றொரு பெரியாராவர்.

மாநாட்டுக் கண்காட்சியைத் திறந்துவைப்பது பற்றி அமைப்புக் குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததாக 'ஈழநாடு', 'தினபதி' நாளிதழ் களில் செய்திகள் வெளிவந்தன.

"நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டை யொட்டிச் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவரும் கண்காட்சியைத் தினமும் ஒவ்வொரு பிரமுகர் திறந்து வைத்து வருகிறார். அந்த வரிசையில் இன்று புதன் கிழமை யாழ் நகர மேயர் திரு. துரையப்பா இக் கண் காட்சியைத் திறந்து வைக்காமல் தடுக்கவேண்டும் என்ற முயற்சி மாநாட்டு அமைப்புக் குழுவுக்குள்ளேயே ஏற்பட்டு அவர்களுக்கிடையிலேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. நேற்றுச் செவ்வாய்க்கிழமையுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழுக் கூட்டங்களிலும் ஏனைய கூட்டங்களிலும் தான் சந்தித்துப் பழகினேன். நான் எந்தப் பாசறையையும் சேர்ந்தவனுமல்ல. ஆனால் கலாநிதி சி. பத்மநாதனோ பேராசிரியர் வித்தியானந்தனின் பாசறையைச் சேர்ந்தவர்.

நெட்டையான அவர் மற்றவர்களின் வசதி நோக்கிக் குனிந்து பேசுவார். கையில் தோல் பையுடன்; களைப்புடன் நடக்கும் தோற்றத்துடன், தமிழரின் மாட்சியைக் கண்காட்சியில் காட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அளப்பரியது.

மாநாட்டுக்குத் தடைகள் போடுவதில் அரசு முன்னின்றது. அரசின் பல்வேறு துறைகளும் மாநாட்டுக்கு உதவ மறுத்தன. உணவுப் பொருட்கள் தேவை என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவிடம் நான் சென்றபொழுது அவர் கையை விரித்து விட்டார். ஆனாலும் நாங்கள் அரசின் மீது வெறுப்பு கொள்ளவில்லை.

மாநாட்டுக் கண்காட்சியைத் தொடக்கி வைக்க முதல் நாளன்று அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவை அழைக்க வேண்டும் எனத் திருமதி. திருச்செல்வம் முன்மொழிந்த போது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. திரு. அமரசேகராவும் எமது அழைப்பை ஏற்றார். 4-1-1974 மாலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

"தமிழ்மொழியைப் பேசினாலும் சரி, சிங்களமொழியைப் பேசினாலும் சரி இலங்கையில் வசிக்கும் நாங்கள் எங்களுடைய பண்புமிக்க கலாச்சாரத்தை நினைத்துப் பெருமைப்படக் கூடியதாக இருக்கிறது. எங்கள் இரு கலாச்சாரங்களும் அக்கம்பக்கமாகச் சேர்ந்து வளர்ந்து ஒன்றையொன்று சிறப்பித்து



நம்மைப் பண்பாடு உள்ளவர்களாக வைத்துள்ளன. இந்தச் சந்தோசமான நிலை என்றும் நிலைக்கவேண்டும் என நான் விரும்புகிறேன். தமிழ் மொழி மிக விருத்தியடைந்த மொழியென்பதை யாவரும் அறிவர். அந்த மொழியில் மிகப் பாரிய இலக்கியமுண்டு. இலக்கியமானது மக்களின் கலை—கலாச்சார வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகும். ஒரு சமூகத்தின் இலக்கியத்தின் மூலம் அச்சமூகம் எவ்வளவு பண்பாடு உடையதாக இருக்கிறதென்பதை அறியலாம்'' எனத் திரு. விமல் அமரசேகரா கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார். இரண்டாவது நாளன்று கண்காட்சியைக் கலாநிதி பிரிண்ட பெக் திறந்து வைத்தார். கனடாவைச் சேர்ந்த இப்பெண்மணி, தமிழர் உடை உடுத்தி, அழகுத் தமிழ் பேசி, அறிஞர்களையும் மக்களையும் கவர்ந்தார்.

அரசின் முன்னாள்செயலாளரான திரு. ம. சிறீகாந்தா கண்காட்சியைத் திறந்து வைத்த மற்றொரு பெரியாராவர்.

மாநாட்டுக் கண்காட்சியைத் திறந்துவைப்பது பற்றி அமைப்புக் குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததாக 'ஈழநாடு', 'தினபதி' நாளிதழ்களில் செய்திகள் வெளிவந்தன.

"நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டிச் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவரும் கண்காட்சியைத் தினமும் ஒவ்வொரு பிரமுகர் திறந்து வைத்து வருகிறார். அந்த வரிசையில் இன்று புதன் கிழமை யாழ் நகர மேயர் திரு. துரையப்பா இக் கண்காட்சியைத் திறந்து வைக்காமல் தடுக்கவேண்டும் என்ற முயற்சி மாநாட்டு அமைப்புக் குழுவுக்குள்ளேயே ஏற்பட்டு அவர்களுக்கிடையிலேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. நேற்றுச் செவ்வாய்க்கிழமையுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்காட்சி முடிவடையுமென்று நேற்று முன்தினம் கண்காட்சியிலேயே ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப் பட்டது.'' இவ்வாறு 'ஈழநாடு' 9-1-1974 ல் செய்தி வெளியிட்டிருந்தது.

மாநாடு நடைபெறுவதற்குச் சில தடைகளை அரசு போட்டது; பின்னர் நீக்கியது: தடைகள் நீக்கப்பட்ட பின் யாழ். மாநகராட்சி முதல்வர் மாநகராட்சியின் முழு ஒத்துழைப்பையும் நல்கினார். முன்பு திட்டமிட்டபடி அவர் மாநாட்டு நாட்களில் தமிழ்நாட்டுக்குச் சென்றார். 9-1-1974 அன்று யாழ்ப்பாணம் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றார். செல்லுமுன்பு, 9-1-1974-இல் மாநாட்டு அறிஞர்கட்கு மாநகராட்சி விருந்து வழங்கும் எனவும், அன்றைய தினம் கண்காட்சியை மாநகராட்சி முதல்வர் திறந்து வைப்பது எனவும் கூறியிருந்தார் போலும்.

9-1-1974-இல் மாநகராட்சி மாலைத்தேநீர் வழங்க மட்டுமே இடமுள்ளதை நான் மாநகராட்சி ஆணையாளரிடம் தெரிவித்தேன். ஏனைய உணவு விருந்துகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன. இதை ஏற்றுக் கொண்ட அவர்கள் அதற்கேற்ப ஒழுங்கு செய்தனர்.

கண்காட்சியையும் திரு. அல்பிரட் துரையப்பா திறந்து வைப்பார் என்ற செய்தி பரவியிருந்தது. மல்லாகம் வழக்கறிஞர் திரு. நடராசா ஒருநாள் மாநாட்டுச் செயலக வாயிலில் நின்று, உரத்த குரலில், "திரு. அல்பிரட் துரையப்பா கண்காட்சியைத் திறந்து வைத்தால் மாநாட்டில் அரசியல்வாதிகட்கு இடம் கொடுக்கப்பட்டதாகிவிடும்'' என்றார். தமிழர் கூட்டணி ஆதரவாளரான அவர் அவ்வாறு செய்தமை ஏற்புடைத்தாக இல்லை என நான் கருதினேன்.



அவரிடம் சென்று, "அமைப்புக்குழுவுக்குச் சிங்கள அரசியல்வாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்படுத்திய சோதனைகளைத் தாண்டி வந்துள்ளோம். இப்பொழுது புதிய சோதனைகளை ஏற்படுத்த வேண்டாம். திரு. அல்பிரட் துரையப்பா கண்காட்சியைத் திறந்து வைப்பார் என அமைப்புக்குழு முடிவு ஏதும் செய்யுமுன்பே நீங்கள் சத்தம் போடுகின்றீர்களே, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தவிடத் தமிழர் கூட்டணிக்கும் விருப்பமில்லை போலும்'' என்றேன்.

சுட்டுவிரலை உயர்த்தினார். "துரோகிகட்கு இடமில்லாமல் மாநாட்டை நடாத்துங்கள்'' எனக் கூறிவிட்டுப் போய்விட்டார். மீண்டும் மிரட்டல்; நாங்கள் அஞ்சவில்லை.

9-1-1974-இல் அலங்காரப் பவனிக்கு ஏற்பாடாகி இருந்தது. அன்று இரவு பேராசிரியர் வித்தியானந்தன் வெளிநாட்டு அறிஞர்கட்கு விருந்து உணவு வழங்க இருந்தார். அமைப்புக்குழு உறுப்பினர்கள் யாவரும் களைப்புற்றிருந்தோம். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியினர் 8-1-1974 மாலை வரைதான் கண்காட்சிக்கு அநுமதி தந்திருந்தனர். 8-1-1974க்குப் பின் கண்காட்சியை நடத்த முடியாது எனக் கலாநிதி பத்மநாதன் உறுதியாகக் கூறினார். 8-1-1974 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு, ஆனைப்பந்தி மைற் மண்டபத்தில் நடந்த அமைப்புக்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப் பெற்றது. அமைப்புச் செயலாளர் திரு. வி. எசு. துரைராசா இத்தீர்மானத்தால் சிறிதே சஞ்சலமடைந்தார். அரசியல் நடுநிலையிலிருந்து பிறழக்கூடாதென்பதை அமைப்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் உணர்ந்திருந்தோம். கண்காட்சி அமைப்பில் உள்ள இடர்ப்பாடு எமது அரசியல் நடுநிலையையும் பேணக் கூடியதாக அமைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 27. பேரின்பநாயகமும் பேரின்பச் சுற்றுலாக்களும்

'9-1-1974 அன்று மாலை மாநகராட்சி முதல்வர் தேநீர் விருந்து வழங்குவார். வருக, வருக' என்ற அழைப்பிதழ் மாநகராட்சியின் ஆணையாளரால் அனுப்பப் பெற்றது. மாநகராட்சி முதல்வரோ தமிழ் நாட்டில் சுற்றுலா மேற்கொண்டிருந்தார். யாழ்ப் பாணம் விழாக் கோலம் பூண்டிருந்தது. உலகத் தமிழ் அறிஞர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். யாழ்ப் பாணத்தின் முதற்குடிமகன் யாழ்ப்பாணத்தைவிட்டு ஏன் ஓடினார் என யாழ்ப்பாண மக்கள் கேட்டனர்.

மாநகராட்சி உறுப்பினர்கள் சிலர், மாநாட்டு வெற்றிக்காகவும், யாழ்ப்பாணம் விழாக் கோலம் கொள்ளவும், அல்லும் பகலும் அயராது உழைத்தனர். மாநகராட்சி முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பமாட்டார். தேநீர் விருந்தில் கலந்து கொள்ளமாட்டார். யாழ்ப் பாணத்தின் முதல் குடிமகன் நடத்தும் தேநீர் விருந் துக்கு அவரே வரமாட்டார்; எனவே உறுப்பினர் களாகிய நாங்களும் போகமாட்டோம் எனத் தீர்மானித் தனர். இச்செய்தி நாளிதழ்களில் வெளிவந்தது.

இச்செய்தியைத் தொடர்ந்து ஒரு துண்டு விளம்பரம் மாநாட்டு அறிஞர்களிடையே விநியோகிக்



கப்பட்டது. மாநாடு நடைபெறும் அரங்குகளிலோ மண்டபங்களிலோ துண்டு விளம்பரத்தைக் காண முடியவில்லை. அறிஞர்கள் தங்கியிருந்த விடுதிகட்கும் வீடுகட்கும் சிலர் சென்றனர். திரு. சிறிபத்மநாதன் என்ற இளைஞர் இந்த முயற்சிக்குத் தலைமை தாங்கினார். ஒவ்வோர் அறிஞரிடமும், 'மாநகராட்சி முதல்வர் தேநீர் விருந்துக்கு வரமாட்டார். மாநாட்டை நடத்தவிடாமல் தடைசெய்ய முயன்றவர், மாநாடு நடக்கும்போது தமிழ்நாட்டுக்குத் தாவியவர், தேநீர் விருந்துக்கு அழைத்துவிட்டு வராமலே நின்றுவிடுவார். மாநாட்டு அறிஞர்களின் முகத்தில் கரிபூசவே இத்தகைய ஏற்பாட்டைச் செய்துள்ளார்' எனப்பிரசாரம் செய்யப் பட்டது. துண்டு விளம்பரங்களிலும் இச்செய்தி கூறப்பெற்றிருந்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, மருத்துவர் சோமசுந்தர பாரதி, சிறீகாந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை, 'மில்க்வைற்' சவர்க்காரத் தொழிற்சாலை உரிமையாளர் திரு. கனகராசா, இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் தேநீர் விருந்தை வழங்கினர். இதற்கான அழைப்பிதழ்கள் அச்சிடப் பெற்று உரியவர்கட்கு வழங்கப்பெற்றன. மிட்டாய்க் கடை வைத்திருந்த வறியவரான ஓர் அன்பர்—அவர் இப்பொழுது கல்முனையில் இருக்கிறார்—தமிழ் ஆர்வத் தால் தேநீர் விருந்து வைத்தார். யாழ்ப்பாண இல்லத் தரசிகள் குழு, மிகத் திறமையான முறையில் பலகார வகைகளையும் இனிப்பு வகைகளையும் தயாரித்துத் தொண்டர்களின் உதவியுடன் தேநீரை வழங்கியது. அவரவர் வசதியைப் பொறுத்து அறிஞர்களும் பிறரும் தேநீர் விருந்துகளில் கலந்துகொண்டனர். மாநகராட்சி யின் அழைப்பிதழ்களையும் நான் எல்லாரிடமும் விநி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோசித்தேன். **9-1-1974** அன்று மாநகராட்சி முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார். தேநீர் விருந்துக்குத் தலைமை தாங்கினார். பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்களும் ஏனைய உறுப்பினர்களும் விருந்துக்குச் சென்றனர். திரு. சிறீபத்மநாதனின் பிரசாரத்தின் பயனாகவோ, வசதியின்மை காரணமாகவோ வெளிநாட்டு அறிஞர்கள் எவரும் தேநீர் விருந்தில் கலந்து கொள்ளவில்லை. "வரவேற்பில் கலந்து கொள்ள விரும்பினேன். ஆனால் கடந்த ஒரு வாரமாக யாழ்நகரில் நான் இருந்ததில் இருந்து பொது மக்களின் கருத்தை ஒருவாறு புரிந்து கொள்ள முடிந்தது. எனவே, மக்களின் கருத்துக்கு நான் மதிப்பளிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்" எனத் தமிழ்நாட்டு அறிஞர் புலவர் இராசு தெரிவித்தார்.

மாநகராட்சி முதல்வரின் தேநீர் விருந்தில் நானும் திரு. பேரின்பநாயகமும் கலந்து கொள்ளவில்லை. திரு. பேரின்பநாயகம் துடிதுடிப்புள்ள இளைஞர். நீர் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் திறம்பட இயங்கக் காரணமாக உள்ளவர். போக்குவரத்துக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போது அவரின் திறமை ஒன்றே தகுதியாகக் கருதப்பட்டது.

தொண்டர்களைத் தெரிவு செய்தபொழுது, திரு. செந்தூர்செல்வன் என்ற இளைஞர் தமது இயங்கியுடன் (காருடன்) வந்தார்; 'நானும் தொண்டன். எனது காரும் தொண்டன். எந்த நேரமும் எந்தப் பணிக்கும் இருவரும் தயார்' எனக் கூறினார். திரு. பேரின்பநாயகத்திடம் இயங்கி (கார்) இருக்கவில்லை. அவரிடம் திரு. செந்தூர்ச்செல்வனை அறிமுகம் செய்து, 'போக்குவரத்துக் குழுவின் முழுநேரத் தொண்டராகப்



பணிபுரிவார்' எனக் கூறினேன். அந்தநேரத்தில் இருந்து இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர்.

யார் யார் எங்கெங்கு போக வேண்டும் எனினும் திரு. பேரின்பநாயகம் அங்கங்கே அவரவரை அனுப்பினார். இயங்கிகள் (கார்கள்), பேருந்துகள், மிதிவண்டிகள் ஓடின. யாழ்ப்பாணத்தில் உள்ள பலர் தமது இயங்கிகளை மாநாட்டுச் செயலகத்திற்குத் தினம் தோறும் கன்னெயை (பெற்றோலை) நிரப்பி, ஓட்டுநரையும் வைத்துக் காலை ஆறுமணிக்கு அனுப்பி இரவு பத்து மணிக்கு மீளப் பெற்றனர். தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் 'நான்முந்தி நீ முந்தி' எனத் தமது வாகனங்களை அனுப்பினர். திரு. பேரின்பநாயகம் அவற்றைத் திருப்பி அனுப்பினார். அரசியல்வாடையை வாகனங்கள் கொண்டுவரக் கூடாதென்பதில் அவர் மிகக் கவனமாக இருந்து அமைப்புக் குழுவின் பொறுப்புகளைக் கண்ணியத்துடன் நிறைவேற்றினார். மருத்துவர் சபாரத்தினம், திரு. வி. எசு. துரைராசா, திரு. கனகராசா, திருமதி திருச செல்வம், திரு. அரசரட்ணம், திரு. சண்முகநாதன் ஆகியோர் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தினர். நண்பர்களின் இயங்கிகளை வரவழைத்தனர். திரு. பேரின்பநாயகமும் திரு. செந்தூர்ச் செல்வனும், வந்த இயங்கிகள் எப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கும் வகையில் திட்டம் போட்டு இணைப்பு ஏற்படுத்தினர்.

மாநாட்டையொட்டிப் பொதுமக்கள் இடையூறின்றிப் பயணம் செய்வதிலும் திரு. பேரின்பநாயகம் அக்கறை கொண்டார். "தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் ஏழு தினங்களும் யாழ் குடாநாடு முழுவதும் மேலதிகப் பேருந்துச் சேவையை ஒழுங்கு செய்யுமாறும் முக்கிய இடங்களுக்கு நள்ளிரவுப் பேருந்துச் சேவையை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் மாநாட்டுக் குழுவினர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகளைக் கேட்டுள்ளதாக மாநாட்டுக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். பேருந்து ஊழியர்கள் மாநாடு சிறப்புற முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க முன் வந்திருப்பதோடு மாநாட்டிற்காக நன்கொடையும் வழங்கியுள்ளனர்." இவ்வாறு 2-1-1974 'ஈழநாடு' நாளிதழில் தெரிவிக்கப்பெற்றது.

மாநாட்டு அமைப்புக்கென 1973 மார்கழி முதல் வாரம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்தேன். நாள்தோறும் காலை ஏழு மணிக்கு வீட்டை விட்டு மிதிவண்டியில் புறப்படுவேன். மாநாட்டுச் செயலகம் செல்வேன். மிதிவண்டியிலே பல இடங்கட்கும் செல்வேன். மாநாடு தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன் திரு. பேரின்பநாயகம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். வந்த சில நாட்களுள் நாள்தொறும் காலையில் என்னை அழைக்க இயங்கி (கார்) அனுப்பினார். என்னை மட்டுமின்றி மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இயங்கி அனுப்பினார். திரு. செந்தூர்ச்செல்வன் நாள்தொறும் பேராசிரியர் வித்தியானந்தனை அழைத்துச் செல்லும் ஓட்டுநர் ஆனார்.

6-1-1974 மாநாட்டின் நான்காம் நாள்; அன்று ஞாயிற்றுக்கிழமை; ஓய்வு நாள்; அறிஞர்கட்கு மட்டும் தான் ஓய்வு நாள்.

வெளிநாட்டு அறிஞர்கள் மரபு முறைப்படி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் சுற்றுலாவரத் திரு. பேரின்பநாயகம் ஏற்பாடு செய்தார். ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பேருந்து புறப்பட்டது. முதலில் கீரிமலைக்கேணியில் நீராடச் சென்றனர். பின்னர் காங்கேயன்துறை பைஞ்சுதை (சிமெண்ட்) தொழிற்



சாலையில் காலை உணவு உண்டனர். பழமையான மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைத் தரிசித்தனர். வட்டுக்கோட்டை செல்லும் வழியில் சுன்னாகத்தில் கந்தரோடைப் புதைபொருள் அகழ்வுகளைக் கண்டனர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் வரவேற்பு, விருந்துபசாரம், நடைபெற்றன. மாலையில் பருத்தித்துறைக்கும், நெல்லியடிக்கும் சென்றனர். சாவகச்சேரி சென்றனர். 'சென்ற இடமெல்லாம் சிறப்பு கற்றோர்க்கு உண்டு' என ஔவையார் கூறவில்லையா?

"சுமார் 20 பேர்களைக் கொண்ட இந்த வெளிநாட்டு அறிஞர்கள் குழாம் சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அறிஞர்கள் பலரும், குறிப்பாக மேலைநாட்டு அறிஞர்கள் ஆங்காங்கே தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்களின் போதும் அங்கு நின்ற மக்களுடன் தமிழில் உரையாடி இலங்கைத் தமிழ்மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, அரசியல் பின்னணி என்பனவற்றை அவர்களிடமே அறிந்து கொண்டனர். வெளிநாட்டு அறிஞர்களைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. ச. அம்பிகைபாகன் ஆகிய பிரமுகர்கள் அடங்கிய குழு நேற்றுப் பல இடங்கட்கும் அழைத்துச் சென்றது" எனத் 'தினபதி' 7-1-1974 நாளிதழில் செய்தி வெளிவந்தது.

"யாழப்பாணத்து இளநீர் தனி அழகானது. அத்துடன் அதன் சுவையும் தனியானது. அதனைப் போலவே யாழ்ப்பாண மக்களின் இனிமையையும் நான் கண்டுள்ளேன். ஆகையால் இளநீர் என்பதை 'ஈழநீர்' எனவே அழைக்க விரும்புகிறேன்." இவ்வாறு மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. எம். சண்முகம்பிள்ளை நெல்லியடியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறினர். பல வெளிநாட்டறிஞர்கள் உரையாற்றிய இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நெல்லியடி அதுவரை காணாத கூட்டம் வரவேற்பு வைபவத்தில் கூடியிருந்தது.

அன்று இரவு சாவகச்சேரி நகராட்சி, அறிஞர்களுக்கு வரவேற்பு அளித்தது. சந்தை மைதானத்தில் வழக்கறிஞர் எசு. கே. திரவியநாயகம் அவர்கள் தலைமையில் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது. வெளிநாட்டு அறிஞர்களின் உரைகளை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டனர். மக்கள் வெள்ளமாகத் திரண்டிருந்தனர். வரவேற்பு முடிவடைந்ததும் யாழ்ப்பாண நகை வியாபாரிகள் கன்னாதிட்டியில் அளித்த இரவு விருந்துக்கு அறிஞர்கள் வந்தபோது இரவு 11.00 மணியாகியிருந்தது.

# 28. இயல்பூக்கத்தின் எதிரொலிகள்

பரந்த புல்வெளி; பசுமை படர்ந்த நிலம்; ஏராளமான மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன; திடீரென ஒரு நாள் அந்த மாடுகள் புல்வெளியை விட்டு நகரத் தொடங்கின. மாடுகள் விட்டு நீங்கிய மூன்றாம் நாள், புல்வெளியை மையமாகக் கொண்டு நிலம் நடுங்கியது. புயல் காற்றும் மழையும் வீசியது.

பல தலைமுறைகளாக நடைபெறாத நிகழ்வு அன்று நடந்தது. ஆனாலும் மாடுகள் நிகழ்வை முன்கூட்டியே உய்த்துணர்ந்து பாதுகாப்புக்காகப் புல்வெளியை விட்டு வெளியேறின. மாடுகள் மட்டுமல்ல; பறவைகள் கூட நெடுந்தொலைவில் இருந்து இடம் பெயர்வன; வழிகாட்டல் இல்லாமல் தம் தாயகத்தை உய்த்துணரக் கூடியன. இந்த இயல்பு, இந்த உணர்வு, இந்த ஆற்றல் இயலபூக்கமாகப் பறவைகளின், விலங்குகளின் ஊனுடனும் உணர்வுடனும் கலந்து தலைமுறைகளையும் துய்ப்பறிவுகளையும் கடந்து செயற்படுவன.

அனைத்துலக மாநாடுகளை நடாத்தி யாழ்ப்பாணத்தவர்க்குப் பழக்கம் இல்லை. யாழ்ப்பாண அரசு ஆட்சி செய்த காலத்தில் தமிழ் நாட்டுப் புலவர்களை யாழ்ப்பாண அரசர்கள் ஆதரித்தனர்; அரபு, பாரசீகம், இந்துத்தானம், வங்காளம், சிங்களம் ஆகிய பல பிற நாட்டுப் புலவர்களையும் ஆதரித்தனர். அடிமை ஆட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்பட்டபின்னர் பன்னாட்டுப்புலவர்களும் யாழ்ப்பாணம் வரவில்லை. பன்னாட்டுப் புலவர்களை வரவேற்றல், ஆதரவளித்தல், வாழ்வளித்தல் போன்ற இயல்புகளை யும் யாழ்ப்பாணத் தமிழர்கள் பல தலைமுறைகளாக மறந்திருந்தனர்; பட்டறிவுகளை இழந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மாநாடு நடக்குமா, நடக்காதா? நடந்தாலும் பன்னாட்டுப் புலவர்களும் வருவார்களா, வரமாட்டார்களா? இப்படியான குழப்பமான கேள்விக் குறிகள் யாழ்ப்பாணத்தவர்களின் உள்ளத்தில் நிரம்பி இருந்ததால் மாநாட்டுக்கான அடுக்குகளையோ ஆயத் தங்களையோ செய்யவில்லை.

தொடக்கவிழா வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்றபொழுது தமிழறிஞர்களை விடப் பொதுமக்கள் தாம் ஆயிரக்கணக்கில் வெயிலில் காய்ந்து நின்று விழாவைப் பார்க்க முயன்றார்கள். வெளிநாட்டறிஞர் கள் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள்; தொடக்கவிழா வில் கலந்து கொண்டார்கள்; தமிழில் உரையாற்றினார் கள்; மாநாடு நடக்கின்றது; யாழ்ப்பாணத்தில் நடக் கின்றது; மாநாட்டு அமைப்பாளர்களின் திண்ணிய நெஞ்சம் எண்ணியதை எண்ணியாங்கு செய்துவிட்டது.

இந்தச் செய்தி காட்டுத்தீபோல் உடனே யாழ்ப் பாணக் குடா நாடெங்கும் பரவியது. குடாநாட்டைக் கடந்து தொலைபேசிகளிலும் தொலை வரிகளிலும் (தந்தி களிலும்), பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் செய்திகள் ஈழத் தமிழ்நிலம் எங்கும் பரவின; தமிழரைப் பரவசப் படுத்தின.

வளர்ந்த தென்னை மரம்; காய்கள் குலுங்கின; இளநீர்கள் மதகளித்தன; இந்த அழகான மரம் வளவுக்குள் நின்றென்ன பயன்? யாழ்ப்பாணத்தின் இந்த அழகைப் பன்னாட்டு அறிஞர்களும் பார்க்க வேண்டாமா? சுவைக்க வேண்டாமா?



இளைஞர்கள் கூடினார்கள்; உயர்ந்த மரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்தார்கள்; நாலு வீதிகள் கூடும் சந்தியில் நிமிர்த்தினார்கள். பல ஆண்டுகளுக்குப் பயன்தரக் கூடிய நெடிய தென்னை, சில நாட்களின் யாழ்ப்பாண அழகை மெருகூட்டச் சந்திக்கு வந்தது.

வெறுமனே சந்திகளில் கூடிய வீதிகள் தென்னை மரத்தடியில் கூடின. பனைமரங்கள் சந்திக்கு வந்தன. கமுகுகள் சந்திக்கு வந்தன. பூவரசுகள், மூங்கில்கள், சவுக்கு மரங்கள், பச்செனத் தெரியும் யாவும் வீதிக்கு வந்தன. சாலைகள் அனைத்தையும் யாழ்ப்பாண இளைஞர்கள் சோலைகளாக்கினர். தைமாதத்துப் பனி, இலைகளின் பசுமையைச் சில நாட்களுக்கு கெடாது காத்து இளைஞர்கட்கு உதவியது.

பனைமரங்களோ தென்னைமரங்களோ சந்திக்கு வந்த நிகழ்ச்சி முன்னோடி இல்லாதது. இளைஞர்கள் வேறெங்கும் பார்த்தறியாதது. தலைமுறைக் கூடாக வந்த பட்டறிவுத் துணை இல்லாதது.

தமிழ் வாழ்கின்றது, வளம் பெறுகின்றது. உலகெங்கும் உலவுகின்றது; உலகின் மூலை முடுக்கில் இருந்து தமிழ்ச் செய்தியுடன் அறிஞர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். யாழ்ப்பாண இளைஞர்கட்கு இந்த நிகழ்வு ஊக்கத்தைத் தந்தது; உற்சாகத்தை அளித்தது. யாரும் வழிகாட்டாமலே, இப்படித்தான் செய்ய வேண்டும் எனக் கூறாமலே, தன்னிச்சையாக, உயத் துணர்வு உந்த, இயல்பூக்கம் இயக்க, முந்திய தலைமுறைகள் செய்யாததை, பட்டறிவில்லாததைச் செய்தார்கள், வரலாறு படைத்தார்கள். ஊனோடு, உணர்வோடு, உள்ளத்தோடு கலந்த தமிழுணர்வு வெள்ளமாகத் தீடீரெனப் பெருக, இச்செயல்கள் மூலம் அடிகால் அமைத்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கு நுழைவாயில் ஆனையிறவு. மேற்கு நுழைவாயில் ஊர்காவற்றுறை. ஆனையிறவு தொடக்கம் ஊர்காவற்றுறை வரை ஏறத்தாழ 65 அயிரமாத்திரி(கிலோமீட்டர்) தூரம். இந்த நெடுந்தொலைவு முழுவதும் வீதியின் இரு மருங்கிலும் தோரணங்கள் கட்டப்பெற்றிருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டால் தோரணங்கள் கட்டப் பெறாத வீதிகள், ஒழுங்கைகள் இருக்கவில்லை. பனையும் தென்னையும் நிறுத்தப் பெறாத சந்திகள் இருக்கவில்லை. அலங்கரிக்கப்பெறாத பொது இடங்கள் காணப் படவில்லை. வாகை கட்டாத கடைமுகப்புகள் தென்படவில்லை. கோலம் போடாத வீட்டு வாயில்கள் இருக்கவில்லை.

"தமிழ் உணர்ச்சி பிரவாகம் எடுத்துள்ளது" எனக் கல்வெட்டு நிபுணரான ஈரோட்டைச் சேர்ந்த புலவர் செ. இராசு கூறினார்.

வீடுகளுக்குள் இருந்த அழகுப் பொருட்கள் வீதிக்கு வந்தன. 'இத்தனைப் பொருட்களும் யாழ்ப்பாணத்தில் இருந்தனவா?' என எண்ணும்படி வெளியே வந்தன. 'சிகரங்கள் என யாழ்ப்பாணத்தவரால் அழைக்கப் பெறும் அலங்கார அடுக்குப் பந்தல்கள் யாவும் தெருக் களில் அடுக்கி உயர்த்தப் பெற்றன. யாளிகளும் வாகனங்களும் கோவில்களுக்குள்ளிருந்து வெளியே வந்தன; அழகாக அடுக்கப் பெற்றன.

அலங்கார வளைவுகள் அமைக்கப் பெற்றன. 'வருக, வருக' என்ற வான்முட்டும் குரல்கள் ஒலிகளாக எழுப்பப் பெறவில்லை. எழுத்துகளாக உயர்த்தப் பெற்றன. எங்கெங்கும் காணப்பெற்றன. தமிழ்ப் பெரியார்களின் படங்கள் வளைவுகளை நிரப்பின. பேரறிஞர் அண்ணாவுக்குப் பல இடங்களில் படங்கள்



அமைக்கப் பெற்றன. ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், ஞானப்பிரகாச அடிகள் இப்படிப் பலர் சிலை யாகவும் சித்திரமாகவும் உருப்பெற்றனர்.

மின்சாரம் இல்லாத ஊர்களில் சந்திகள் தோறும் தனியாரின் மின் உற்பத்தி எந்திரங்கள் இரவு முழு வதும் புகை தள்ளின; ஒளிபெருக்கின. ஒலி பெருக் கிகள் தமிழ்ப் பாடல்களை இடைவிடாது ஒலி பெருக் கின. பகலில் மாநாட்டுப் பொது அரங்கிலும், குழு அரங்கிலும் நடைபெற்ற நிகழ்வுகள், பேச்சுகள் பதிவாகி இரவெல்லாம் இச்சந்திகளில் கேட்கப் பெற்றன.

யாழ் நகருக்குள் மாத்திரம் பேருந்து நிலையத்தைச் சுற்றி 100 ஒலிபெருக்கிகள் வெவ்வேறு நிகழ்ச்சிகளை உச்ச ஒலியில் உரத்துப் பரப்ப, காதுகள் செவிடா காமல் தப்பியவர், இரவில் கண்கள் கொள்ளாத ஒளி வெள்ளத்துள் இருள் தேடினர்.

'இந்த நாட்களில் பகட்டான ஒளியும் ஒலியும் காட்டி, அலங்காரம் செய்ய முடியாத பணத்தால் என்ன பயன்?' என வணிகர்கள் எண்ணினர். ஒருவர்க் கொருவர் போட்டி போட்டுக்கொண்டு பணம் செல வழித்துத் தமிழன்னையின் பாதங்களில் மலரால் அழ கூட்டுவதென எண்ணி, நகரை அழகூட்டி மகிழ்ந் தனர்.

மாநாட்டையொட்டி மூன்று அரங்குகளில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருந்தன. இவை போதா வென்று, வணிகர்கள், பேருந்து நிலையத்தின் முன்னே 24 மணி நேரமும் இடைவிடாத மேளக் கச்சேரிகளைத் தொடர்ந்து சில நாட்கள்நடத்தினர். மாறி மாறிப் பல கலைஞர்கள் நாதசுர—மேள இசை மழை பொழிந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சந்திகள் தோறும் அரங்குகள் எழுந்தன. மாநாட்டுக் கலை நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாதவர்கள், தத்தம் ஊரிலேயே மாநாட்டின் கலைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தனர். மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டு அறிஞர்களை இந்த அரங்குகளில் உரை நிகழ்த்த அழைத்தனர். புகழ் பெற்ற இயல், இசை, நாட்டியக் கலைஞர்கள் இந்த அரங்குகளில் மக்களை மகிழ்வித்தனர்.

'இந்த நாட்கள், இந்த நேரங்கள், இந்த நாட்டில், இவை விட்டால் இனியில்லை. இங்கே, இப்பொழுதே, வெளிநாட்டார் முன் எம் மண்ணின் மாட்சியைக் காட்டுவோம்' எனத் தமிழ் இளைஞர்கள் ஊர் தொறும் உவப்புடன் உலக அறிஞர்களை வரவேற்றனர்.

"தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையொட்டி வவுனியாவில் வைக்கப்பட்டிருந்த பண்டாரவன்னியன் உருவைக் கொண்ட நுழைவாயில் அமைப்பு கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. பொலிசார் இந்தப் பண்டாரவன்னியன் நுழைவாயிலை அமைக்க அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். இதன் பின்னர் மக்கள் ஒன்று கூடி அந்தப் பண்டார வன்னியனின் நுழைவாயிலை வவுனியாச் சந்தை மைதானத்தில் அமைத்தனர். இதனைத் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டனர். வீதிகள் தோறும் தோரணங்களினாலும் சோடனைகளாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன. கடைகளும் அலங்கரிக்கப்பட்டுள்ளன." இவ்வாறு வவுனியாவில் இருந்து வந்த செய்தியை 'ஈழநாடு' நாளிதழ் வெளியிட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா 150 கிலோ மீட்டர் தொலைவு. யாழ்ப்பாணம் வந்து விழாவைப் பார்க்கமுடியாதவர்கள், வவுனியாவிலேயே விழா நடத்தினார்கள். வவுனியாவுக்கு வெளிநாட்டு அறிஞர்கள் போகவில்லை. ஆனாலும் மக்களின் தமிழார்வம் வெளிப்படத் தவறவில்லை. வவுனியாப் பகுதியில் ஆட்சி செய்த சிற்றரசனே பண்டார வன்னியன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் அப்பகுதி அந்நியரின் ஆட்சிக்குட்பட்டது. எனினும் பண்டார வன்னியனின் உருவச்சிலை கொண்ட அலங்கார வளைவை நிறுவக் காவல்துறையினர் அனுமதிக்க வில்லை. கட்டப்பொம்மனுக்குச் சிலை அமைக்கத் தமிழ் நாட்டின் காவல் துறையினர் அனுமதி மறுத்தால் தமிழக மக்களின் மனநிலை எவ்வாறிருக்கும்?



"மாநாட்டு அமைப்பாளர்கள் மாநாட்டைத் தமிழாராய்ச்சியாளர்கட்கு மட்டும்தான் திறந்து விட்டனர். சாதாரணத் தமிழ் மகன் ஒருவன் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளக் கூடியதாக இல்லையே, சென்னையில் நடத்தியது போன்ற தமிழ்விழாவை மக்களுக்காக நடத்தினால் என்ன?" என்ற வினா எல்லாப் பக்கமும் இருந்து வந்தது. இதையே கருப்பொருளாகக் கொண்ட தலையங்கம் ஒன்று 'ஈழநாடு' நாளிதழில் வெளி வந்தது:

..."இன்று நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டில் சாதாரண மனிதன் தனக்கும் ஒருபங்கு இருத்தல் வேண்டுமென்று விரும்புவதில் தவறு இருப்பதாகக் கருத முடியாது. என்றாலும் இதுவரையில் அந்தச் சாதாரண மனிதனுக்குப் போதிய இடம் கிடைத்து விட்டதா என்ற கேள்வியை நாம் எழுப்பாமல் இருக்க முடியாது.

"மாநாட்டின் ஆரம்ப விழா வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்த முறையும், உள்ளே அனுமதிக்கப்பட்ட விதமும் பொதுமக்கள் மத்தியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்ச்சை ஒன்று உருவாக வழி வகுத்துவிட்டது என்பது உண்மை. தமிழ் அறிந்த பெரியோர் பலர் வெளியில் காத்திருக்க நேர்ந்தது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வெயிலில் காய்ந்தும் நிகழ்ச்சிகளைச் சரியாக கேட்கவும் முடியாது ஏமாற்றமுற நேர்ந்தது.

"ஆராய்ச்சிக் கருத்தரங்கு அறிஞர்களுக்கு மாத்திரமே உரியது. அங்கு, சாதாரணப் பொதுமக்களை அனுமதிப்பதாயின் கருத்தரங்கின் நோக்கம் சரிவர நிறைவேறாமல் போகலாம். இதனால் அழைப்பாளர்களை மாத்திரமே அனுமதிப்பது என்ற கோட்பாடு மிகவும் சரியானது என்பதை யாரும் மறுக்க மாட்டார்.

"ஆனால் தமது தாய்மொழியின் பெருமையை அறிந்து அதனை ஆராய முற்பட்டுள்ள பெரியோரை பிறநாட்டு அறிவாளிகளைப் பாமரத் தமிழ்மகன் ஒருவன் கண்குளிரக் காணவும், காதாரக் கேட்கவும் ஆசைக்கொள்வன இயற்கையன்றோ!

"இந்த ஆர்வத்தினால் அல்லவா அன்று ஆயிரக் கணக்கில் மக்கள் அங்கு திரண்டு வந்தனர். அடுத்து வந்த நாட்களில் கருத்தரங்கில் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டும்கூட ஆசனங்கள் காலியாகக் கிடக்க நேர்ந்ததின் காரணமென்ன?

"அங்கு தோரணங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் மாத்திரம் கண்டு களிக்கப் பொதுமக்கள் திரளவில்லை. அவர்கள் எதையோ ஆக்கபூர்வமாக, மனநிறைவுக்காக எதிர்பார்த்து வருகிறார்கள். அதனை நிறைவேற்றி வைப்பது மாநாட்டின் பொறுப்பாளர்களின் கடமை. இன்னும் காலம் கழிந்துவிட வில்லை!"

மாநாட்டு அமைப்பாளர்கள் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தவில்லை என்ற குறைபாட்டை யாழ்ப்பாணத்து இளைஞர்கள் போக்கினார்கள்.



தடைகளைத் தாண்டிக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, குழப்பங்களையும் முரண்பாடுகளையும் போக்கி, மாநாட்டை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவதே மாநாட்டு அமைப்புக்குழுவின் மாபெரும் பணியாக இருந்தது. ஆராய்ச்சி மாநாடு நடக்குமா நடக்காதா என்ற குழப்பநிலையை நீக்குவதில் காலத்தைப்போக்கியதால் மக்களுக்கான நிகழ்ச்சிகளில் அதிகமாக எம்மால் கவனம் செலுத்த முடியவில்லை.

இதை மக்கள் உணர்ந்திருந்தார்கள். எம் மீது குறை கூறவில்லை. 'நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டு அறிஞர்களை அழைத்து வந்து மாநாட்டை நடத்துங்கள்.' எஞ்சியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.' என்ற கருத்து யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர்களிடையே விரவியிருந்தது. "யாழ்ப்பாண மக்கள் பார்த்துக் கொள்வார்கள்; மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்கவா?" என்ற நினைப்பு மாநாட்டு அமைப்புக் குழுவில் இருந்த ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருந்தது.

நிலநடுக்கம் ஏற்படப் போவதை உய்த்துணரும் இயல்பூக்கம் மாடுகளுக்கு உண்டு. தாயகத்தைத் தேடி இடம் பெயரும் இயல்பூக்கம் பறவைகட்கு உண்டு. பிறந்த உடனேயே நீந்தும் இயல்பூக்கம் மீனுக்கு உண்டு. **தமிழ்மொழி மீது அடங்காத காதல் தமிழர் ஒவ்வொருவருக்கும் இயல்பூக்கமாக உண்டு.** யாழ்ப்பாணத் தெருவெல்லாம் தமிழர் முழக்கம் கேட்க இந்த இயல்பூக்கமே காரணமாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 29. கலைஞர் துரைராசாவின் கைவண்ணம்

மாட்டுவண்டி ஓட்டம் யாழ்ப்பாணத்தின் விளையாட்டுப் போட்டிகளில் புகழ்பெற்றது. பொங்கல் விழா, புத்தாண்டு விழா, இப்படி மகிழ்ச்சியான எந்த நாளிலும் மாட்டு வண்டி ஓட்டம் யாழ்ப்பாணம் முற்ற வெளியில் நடைபெறுவதுண்டு.

யாழ்ப்பாணத்தின் விரைவாக ஓடும் மாடுகளையும், வண்டிகளைத் திறமையாக ஓட்டும் இளைஞர்களையும், போட்டிகளின் வரைமுறை நடைமுறைகளையும், நிலவுக்குப் பயணப் போட்டி நடத்தும் நாடுகளில் இருந்து வரும் அறிஞர்கள் கண்டு மகிழவேண்டும் எனத் திரு. வி. எசு. துரைராசா நினைத்ததில் வியப்பில்லை.

யாழ்ப்பாண முற்றவெளியில் மாட்டுவண்டி ஓட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. இ. திருநாவுக்கரசு என்ற இளைஞரின் மாடுகளும் வண்டியும் போட்டியில் முதலிடம் பெற்றன.

ஈழத் தமிழர்களின் நுணுக்கமான கலைத் திறன்களை மாநாட்டின்போது வெளிக் கொணரத் திரு. துரைராசா திட்டமிட்டுச் செயற்பட்டார். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடக்கக் கூடாது என அரசின் பின்பாட்டுக்காரர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டபோதும்கூடத்



துணிவுடன், யாழ்ப்பாண மாநாட்டுக் கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்ற வருமாறு ஈழக் கலைஞர்கட்கு விளம்பரம் மூலம் வேண்டுதல் விடுத்தார்.

கலைச் செருக்கும இறுமாப்பும் போட்டி மனப்பான்மையும் இறைவன் கலைஞர்கட்குக் கொடுத்த அருட்கொடை. இவர்களையெல்லாம் வழிப்படுத்தி நெறிப்படுத்தி இணைத்தழைத்துக் கலைநிகழ்ச்சிகளை மூன்று வெவ்வேறு இடங்களில் ஒழுங்கு செய்தார். யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அரங்கு, ஆகிய மூன்று இடங்களிலும், மாநாடு நடைபெற்ற எல்லா நாட்களிலும், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முன்கூட்டியே வேறு அரங்குகள் கிடைத்திருப்பின் அங்கெல்லாம் நிகழ்ச்சிகளை நடத்தக் கூடிய அளவுக்கு நிறையக் கலைஞர்கள் விண்ணப்பித்திருந்தனர். அரசின் தடை முயற்சிகள் திரு. துரைராசாவின் ஆற்றல் கரங்களைக் கட்டின. அல்லவெனில், யாழ்ப்பாணத்தின் ஊர்கள்தோறும் மாநாட்டு அமைப்புக்குழுவே கலை நிகழ்ச்சிகளை அமைத்து நடத்தக் கூடிய ஆற்றல் அவரிடமும் கலைக்குழு உறுப்பினர்களிடமும் இருந்தது.

கலைநிகழ்ச்சிகள் மூன்று அரங்குகளில் நடந்தன. மாட்டு வண்டிகள் ஓடின. 130 ஊர்திகள் அலங்கார ஊர்வலமாகப் பவனி வந்தன. மாநாட்டுச் செயலகம் வெற்றிகரமாக இயங்கியது. பொருள் பெருமளவில் செலவிடப்பட்டது. ஆராய்ச்சி அரங்குகள் திறம்பட இயங்கின. வரவேற்பு, போக்குவரத்து, உணவு உறைவிடம் போன்ற துறைகள் இணைத்தமைக்கப் பெற்ற செயற்பாட்டின் நடு நாயகமாகத் திரு. துரைராசா விளங்கினார். பேராசிரியரின் தலைமை கனியத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு. துரைராசா நன்மரமாக, ஆணிவேராகச் செயற்பட்டார்.

ஒரு சில நேரமாவது திரு. துரைராசா கோபப்பட்டதைக் காணக்கூடவில்லை. கோபத்தை வெளிக் காட்டாது ஆளுமையின் நிழலாகத் திரு. துரைராசா செயற்பட்டார்.

திரு. துரைராசா பல நிலைகளில் உதவியாளர்களை வைத்திருந்தார். தானியங்கிப் போக்குவரத்துத் திணைக் களத்தில் துணையாளராக உயர்பதவி வகித்த திரு. பேரம்பலம் அவர்கள் மாநாட்டுச் செயலகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். திரு. மூர்த்தி காசாளராகவும் களஞ்சியப் பொறுப்பாளராகவும் இருந்தார். செல்வி இரமணி; திரு. துரைராசாவின் அணுக்கச் செயலாளராகப் பணிபுரிந்தார். புனித சோன்சு கல்லூரி ஆசிரியர் ஒருவர் கலைநிகழ்ச்சிப் பொறுப்புகளை ஏற்றார். மாட்டு வண்டிப் போட்டிக்கு வேறொருவர் பொறுப்பு ஏற்றார். அலங்கார ஊர்திகள் திரு. பி. கே. பொன்னம்பலம் கண்காணிப்பில் நடை பெற்றன. திரு. துரைராசாவோ எங்கும்; எதிலும், எப்பொழுதும் காணப்பட்டார். திருமதி துரைராசாவும், பிள்ளைகளும் திரு. துரைராசாவுக்கு இடையருத் துணையாகவும் ஆலோசகர்களாகவும் உடனிருந்தனர்.

ஒருநாள், யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, மழை தூறத் தொடங்கியது. திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் அவர்களின் 'கண்ணகி கதை' வில்லிசையின் இறுதிக் கட்டத்தில் மழை இலேசாகத் தூற ஆரம்பித்தது. கண்ணகி கதை முடிந்து மதுரை மாநகரம் பற்றி எரிகின்ற போது மழை பெருகத் தொடங்கப் பார்வையாளர்கள் பலரும் மேடையில்



தஞ்சம் புகத் தொடங்கினர். அவ்வளவு பாரத்தையும் தாங்கிக் கொள்ளும் திறம் படைக்காத மேடை 'டமார்' என்ற பெரும் சத்தத்துடன் உடைந்து நொறுங்கியது. மின்சாரக் குமிழ்கள் யாவும் உடைந்து நொறுங்கின.

மேடை முறிந்ததும் அதை உடன் திருத்த நடவடிக்கை எடுத்தவர்கள் திரு. ஞானானந்தன் தலைமையிலான கட்டுப்பெத்தை மாணவர்கள் தாம். பொறியியல் மாணவர்களல்லவா? அடுத்த நாள் நிகழ்ச்சி எவ்விதத் தடையுமின்றித் திறந்தவெளி அரங்கில் நடைபெற இவர்கள் உதவினர்.

யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்தக் கூடாது என்று கூறியவர்களுடன் நின்ற கலைஞர்களும் 'யாழ்ப்பாண அலை'க்குள் சிக்கினர். கடைசி நேரத்தில் தமக்கும் இடம் தருமாறு கேட்டனர்; திரு. துரைராசா பெருந்தன்மையுடன் அவர்கட்கும் இடம் கொடுத்தார்.

மாநாட்டை ஒட்டிய அலங்காரப் பவனி தொடக்க நாளன்று நடைபெறும் எனத் திரு. துரைராசா அறிவித் திருந்தார். ஒருசிலரே பங்குபெற்ற முன்வந்தனர். எனவே, திரு.வைத்தியலிங்கம், திரு.பாலசுந்தரம்பிள்ளை இருவரும் ஊர்கள் தோறும் சென்று மக்கள் சமூக நிலைய நிர்வாகிகளைச் சந்தித்து ஆதரவு தேடினர். யாழ்ப்பாணம் வந்தவுடன் நிலைமையை என்னிடமும் திரு. பேரம்பலம் அவர்களிடமும் கேட்டுத் தெரிந்த திரு. துரைராசா பவனியைக் கடைசி நாளுக்கு ஒத்தி வைத்திருந்தார். 10-1-1974 இல் அலங்கார ஊர்வலம் நடைபெறும் என அறிவித்தார்.

மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கிய பின்பு அலங்கார ஊர்வலத்துக்கான ஆதரவு பெருகியது. மாநாடு தொடங்கு முன்பு 10 ஊர்திகள் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. ஓவியர் பெனடிக்ட் அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுடன் மில்க்வைற் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா வந்தார்; சங்கிலியமன்னனை ஊர்வலத்தில் அழைத்துச் செல்லவேண்டும் எனக் கருத்துக் கூறினார். உற்சாகப்படுத்தினேன். காரைநகர் 'சீநோர்' நிறுவன ஊழியர்கள் 'கப்பலோட்டிய தமிழன்' ஊர்தியைக் கொணர்வதாகக் கூறினர். மாநாட்டுத் தொடக்க நாட்களில் விண்ணப்பங்களின் தொகை 64 ஆயிற்று. 9-1-1974 அன்று 130 விண்ணப்பங்கள் வந்து சேர்ந்தன. 'ஈழநாடு' 10-1-1974 நாளிதழில் பின்வரும் செய்தி வெளிவந்தது.

"ஊர்வலத்தில் கலந்துகொள்பவர்களும், ஊர்திகள் பற்றிய சில விபரமும் வருமாறு:-

"விக்கினேசுவரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம் (வள்ளுவர் சிலை, மண்டபத்துடன்), சிவானந்தாசு யாழ்ப்பாணம், முருகன்படம், (இசைக்கச்சேரி), நாகமுத்து அன் சன்சு,யாழ்ப்பாணம்(தமிழ்த்தாய்),சண்முகநாதன்சு, யாழ்ப்பாணம் (இராவணன் கைலயங்கிரி), மட்டுவில் சனசமூகநிலையம் (கோவலன் கண்ணகி), மில்க் வைற் சோப் தொழிற்சாலை, (சங்கிலித்தோப்பு), வல்வை சனசமூக நிலையம், (அமெரிக்கா கண்ட 'அன்னபூரணி' பாய்க் கப்பல்), சீ-நோர் திட்டம், காரைநகர் (வ. உ. சி. பாரதியார் வள்ளத்துடன்), கொழும்புத்துறை சனசமூக நிலையம் (இராவணன்) கொழும்புத்துறை மேற்கு (யாழ்நங்கை), நிரூலங்காபாம், இணுவில் (விவசாயக்காட்சி, தோட்டம்), சித்திரவேலாயுதம் குழுவினர் (கரகாட்டம்), குலநாயகம் குழுவினர் (கம்படி, சிலம்படி), கீலியன்சு நண்பர்கள், (புலவர்க்குச் சாமரைவீசிய புலவன்) விக்கினேஸ்வரா சி. சி. உதயசூரியன் எஸ். சி. (விநோத உடை), பருத்தித்துறை சனசமூக நிலையங்கள்,



(கரகாட்டம்), ரீ. துரைரத்தினம் தொண்டமனாறு (காவடி), பண்டத்தரிப்பு கோவில்பற்று (பனைவிருட்சம்), சன்சுன்ஸ் ரியூசன் சர்வீஸ், கொழும்புத்துறை (இசைக்குழு), சைவமகாசபை, காரைநகர் (காவடி), குருநகர் முன்னேற்றக் கூட்டு முன்னணி (சிலைஎடுத்த சிற்பிக்கு விலைகொடுத்த வேந்தன்), மத்திய சனசமூக நிலையம், இருபாலை (கமத்தொழில்), ஞானப்பிரகாசர் தாபனம் (ஞானப்பிரகாசர்), முகம்மது அலி அப்துலலி (சித்திலெப்பை), ரி. குமாரசாமி, யாழ்ப்பாணம் (சேர். பொன் இராமநாதன்), சாவகச்சேரி மக்கள் (நாதசுரம்), சாவகச்சேரி மக்கள் (காவடி), உரும்பராய் இளைஞர்கள் (அன்னைசத்தியபாமா வரலாறு), கணேசன் ஸ்ரார்ஸ் (இசைநிகழ்ச்சி) நவரச நாடகாலயம், பாசையூர் சனசமூக நிலையம், இ. வா. ச. திருநெல்வேலி, இ. போ. ச. கோண்டாவில், உரும்பிராய் மக்கள், ஒட்டகப்புலம், லாலா சவர்க்காரத் தொழிற்சாலை, உடுப்பிட்டி சனசமூக நிலையம், நெல்லியடி தொழிற்சாலை, எசு. மகேந்திரன், கொல்வாலி, இன்பருட்டி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம், சிறுப்பிட்டி சனசமூக நிலையம், காமாட்சி அம்மாள் சனசமூக நிலையம், சிறீ சுப்பிரமணிய சனசமூக நிலையம், கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம், ஞானபாசுகரதேவி சனசமூக நிலையம், இளைஞர்சங்கம், பரிவளவு, அராலிவடக்கு சனசமூக நிலையம், தமிழ்த்தாய் மன்றம், வேலணை, கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், மகாசன சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் நகரசபை, அமரகவி சனசமூக நிலையம், கோண்டாவில், பரமானந்தாவாசிகசாலை, இணுவில், இலட்சுமி சனசமூக நிலையம், கோப்பாய் மக்கள், நாவற்குளி । சனசமூக நிலையம், லீலாவதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்ரோர்ஸ், கைதடி, எசு. ஆர். எசு. சிவராமலிங்கம், கொடிகாமம், பான்சி கவுசு, யாழ்ப்பாணம், நாவாந் துறை, பாரிசு, சாந்திசினிமா, சங்கானை (ராமாயணக் காட்சி), நவீனசந்தை, (ஔவையார் சிலை சிகரத் துடன்)."

அலங்கார ஊர்திப் பவனி நடைபெற்ற நாளன்று மக்கள் யாழ்ப்பாணத்துக்குள் வர முடியவில்லை. யாழ் நகர் முழுவதும் மக்கள்வெள்ளத்தால் நிரம்பி யிருந்தது. அன்று காலை நல்லூர்ச் சட்டநாதர் கோவிலுக்குள்ளோ, பக்கத்திலோ யாரும் நுழைய முடியவில்லை.

அரசு தடைகள் போட்டு மாநாட்டைக் கடைசி நேரம் வரை நடத்த இடையூறுகள் ஏற்படுத்தினாலும் நாம் அரசின் மீது கோபப்படவில்லை. அரசின் தடைகளை எதிர்த்தோம். ஆனாலும் அரசு எந்திரங் களின் உதவியின்றி மாநாடு நடைபெறாது என அறிந் திருந்தோம். எனவே கண்காட்சியைத் துவக்க யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை அழைத்தோம். அலங்கார ஊர்திகள் பவனியைச் சட்டநாதர் கோவிலில் தொடக்கி வைக்கக் காவல்துறை உதவித் தளபதி திரு. சந்திரசேகரா என்ற சிங்களவரை அழைத் தோம்.

பேரறிஞர் அண்ணா, பண்டாரவன்னியன் போன்றவர்களின் உருவப்படங்கள் ஊர்திகளில் கொண்டு செல்லப் பெறுவதை அவர் விரும்பவில்லை. ஏற்பாடு செய்த இளைஞர்கள் கோபம் கொண்டனர். இவர்களுள் திரு. சிவகுமாரன் என்ற இளைஞர் முக்கிய மானவராக இருந்தார். திரு. சந்திரசேகராவுடன் வாதிட்டார். ஏனையோரும் தலையிடவே திரு. சந்திர சேகரா அனுமதி வழங்கினார்.



சங்கிலிய மன்னனின் கோட்டை நுழைவாயில்; நடுவே மன்னன் வீற்றிருக்கும் காட்சி ஓவியர் பெனடிக்டின் கைவண்ணத்தில், மில்க்வைற் தொழி லகத்தின் நிதியுதவியினால், மிக அருமையாக அமைந் திருந்தது. சங்கிலியமன்னனாக ஒரு நாடக நடிகர் அமர்ந்திருந்தார். காலை ஆறுமணியளவில் ஊர்தியில் ஏறியவர், மாலை எட்டு மணி வரை ஆடாமல் அசையாமல், உண்ணாமல் உறங்காமல், சிறுநீர் கழிக்கவும் முடியாமல் அமர்ந்திருந்து சாதனை புரிந்தார்.

யாழ்ப்பாணத்தில், வீதிகளின் குறுக்கே ஓடும் மின் கம்பிகளைச் சிறிதே உயர்த்தினால்தான் சில உயரமான அலங்கார ஊர்திகள் செல்லக் கூடியதாக இருந்தன. பகல் முழுவதும் வெற்றிகரமாக இப்பணியைச் செய்த வர்கள் மாலையானதும் களைப்படைந்து விட்டார்கள் போலும். மேலும், மழையும் 'சோ' எனப் பெய்யத் தொடங்கியது. மருத்துவமனைக்கு எதிரே, மருத்துவ மனைவீதியில் குறுக்கேயுள்ள மின்கம்பிகளைச் சரியாகக் கவனித்து உயர்த்தாததால் மின் கம்பிகள் அறுந்தன; விழுந்தன. இருவர் மின்சாரம் தாக்குண்டு மரணமடைந்தனர். யாழ்நகரைச் சேர்ந்த 55 வயதான அருளப்பு ஒருவர். வேலணையைச் சேர்ந்த 30 வயதான தில்லைநாயகம் மற்றவர். மின்சாரம் தாக்குண்டு மரண மெய்திய செய்தி மாலை ஏழு மணியளவில் யாழ் நக ரெங்கும் பரவியது. ஊர்திகளின் பவனி முடிவடை யாமலே அந்தந்த இடங்களில் கலைந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 30. மதுரையில் ஐந்தாவது மாநாட்டை நடத்துக

"யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதன் மூலம் நாம் தமிழன்னையின் மீது எத்தனைப் பற்றுக்கொண்டிருக்கிறோம் என்று உலகறியச் செய்துள்ளோம்" எனத் தவத்திரு தனிநாயக அடிகள், சுவாமி ஞானப்பிரகாசரின் உருவச்சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அந்த விழாவில் சுவீடன் அறிஞர் திரு. பிறிக்கோம் இனிய செந்தமிழில் உரையாற்றினார்: "யாழ்ப்பாண நாட்டில் எனக்கு ஏற்பட்ட அன்பின் காரணமாக நான் இங்கு வந்தேன். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால் நடையாகச் சுற்றித் திரிந்து மக்களின் இனிய தமிழைக் கேட்க எனக்குப் பேரவா ஏற்பட்டது. நான் எங்கு சென்றாலும், 'தமிழ் வாழ்க, தமிழ் வெல்க' என்ற சொற்களைத்தாம் கேட்கக் கூடியதாக இருக்கின்றது."

"தமிழகத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்ததிலும் பார்க்க, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாட்டில் தமிழ்மக்களின் உணர்ச்சி பெருகி இருந்தது. தமிழ் உணர்ச்சி இன்று ஈழத்திலும் தமிழகத்திலும் மட்டும் அன்று, உலகம் முழுவதும் பெருகியுள்ளது. இங்கு நடைபெறும் மாநாடு உலகத்தில்



உள்ள தமிழ் மக்களை ஒன்றுபடுத்திவிட்டது" எனத் தமிழகத்திலிருந்து வந்திருந்த அறிஞர் திரு. இரா. கணேசன், காங்கேயன்துறை வரவேற்பில் குறிப்பிட்டார்.

"யாழ்ப்பாண நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே; தமிழ் மொழியில் திருக்குறளில்தான் எனக்குப் பற்று அதிகம். எனது பெற்றோருடன் திண்டுக்கல்லில் நான் வசித்தபோது தான் திருக்குறளைப் பயின்றேன்' எனச் சுவீடன் அறிஞர் திரு. பிறிக்கோம் நெல்லியடி வரவேற்பில் கூறினார்.

"மாநாட்டு ஏற்பாடுகளுக்கும் மக்கள் எழுச்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை; எவ்விதத் தூண்டுதலுமின்றி மக்கள் நகரை அழகு படுத்துவதிலும் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதிலும் ஈடுபட்டிருப்பதைக் காண முடிந்தது; காட்டாற்று வெள்ளம் போல் தமிழ் உணர்ச்சி கரைபுரண்டு ஓடுகின்றது" எனத் தமிழகக் கல்வெட்டு நிபுணர் புலவர் செ. இராசு கூறினார்.

"தாயை மறந்தாலும் தமிழை மறக்காத தமிழினம் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது மாநாட்டைத் தமிழர் வாழாத பகுதிகளில் நடத்துவது சிறப்புடையதன்று" என வழக்கறிஞர் மு. சிவசிதம்பரம் நெல்லியடியில் அறிஞர்களை வரவேற்றுப் பேசினார்.

"ஈழத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும் போது எங்கும் நெல்வயல்கள் பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கின்றன. இங்கு அரிசிக்குப் பஞ்சம் நிலவுவதாக அறியும் போது பெரும் வியப்பாகவிருக்கின்றது. தமிழர் நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும் பனை ஓலை வேலிகளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூரைகளும் பனை மட்டைகளால் ஆன படலைகளும் எங்கு நிற்கிறோம் என்ற எண்ணத்தைப் புரட்டிக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டில் கூட இதே சூழ்நிலை தான் காணக்கூடியதாக உள்ளது.'' இவ்வாறு மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் கலாநிதி எசு. சண்முகம்பிள்ளை கூறினார்.

"உங்கள் யாழ் குடாநாடு சிறிதுதான். ஆனால் கீர்த்தியோ பெரிது. இங்கு நடந்த மாநாடே இங்குள்ள மக்களின் கடின உழைப்பையும் நாட்டுப் பற்றையும் கலாச்சாரப் பற்றையும் எமக்கு உணர்த்தி விட்டன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விழா வாகவே எடுத்துக் கொண்டார்களே, இப்படி எவரின் தூண்டுதலும் இன்றி மக்கள் செயல்படுவது மிக அபூர்வம்'' என்று சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் கார்ல் ஏ. கெல்லர் கூறினார்.

"இதுவரை நான் மூன்று தமிழாராய்ச்சி மாநாடு களைப் பார்த்துவிட்டேன். அவற்றில் தமிழக மாநாட் டுக்கு அடுத்த இடத்தை யாழ்ப்பாணத்தில் நடக்கும் மாநாடு பெற்றுள்ளது. கன்னடமொழியை மாநில முதல் மொழியாக்க அந்த மக்கள் விரும் புவதுபோல் தமிழ் மக்களும் தாய் மொழியை மறக் காது உரிய இடத்தில் வைக்க விரும்புவது இயற்கையே. தமிழினத்தின் நாகரிகப்பண்பாட்டை யாழ்ப்பாணத்தில்தான் அதிகம் காண முடிகிறது.'' இவ்வாறு பெங்களூர்த் தமிழ்ச்சங்கத் தலைவரான திரு. தா. நீலகண்டன் கூறினார்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி அரிது. தமிழனாய்ப் பிறப்பது அரிதிலும் அரிது. தமிழனாய்ப் பிறந்தும் தமிழைப் போற்றி வளர்த்தல் அதனிலும் அரிது. தமிழன் பேச்சளவில் தமிழனாக வாழாமல்



உண்மையான தமிழுணர்ச்சி உடையவனாய் வாழ வேண்டும்'' எனத் தென் ஆப்பிரிக்கத் தமிழரான திரு. ஞானமுத்து சாவகச்சேரி வரவேற்பில் கூறினார்.

"ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, அதாவது தென்னிந்தியாவில் தமிழர் வாழ்ந்த காலத் திலேயே ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்தனர். அவர்கள் வந்தேறுகுடிகளல்லர்'' இவ்வாறு வட்டுக்கோட்டை வரவேற்பில் வழக்கறிஞர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

"எங்கு சென்றாலும் தமிழ் மக்கள் எம்மீது தமது அன்பை அள்ளிச் சொரிகின்றார்கள். இதை நினைக்கும் பொழுது நம் நெஞ்சங்கள் சிலிர்க்கின்றன. தமிழ் மொழிக்கு நாம் ஆராய்ச்சி நடாத்துவது மட்டுமல் லாமல், தமிழ் உணர்ச்சியைத் தமிழ் மக்கள் மத்தியிலே எழச் செய்த பெரும் பணியைச் செய்தவர்களாவோம். யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் உணர்ச்சி மிக்கவர்கள். அவர்கள் இம் மாநாட்டையொட்டி எமக்குக் காட்டிய வரவேற்பிலிருந்து இது தெரிகின்றது. தமிழன் என்றுமே ஒருவனை ஒருவன் வேறுபடுத்திக் காட்டியது கிடையாது.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம். ஆயினும் உள்ளத்தால் ஒருவரே என்ற பாரதிதாசன் வாக்கினை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிரூபித்துக் காட்டிவிட்டது. இந்த மாநாட்டுக்கு வருவதற்குப் பல தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. அதே போலத் தமிழ் மக்கள் தடைகளையெல்லாம் சமாளித்து இலக்கை அடைவார்கள் என்பது திண்ணம்.

"யாழ் நகரின் விழாக் கோலம் எம்மைப் பெரும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. பொன்மலர் நாற்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடைத்து என்ற நிலை கண்டோம். அவசரமாக முயன்றாலும் மாநாட்டு ஏற்பாடுகள் எமக்கு ஏற்பட்ட பிரயாணக் கஷ்டங்களை மறக்கச் செய்து உள்ளத்தை உற்சாகம் அடையச் செய்தது.'' இவ்வாறு தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சாலை இளந் திரையன் கூறினார்.

"மீண்டும் மீண்டும் யாழ்ப்பாணம் வரவேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது'' என்று சிங்கப்பூர்த் தமிழர் இயக்கச் செயலாளர் திரு. எம். பெரியசாமி கூறினார்.

"தமிழ் மொழியில் உள்ள தணியாத ஆர்வம் காரணமாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம்'' என மேற்குச் ஜெர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் செனட் கூறினார்.

"உலகத்தில் உள்ள எச்சாதியினரிலும் பார்க்கச் **சிங்களவருக்கு நெருங்கிய தொடர்புள்ள சாகித்தியனரும் மொழியும் தமிழர்களும் தமிழுமே.** இலங்கைக்குப் பௌத்த மதம் வருமுன்பு சைவமும் தமிழும் வழக்கில் இருந்தன. மூத்தசிவன் போன்ற அரசர் பெயரில் இருந்து இது நன்கு தெரிகின்றது. **அசோகச் சக்கரவாத்தி காலத்தில் பௌத்த மதத்தைத் தழுவிய பிராமணர்களே, பாளி, சமசு கிருதம், தமிழ்** ஆகிய மொழிகளை ஆதாரமாகக் கொண்டு **சிங்கள மொழியை** இலங்கையில் வளர்த்தனர்.

"மொழிகளுள் சிறந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஓர் இனத்தை வேறொரு மொழியைக் கற்க வேண்டும் என்று வலியுறுத்தித் திணிப்பதனால் இன வேற்றுமையும் பகைமையும் ஏற்படும்; நாடு பிளவுறும்; நன்மை எதுவும் ஏற்படாது.'' இவ்வாறு பாணந்துறை காமினி வித்தியாலய முன்னாள்



அதிபரும் பிரபலச் **சிங்கள எழுத்தாளருமாகிய திரு. டி. டி. நாணயக்கார** கூறினார்.

"யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு நானும் சென்றிருந்தேன். 'எல்லா நாடும் என் நாடு; எல்லா மனிதர்களும் என்னவர்' என்ற இந்த மாநாட்டின் குறிக்கோள் என்னைக் கவர்ந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டில் அரசியல் கலப்பே இருக்க வில்லை'' என நிக்கவரெட்டியப் பாராளுமன்ற உறுப்பினர் **திரு. முதியான்சே தென்னக்கோன் என்ற சிங்களவர்** கூறினார்.

"யாழ்ப்பாண மாநாடு எல்லாருக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தது. அறிஞர் சித்திலெப்பையின் உருவம் தாங்கிய ஊர்தி மாநாட்டு அமைப்பாளரின் பரந்த நோக்கிற்கு எடுத்துக்காட்டு. இசுலாமியர்கள் தமிழ் அறிஞர்களாக வளர மாநாடு உதவியுள்ளது'' என மாநாட்டில் கலந்து கொண்ட திரு. எம். எம். உவைசு கூறினார்.

மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்களின் பெயர், முகவரி, வாழ்க்கைச் சுருக்கம், புகைப்படம் இவை கொண்ட 'யார் எவர்' தொகுப்பு யாழ்ப்பாணம் கலைவாணி அச்சகத்தில் அச்சிடப் பெற்றது. கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா இதனைத் தயாரித்தார். மாநாட்டு நிகழ்ச்சி நிரல் யாழ்ப்பாணம் சண்முகநாதன் அச்சகத்திலும், கலை நிகழ்ச்சிகள் தொடர்பான வெளியீடுகள் விவேகானந்தா அச்சகத்திலும், விருந்து அழைப்பிதழ்கள் ஆசீர்வாதம் அச்சகத்திலும், கொடி நாள்—விளம்பரம் வெளியீடுகள் சிறிகாந்தா அச்சகத்திலும் அச்சிடப் பெற்றன. அழைப்பிதழ்கள் மட்டும் கொழும்பில் அச்சேறின.

வியாழக்கிழமை மாநாடு தொடங்கியது. ஞாயிற்றுக் கிழமை அறிஞர்கள் சுற்றுலா. திங்கட்கிழமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சண்டிக்குளி மகளிர் கல்லூரி வளவுக்குள் தவத்திரு தனிநாயக அடிகள் மரம் நட்டார்கள். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் தொடங்கிச் சரியாகப் பத்து ஆண்டுகள் அன்று நிறைவுற்றமை மரம் நடு விழா வாகச் சிறப்பிக்கப் பெற்றது.

'நான்காவது மாநாடு நிறைவுறப் போகின்றதே, அறிஞர் பிரியாவிடை கூறப் போகின்றார்களே! மீண்டும் எப்போது, எங்கே சந்திப்போம்? கருத்துகளைப் பரிமாறுவோம்?' என்ற வினாக்கள் ஒவ்வோர் அறிஞரின் உள்ளத்திலும் எழுந்தன.

'மதுரைக்கு வாருங்கள்; மாநாட்டை நடத்தலாம்' என்ற அழைப்பைப் பேராசிரியர் சண்முகம் பிள்ளை விடுத்தார். 'சிங்கப்பூரிலோ மொரிசுயசு தீவிலோ நடத்தலாம்' எனத் தவத்திரு தனிநாயக அடிகள் கருத்துத் தெரிவித்தார்.

மதுரையில் நடத்தலாம் என்ற கருத்தையே பெரும் பாலான அறிஞர்கள் ஆதரித்தனர் போலும்! 'ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரையில் நடைபெறலாம். நடைபெற்றால் இலங்கை மக்கள் அனைவரும் திரண்டு வரவேண்டும். எவருக்கும் எங்கள் அரசாங்கம் உட்புகல் அனுமதி (விசா) வழங்க மறுக்கமாட்டாது." பேராசிரியர் சண்முகம் பிள்ளை இந்த அழைப்பையும் அறிவித்தலையும் பகிரங்கமாகச் சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில், வெளிநாட்டு அறிஞர்கட்கு அளிக்கப் பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய போது விடுத்தார்.

# 31. வியாழக்கிழமை விபரீதம்

கொழும்பு-புறக்கோட்டைப் பகுதியில் உள்ள தமிழ் வணிகர்கள் தமிழுக்கு ஆற்றும் தொண்டு அளப்பரியது. உழைத்துப் பெறும் ஊதியத்தில் ஒரு பகுதியைத் தமிழர் வாழ்வு வளம்பெற ஒதுக்கும் இயல்பு அவர்கட்கு உண்டு. நான்காம் குறுக்குத் தெருவில் 'பீப்பிள்சு ரேட்சு அன்ட் சப்ளைசு' என்ற வணிகநிலையம் உண்டு. அந்த நிலயத்தின் முதலாளியும் கைதடி அன்பர் திரு. கணபதிப் பிள்ளையும் மாநாடு தொடங்கிய மூன்றாம்நாள் என்னிடம் வந்தனர். கையில் 5000 உரூபா வைத்திருந்தனர்.

"புறக்கோட்டைத் தமிழ் வணிகர்கள் சார்பில் ஒரு நாளைக்கு விருந்து வைக்க வேண்டும்" என்றனர். எல்லா நாட்களுக்கும் உரிய விருந்துகள் ஒதுக்கப்பெற் றிருந்தன. முத்தையன் கட்டுவிவசாயிகள், யாழ்ப்பாண நகை வியாபாரிகள், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், யாழ்ப்பாண மாநகராட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேவத் தானம், காங்கேயன்துறை-உடுவில் மக்கள், பருத்தித் துறை மக்கள், வட்டுக்கோட்டை மக்கள், காங்கேயன் துறை பைஞ்சுதை (சிமெண்ட்) தொழிற்சாலை ஊழியர் போன்ற பொதுநிறுவனங்கள் உணவு விருந்தும்

www.tamilarangam.net



தேநீர் விருந்தும் வழங்கின. திரு. சேம்சு இரத்தினம், திரு. மு. திருச்செல்வம், திரு. ஆ. சின்னத்தம்பி, திரு. பூபாலசிங்கம், திரு. சி. அம்பலவாணர், திரு. பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி, திரு. சு. தியாகராசா, மருத்துவர் சோமசுந்தர பாரதி, மருத்துவர் சு. சபாரத்தினம், திரு. க. கனகராசா, திரு. க. அண்ணாமலை, திரு. மு. கணபதிப்பிள்ளை ஆகிய தனிப்பட்ட அன்பர்களும் விருந்து வழங்கினர். விவரத்தை அவர்களிடம் கூறினேன். "எப்படியும் எங்களுக்கு ஓர் இடம் ஒதுக்க வேண்டும்" என்று சிரிப்புடனும், குழைவுடனும், உறுதியுடனும் முதலாளியான ஓர் இளைஞர் கேட்டார்.

9-1-1974 புதன்கிழமை இரவு உணவு விருந்து, பேராசிரியர் வித்தியானந்தனுல் மன்றத்தின் சார்பில் வழங்கப்பெற இருந்தது. புறக்கோட்டை வணிகர்கட்கு அந்நாளை ஒதுக்கினேன். பெருவிருந்துக்குரிய உபயம் புறக்கோட்டை வணிகர்களுடையதாக அமைந்தது. 5000 உருபா தந்தனர்.

தேயிலைத்தோட்ட முதலாளியான ஒருவரைத் திரு. துரைராசா என்னிடம் அழைத்து வந்து "வெளிநாட்டு அறிஞர்கட்கு மது விருந்து வழங்க விரும்புகிறுர்" எனக் கூறினுர். மாநாட்டு விருந்துகளில் மதுவுக்கு இடம் இருக்கவில்லை. விருந்துகளில் மது வழங்கும் பழக்கம் யாழப்பாணத்தில் மிக அரிது. மது விலக்கப்பட வேண்டிய ஒன்று என்பது எனது கருத்து. நான் மறுத்தேன். 9-1-1974 புதன் கிழமை மட்டும் விருந்து நடைபெறு முன்பு அரைமணி நேரம் மட்டும் மது விரும்பிகட்கு மதுவை வழங்கலாம் எனத் திரு. துரைராசா விதந்துரைத்தார்.

மாநாட்டை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த பெரும் களைப்பு; யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் கண்டிக்கும் ஓடித்திரிந்த களைப்பு; அரசின் தடைகளை முறியடித்துத் தாண்டி வந்த களைப்பு; முயற்சிகள் முகிழ்த்தபின் உணர்ச்சிகள் கொப்பளித்ததால் களைப்பு. மாநாடு நடைபெற்ற நாட்களில் ஓயாது ஒழியாது ஓடித் திரிந்த களைப்பு; சிக்கல்களைத் தீர்ப்பதில் 'தலை உடைந்த' களைப்பு; நாளார்ந்த நடைமுறைகளில் ஏற்பட்ட களைப்பு; மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்களும், மருத்துவர் சபாரத்தினம் போன்ற தொண்டர்களும் களைப்பின் உச்சிக்குத் தள்ளப்பட்டனர். புதன்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்ற அலங்கார ஊர்திப்பவனியில் ஈடுபட்ட தொண்டர்களான இளைஞர்கள் களைத்து விழுந்தனர்.



மாநாட்டுக் கண் காட்சியை மாநகராட்சி முதல்வர் திறக்க முடியாமை; மாநகராட்சி முதல்வரின் விருந்தில் வெளிநாட்டு அறிஞர்கள் கலந்து கொள்ளாமை; அலங்கார ஊர்திகளில் பேரறிஞர் அண்ணு, பண்டாரவன்னியன் போன்றவர்களின் உருவங்களைக் கொண்டு செல்லக் காவல்துறைத் தலைவர் திரு. சந்திரசேகரா எதிர்ப்புத் தெரிவித்தமை; மாநாட்டு அறிஞர்கள் சுற்றுலா வரவேற்புகளில் தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியமை; தமிழக இளைஞர் தலைவர் திரு. இரா. சனுர்த்தனம் மாநாட்டு நிகழ்ச்சிகளில் பார்வையாளராகப் பங்கு பற்றியமை; இவையாவும் மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்கட்குக் கவலையைத் தந்தது. அரசியலைக் கலக்க மாட்டோம் என்ற நடுநிலையிலிருந்து வழுவி விடுவோமோ என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்தது. 'மாநாட்டு நிகழ்ச்சிகளை மாநாட்டு அமைப்புக்குழு நடத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துகின்றதா? அமைப்புக் குழுவின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி மாநாடு தனியாக நடைபெறுகின்றதா, என்ற கவலை ஏற்பட்டது

களைப்பு மிகுதியும் கவலை மிகுதியும் புதன்கிழமை இரவு நடைபெற்ற பேராசிரியர் வித்தியானந்தன் அளித்த, புறக் கோட்டைத் தமிழ் வணிகர்களின் உபயமாக நடந்த பெருவிருந்தில் வெளிப்பாடடைந்தது. விழாக்களிலும் விருந்துகளிலும் சலசலப்பு ஏற்படுவது யாழ்ப்பாணத்தின் விரும்பத்தகாத தன்மைகளில் ஒன்று! யாழ்ப்பாணத்தின் இயல்புகளை முழுமையாகக் காட்ட வேண்டும் என்ற விருப்பம் சலசலப்பை ஏற்படுத்திய இரு இளைஞர்கட்கும் இருந்திருக்க வேண்டும்.

திரு. சேம்சு இரத்தினம் தமக்கே உரித்தான நகைச்சுவை ததும்பும் இயல்புடன் உரை நிகழ்த்தினர். திரு. துரைராசா தனது உரையில், வெளிநாட்டு அறிஞர்கள் எவரும் மாநகராட்சி முதல்வரின் தேநீர் விருந்தில் காணப்படாமை குறித்து வியப்பு தெரிவித்தார்.

பேராசிரியர் வித்தியானந்தன் அளித்த பெருவிருந்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. 1974 தை 3 தொடக்கம் 9 வரை மாநாடு நடைபெறும் என அறிவித்திருந்தோம். 9-1-1974 புதன்கிழமை இரவு பெருவிருந்து அளித்தோம். வெளிநாட்டு அறிஞர்களைச் சிறப்பித்தோம். வந்திருந்த வெளிநாட்டு அறிஞர் ஒவ்வொருவருக்கும் நினைவுப் பொருட்களை வழங்கினோம். ஒருவர்க்கொருவர் அன்புரை கூறி மகிழ்ந்தோம் மீண்டும் சந்திப்போம் என உறுதி மேற்கொண்டோம்; பிரியாமல் பிரிந்தோம்.

மாநாட்டுக்காக நடைபெற்ற பல போட்டிகளில் பரிசு பெற்றவர்கட்காகப் பரிசில்களை வழங்க வேண்டிய நிகழ்ச்சியும் மாநாட்டில் அரும் பணி புரிந்த



தொண்டர்களின் பணி நலம் பாராட்டு விழாவும் எஞ்சியிருந்தன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்காகவும், தொண்டர்கட்காகவும் சான்றிதழ்கள் அச்சிடப்பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்கட்கு 10-1-1974 வியாழக்கிழமை பரிசில்கள் வழங்கப் பெறும் எனத் திரு. துரைராசா அறிவித்தார். தொண்டர்கட்கான பணி நலம் பாராட்டு விழா 11-1-1974 வெள்ளிக்கிழமை நடைபெறும் என நான் அறிவித்திருந்தேன்.

வியாழக்கிழமை நடைபெறும் பரிசளிப்பு விழா பற்றிய செய்திகள் பிழையாக வெளிவந்தன. மாநாட்டை ஒட்டிப் பொதுமக்களுக்காக அறிஞர்களைப் பேச வைக்கும் நிகழ்ச்சி எனச் செய்திகள் வெளிவந்தன.

'நோதர்ண் இன்டசுறிசு' உரிமையாளர் திரு. சண்முகலிங்கம் என்னிடம் "வியாழக்கிழமை நிகழ்ச்சிக்குப் பொதுமக்கள் ஏராளமாக வருவார்கள். வீரசிங்க மண்டபத்தில் நிகழ்ச்சியை நடத்துகிறீர்களே, மண்டபம் கொள்ளாத மக்கள் திரளுவார்களே! யாழ் முற்ற வெளியில் மேடை அமையுங்கள் அல்லது திறந்தவெளி அரங்கில் நடாத்துங்கள்" எனக் கூறினர்.

"கலைஞர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்ச்சியே தவிர வேறொன்றும் இல்லை முற்ற வெளியில் கூட்டம் வைப்பதெனில் அரசின் அனுமதி புதிதாகப் பெற வேண்டும். திறந்த வெளி அரங்கில் வைத்தால் கூட்டம் நிறைய வராவிட்டால் என்ன செய்வது? தடைகள் விதிப்பதில் அரசு முன்னிற்கிறதே! முற்ற வெளியை அரசிடம் பெறுவதில் தொல்லை ஏற்படுமே" என்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு. துரைராசா அவர்களின் கவனத்திற்கு இக் கருத்து கொண்டு வரப்பட்டது. "சச்சி, கலைஞர் களுக்குப் பரிசில்கள் வழங்குவதோடு நிகழ்ச்சி முடி வடைந்து விடும், மழையும் வரும் போல உள்ளது; வெளியே நிகழ்த்த முடியாதே" என்றார்.

மாநாட்டு அமைப்பாளர்கள் எவருக்கும் தெரியாத வகையில் வியாழக்கிழமைக் கூட்டத்தில் வெளிநாட்டு அறிஞர்கள் பொதுமக்களுக்கு உரையாற்றுவார்கள் என்ற செய்தி யாழ் குடாநாடு எங்கணும் பரவி யிருந்தது. உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா. சனார்த்தனம் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவார் எனவும் செய்தி பரவியிருந்தது போலும்!

10-1-1974 வியாழக்கிழமை காலை பத்து மணி யளவில் திரு. துரைராசா மாநாட்டுச் செயலகத்தில் இருந்தார் என்னிடம் ஒரு துண்டுத் தாளைக் காட்டினார். வீரசிங்க மண்டப மேடை, அதிலே யார் யார் எந்த எந்த நாற்காலியில் உட்காருவார்கள் என்ற வரை படம் அதிலே இருந்தது. காவல் துறையினர் இப்படி ஒரு படம் வரைந்து தருமாறு கேட்டதாகக் கூறினார். எனக்கு வியப்பாக இருந்தது.

திரு. சனார்த்தனம் உரை நிகழ்த்தப் போகிறார் என்ற ஐயப்பாடுதான் காவல் துறையினரின் கெடு பிடிக்குக் காரணம் எனத் திரு. துரைராசா என்னிடம் விளக்கினார்.

1965 ஆம் ஆண்டில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தமிழ் நாட்டில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களுமே தலைமை தாங்கினர். நானும் திரு. இரா. சனார்த்தனமும் அப்பொழுது



பச்சையப்பன் விடுதியில் தங்கியிருந்தோம். நான் முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவன்; திரு. சனார்த்தனம் இளநிலைப் பட்டப்படிப்பு மாணவர். அனைத்துக் கல்லூரி மாணவர் குழுவில் பச்சையப்பன் கல்லூரி சார்பில் திரு, சனார்த்தனமும் வேறு சில மாணவர்களும் கலந்து கொண்டனர். தமிழகமெங்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மாணவர் நடத்தினர். அரசே ஆட்டம் கண்டது.

பின்னர் உலகத் தமிழ் இளைஞர் பேரவையை அமைத்து வளர்த்தவர் திரு. இரா. சனார்த்தனம். இலங்கைத் தமிழரின் இன்னல்களைத் தமிழக அரசுக்கு எடுத்துக்கூறும் முக்கியப் பேச்சாளராகத் திரு. சனார்த்தனம் விளங்கினார். பச்சையப்பன் கல்லூரியை விட்டு விலகிய பின் மீண்டும் திரு. சனார்த்தனனை 1968 இரண்டாவது தமிழா ராய்ச்சி மாநாட்டில், சென்னையில் சந்தித்தேன். எம்முடன் தமிழகச் சுற்றுலாவுக்கும் வந்திருந்தார்.

அறிஞர் அண்ணாவின் நாடகங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். டாக்டர் மு. வரதராசனின் மாணவராக இருந்து பின்னர் கலாநிதிப் பட்டமும் பெற்றார். தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள எல்லாத் தகுதியும் அவரிடம் இருந்தது. எனினும் அவரின் அரசியல் தொடர்புகள் இலங்கை அரசுக்குத் தலையிடியைத் தந்தன. சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் அவருக்கு உட்புகல் அனுமதி வழங்க மறுத்தது. எனவே மலேசியா சென்றார். கோலாலம்பூரில் இலங்கைத் தூதரகத்தில் உட்புகல் அனுமதி பெற்று இலங்கை வந்தார்; மாநாட்டில் பார்வையாளராக அமர்ந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநாட்டு நிகழ்வுகள் எதிலும் அவர் பங்குபற்ற வில்லை. ஆனால் யாழ்ப்பாண இளைஞர்கள் அவரை விடவில்லை. ஊர்கள் தோறும் அழைத்து இளைஞர் களிடையே உரை நிகழ்த்தச் செய்தனர். அலங்கார ஊர்திப் பவனியில் நல்லூரில் உரை நிகழ்த்தினார். காவல்துறையினர் தடை செய்தனர். இதுதான் மாநாட்டு அமைப்பாளர்களாகிய எங்களுக்குத் தலையிடியை ஏற்படுத்தியது.

'10-1-1974இல் நடைபெறவுள்ள கலைஞர்களுக் கான பரிசளிப்பு விழாவிலும் உரை நிகழ்த்துவார்' எனக் 'கதை' கட்டிவிடப்பட்டது. செவிவழிச் செய்தியாக இது பரவியது. நாளிதழ்களோ விளம்பரங்களோ செய்தி வெளியிடவில்லை.

காவல் துறையினர் திரு. சனார்த்தனத்தின்மீது கண்காணிப்பு நடவடிக்கையில் இறங்கினர். அவர் உரை நிகழ்த்த மாட்டார் என அமைப்புச் செயலாளர் வலியுறுத்தியும் காவல்துறையினர் நம்பவில்லை; படம் வரைந்து தருமாறு கேட்டனர். உரை நிகழ்த்து வோரின் பட்டியலைக் கேட்டனர். பட்டியல் கொடுக்கப் பட்டது. அந்த அடிப்படையில் காவல் துறையினர் கூட்டம் நடைபெற இசைவளித்து ஒத்துழைத்தனர்.

வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வீரசிங்கம் மண்டபம் சென்றேன். தொண்டர்குழுத் தலைவர் திரு. இந்திரலிங்கம் அங்கு நின்றார். 11-1-1974இல் நடைபெறவிருந்த தொண்டர் பணிநிலம் பாராட்டு விழா பற்றிப் பேசினோம். கலைஞர்கள் பரிசளிப்பு விழாவுக்குரிய வீரசிங்க மண்டப ஒழுங்குகள் பற்றிப் பேசினோம். "யாவும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. எல்லாவற்றையும் வழமை போல் ஒழுங்கு செய்கிறோம். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்" என்றார்.



திரு. இந்திரலிங்கம். "மேடையில் உள்ளவர்கட்குக் குளிர்பானங்கள் உண்டா?" எனக் கேட்டேன். "அண்ணை! எல்லாம் சரியாயிருக்கு, ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்" என்றார்.

நாங்கள் இவ்வாறு கதைத்துக் கொண்டு நின்ற பொழுது அங்கு திரு. இ. நமசிவாயம் வந்தார். "சச்சி, இண்டைக்கு ஏதும் பிரச்சினையோ?" என்றார். "எல்லாம் வழமைபோல்தான்; கடைசி நாளல்லவா? எல்லாரும் களைத்துப் போனோம்" என்றேன். "வாற வழியில் அல்பிரட் துரையப்பாவை 'ரெஸ்ட் ஹவுசில்' கண்டனான். ஆளுக்கு முகம் சரியில்லை" என்றார்.

5 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தை விட்டுக் கிளம்பினேன். வீடு சென்றேன். களைப்பு மேலிட நன்றாகத் தூங்கிவிட்டேன். இரவு 10 மணியளவில் எனது மைத்துனர் திரு. வி. சிவசுப்பிரமணியம் வந்தார், என்னை எழுப்பினார். அவர் சொன்ன செய்தி என்னைத் துக்கத்தில் ஆழ்த்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 32. நினைவு நடுகல்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன் 10-1-1974 வியாழக்கிழமை முன்னிரவு நடைபெற்ற நிகழ்ச்சிகளை நான் நேரில் காணவில்லை. நிகழ்ச்சி நடைபெற்றபின் யாழ்ப்பாண நகரம் இருந்த நிலையை 'ஈழநாடு' நாளிதழ் நிருபர்கள் விவரிக்கின்றார்கள்:

"யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டப முன்பக்கக் கண்ணாடிகள் யாவும் நொறுக்கப் பட்டுள்ளது. முன்னால் உள்ள இரும்புக் கம்பிகள் வளைக்கப்பட்டிருந்ததோடு, கதிரைகளும் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

"நேற்று அதிகாலை 3 மணிக்கு நமது நிருபர்கள், அசம்பாவிதம் நடந்த இடங்களை நேரில் பார்வையிடச் சென்றபோது மேற்குறிப்பிட்ட காட்சியைக் கண்டார்கள்.

"பேருந்து நிலயத்தில் காவலர்களும் இராணுவத்தினரும் காணப்பட்டனர். அரசாங்க அதிபரின் உத்தரவிற்கிணங்க நள்ளிரவு 2 மணிக்குச் சகல இடங்களுக்கும் விசேடப் பேருந்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதிலும், மக்கள் பேருந்துகளில் பிரயாணம் செய்ய அஞ்சியதைத் தொடர்ந்து அச்சேவைகள் கைவிடப்பட்டன.

"யாழ்முற்ற வெளியில் ஆயுதந்தரித்த காவலர்கள் அதிகாலை வரை காணப்பட்டனர். சரக்குந்து ஒன்றிலும்



மலையுந்து (ஜீப்வண்டி)களிலும் பொலிசார் இரவு முழுவதும் ரோந்து சுற்றினர்.

"இராணி திரையரங்கில் தீவுப்பகுதி பருத்தித்துறை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 200 பேர் இரவு முழுவதும் தங்கியிருந்தனர். அதிகாலை 2 மணிக்கு விசேடப் பேருந்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், ஒருவராவது வெளியில் வரவில்லை. இவர்களில் 10 பெண்களும் காணப்பட்டனர். விசேடப் பேருந்து சேவை நடைபெறுவதாக, ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் ஒருவராவது பேருந்து நிலயம் வந்து சேரவில்லை. யாழ்ப்பாணம் தபால் கந்தோர் வளவிற்குள்ளும் பலர் தஞ்சமடைந்திருந்தனர். வெலிங்டன் தியேட்டரிலும், வின்சர் தியேட்டரிலும் சுமார் 150 பேர் வரை தஞ்சமடைந்திருந்தனர்.

"றீகல் திரையரங்கிலும் சுமார் 100 பேர் வரை தஞ்சமடைந்திருந்தனர். முதலாவது படக் காட்சிக்கு வந்தவர்கள்கூடத் திரும்பிச் செல்லவில்லை.

"வீரசிங்கம் மண்டபத்தின் இருபக்கத்திலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மிதிவண்டிகள் காணப்பட்டன. இவைகளில் அநேக மிதிவண்டிகள் நொறுக்கப்பட்டிருந்தன. முற்றவெளிப் பகுதியிலும் முனீசுவரன் வீதியிலும் சில மிதிவண்டிகள் சேதமடைந்த நிலயில் காணப்பட்டன.

"வீரசிங்கம் மண்டபத்திற்குள்ளும், வெளியிலும், முற்றவெளியிலும், ஆயிரக் கணக்கான செருப்புகளும் சப்பாத்துக்களும் காணப்பட்டன. லேஞ்சிகள், கைப்பைகள், துவாய்களும் இங்குமங்குமாகக் காணப்பட்டன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"பேருந்து நிலையத்தில், விசேடச் சேவைக்காக 12 பேருந்துகளும் நடத்துநர்களும் தயாராக இருந்தனர். ஆனால் சேவை நடைபெறவில்லை. அதிகாலை 5 மணி வரை சேவை ஆரம்பிக்கவில்லை. கடந்த 8 தினங்களாக அலங்காரத்துடன் காணப்பட்ட வீதிகள், பொலிவிழந்து வெறிச்சோடிக்கிடந்தன. வீதியில் ஒருவரைக் கூடக் காணமுடியவில்லை. வீடுகளிலெல்லாம் விளக்குகள்கூட அணைக்கப்பட்டிருந்தன. எங்கும் மயான அமைதி நிலவியது.

"வீரசிங்கம் மண்டபத்தில் இருந்தவர்கள் ஒரு வழியாக வீடுபோய்ச் சேர்ந்துவிட்டனர். 10 போ மட்டும் தான் அங்கு காணப்பட்டனர்.

"மருத்துவமனை வீதியிலும் சனநடமாட்டம் எதுவுமில்லை. எங்கு பார்த்தாலும் பொலிஸ் மயமாகவே காணப்பட்டது. முனீசுவரன் வீதியிலும் ஏராளமான செருப்புகள் காணப்பட்டன.

"பேருந்துநிலையத்தில் கண்ணீர்ப் புகைக் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டது. வீரசிங்கம் மண்டபத்தில் கட்டப்பட்டிருந்த சிகரமும் சேதமடைந்திருந்தது. சில இதளியக் குமிழ்களும் மெர்குறிபல்புகளும் உடைக்கப்பட்டிருந்தன. அதிகாலை 5 மணி வரை எங்கும் மயான அமைதியாகவே இருந்தது."

'வீரகேசரி' நாளிதழின் யாழ் நிருபர் திரு. எசு. செல்லத்துரை பின்வருமாறு கூறினார்.

"யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் · தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

"மண்டபத்துக்குள் சனத் திரளை அடக்க முடியாததாலும், மண்டபத்துக்கு வெளியிலே கூட்டத்தை



நடாத்துமாறு பொதுமக்கள் வலியுறுத்தியதைத் தொடர்ந்தும் மாநாட்டு ஏற்பாட்டாளர் மண்டபத்துக்கு வெளியே உள்ள முற்றத்தில் அவசர அவசரமாக மேடை அமைத்துக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

"சுமார் அரை இலட்சம் மக்கள் மண்டபத்தின் முன்னுள்ள வீதி, வெளி உட்பட எங்கும் பரந்து நின்று வெளிநாட்டறிஞர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"இரவு 8-30 மணியிருக்கும். அப்பொழுது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரு காவலர்கள் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வீதி வழியாக வந்தனர். வீதியெங்கும் சனத்திரள் திரண்டிருந்ததால், அவர்களுக்கு வழிவிட்டுக் கொடுக்க மக்கள் மறுத்துவிட்டனர். இதனால் இரு காவலர்களும் வந்த வழியே திரும்பிச் சென்றனர்.

"பின்னர் சிறிது நேரம் கழித்து, சுமையுந்து ஒன்றிலும், மலையுந்து (ஜீப்) ஒன்றிலுமாக, ஆயுதம் தாங்கிய காவலர் அவ்வழியாக வந்தனர். இவர்களும் தமக்கு வழிவிட்டுத் தருமாறு வீதிக்கு குறுக்கே நின்றோரைக் கேட்டனர். மக்கள் செவிசாய்க்கவில்லை.

"வாகனங்களிலிருந்து காவலர்கள் இறங்கி மக்களை வீதிகளிலிருந்து அப்புறப்படுத்தத் தலைப்பட்டனர். இச்சமயம் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. கற்கள், குண்டாந்தடி முதலியன அங்கு பரிமாறப்பட்டன.

"காவலர்களின் தடியடிப் பிரயோகத்தைத் தொடர்ந்து மக்கள் அங்குமிங்கும் சிதறுண்டு ஓடினர். காவலர்களும் விடாமல் ஓடியோரைத் துரத்தித் துரத்தி அடித்தனர். இதனால் 30க்கு மேற்பட்டோர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகாயத்துக்குள்ளாகினர். சனத்திரளைக் கலைக்கக் காவலர் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர்.

"இதனாலும் மக்கள் செய்வதொன்றறியாது அங்குமிங்கும், கூட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சமீபமாகவுள்ள குளம், சேறு சகதிமிக்க வாய்க்கால்கள், அகழிகள், கிணறுகள் என்று எதையும் கவனிக்கத் திராணியற்றவர்களாக விழுந்து எழுந்து சிதறி ஓடிக் கொண்டனர். இப்படியாகப் பெரிய அமளி துமளி அங்கு ஏற்பட்டது. இந்தச் சனச் சஞ்சடி காரணமாக ஏழு பேர் சனத்துக்குள் சிக்கிப் பலியானார்கள். சிக்மரிங்கம் என்ற மற்றொரு யாழ் பிரமுகர், நெஞ்சு வலிக்கு இலக்காகி மரணமானார்.

"மற்றொரு நபரின் சடலம் நேற்று அகழிக்குள் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

"எல்லாமாக மொத்தம் ஒன்பது பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

"காயமடைந்த வீரர்களில் அகில உலக இளைஞர் பேரவைத் தலைவரான இரா. சனார்த்தனமும் ஒருவர் இவருக்குக் கையிலும் காலிலும் காயமேற்பட்டிருக்கிறது. இவர் காயத்துக்குச் சிகிச்சை பெற்றதைத் தொடர்ந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார். கொழும்பிலிருந்து நேற்று மாலை இந்தியா செல்லவிருந்தார். வேறு எந்தவொரு வெளிநாட்டவரிலிருக்கும் இந்த அசம்பாவிதத்தில் காயமேற்படவில்லை.

மாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவரான டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா மட்டும் கண்ணீர்ப் புகைக்கு ஆளானார். ஆயினும், தெய்வாதீனமாக ஆபத்து எதுவுமின்றி தப்பிக் கொண்டார்.



"தடியடியையும் கண்ணீர்ப் புகையையும் தொடர்ந்து நகரெங்கும் சிதறி ஓடிய மக்கள், திரையரங்குகளிலும், மருத்துவமனைக் கட்டிடங்களிலும், வீடுகளிலும் தஞ்சமடைந்து கொண்டனர். இதனால் திரையரங்குகளில் படக் காட்சிகள் நிறுத்தப்பட்டன.

'யாழ் நகர் பேருந்துநிலையத்தில் குழுமி நின்ற 2000க்கு மேற்பட்ட மக்கள் மீதும் காவலர்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் தடியடிப் பிரயோகமும் செய்தனர். இங்கு, மக்கள் இரண்டு பேருந்துகளைத் தீக்கிரையாக்கினர்.

"கூட்டம் நடைபெற்ற இடத்தில் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட கார்கள் சேதத்துக்குள்ளாகின. 800க்கு மேற்பட்ட மிதிவண்டிகள் கோட்டை மைதானத்தில் தேடுவாரற்றுச் சிதறுண்டு கிடந்தன. வீரசிங்கம் மண்டபமும் பலத்த சேதத்துக்குள்ளானது.

"சம்பவத்தைக் கேள்வியுற்று அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, உடனடியாக யாழ் காவல் நிலையத்துக்கு இரவோடு இரவாக வந்து நிலைமைகளை அவதானித்து நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தார்."

பதினோராம் திகதி வெள்ளிக்கிழமை காலை மருத்துவமனையில், நான் காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் பார்த்தேன். எனது தொண்டர் படையில் எவராவது அடிபட்டார்களா எனத் தேடினேன். வீரசிங்கம் மண்டப வாயிலில் மரண விசாரணை தொடங்கியது. பேராசிரியர் வித்தியானந்தன் சாட்சியமளித்தார்.

புதன்கிழமை விழவு; வெள்ளிக்கிழமை இழவு. புதன்கிழமை மகிழ்ச்சிக்கோலம்; வெள்ளிக்கிழமை மரண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓலம்; மயான அமைதி; யாழ்ப்பாணக் குடாநாடு அழுதது. கடைகள் பூட்டப்பட்டன. பேருந்துகள் நிறுத்தப்பட்டன. தெருவெல்லாம் வெறிச்சோடியிருந்தன. மாவிலைத்தோரணங்களை மூடிக் கறுப்புக் கொடி பறந்தன. ஊர்கள்தோறும் அழுகைக் குரல்.

நந்தகுமார், 14 வயது, சுளிபுரம்; கேசவராசன், 15 வயது, தொல்புரம். சிவானந்தன், 20 வயது, நாச்சிமார் கோவில்; தேவரத்தினம், 27 வயது, நாயன்மார் கட்டு; யோகநாதன், 28 வயது, பளை; பொன்னுத்துரை, வயது 54, கோப்பாய்; ஆறுமுகம், வயது 60, நாயன்மார்காடு; சரவணபவன், பருத்தித்துறை; சிங்கமரிங்கம், வயது 60, யாழ்ப்பாணம்; இந்த ஒன்பது பேரின் மரணச் சடங்குகளிலும் மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மரண ஊர்வலங்கள் பற்றிய நிகழ்ச்சிகளைத் 'தினபதி' நாளிதழ் நிருபர் பின்வருமாறு எழுதினார்.

"வியாழக்கிழமை குழப்பத்தில் உயிரிழந்த 9 பேரின் பிரேதங்களும், அவரவர் சொந்த இடங்களில் சனிக்கிழமை அன்று அடக்கம் செய்யப்பட்டன.

"இறந்தவர்கள் குடா நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாகையால் அன்று யாழ்ப்பாண மாவட்டமே சோகமாகக் காட்சியளித்தது."

"எல்லா இடங்களிலும் ஆயிரம் ஆயிரம் பொது மக்கள் பிரேத ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். குறிப்பாகப் பெருந்தொகையான வாலிபர்கள் பிரேத ஊர்வலங்களின் முன்னால் வெண்ணிற உடை அணிந்து அணிவகுத்துச் சென்றனர்."

"பிரேத ஊர்வலங்களில் அந்தப் பகுதி எம். பி.க்களும், தமிழரசு, தமிழ் காங்கிரசுக் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



"நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்தவரின் பிரேத ஊர்வலத்தில் சமசமாசப் பிரமுகர் திரு. ஏ. விசுவநாதனும் கலந்துகொண்டு கோம்பயன்மணல் சுடுகாட்டிற்குச் சென்றார்.

"நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வாலிபரின் பிரேத ஊர்வலமும், நாவலர் வீதியைச் சேர்ந்தவரின் பிரேத ஊர்வலமும் தட்டாதெருச் சந்தியில் ஒன்றாகச் சந்தித்தபோது எல்லோர் கண்களிலும் நீர் மல்கியது.

"பின்னர் இரண்டு பிரேதங்களும் ஒரே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

இறந்தவர்களில் அநேகர் இளைஞர் ஆகையால் நாட்டின் எல்லா இடங்களிலும் மயான அமைதி நிலவியது.

"வெள்ளிக்கிழமை முழுவதும் பூட்டப்பட்டிருந்த கடைகள் சில மணி நேரம் மட்டும் திறந்து வியாபாரம் நடந்தன. நண்பகல் 12 மணிக்கு முன்னரே மீண்டும் அவை பூட்டப்பட்டன."

யாழ்ப்பாணத்தில் பதட்டநிலைமை இருந்தது. இளைஞர்களின் கோபக்கனல், மாநாட்டைக் குழப்பக் காரணமாக இருந்தவர்கள் மீது திரும்பியது. 'தினபதி' நாளிதழில் வெளிவந்த செய்தி:

"யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து இப்போது யாழ் மாவட்டத்தில் பதட்ட நிலை காணப்படுகிறது.

"இதைத் தொடர்ந்து நல்லூர் எம்.பி. திரு. சி. அருளம்பலம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா, யாழ் நகரமேயர்திரு. அல்பிரெட் துரையப்பா மற்றும் அரசாங்க ஆதரவுடைய பிரமுகர்களின் வீடுகளை ஆயுதந்தாங்கிய காவல் வீரர்கள் காவல் புரிந்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"அது மட்டுமன்றி, காவலரும், இராணுவத் தினரும் கூட்டாகக் குடாநாட்டின் எல்லாப் பகுதி களிலும் அடிக்கடி காவல் (ரோந்து) சுற்றி வரு கிறார்கள்.

"சனிக்கிழமை நள்ளிரவு இருவர் நல்லூர் எம். பி. திரு. அருளம்பலத்தின் வீட்டிற்கு எதிரே உள்ள வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் உலாவியதாகவும், அதைத்தொடர்ந்து அங்கு காவல் புரிந்த காவலர்கள் துப்பாக்கியைக் காட்டித் தயார் நிலைப்படுத்தியபோது, குண்டு வீசப்பட்டதாகவும் காவல்துறை வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலத்தின் வீட்டடியில் சனிக்கிழமை நள்ளிரவு கைக்குண்டு வீசப்பட்டது.

"கைக்குண்டு வீசப்பட்டதனால் அங்கு காவல் செய்துகொணடிருந்த காவலர்களில் ஒருவர் காய முற்றார். வீதியால் சென்ற மற்றொருவரும் காய முற்றார். இவர்கள் இருவரும் இப்போது யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்."

யாழ்ப்பாணம் மட்டுமன்று; வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களிலும் அழுகுரல் கேட்டது; கறுப்புக் கொடி உயர்ந்தது; கதவுகள் பூட்டிக் கொண்டன; பேருந்துகள் எரிந்தன; மக்கள் எதிர்ப்பைத் தெரிவித் தனர்; துயரத்தில் ஆழ்ந்தனர்.

சென்னையில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மதுரை மாநகராட்சி முதல்வர் திரு. மதுரை முத்து தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரக அலுவலக முன்றிலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



"இலங்கையில் நடந்த உலகத் தமிழர் மாநாட்டில் காவலர்கள் தடியடித் தாக்குதல் நடத்தி 9 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மத்திய அரசும் தமிழக அரசும் உடன் நடவடிக்கை எடுத்து நியாயமான தீர்வுகாண வேண்டும். இதைச் செய்யத் தவறினால் தமிழ் மக்கள் பொறுக்கமாட்டார்கள். ஒவ்வொரு தமிழனும் உணர்ச்சிப் பிழம்பாக மாறுவான். தமிழர்களைப் பாதுகாக்கத் தனிப்படை அமைக்க வேண்டியிருக்கும்" எனத் திரு. மதுரை முத்து அறிக்கை வெளியிட்டார்.

"தமிழ் மக்கள் மனிதாபிமானத்தோடு நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்த தேண்டும். இது விடயத்தில் மத்திய அரசு அதிக அக்கறை கொள்ளவேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் மத்திய அரசை வலியுறுத்து கிறேன்" எனத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இறந்தவர்கட்கு அனுதாபம் தெரிவிப்பதில், நிகழ்வுபற்றி முழுமையான விசாரணை வேண்டும் எனக் கோருவதில், குற்றவாளிகள் எவராயினும் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கூறுவதில் பலர் ஈடுபட்டனர்.

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினா புதுமை யான முயற்சியில் ஈடுபட்டனர். மாநாடு தொடர்பாக இறந்த பதினொரு பேர்களுக்கும் நினைவு இதழ் ஒன்றை வெளியிட்டனர். திரு. சி. மு. ஞானானந்தன், திரு. விசயேந்திரா, திரு. சிவகுமாரன் மூவருமாகத் தயாரித்த இந்த நினைவு இதழ் இறந்தவர்களைப்பற்றிய முழு விவரங்களைக் கொண்டிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



9-2-1974 அன்று தமிழர் வாழ்விடமெங்கும் துக்க தினமாக மீண்டும் கடைபிடிக்கப் பெற்றது. பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், வணிக நிலையங்கள், தெருக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. யாழ்ப்பாணம் முற்றவெளி முனியப்பர் ஆலயத்துக்கு முன்னால் தமிழர் கூட்டணியினர் உண்ணாவிரதம் இருந்தனர். பொதுக் கூட்டம் நடத்த அவர்கட்கு அனுமதி மறுக்கப்பட்டது. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கடையடைப்பு, துக்கம் கொண்டாடல் நிகழ்ந்தன; கூட்டங்களும் நடத்தப்பெற்றன.

"துகிலுரியப்பட்ட பெண்கள் மீது ஆணையாக நம்மை நாமே ஆளப் பிரதிக்கினை செய்வோம். தமிழர்களாகிய நாம், அந்நியர்களிடமிருந்து விலகிக் கொண்டால்தான் விமோசனம் உண்டு; தமிழுக்கும் தமிழனுக்கும் வளர்ச்சி உண்டு; விருத்தி உண்டு" எனத் திரு. அ. அமிர்தலிங்கம் அன்று உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உரையாற்றினார்.

"ஒன்பது பேரின் உயிர்த்தியாகம் தமிழ் இன விடுதலைப் போருக்கு அடிகோலுவதாக அமைந்து விட்டது." இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன், கொழும்பில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மன்னாரிலிருந்து செதுக்கிய மரக் கட்டைகள்; கொழும்பிலிருந்து 'நினைவு நடுகல்' என எழுதிய கல்; யாழ்ப்பாணத்திலிருந்து பைஞ்சுதை, கல், மண், தொண்டர்கள்; 10-1-1975 அதிகாலை 4 மணிக்கு இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து யாழ்ப்பாணம் முற்றவெளியில், வீரசிங்க மண்டபத்துக்கு முன்னால், இறந்த பதினொருவருக்காகவெனப் பதினொரு



தூண்கள் கொண்ட நினைவு நடுகல் அமைத்தோம்; அனைத்து மத வழிபாடும் நடத்தினோம்.

சில வாரங்களின் பின் இந்த நடுகல் உடைத்தெறியப்பட்டது. அரசின் 'உண்மையான' ஊழியர்கள் இதை உடைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

10-1-1976இல் மீண்டும் 4 மீட்டர் உயரத்தில் நினைவு நடுகல் எழுப்பினோம். அனைத்து மத வழிபாடு நடத்தினோம். சில நாட்களின்பின் இந்தத் தூணும் உடைத்து இழுத்துச் சாய்க்கப் பட்டது. சாய்ந்த நிலையில் இன்றும் உளது!

10. 1. 1977 இல் மீண்டும் ஒன்பது தூண்கள் கொண்ட நினைவு நடுகல் எழுந்தது. அனைத்து மத வழிபாடு நடைபெற்றது. நீண்ட காலமாக இந்த நடுகல் உடைக்கப்படாமல் உள்ளது. முதல் இரண்டு தரமும் நினைவு நடுகல் அமைக்கப்படுவதில் நான் முழுமையாக ஈடுபட்டேன். பல இளைஞர்கள் எனக்குத் துணையாக இருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளிநாட்டவர்கள் இந்த நினைவு நடுகல்லுக்கு அஞ்சலி செலுத்தாது மீள்வதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற்சேர்க்கை-1

## மரண விசாரணை நீதவான் தீர்ப்பு

# INQUEST No. 3427

# VERDICT

The International Association of Tamil Research held its Conference in Sri Lanka at the Jaffna Town commencing on 3-1-74. It concluded on 9-1-74. Professor Vithia-nanthan of the Ceylon University was its President. Dr. K. Mahadeva and Mr. V. S. Thurairajah were the Joint Secretaries. Dr. Mahadeva was the General Secretary of the Conference. The academic sessions concluded on 9-1-74. At these sessions a large number of foreign scholars participated. The affairs of the conference were managed at the Secretariat in No. 229, Main Street, Jaffna. On 29-12-73 Dr Mahadeva had discussed the full programme with the Honourable Prime Minister and an assurance was given to her by Dr. Mahadeva that there would be no political speeches at the Meeting.

On 10-1-74 it was decided by the Organisers to have a Public Meeting to distribute awards to those who had participated in the Cultural Programme. This meeting was to have been held at the Municipal Open Air Theatre but according to witness Dr. Mahadeva it was held at the Veerasingham Hall because there were rains and the Theatre was soggy and not suitable.

At 10.30 a.m. on 10-1-74 Asst. Supdt. of Police Mr. Chandrasekara attached to the Jaffna S.P's division had telephoned the Joint Secretary Mr. V. S. Thurairaja and reminded him that the permission to hold the Conference expired on the 9th and advised him to obtain

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



approval for the 10th Meeting. Mr. Thurairajah had requested Dr. Mahadeva to attend to this matter as he was not well. Dr. Mahadeva called on the Asst. Supdt. of Police at about 11.00 a.m. on 10-1-74. The Asst. Supdt. of Police had asked for a List of Speakers. He was then referred to Mr. J. A. D. Ariyansinghe the Superintendent of Police, Jaffna. The Supdt. of Police had requested him to make a written application giving the Programme and a List of Speakers. This was sent to the Supdt. of Police through witness Senthoor Selvan by Dr. Mahadeva. He had taken him to the S.P.'s Bangalow at 2.00 p.m. The Supdt. of Police had given a verbal consent to the Meeting.

The Permit No. 54 was removed from A.S.P. Chandrasekara's Office, according to him, by a messenger from the Organisers. Mr. V.S. Thurairajah denied that a written permit was given at any stage of the Conference. If that was the actual position it only shows the vast amount of mutual confidence that the Police and the Organisers had in each other. However, I cannot imagine permission being given by the Police without the conditions being on record. Since it was not conclusively shown that the permit had, in fact, reached either Dr. Mahadeva or Mr. Thurairajah I ruled that the copy of it cannot be tendered evidence. Nevertheless witnesses Mr. Chandrasekara, Mr. Ariyasinghe, Dr. Mahadeva and the Head Quarters Inspector are agreed that the understanding was that the Meeting would be held at the Veerasingham Hall and that a person called Janarthanan would not be allowed to speak. Of course, there was the ovearall understanding that there would no Political Speeches.

It may be observed at this stage that Mr. Janarthanan was a foreigner and was considered a 'Security risk' to



Sri Lanka. I did not have the benefit of an elaboration of this term although I asked the Police witnesses about it. He was wanted by the Criminal Investigation Department for questioning and according to Superintedent of police Mr. Ariyasinghe, a Notice was served on him on the evening of 10-1-74 at the venue of the meeting itself by the Head Quarters Inspector Mr. Nanayakara requesting him to present himself before A.S.P. C.I.D. Immigration & Emmigration for questioning Dr. Mahadeva states that Janarthanan was not a delegate to the Conference. He was neither an observer nor an invitee. He was, of course, present at the meeting on 10-1-74. That his presence was a matter of grave concern to the police is very clear in that it was a repeated request by the Officers to the Organisers that he should not be allowed to address the meeting ot 10-1-74. A.S.P. Chandrasekara went so far as to stay that it was requested that he should not be allowed to come near the platform.

The Meeting of 10-1-74 commenced duly at about 6.30 p.m. at the Veerasingham Hall It was presided over by the Secretary Mr. V. S. Thurairajah. Witness Dr. Mahadeva was the first speaker. He had thanked everybody and had thanked the Police Officers for their excellent co-operation during the time to the conference. At the very commencement of the meeting a section of the crowd at the rear of the Hall had started disturbing the proceedings by demanding that the meeting should be held outside. The confusion was such that Prof. Vithiananthan had expressed a regret to Dr. Mahadeva that he had not presided and that there could have been bettre control of the crowd if he had done so. Dr. Mahadeva had tried to use "Mass psychology" to control the disturbing elements whose clamouring had

*2381—16*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



become more insistent. Messages were received from outside that the crowd were restive. Dr. Mahadeva said that it was feared that the crowd outside would break in and the meeting would be disrupted. The crowd had started battering the Hall doors more frequently. Mr. Thurairajah too states that at about 8-00 p.m., "Half way through the proceedings we found it difficult to proceed with the meeting as the crowd was demanding that they should see and hear the delegates."

It was in this state of affairs, described as "Chaotic" by witness Inspector Nanayakara who was present at that time outside the Hall, that the organizers decided to shift the venue to the outer compound of the Hall. The outer compound faces the entrance to the Hall. It is separated by a railing fence from the road. It is a grass reservation with a metal focus lamp post standing in the grass portion. The portion between the railings and the entrance could seat about hundred persons or with difficulity hundred and fifty persons on the grass. For the duration of the Conference a decorated Pandol described in Tamil as a 'Sikaram' was erected outside. This was intended to decorate the entrance. It was also illuminated by electric bulbs. This pandol further restricted the space available for people to congregate between the entrance of this building and the railing fence.

According to Mr. Thurairajah, who incidentally was the architect who designed the Veerasingham Hall, the Hall could accommodate a thousand persons and a further two hundred and fifty could be seated. There was loud agitation outside to have the meeting outside the Hall and the "Outside arrangements were made very hastily". The platform was a makeshift one with only two tables Mr. Rajarajeswaran, Attorney-at-Law in his evidence states



that Prof. Vithiyananthan had expressed a fear that there would be a sabotage at this stage and as a precaution microphone wires were brought overhead.

When the Organizers came out of the Hall having abandoned the meeting inside the Hall, Inspector Nanyakara had met the President and asked him what he was intending to do. Prof, Vithiananthan is stated to have replied, "What can I do ?" Although Professor Vithiananthan in his evidence has omitted to say this, it rather reflects eloquently the helpless state in which the Organizers found themselves at that time. Mr. Nanayakara further states that he apprised him of the conditions of th... ...era- speaker permit and brought it to his notice ... ...ne Regal illegal and a violation of the permit. ... ...ntact the A.S.P. problem to Mr. Thurairajah the S... ...e Hall. Then he retur- but the latter had not c... ...at Janarthanan was seated appah Sarveswar... ...ting was proc... S.P. on the 10th states th... ...iod was ... loud...

...min... question that I propose to discuss is whether ...chain of circumstances that led to the death of seven persons were started by any other agency. On all the evidence placed before me, I find that the meeting was disrupted as early as 7-45 p.m. by a section of the crowd-a crowd who could be vaguely identified as the persons who wanted Janarthanan to be on the platform. The first thing that meets the eye at the resumed meeting outside the Hall is Janarthanan seated on the platform and garlanded. He warned the Secretary Dr. Mahadeva saying, "If you ask me to get down there would be more trouble."

The foreign delegates were attending the conference from 3-1-74 to 9-1-74. The crowds were quite familiar with them. It was not a crying demand to see them that day although the section which disrupted the meeting had used it as a slogan. Since the main purpose of this meet-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



troubled very much on this matter. However, the police were alert to this matter and H.Q I. Nanayakara had questioned the President in regard to this when the meeting was to be held outside, and he acted on the footing that there was a violation of the Permit to use the loud-speaker.

The next aspect is the permitting of persons who were not in the application to speak. This question seems to have been highlighted by the possible participation as a speaker of one person called Janarthanan. He did not in fact speak at the meeting before it was finally disrupted, but, that he was going to speak was an apprehension shared by the police and the organising secretary Dr. Mahadeva. I am led to believe that it was this imminent possibility that caused police intervention. The President
reservation with a [illegible] who was in charge of the proceedings
grass portion. The portion between would not happen. But
entrance could seat about hundred pers[illegible] fidence is to be
difficulty hundred and fifty persons on the grass. [illegible] seated on
duration of the Conference a decorated Pandol described in Tamil as a 'Sikaram' was erected outside. This was intended to decorate the entrance. It was also illuminated by electric bulbs. This pandol further restricted the space available for people to congregate between the entrance of this building and the railing fence.

According to Mr. Thurairajah, who incidentally was the architect who designed the Veerasingham Hall, the Hall could accommodate a thousand persons and a further two hundred and fifty could be seated. There was loud agitation outside to have the meeting outside the Hall and the "Outside arrangements were made very hastily". The platform was a makeshift one with only two tables Mr. Rajarajeswaran, Attorney-at-Law in his evidence states



using the road where the people were seated by the officers on duty. But when the need arose to contact the organizers with the view of possibly stopping the meeting which was being held in a manner different from that which was planned by even the organizers, a prudent officer should be expected to anticipate hostile reaction. It should not be forgotten that it was the crowd who wanted this meeting to be held outside. The evidence of A.S.P. Mr. Chandrasekara and Mr. Nanayakara show that there was spontaneous hostility manifest at the very entry of the police. This section of the crowd may not have been reflecting the general feelings of the persons present. The Organizers have in fact bestowed encomiums on the police even at the meeting held inside the Hall that evening. Mr. Mahadeva had personally conveyed his gratitude to Mr. Chandrasekara and the S.P. on the 10th morning.

The final question that I propose to discuss is whether the chain of circumstances that led to the death of seven persons were started by any other agency. On all the evidence placed before me, I find that the meeting was disrupted as early as 7-45 p.m. by a section of the crowd-a crowd who could be vaguely identified as the persons who wanted Janarthanan to be on the platform. The first thing that meets the eye at the resumed meeting outside the Hall is Janarthanan seated on the platform and garlanded. He warned the Secretary Dr. Mahadeva saying, "If you ask me to get down there would be more trouble."

The foreign delegates were attending the conference from 3-1-74 to 9-1-74. The crowds were quite familiar with them. It was not a crying demand to see them that day although the section which disrupted the meeting had used it as a slogan. Since the main purpose of this meet-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ing, namely the distribution of awards, was over, I would have thought that the organizers would have stopped the meeting at that stage. Mr. York says that two persons have died the previous day in the procession. It was a tragedy relatable to reckless enthusiasm within the knowledge of the organizers themselves.

In the light of the tragic outcome of the whole incident, it would be easy to appear wise after the event and suggest that things could have been done in a different way. It is not within the scope of an inquirer to do so.

Whether the Security Risk of Janarthanan was so great as to necessitate police intervention is for proper authorities to decide because I cannot comment on matters pertaining to national security. The justification for police intervention is a matter for the person who knew the degree of risk involved in the participation of Janarthanan at a public meeting. If the police had acted with undue haste or lack of consideration in the context of the security risk involved, I trust the appropriate authorities would take suitable action to avoid a repetition of such a course of conduct. I cannot express an opinion on this matter because I am handicapped without an elaboration of the term "Security Risk" to be able to judge for myself whether the risk was such as to warrant a speedy and drastic action.

I further direct that the director of public prosecution be informed that there has been a contravention of Section II of the Electricity Act-Chapter 205 C.L.E. and recommend that suitable action be taken against the owner of generator that was in use at the premises on 10-1-74.

Before parting with these proceedings I must place on record my deep gratitude for the full measure of co-operation extended to me by M/S. S. Nadarajah, S. Thambi-



thurai and R. Visvanathan, Attorneys-at-Law who attended on every date of inquiry and suggested useful questions to clarify many difficult points that arose. I must also thank the special police team under the direction of S.P. Mr. Ariyasinghe, A.S.P. Pertus Perera and I.P. Pathmanathan who extended their full measure of co-operation and conducted a very thorough investigation into all possible aspects that should be explored into in an inquiry that has aroused a great deal of public interest.

(*Sgd.*) **K. PALAKIDNAR**
*Magistrate, Jaffna.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற்சேர்க்கை—2

# யாழ்ப்பாணக் குடிமக்கள் குழு விசாரணை அறிக்கை

1974 பெப்ரவரி 2, 4, 5, 12, 13 ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம் பாம்கோட் மண்டபத்தில் நடைபெற்ற

## விசாரணைக் குழுவின் அறிக்கை

"அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்குச் சமுகமளித்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டப எல்லையில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலும், அதைத் தொடர்ந்த நாட்களிலும் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு" யாழ்ப்பாணப் பொதுமக்களால் நாங்கள் நியமிக்கப்பட்டோம்.

எங்கள் முன் சாட்சியம் அளிப்பவர்களின் வாக்கு மூலங்களிலுள்ள உண்மைகளை அறிந்து உறுதிப்படுத்துவதே எங்களின் வேலையாகும்.

சாட்சியங்களைத் தன்முன் சமுகம் அளிக்குமாறு பணிக்கவும், சம்பந்தப்பட்ட ஆதார மூலங்களைச் சமர்ப்பிக்கவும், ஒரு சட்டமன்றத்திற்குள்ள அதிகாரம் பொதுமக்களின் ஆணையால் அமைக்கப்பட்ட இத்தகைய விசாரணைக்குழுவுக்குக் கிடையாது. அதற்குப் பதிலாக இந்தச் சம்பவங்கள் பற்றிய விபரம் தெரிந்தவர்களை எங்கள் முன் சாட்சியம் அளிக்குமாறு இந்த விசாரணைக் குழுவின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயலாளரால் ஆங்கில, தமிழ்த் தினசரிகளில் பிரசுரிக்கப்பட்ட அழைப்போடு நாங்கள் திருப்திப்பட வேண்டியதாயிற்று.

அந்த விளம்பரத்தைக் 'கண்ணுற்ற பெருந்தொகையானோர் சாட்சியம் அளிக்கச் சம்மதம் தெரிவித்துச் செயலாளருக்கு அறிவித்தனர்.

ஒரே சம்பவத்தைப்பற்றி பேசப் பல சாட்சியங்கள் தேவையில்லை என்பதை நடுநிலை வழக்கறிஞராகச் சேவை செய்த திரு. தம்பித்துரை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருந்தோம்.

எங்களின் விசாரணைக்குட்பட்டவர்களில் யாழ்ப்பாணப் பொலிசாரும் சம்பந்தப்பட்டவர்கள் என்ற முறையில், ஒரு உயர்தரப் பொலிஸ் அதிகாரியை விசாரணையில் உதவச் சமுகங் கொடுக்குமாறு வேண்டி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குக் கடிதம் எழுதும்படியும், அக்கடிதப் பிரதிகளைக் கௌரவ பிரதம மந்திரிக்கும், யாழ்ப்பாண பொலிஸ் மா அதிகாரிக்கும் அனுப்பும்படியும் காரியதரிசியைப் பணித்தோம்.

எங்களின் இந்த விசாரணையில், அந்தச் சம்பவங்கள் பற்றிய பொலிஸ் தரப்பு வாதத்தை எடுத்துரைத்து உதவி செய்ய எந்த அதிகாரியும் முன்வரவில்லை என்பதையிட்டு வருந்துகிறோம். பொலிஸ் தாக்குமளவிற்குக் கூட்டத்தினர் ஆத்திரம் ஊட்டும் செயல்கள் எதிலும் ஈடுபட்டனரா என்றறியச் சில சாட்சியங்களை விசாரணை செய்தோம். அத்தகைய செயல்கள் எதுவுமே நடக்கவில்லையென்று உறுதியாகத் தெரிவித்தனர்.

1974 ஜனவரி 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கூட்டம் ஜனவரி 3ஆந் திகதியிலிருந்து ஜனவரி 9 ஆந் திகதி வரை நடந்த அந்த மகாநாட்டின் பிரமாதமான முத்தாய்ப்புக் கூட்டந்தான் என்பது சாட்சியங்களிலிருந்து தெளிவாகிறது. அதை நாங்கள் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுகின்றோம். அந்த மகாநாட்டைக் கொழும்பில் ஏன் நடத்தக்கூடாது என்ற வாதப்பிரதிவாதங்களுக்குப்



பிறகுதான் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆகையால், யாழ் நகர வாசிகள் பல விதத்திலும் அதுபற்றிய தங்கள் குதூகலத்தை வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணமும், சுற்றுப்புறக் கிராமங்களும் வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. களிபொங்கிய மனத்தோடு பல்லாயிரக்கணக்கானவர்கள் தினமும் மகா நாட்டிற்கு வந்து போயினர்.

மகாநாடு நாட்களில் நடந்தேறிய களியாட்ட ஊர்வலங்கள், கலாசார நிகழ்ச்சிகள் முதலியன சம்பந்தமாக ஒரு பரிசளிப்பு விழாவை 1974 ஜனவரி 10ஆந் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடத்துவதற்கென்றே முதலில் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் மகா நாட்டிற்குச் சமுகமளித்திருந்த பிரதிநிதிகளின் உயர் மட்டக் கலைஞானக் கலந்துரையாடல்கள் நடந்த மண்டபங்களில் பொதுமக்கள் அனுமதிக்கப்படாததால் அந்தப் பிரதிநிதிகளைக் காணவும் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கவும் விரும்பிய பொது மக்களின் ஆசைக்கு ஜனவரி 7ஆம் அல்லது 8ஆம் திகதி தான் அமைப்பாளர்கள் இணங்கினர்.

10ஆம் திகதிக் கூட்டத்திற்கு ஒரு புது அனுமதி பெற வேண்டுமென்றும், பேச்சாளர்கள் பெயர்களையெல்லாம் கொடுக்க வேண்டுமென்றும் பொலிஸ் உதவி மா அதிகாரி (ஏ. எஸ். பி) சந்திரசேகரா சொன்னதின் பேரில் அவர் சொன்ன முறையிலேயே ஒரு மனுக் கொடுக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த இளைஞர் தலைவரான திரு. ஜனார்த்தனன் என்பவர் அந்தக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றுமற் பார்த்துக்கொள்வதே பொலிஸின் நோக்கம் என்பது சாட்சியங்களிலிருந்து புலனாகிறது. ஜனார்த்தனன் மகாநாட்டுப் பிரதிநிதியல்ல; அவரைச் சொற்பொழிவாற்றச் செய்வது அமைப்பாளரின் நோக்கமும் அல்ல. அந்த கட்டுப்பாட்டோடுதான் பொலிசார் கூட்டத்திற்கு அனுமதி அளித்தனர். 3ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதி வரை நடந்தது போலவே, இந்தக் கூட்டத்திற்கும் பொலிசார் எழுத்து மூலமான அனுமதி வழங்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரு தரப்பாரும் ஏற்றுக்கொண்டுள்ள விஷயத்திற்கு எழுத்து மூலமான அனுமதியைக் கேட்கவோ கொடுக்கவோ அவசியமில்லாத ஒரு கனவான்கள் ஒப்பந்தம் அது என்பது சாட்சியங்களிலிருந்து விளங்குகிறது. அமைப்பாளரிடம் பொலிசார் நல்லெண்ணங் காட்டி ஒத்துழைப்புக் கொடுத்தமைபற்றி மகாநாட்டுத் தலைவராயிருந்த இலங்கைச் சர்வகலாசாலையைச் சேர்ந்த கலாநிதி வித்தியானந்தன் புகழ்ந்துரைத்து நன்றி தெரிவித்துச் சிறிது நேரத்திலேயே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது வேதனைக்குரிய விந்தையாகும்.

9ஆம் திகதி பெய்த பெருமழையின் காரணமாக யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெற விருந்த 10ஆம் திகதிக் கூட்டத்தை வீரசிங்கம் மண்டபத்திற்கு அமைப்பாளர்கள் மாற்றிவிட்டனர். அவ்வாறு இடமாற்றம் செய்யும்பொழுது, கூட்டத்தின் அளவு எத்தகையதாயிருக்குமென்றோ, அல்லது உள்ளே நடக்கும் விஷயங்களை வெளியில் இருந்து ஒலி பெருக்கியிற் கேட்பதோடு திருப்தியடையாமல் மக்கள் உள்ளே வர விரும்புவார்கள் என்றோ அமைப்பாளர்கள் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. அதனுல் ஏற்கனவே நிறைந்திருந்த மண்டபத்தில் மேலும் மேலும் மக்கள் நெருங்கியடித்துக் கொண்டு நுழைய ஆரம்பித்தவுடன், ஏதாவது செய்தாக வேண்டுமென்று அமைப்பாளர்கள் தீர்மானித்தனர். அன்று மழையில்லாததால் ஏற்கனவே அனுமதி பெற்றிருந்த திறந்த வெளி அரங்கில் மீண்டும் கூட்டத்தை நடத்தக் கடைசி நேரத்தில் முயற்சித்தனர். ஆனுல் அரங்கின் கதவுகளைத் திறந்து விடுவதற்குப் பொறுப்பாளருக்கு அனுமதி பெற்றுக் கொடுக்க யாழ்ப்பாண மாநகரசபைத் தலைவரையும் ஆணையாளரையும் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. ஆகையால் கூட்டத்தை மண்டபத்தின் வெளியில், மண்டப எல்லைக்குள் நடத்துவதென்று தீர்மானித்து அவ்வாறே அறிவித்தலும் செய்யப்பட்டது. மக்கள் கூட்டம் அதைத்



திருப்தியுடன் ஏற்று வசதியாக இருந்து பார்க்கக்கூடிய இடங்களைத் தேடி அமர்ந்தனர். அம்முறையில் மண்டபத்திற்கு வெளியில் இருந்த வீதியிலும், வீதிக்கு அப்பாலுள்ள கோட்டை மதில் வரையுள்ள புல் வெளியிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள் இடம் பிடித்து அமர்ந்திருந்தனர்.

அவ்வாறு கூட்ட நடவடிக்கைகளை மண்டபத்திற்கு வெளியிலே நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்த சமயம், அமைப்பாளர்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளார்கள் என்று தலைமைப்பீடப் பொலிஸ் பரிசோதகர் திரு. நாணயக்கார கலாநிதி வித்தியானந்தனைக் கேட்டிருக்கிருர். அதற்கு அவர், கூட்டம் அதிகமாக இருப்பதால் மண்டபத்திற்கு வெளியே கூட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளோம் என்று சொல்லியுள்ளார். அதைப்பற்றிப் பாதகமில்லையென்றும், ஆனுல், மக்கள் மேடையைச் சுற்றி வளைத்துக்கொண்டு நிற்காமல், உட்கார வைத்துவிட வேண்டும் என்றும் பரிசோதகர் சொல்லியிருக்கிருர். இவையெல்லாம் கலாநிதி வித்தியானந்தன் சாட்சியத்திலிருந்து தெரிய வருகின்றது.

அவ்வாறு மாற்றம் செய்யவேண்டியிருந்ததால், மண்டபவாசலில் ஒரு மேடை அமைக்க வேண்டியதாயிற்று. வெளிஎல்லையில் இரும்புக்கிராதியருகில் இருபுறமும் மின்சாரத் தூண்களில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளுக்கு அந்த மேடையிலிருந்து ஒலிபெருக்கி இணைப்பும் செய்ய வேண்டியதாயிற்று.

கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் சமயம், ஜனுர்த்தனன் பல ஆர்வலர்களுடன் கைதட்டல்களுக்கிடையில் அங்கு வந்து அமர்ந்தார். வழக்கறிஞரும் முன்னுள் பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. அமிர்தலிங்கம் இவருக்கு மாலை அணிவித்தார். ஜனுர்த்தனன் மேடைக்கு வந்து இரண்டு மூன்று நிமிடங்களில் கலாநிதி வித்தியானந்தன் அவரை மேடையிலிருந்து இறங்கிக்கொள்ளுமாறு வேண்டிக்

www.tamilarangam.net



கொண்டபடி அவர் இறங்கி மேடைக்குப் பின்புறம் அமர்ந்து வேண்டியவர்களுக்கு மாதிரிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஜனார்த்தனன் அங்கிருக்கும் பொழுது தலைமைப்பீட பொலீஸ் பரிசோதகர் திரு. நாணயக்கார அவரிடம் வந்து ஒரு பத்திரத்தைக் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டகன்றார். அதன் பின்பு திரு. நாணயக்கார அங்கு காணப்படவில்லை.

இடமாற்றத்தின் காரணமாக கூட்ட நடவடிக்கைகள் ஏறக்குறைய ஒரு மணிநேர தாமதத்திற்குப் பிறகு இரவு 8 மணி அளவில் மீண்டும் ஆரம்பமானபோது அங்கு ஏறத்தாழ 50,000 மக்கள் வரை குழுமியிருந்தனர்.

பிரதிநிதிகளில் முதல் பேச்சாளர், இந்தியாவிலிருந்து வந்திருந்த பிரபல தமிழ்ப்புலவரான கலாநிதி நயினா முகம்மது என்பவராகும். அவர் தமிழ் மொழியின் எழில் பற்றியும் அதன் தொன்மை பற்றியும் தமிழ் மக்களின் பண்பாடு பற்றியும் பேசினார்.

தூய்மையான தமிழில் அவர் சொற்பொழிவாற்றியதை மக்கள் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டும் அவ்வப்போது கைதட்டிக் கொண்டுமிருந்தனர் அவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ரீகல் படமாளிகைப் பக்கம் இருந்த மக்கள் மத்தியில் சிறிது அமளி ஏற்பட்டது. அது யாழ்ப்பாண பொலீஸ் நிலையப் பக்கமாகும். அந்தப் பக்கக் கடைசியில் மக்கள் எழுந்து நகர ஆரம்பித்தனர். "அமைதியாயிருங்கள்" என்று கலாநிதி நயினா முகம்மது கேட்டுக் கொண்டார். இச்சமயம் ஒரு ஜீப்பும் இரும்புத் தொப்பி அணிந்து ஆயுதம் தாங்கிய பொலீஸ்காரர்களைக் கொண்ட ஒரு டிரக்கும் கூட்டத்தினரிடையே மெதுவாக முன்னேற முற்பட்டன. போகப் போகக் கூட்டம் மிக நெருக்கமாயிருந்ததால், 'டிரக் வண்டி மேலே நகர முடியவில்லை. உடனே பொலீஸ்காரர்கள் வாகனங்களில் இருந்து இறங்கித் தங்கள் பாதையில் நின்றவர்களையெல்லாம் தாக்க முற்பட்டனர். பிறகு விரிந்து பரவி



நின்று கொண்டு தொடர்ந்து கடுமையாகத் தாக்கினர். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். அதனால் ஒரு பெரிய நெரிசல் ஏற்பட்டு, ஒருவர்மேல் ஒருவராகவும் சைக்கிள் வண்டிகள் மேலும் மக்கள் விழுந்தனர்.

பொலீஸ் தாக்குதலிலிருந்து தப்பிக்கச் சிலர் அகழிக்குள்ளும் குதித்தனர். கண்ணீர்ப் புகையும், துப்பாக்கி வெடிகளும் திகிலை அதிகப்படுத்தின. பலர் புகையில் தத்தளித்தனர். மேடை மீதிருந்த கலாநிதி வித்தியானந்தனுக்கும், திரு. ஜேம்ஸ் இரத்தினத்திற்கும் மயக்கம் ஏற்பட்டு வீழ்ந்தனர். துப்பாக்கிச் சூட்டினால் மேலே சென்ற மின்சாரக் கம்பி அறுந்து விழுந்ததை இரும்புக் கிராதிக்குப் பக்கத்தில் நின்ற வழக்கறிஞர் திரு. இராசரத்தினமும், பொதுச்செயலாளர் திரு. பத்திநாதரும் கண்டிருக்கின்றனர். திரு. பத்திநாதர் தன் கதையைச் சொல்லி, உயிர் தப்பி வந்த வேதனையை விளக்கினார். ஒரு பொலீஸ்காரர் ஒரு கண்ணீர்ப் புகைக் குண்டைத் தன்மீது வீசியதாகவும் அது வெடிக்கவில்லையென்றும், அதன் பிறகு அந்தப் பொலிஸ்காரர் துப்பாக்கியால் மின்சாரக் கம்பிக்குச் சுட்டதாகவும், அதனால் அவர் தன் நிலை இழந்ததாகவும் சொல்லியிருக்கிறார். இதனால் மற்றும் ஏழுபேர் இறந்துள்ளனர்.

ஒரு பிரபல தமிழ்ப் புலவரின் பேச்சை ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்த ஆண் பெண்கள் அடங்கிய ஒரு தற்காப்பற்ற கூட்டத்தினர் மீது பொலிசார் துப்பாக்கிகள், கண்ணீர்ப்புகை வெடி குண்டுகள், குறுந்தடிகள், கேடயங்கள் எல்லாங் கொண்டு எவ்வித முகாந்தரமுமின்றிக் கண்மூடித்தனமாக ஏன் தாக்குதல் நடத்தினர் என்பதுபற்றி இச்சந்தர்ப்பத்தில் ஆராய விழைகின்றோம். வழக்கறிஞரும், தேசியப் பேரவை அங்கத்தினருமான திரு. கதிரவேலுப்பிள்ளையின் சாட்சியம் இவ் விஷயத்தில் தெளிவு காட்டுகிறது. மக்கள் மேல் நடத்திய தாக்குதல் பற்றிக் கேள்விப்பட்ட அவர், அத்தாக்குதலை நிறுத்துமாறு பொலிஸ் மா அதிபரைத் தொலைபேசி மூலம் கேட்டிருக்கின்றார். அமைப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட பெயர்வழியைப் பேச அனுமதிப்பதில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யெனப் பொறுப்பேற்றிருந்தனர் என்றும் அதை மீறி அப் பெயர்வழியைப் பேச அனுமதித்ததால் கூட்டத்தை நிறுத்தப் பொலிசார் தலையிட்டனர் என்றும், மக்கள் தடுத்ததால் பொலிஸ் பலாத்காரம் உபயோகிக்க வேண்டியதாயிற்று என்றும் மார்புச் சளியால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த மா அதிகாரி பதில் கூறியிருக்கின்றார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை தனக்கும் மா அதிகாரிக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை உள்ளது உள்ளபடியே கூறியிருக்கின்றார் என்பதிலும், ஜனார்த்தனன் அன்றைய தினம் சொற்பொழிவாற்றவில்லையென்பது சந்தேகமற நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதில் நாங்கள் முழுத் திருப்தியடைந்துள்ளோம். ஜனார்த்தனன் பேசியதாக யாரோ தவறுதலான தகவல் கொடுத்திருக்கின்றனர் என்றே தோன்றுகின்றது. அந்தத் தகவல் உண்மையாவென்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதுதான் முறையானதும் விவேகமானதுமான வழியென எங்களுக்குத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் கூட்டத்தைக் கலைக்க எடுத்த முடிவு, விளைவைப் பற்றிச் சிந்திக்காமல் முரட்டுத்தனமாகச் செயல்பட்டதென்று அபிப்பிராயப்படுகின்றோம். கூட்டத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியில் கண்டுள்ள கட்டுப்பாட்டை மீறியதாக அமைப்பாளர்கள் மீது பிறகு வழக்குத் தொடர்ந்திருக்கலாம் என்று ஏனோ அந்த அதிகாரிக்குத் தோன்றவில்லை. அல்லது அதைக் கவனிக்காதது போல் விட்டுவிடும் சாமர்த்தியமான முடிவைக் கூட அவர் சிந்தனை செய்தவராகத் தெரியவில்லை. ஏனெனில், அவருக்குக் கிடைத்த தகவலின்படி அமைப்பாளர்கள் ஒப்புக்கொண்டதை ஏற்கனவேயே மீறி விட்டபடியால் அதற்குப் பிறகு எடுக்கும் நடவடிக்கையால் எவ்வித பிரயோசனமும் இல்லை. இவையெல்லாவற்றையும்விட மிகமோசமான விடயம் என்னவெனில், கூட்டம் நிறுத்தப்பட்ட செய்தியை மக்களுக்கு அறிவித்த முறைதான். இரண்டொரு பொலிஸ்காரர்கள் மேடைக்குப் போய் பேசியது யார் என்று தெரிந்து கூட்டத்தை நிறுத்துவதைத் தவிர வேறுவழியில்லையெனக் கண்டால், அமைப்பாளருக்கு



உத்தரவிடுவதன் மூலம் கூட்டத்தைக் கலைக்குமாறு செய்ய ஏன் முயற்சி எடுக்கப்படவில்லையென்பது விளங்காத மர்மமாகவே இருக்கிறது.

சாட்சியங்களின்படி நாம் அறிவதென்னவெனில், பொலிசார் தங்களை முழு ஆயுதபாணிகளாக்கிக் கொண்டு ஜீப்பிலும், டிரக்கிலும் வீதிவழியே வரும்பொழுது வீதியில் மக்கள் உட்கார்ந்திருப்பதால் வழி மறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றனர். ஆனால் அவ்வாறு வீதி முழுமையும் மக்கள் உட்கார்ந்திருப்பது அவர்களுக்கு முன்பே நன்கு தெரிந்த விடயம்தான். ஏனெனில், வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து பிரிந்து அந்த வீதியின் இரு மருங்கிலும் ஏற்கனவே பொலிசார் நிறுத்தி வைக்கப்பட்டு, அவ்வழியில் வாகனப் போக்குவரத்தைத் தடை செய்யவும், அந்த அடிப்படையில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் வசதி ஏற்பாடுகளும் அவர்கள் செய்துகொண்டுதான் இருந்தனர். இந்த வீதியில் மக்கள் அமர்ந்திருந்ததனால் ஒரு பகுதியிலுள்ள மணிக்கூட்டுக் கடைத்தெரு இவைகளுக்கும் மறுபகுதியிலுள்ள பொலிஸ் நிலையம், நகரமண்டபம், வாடிவீடு முதலியனவற்றிற்குமிடையே பொது வாசிகசாலை வழியும், மாவட்ட நீதிமன்றமும் இருப்பதால் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாதென்பதையும் 'பி. 5' என்ற சான்றிதழ் மூலமும் இடங்களை நேரிற் கண்டறிந்த முறையிலும் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

பொலிசார் பொலிஸ் நிலையப் பக்கமிருந்து அந்த வீதியால் வரும்பொழுது வழிவிடுமாறு அறிவித்தனர் என்பதும் ஒரத்தில் இருந்த மக்கள் ஒதுங்கினர் என்பதும் உண்மையே. பொலிசார் மண்டபத்திற்குக் கொஞ்சத் தூரம் வரைதான் வாகனங்களில் வரமுடிந்தது. அதற்கு மேல் கூட்டம் மிக நெருக்கமாக இருந்ததால் முன்னேற முடியவில்லை. கையொலிபெருக்கியில் அவர்கள் கூறியது பலருக்குக் கேட்கவில்லையென்பதும் அநேகருக்கு விளங்கவில்லையென்பதும் சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. அதை ஏற்றுக்கொள்ள வண்டித்தான் இருக்கிறது. ஏனெனில்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்தகைய கையொலிபெருக்கிக் கருவிகளில் வரும் ஒலி தெளிவில்லையென்பது எங்கள் அனுபவத்தில் நாங்கள் நன்கறிந்துள்ளோம். அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு முன்னமேயே ஒலி பெருக்கிகள் அமைக்கப்பட்டு மக்கள் அதன்மூலம் வரும் பேச்சில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். பொலிசாருக்கு மேலும் நகரமுடியாமல் இருந்ததை அதற்கப்புறம் அவர்கள் எடுத்த நடவடிக் கைக்குக் காரணமாகக் காட்டமுடியாது. அப்புறம் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பற்றி சம்பவத் தொகுப்பில் நாங்கள் முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். அவைகளின் உண்மையையும் நாங்கள் ஏற்றுள்ளோம்.

எங்கள் முன் வந்த சாட்சியங்கள் தாங்கள் கண்டவை களையும், கேட்டவைகளையும் நேர்மையோடு சொல்ல முயன்றிருக்கின்றனர் என நாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப் படுகிறோம். அவர்களின் சாட்சியங்கள் உண்மையானவை தான் என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அந்தச் சாட்சியங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதே சமயம், கூட்டம் பிரமாண்டமானது என்பதையும், மேடை விளக்குகளும் வழக்கமான தெரு விளக்குகளும் எரிந்து கொண்டிருந்த இரவுவேளையென்பதையும் பல இடங்களி லிருந்து அந்தச் சாட்சியங்கள் அந்தப் பரந்த இடத்தில் எங்கெங்கு என்னென்ன நடந்தது என்பதையெல்லாம் பார்த்தோ கேட்டோ இருக்க முடியாது என்பதையும் நாங்கள் கருத்திற் கொண்டுள்ளோம்.

நிராயுதபாணிகளான மக்களின் மீது அன்று இரவு எந்த விதத்திலும் அவசியமற்ற பலாத்காரத்தைப் பிரயோகித்த தற்காக பொலிசாரே குற்றவாளிகளாகின்றனர் என்ற தவிர்க்க முடியாத முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டிய வர்களாய் இருக்கின்றோம். பொதுத்துறையைச் சார்ந்த பொலிசார் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் சாமர்த்திய மாக நடந்துகொள்ள வேண்டிய கடமை பற்றிய திறனைப்வில் அவர்கள் பின் தங்கியவர்களாய் இருப்பதையிட்டு நாங்கள் மிகவும் கவலை கொள்ளுகின்றோம். சாட்சியங்களிலிருந்து



தெரிவதென்னவெனில் அன்று இரவு நடந்தது இவைகள் மட்டும்தான் என்பதல்ல.

பொலிசார் தங்களின் ஆயுத பலத்தோடு நகரைச் சுற்றி அலைந்து, சந்தித்தவர்களையெல்லாம்—தங்களின் உரிமை யுள்ள வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்களை யெல் லாம்— திடீரென்று தாக்கியிருக்கின்றனர்.

இரவு 10 மணியளவில் திரு. பேரின்பநாயகம் தன் மனைவி மக்களைக் கூட்டிவரப் பொலிஸ் நிலைய வீதி வழியாக யாழ்ப்பாண வாசிகசாலைப் பக்கம் மோட்டார் வாகனத்தை ஓட்டிச் செல்லும்பொழுது பொலிசார் துப்பாக்கி முனையால் அடித்திருக்கிறார்கள். நல்லவேளையாக அது கதவிலும் மோட்டார் வாகனத்தின் பின்பகுதியிலும் ஐந்தாறு தடவை பட்டு மோட்டார் வாகனத்துக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் சோதனைக்காகக் கொண்டுவரப்பட்ட மோட்டார் வாகனத்தை நாங்கள் பார்வையிட்டோம்.

தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காகப் பஸ் நிலையத்திற் காத்துநின்ற மக்கள்மேல் கண்ணீர்ப்புகை பிரயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

இருபத்தைந்து அல்லது முப்பது பொலிசார் யாழ்ப் பாணப் பிரதான வீதியில் பொன்னையா விநாயகமூர்த்தியை அடித்து அவரின் மோட்டார் சைக்கிளின் சக்கரப் பாது காப்புத் தகட்டையும் முன் விளக்குக் கண்ணாடியையும் சேதப்படுத்தியிருக்கின்றனர்.

இரவு 9-30 மணியளவில் என்ஜினியர் திரு. தவராஜா வைத் தாக்கியிருக்கின்றனர். வீரசிங்கம் மண்டபத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பாலுள்ள டாக்டர் பிலிப்ஸ் பண்மனை யருகில் ஒரு டிரக்கும் ஜீப்பும் வந்து நிற்பதை அவர் பார்த் திருக்கிறார் அதிலிருந்து பத்து அல்லது பன்னிரண்டு ஆயுதந் தாங்கிய பொலிசார் கீழே குதித்து அவரை நையப் புடைத் திருக்கின்றனர். அவர் தன் உணர்வு இழந்து மீண்டும் ஆஸ்பத்திரியில்தான் சுய உணர்வு பெற்றிருக்கின்றார். தவராஜா வீரசிங்க மண்டபக் கூட்டத்திற்குச் சென்ற வரல்லர். தன்னைத் தாக்குவதற்குமுன் பொலிசார் கற்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றிந்தனரென்றும் கண்ணாடிகள் உடையும் சத்தத்தைக் கேட்டதாகவும் கூறியிருக்கிறார்.

ரியோ ஐஸ்க்ரீம் கடையின் சேதத்தை நாங்கள் பார்வையிட்டோம் அந்தக் கடையின் முன் கண்ணாடிகளைப் பொலிசார் அடித்து உடைத்ததாகச் சாட்சி ஆர்னல்ட் கூறியிருக்கிறார்.

பத்து அல்லது பதினைந்து பொலிஸ்காரர்கள் ஒரு டிரக் பின் தொடரக் குறுந்தடி. துப்பாக்கி, கேடயங்களோடு போய் யாழ்ப்பாண பிரதான வீதியில் விநாயக மூர்த்தியின் மோட்டார் சயிக்கிளைச் சேதப்படுத்தியதையும், ஒரு சவ அடக்க நிலையக் கண்ணாடியன்னல்களை உடைத்ததையும் தெருவிலிருந்த அலங்கார பல்புகளையும் தெரு விளக்குகளையும் சேதப்படுத்தியதையும் கண்டதாகவும் ஒரு அதிகாரி “முட்டாள்களே வானுக்குள் ஏறுங்கள்” என்று உத்தரவிட்ட பிறகும் அவ்வாறு செய்ததாகவும். இமானுவேல் இராஜசிங்கம் சாட்சியம் கூறியிருக்கிறார்.

கஸ்தூரியார் வீதியும் ஸ்டான்லி வீதியும் இணையும் சந்தியிலுள்ள பெற்றோல் நிலையத்துக்குக் காவலாளியான ஞானேஸ்வரன், ஆஸ்பத்திரியில் ஐந்து நாட்கள் இருந்து வந்த சீதாலட்சுமி தங்கராஜா, பெருமாள் விஜயராஜ் இன்னும் பலரும் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து வெகு தூரத்தில் பொலிசாரால் தாக்கப்பட்டதாகச் சாட்சியம் கொடுத்துள்ளனர்.

அந்தத் துக்ககரமான நாளான 10 ஆம் திகதிக்கு இரு தினங் கழித்து அதிகாலை விடிவதற்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள இணுவிலில் ஒரு டிரக்கிலிருந்து பொலிஸ்காரர்கள் இறங்கி ஒரு சைக்கிள்காரரையும், தொழிற்சாலைக்குப் போய்க் கொண்டிருந்த சிமெந்துக் கூட்டுத்தாபன காவலாளியையும் தாக்கியதாகவும் சாட்சியங்கள் இருக்கின்றன. கந்தையா என்பவர் மூன்று பொலிஸ்காரர்களால் ஏசித் தாக்கி விரட்டப்பட்டதாகவும், அவர் தன் நிருவாக அதிகாரியிடம் முறையிட, அந்த அதிகாரி விஷயத்தை அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்